கடவுள்துணை.

# தாயுமானசுவாமிகள்

அருளிச்செய்த

# திருப்பாடற்றிரட்டு

இஃது

திருத்தணிகை கந்தப்பையர் குமாரர்

## சரவணப்பெருமாளையரால்

முன்பதிப்பித்த பிரதிகளுக்கிணங்க

மயிலம்.

## சுப்பிரமணியஸ்வாமிகளால்

பார்வையிடப்பட்டு.


ஸ்ரீ.

## முனிசாமிமுதலியாரவர்களது

மாதவவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதி வரு புரட்டாசி மீ



தாயுமானசுவாமி.

கடவுள்துணை.

## தாயுமானசுவாமிகளுடைய

மாணாக்கராகிய

அருளையரென்பவர் அந்த சுவாமிகளைத் துதிசெய்த

# அருள்வாக்கியவகவல்.

திருவளர்கருணைச சிவானந்தபூரண - மொருவருமறியா வொருதனிசசித்து - நவநகருபேதமாய நாடகநடித்தும் - பலந்தனைநீக்கிப பரிந்தருள்பராபரங் - கண்ணுறுங்கருத்துங் - கதிரொளிபோல - நணணிடவெனககு நலகியநனமை - யொன்றுயபபலவாயொப்பிலாமோனக - குன்றுயநிறைந்த குணப்பெருங்குன்ற - மண்ணையும்புனலையும் வளியையுங்கனலையும்- விண்ணையும்படைத்த வித்திலாவித்துப்-பந்தமனைத்தையும்பாழ்படநூறியென்-சிந்தையுட்புகுந்தசெழுஞ்சுடர்ச்சோதிவின்னொளிஞானம்விளங்கியமேலோ-கொள்ளைகொண்டென்னைக் குறைவிலாநிறைவு - தாட்டாமரைமலர்த் தாணினைப்பவர்க்குக் - காட்டாவின்பங்காட்டியகதிரிலே - வாக்கானமனத்தான் மதித்திடவரிதென - நோககாதிருக்கநோக்கியநோக்க - மாதியாயந்தமாயகண்டமாயகண்ட - சோதியாயவிரிநது துலங்கியதோற்றம்- பரவெளிதன்னிற பதிந்தவென்றுளத்தின விரவிவிரவி மேறகொளும்வெள்ளஞ்-சுட்டிககடங்காச சோதியடியார-மட்டுககடங்கும் வான்பெருங்கருணை-யெல்லைககடங்கா - வேகபெருவெளி-இல்லைப்பொதுவிற் றிருநடத்தெய்வம்-வாதவூரெந்தையை வரிசையாயவிழுங்கும்-போதவூரமேவுகாபபூரவிளக்குச - சுகரையகண்டகதூவெளியெல்லா - திகழவேகாட்டுஞ் சின்மயசாட்சி- செழுந்தமிழப்பனைச-சிவலிங்கமாகி விழுங்கியஞானவித்தகவேழ - மெழிற்ருபட்டினத் திறைவனையென்று- மழிவிலாவிலிங்க மாக்கியவனுதி - சாந்தபூமி தண்ணருள்வெள்ள-மார்க்கநீழலசையாக்ககனம் - பரவுவார்நெஞ்சிறபாவியமாட்சி - யிரவுபகலற்ற வேதாந்தக்காட்சி-யாட்சிபோலிருககு மகிலந்தனக்குச சாட்சியாயிருக்குந் தாரகத்தனிமுத-லாணும்பெண்ணு மலியுமல்லாததோா- தானுவாய்நின்ற சத்தாந்தனிசசுட - ரெள்ளுமெண்ணெயு மெப்படியுமப்படி-யுள்ளும்புறம்பு முலாவியவொருபொரு-ளளவிலாமதந்தெரிதரும் வாவாபொருளென வுளநிறைந்திருக்கு மொருபொற்பணிதிகழ்ஞ

மனப்பேய் துடிக்கத்தடிக்கக் - கொள்ளுமோனவாள்கொடுத்திடுமோர
சு-பெரியபேறு பேசாப்பெருமை, யரியவுரிமை யளவிலாவளவு- து
ரியநிறைவு தோன்றுவதீதம்-விரியுநல்லன்பு விளைத்திடும்விளைவுதிரா
ப்பிணியாறு செனனமறுக்க வாராவரவாய் -வந்தசஞ்சீவியாலைக்கரு
ம்புபா கமுதககட்டிநீள்-சோலைக்கனிபலாச்சுளைகதலிக்கனிபாங்குறு
மாங்கனி -பாறேனசருக்கரை - யோங்குகற்கண்டுசேர்த்தொன்றுயக்
கூட்டி-யருநதியரசமெனவறிஞர்சமாதியிற்-பொருந்தியவின்பம்பொ
ழிற்சிற்சுகோதய மெங்கணுநிறைந்த வியல்பினையெனக்குச்-செங்கை
யால்விளங்கத் தெரிந்தமெய்த்தேசிகன் - றன்னையறிவித்துத்தற்பர
மாகி-யென்னுளத்திருந்தரு ளேகநாயக - னடிமுடியிலலா வருபொரு
டனக்கு - முடியடியீதுவென மொழிந்திடுமுதலவன்-மெய்யலான்மற்
றவைமெயயலவெலலாம - பொய்யெனவறிவெனப் புன்னகை புரிந்
தோ, னருளும்பொருளும் பேதமாயிருந்து மிருதிறனென்று மியலு
முண்டெனறோ - னருளுனகருண்டே லருளும்வெளிபபடும்- பொரு
ண்மயநதானேபொருந்துமென்றுரைத்தோன - சததசததிரண்டுதன்
மையுந்தானே- யொத்தலாற்சதசத் துனககெனவுரைத்தோ-னுணவ
மறுவிடி னருளுறுதென்னக் - காணருநேர்மையாற காணவேயுரைத்
தோன- சென்மமுள்ளளவுந் திராதிமூககுங- கனமவிடாதெனக்- கூ
ட்டியவள்ள- லுளதிலதெனவு முறுதுலானமாயை- வளம்லாதெனவு
ம் வகுத்தினிதுரைத்தோ- னிலலரத்திருந்து மிதயமடக்கிய- வல்லவ
ன்றனே மகாயோகியென்றோன்-றுறவறததிறுந்துஞ் சூழ்மனக்குர
ங்கொன்- றறவகையரியா னஞ்ஞானியென்றோ- னிரவாமனத்தானி
றக்கவுணர்த்திப்- பிறவாவரந்தருமபேரறிவாள-னத்தனைதருளாலனை
த்தையுமியக்குறு- சுத்தமாமாயையின் தோற்றமென்றுரைத்தோ-னி
ருண்மலகமல விசைந்திலமூத்தும்-பொருளருட்டிரோதைப் பொற்
பெணம்புகன்றோன்-வீறுசிவமுதல விளம்பியபடியே-யாறுமனுநியெ
ன்றறிஞருக்குரைப்போன்-கொல்லாவிரதங் குவலயத்தோர்க-ளெல்
லாம்பெறும்னென் றியமபியதயாநிதி-தருமமுந்தானமுந்தவம்புரிப
வர்க்- குறிமையவரோடுறவுகலப்பவன் - றன்னுயிர்யேலத் தரணியி
லமருவிய - மன்னுயிரனைத்தையும் வளர்த்திடும் வேந்தன் - களவுவ
ஞ்சனைகள்செய் கருமிகடமக்குந்- தெளிவுவந்துறவருள் செய்தி
டுந்திறத்தோன் - றன்பெரும்பேறு சகமெலாம்பெறவே - வான்பெ
ருங்கருணை வழங்கியமாரி-தனுசமென்றடைந்த தாபதர்தம்மை-யஞ்ச
லென்றாளு மறிஞரசிகாமணி - சிவகோடிகளுஞ் சித்தர்கோடிகளும்
யாவரும்புகழ யாவையுமுணர்ந்தோன் - யானெனதென்னு விறைவ
[illegible]ம்பெருமான் - றளவருகிய தலைவனெங்கோமா - னருணகிரி
[illegible] முருகன்சொலும் - பெருணமதல்லது பொருளெனமதியா
[illegible]ப்பொரிந்திடாத - பேதமுங்கடந்த பெருந்தகைமூர்

த்தி-மூலாதார முதலாயுள்ள - மேலாதாரமும் வெறுவெளிக்கண்டமூ
ன்மண்டலமூன்றிலு மன்னியவுருவிலுங் - கண்டவையத்திலுங் கட
வுளாய் நின்றோன் - பகர்சமயந்தோறும் பரமேயிருந்து - சுகந்தனை
ம்புரிந்தொழிலெனச்சொன்னோன் -பேதவபேத பேதாபேதா-போத
மிதுவெனப் புகன்றிடும்புண்ணிய - னதுநானெனவே யாற்றிடுமநு
பவஞ்- சதுர்வேதாந்தத்தன்மையென்றுரைத்தோ னல்லும்பகலுமற
றியானோர்க்குச- சொலலும்பொருளுஞ் சுமையெனச் சொன்னோ
ன்- சுதனேகுருவாஞ் சுவாமிநாயகற்கெனி னதிகமெய்ஞ்ஞானமல
லவோவெனறோ- னேசயோகத்துற கிருபரெல்லாந்தொழு- மிரா
சயோகத்திறையிராசயோகத்தான் பொறுமைதெளிவு புனிதவாசா
ர- மறுவிலாவண்மைவாரமியுற்கை- தண்ணமர்சாந்தஞ்சியகீர்த்திவெ
ண்ணெணகலே பயிலனையிலாககலவி நலலவிதககநடுநிலைசத்திய மில
லையென்னுமெலவர்கருநதருகொடை - நற்குணமெலலா நண்ணிய
பெருநதகை- சிற்குணவாரி திருவருட்செலவன்- கரமேலெடுத்துக
கருத்துறவணங்கிப் பரமேவுனக்குப் பரமெனப்பகர்ந்தோ - னலடி
மேவு மாசினையடுத்தே- சீலமெஞ்ஞானந் தெளிந்தனனென்னவுஞ்
சித்தமௌனிதிடசித்தமாக- வைததநிலையிவவசாந்தவனெனவு- மூ
லனமாபின் மூலைதத மௌனிதன- பாலனயானெனவும் பரிவொடும்
பகர்ந்தோன்- வடமொழியிறைகையின மகிமையுணர்ந்து- திடமுறமு
ப்பொருட்டிறத்தையுந்தெளிந்து- கண்டமுதென்னக் கனிரசமென
னத் தண்டமிழமாரி தனைப்பொழிந்து - சித்தியுமுத்தியுஞ் சிறந்த
ருளகொழிக்கு-நித்தியநிரஞ்சனநிராலம்பநிறைவடி- யா;யுதாடியும்
பணிந்தெழுதலப-லாடியுமறியுமகங்குழைவெய்தியு-முடனங்குழை
யவுரோமஞ்சிலிரப்பப்-படபடெனறு யபதைததுப்பதைத்துப்பா
ங்குறநெட்டுயிர- பாகிப்பரதவித் தேங்கியேங்கியிரங்கி- யோய்ந்தப
ம்பரம்போ லொடுங்கியேசிறிது- மேய்ந்தவிழிகவிமைப்பதுமின்றிச-
சோர்ந்துசோர்ந்து துவண்டுதுவண்டுமெய் - யார்ந்தவனபோடவச
முற்றடிக்கடி- யுண்ணடுக்குறலேயுருகியேசற்றுதணைமர்மொழியம
தமுதழுத்திடவே- யுள்ளுமபுறம்பு மொருமித்திருகி-வெள்ளநீர்போ
ல் விழிநீர்பெருகிக் - களறுபகலைக் கருதிககருதிச -சென்றுசென்
றேடித திகைப்பதுபோல-வென்புநெகக்குடைய விருகரங்குவித்துப்
புன்புலாலயாக்கை பொருந்தாளியென-வுணர்ந்துணாந்தனபா யுவ
கைமேற்கொண்டினிக்- கமணம்பிரியேனெனக கருதியேகுறித்துத்-
திருவுருவெலலாந் திருநீறிலங்க-விருகாணினை மியன்முடிகுவித்துப்
பூரணசந்திரன போலொளிகாட்டுங்- காரணவதனங் கவின்குறு
யர்வுற-விளங்கலாளெவே யிலங்கியதிருநகை தளமெனனத் தங்கி
யெழில்பெற-வித்தகரமையெல்லா மிசைந்துமவனருட்-சிதமௌசசி

வழி தேர்ந்தவரைப்பப்-பாத்திரமாடப் பரிவுடனுடிச்-சாந்திரங்காட்
டித் தழுவுசெய்தருளும்- வல்லவனெனவே, மன்னுயிர்க்காக-வெல்லை
யிலன்பனிவ, னெனவிளங்கி-யினவுலகத்தியற்கைபொய்யென்றேனு
ணனுன்மெய்யெனநவின்றினிதிரங்கிக்கேவலசகலங்கீழ்ப்படமேலாய்
மேவருஞ்சுத்தமெய்யினைநல்க,வருளயுருவுகொண்டவனியில்வந்த பொ
ருளேயிவனெனப் போலிங்கிடும்புனிதன்- சைவஞ்சிவனுடன சம்ப
ந்தமென்பது-மெய்வளர்ஞானம் விளங்குமன்றிசைத்தோன்-கதிர்
விழியொளியுறக் கலத்தல்சித்தாந்த-விதிமுறையாமெனவிளம்பியமே
லோன் - முடிவினிலாகம முறைமையினுண்மையை-யடியரைகுறித்
துரைத்தருளியவண்ணல் சிதம்பரநோமை திறமாவுரைத்திறை-பதம்
பரவெனப்பகர் பரமமெஞ்ஞானி-முத்திடஞ்சாககரமுறைமையிலயிக்
கியனு-சத்தியமிதுவெனச சார்ந்தவாகுரைத்தோ-னஞ்செழுத்துள்
ளே யனைத்தையுங்காட்டியென்-னெஞ்சழுத்திய குருநீதிமாதவ-னெ
ல்லானிறைந்தவிறைவன்செயலெனக-கலலாவெளகுங் கருணைசெ
யகடவுள்-குருவருளாலேகூடுவதல்லாற்-றிருவருளுறுதெனதெரிந்தி
டவுரைத்தோங்குருவுருவெனக் கொண்டபின்குறையா- பொருண்மய
மரமெனப்புகன்றிடுபோத-நெந்தமூர்த்திகளையுமெழிற்குருவடிவென
ச்சிந்தையிற்றியக்கறத் தேர்ந்தவர்க்குரைத்தோன்- சதாசிவமென்று
பேர், தான்படைத்ததுதா-னதாவதேபொருளென்றெடுத்தெடுத்து
துரைத்தோன்-கல்லானைகன்னல் கவர்ந்திடசசெய்தவ-னெல்லாம்வ
லலசித் தெம்மிறையென்றே-னெவ்வுயிர்தோறு மிறைமேவியதிறனு
செவ்வியபிரம்படி செப்பிடுமென்றே-னெவ்வணமெவரெவ ரிசைத்
தனரவரவர்க்-கவ்வணமாவனெம்மா னெனவறைந்தோ-னொருபாண
னுக்கே யொருசிவனுட்படி-வருமடியார்திறம்வழுத்தோனுதெனறே
ன-சிவனடியாரைச் சிவனடியாரைச்சிவனெனக்காண்பவ-னெவனவ
னசிவனே யென்றெடுத்துரைத்தோன்-விருப்புவெறுப்பினைவேரறப்
பறித்துக்-கருப்புகாதென்னைக் காத்தருள்செய்தோ - னிருசொல்லு
ரையா இயானின்பமெய்த-வொருசொல்லுரைத்த வுயர்குணபூதரன
கதுவுமார்க்க மாறையுமகற்றி-தத்துவாதீததன்மையைத்தந்தோன்-
திருமகண்மருவிய திகழ்வளமறைசையில்-வருமுனைர்வாளானமருளி
லாமுனைத்தா-னெண்ணியவெண்ணமெல்லாந்தெரிந்தெனக்குத்- தண்
ணருள்செயதவன் றயுமாளவ-னொருமொழிபகர்ந்த வுதவியாலவனை
ந-னிருபதமுப்போ திறைஞ்சிவாழ்த்துவனே.

அருள்வாக்கிய அகவல்

முற்றிற்று.

உ

## சிவமயம்.

## சரித்திரச்சுருக்கம்.

தென்னாடுகள் பலவற்றினுஞ் சிறந்துவிளங்குகின்ற சோழமண்டலத்திலேயுள்ள வேதாரணியமென்னும் வடமொழிப்பெயருடையதிருமறைக்காடாகியசிவஸ்தலத்திலே சற்றேறக்குறைய(௱௫௰)வருஷத்துக்குமுன்பாக வேளாண்குலதிலகராயும் குருலிங்க சங்கமபத்தியிலேசிறந்தவராயும் கேடிலியப்பப்பிள்ளையென்பவரொருவரிருந்தார் அவராலே அந்தசிவஸ்தலவிசாரணை நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது அக்காலத்திலேதிரிசிரபுரத்திலே அரசாட்சிசெய்துகொண்டிருந்த விஜயரகுநாதசொக்கலிங்கநாயகரென்பவர் கேடிலியப்பப்பிள்ளையினுடைய நற்குணங்களையும் கணக்குவல்லமையையும்-சிலர்சொல்லக்கேட்டு அவரை அழைத்துப்பரீட்சித்து அவருக்குப்பெரியசம்பிரதியுத்தியோகக்கொடுத்துத்தம்மிடத்தேவைத்துக்கொண்டார் அந்தக்கேடிலியப்பப்பிள்ளையானவர் சந்ததியிலலாதவரா யிருந்தமையனருக்குத் தம்முடையஒரேபேறாகிய சிவசிதம்பர பிள்ளையென்னுங் குமாரனைக் கொடுத்துவிட்டிருந்ததினால் தமக்குச்சந்ததிஉண்டாக அருள்செய்யும்படிக்கு அந்தத்திரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிறதாயுமானேசுரனைத் தெரிசித்துக் கொண்டுவந்தார் அக்கடவுளதுதிருவருளினாலே -ஓராண்பிள்ளைபிறந்தது அதுகண்டு தகப்பனார்மகிழ்கூர்ந்து அக்கடவுளுக்குக்காணிக்கைமுதலானவை செலுத்திக் குமாரனுக்குத் தாயுமானவரென்கிற அக்கடவுளது பெயரைக்கொடுத்தார் அந்ததாயுமானவர்தந்தகப்பனருக்கு மிகவும்மனமகிழ்ச்சி யுண்டாகும்படிக்கு அவர்செய்யுமுயற்சி யளவிறகு அதிகமான கீர்வாணந் தமிழ் முதலிய கல்விப்பயிற்சியிலேசிறந்தவரானார உண்மை -அன்பு-பொறுமை-அடக்கம்-இரக்கம் இவைமுதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுகூட வேவளர்ந்தன ஓர்-அஞ்ஞானியினது மனது நிலையில்லாத செல்வப்பொருளை எப்படிவிரும்புமோ அப்படியேஇவரது மனமானதுதத்துவப்பொருளையேவிரும்பிநின்றது அப்படியிருக்கையில் திருமூலநாயனார்மரபிலே எழுந்தருளியமௌனதேசிகர் தாயுமானவரைச்சந்தித்துஅவரதுஅறிவாயக்குவத்தைக்கண்டு வேதாகமங்களின் முடிவான தத்துவப்பொருளைஉபதேசித்தருளினார் அதுமுதலாகத் தாயுமானவர்தமது ஞானாசாரியரிடத்தே மிகுந்தபத்திஉடையவராய் அவ்வுபதேசப் பொருளைச்சிந்தித்துத்தெளிந்து தினந்தோறும் தட்சிணாமூர்த்தி சந்நிதியிலேநிஷ்டைசெய்துக்கொண்டு வந்தார்-பின்புதாயுமானவருக்குத்தகப்பனார்தேகவியோகத்தை அடைதலினாலே அவரதுலௌகிகதொழிலைஅ

சனது வேண்டுதல்பற்றி அதிலவிருப்பமில்லாதவராயிருந்தும்ஏற்று
க்கொள்ள வேண்டியதாயிற்று அரசனானவன் அவரைமுதலிலேஞான
வானென்று அறிந்திலனாகினும் கேடிலியப்பபிள்ளையினும்இவர்யோக
கியரென்று நன்குமதித்து மிகவுஞ்சிறப்புச்செய்து வைத்திருந்தான
ஆனால் கழைக்கூத்தனுடையகருதது உடல்காப்பிலும் அவனதுசெ
ய்கைகூத்திலும்எப்படிவைக்கப்பட்டிருக்குமோ அப்படியே தாயுமா
னவரது கருத்துச்சிவத்திலும் அவரதுசெய்கை லௌகிகத்திலும்வை
க்கப்பட்டிருந்தன இப்படிக்குச் சிலநாள்கள் சென்றபின்மேல் அ
ரசன் அவரிடத்தேவிளங்கிய அபூர்வமான சிலசெய்கைகளைக்கண்டு
அவரதுமகிமையை அறிந்துகொண்டான் உடனேவிவேகியாகிய அவ்
வரசனுக்கு அவரைக்குறித்து அச்சமும் அன்பும்உண்டாதலால்அவ
ரையழைப்பித்து உயர்ந்த ஆசனத்தின்மேல் இருந்தருளப்பண்ணிசு
வாமிஅடியேன் இதுவரையிலே உமக்கு ஊழியஞ்செய்யதக்கநான் உ
ம்மைஎன் ஊழியத்திலே வைத்திருந்தேன் ஆயினும் இதுபெரியகுற்
றமாகவின் கிருபாமூர்த்தியாகிய தேவரீர்இக்குற்றத்தைப் பொருத்த
ருளிஇன்றுமுதலாக அடியேனால் ஆகவேண்டியவற்றைச்செய்வித்து
க்கொண்டு நிஷ்டைக்குக்குறைவுபடாமல் இருந்தருளலாமென்றுவே
ண்டுதல்செய்தான் அதுகேட்டவுடனே தாயுமானவர் திருவுளமகிழ்
ந்து அன்றுமுதலாக அளவற்றஞானயோகத்திலே இருந்துகொண்டு
கடவுளையும் குருவையும் அற்புத சின்மயமதுரமான தமிழ்ச்செய்யு
ட்களைப்பாடித் துதிசெய்துகொண்டு வந்தார் இப்படியிருக் கையில்
அவ்வரசன்மனைவி தாயுமானவரது திருமேனியின கண்ணேயுள்ள அ
ழகைக்கேள்விப்பட்டு அவரை அழைப்பித்துக் கண்களிகூர நோக்கிக்
கேள்விப்பட்ட வளவினும அதிகமாய் விளங்குதலால்உளமருண்டு அ
வரைத்தன்னரசாட்சிக்குத்தலைவராகவும்தன்னால்விரும்பப்பட்டதகா
த்செய்கைக்கு உடன்படுத்தவும் தான் கொண்டகருத்தைக்குறிப்பித்
தாள் அக்கருத்தை அறிந்த தாயுமானவரோவென்றால்உடனேஒருபா
யத்தினாலே அங்கிருந்து தம்மைவிடுவித்துக்கொண்டு அவன்அரசா
ட்சியின் எல்லையைக்கடந்துஇராமநாதபுரத்துச்சீமைக்கு எழுந்தருளி
னார் இதுசெய்தி சிவசிதம்பர பிள்ளை இருசெவியை அடைந்தநின்
லே அவரும்சிறியதாய் குமாரராகிய அருளையப்பிள்ளையும் தேடிகண்டு
பிடித்துச் சந்ததிவிளங்கவேண்டுமெனனும் கருத்தைக்கொண்டுதிரு
[illegible] செய்தார்கள்

தாயுமான சுவாமிகளுக்கு அதிகாரிப்பத்திலே சிறிதும் இச்சையி
ல்லாதிருந்தும்தமையனாது வேண்டுதலின் மிகுதியினாலே உடன்ப
டவேண்டியதாயிற்று உடனேபத்தினியார் ஓராண்பிள்ளையைப் பெற்
று வைத்துச்சிவபத அடைந்தார் அந்தப் பிள்ளைக்குக் கனகசபாபதிப்
பிள்ளையென்று பெயரிடப்பட்டது. அதுமுதலாகத் தாயுமானசுவாமி
கள் கௌபீனத்தோடு பரிசுத்தசிவஸ்தலந்தோறுஞ்சஞ்சரித்துக்கொ
ண்டு இவ் வுலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் மெஞ்ஞான ஒளியை
ப்பெற்று அஞ்ஞான விருளினின்று நீங்கி உய்யும்படிக்குப் பலவகை
ப்பட்ட அற்புதமான பாடல்களைச் செய்தருளினார் அருளையரென்பவ
ரும் அவரிடத்தே தத்துவோபதேசம் பெற்றுக்கொண்டு அவரைவிட்
டு நீங்காமல பணிவிடை செய்துக்கொண்டு வந்தார்.

தாயுமானசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூப
மாகியசிவத்திலேகலந்தபின்பு அருளையசுவாமிகள் அகவற்பாவினாலே
குருவைத்துதித்துச் சிவயோகத்திலே யிருந்து தமக்குப்பின்பக்குவ
ப்பட்டுவரும் அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்யும்படி கனகசபா
பாபதிப்பிள்ளைக்கு அபிஷேகஞ் செய்தருளினார்

இக்குருபரம்பரையில் தஞ்சமாநகரத்துக் கீழ்பால் அன்னப்
பன்பேட்டையிலுள்ள மடத்தில் இப்போது இருக்கின்ற அம்பலவா
ணசுவாமிகளுடைய அடியார்கூட்டத்திலே ஒருவராகியும் அந்த ஆதீ
னத்துக்கு உரியவராகியும் உள்ளளடுத்துக்கட்டி அருணாசலநாவல ர
வர்களிடத்திலிருந்த ஆதீன புஸ்தகத்தையும் மற்றுஞ் சிலபுஸ்தகங்க
ளையும் அழைப்பித்து ஒப்பிட்டு அச்சிற்பதிப்பித்ததென்றறிக.

---

தாயுமானசுவாமிகளது சரித்திரம்

(*)

முற்றுப்பெற்றது.

## உட்பிரிவு


| உட்பிரிவு | பக்கம். | உட்பிரிவு | பக்கம். |
|---|---|---|---|
| அருள்வாக்கிய அகவல் | க | ஆக்குவை | ௱உஉ |
| சரித்திரச்சருக்கம் | ரு | கற்புறுசிந்தை | ,, |
| திருவருள்விலாசப் பரசிவவணக்கம் | சு | மலை வளர்காதலி | ௱உங |
| பரிபூரணானந்தம் | ௰ | அகிலாண்டநாயகிவிருத்தம் | ௱உசு |
| பொருள்வணக்கம் | ௰ரு | பெரியநாயகிவிருத்தம் | ௱உஎ |
| சின்மயானந்தகுரு | ௰எ | தந்தைதாய் | ,, |
| மௌனகுருவணக்கம் | உஉ | பெற்றவட்கே | ௱உஅ |
| கருணாகரக்கடவுள் | உசு | கல்லாலின் | ௱ங௰ |
| சித்தர்கணம் | ஙக | பராபரக்கண்ணி | ௱ஙங |
| ஆனந்தமானபரம் | ஙரு | பைங்கிளிக்கண்ணி | ௱ருச |
| சுகவாரி | ஙசு | எந்நாட்கண்ணி | ௱ருஎ |
| எங்குநிறைகின்றபொருள் | சரு | குருமரபின்வணக்கம் | ,, |
| சச்சிதானந்தசிவம் | ருசு | அடியார்வணக்கம் | ௱ருஅ |
| தேசோமயானந்தம் | ருச | பாசகைப்பறித்தல் | ௱ருகூ |
| சிற்சுகோதயவிலாசம் | ருகூ | மாதைப்பறித்தல் | ,, |
| ஆகாரபுவனம் | சுங | தத்துவமுறைமை | ௱சு௰ |
| தேன்முகம் | எ௰ | தன்னுண்மை | ௰சுஉ |
| பன்மாலை | எக | அருளியல்பு | ,, |
| நினைவொன்று | எச | பொருளியல்பு | ௱சுங |
| பொன்னைமாதரை | எசு | ஆனந்தவியல்பு | ௱சுச |
| ஆசை | அரு | அனபுநிலைமை | ௱சுரு |
| சொல்லக்கரிய | அஎ | அன்பர்நெறி | ௱சுசு |
| மைபனேன் | அகூ | அறிஞருரை | ௱சுஎ |
| சிவனசெயல் | கூ௰ | நிற்குநிலை | ௱சுஅ |
| தனனையொருவர் | கூக | நிலைபிரிந்தோர் | ௱சுகூ |
| ஆசையெனும் | கூஉ | காண்பேனோவென்கண்ணி | ௱எ௰ |
| எனக்கெனச்செயல் | கூஎ | ஆகாதோவென்கண்ணி | ௱எஉ |
| மண்டலத்தின் | ௱க | இல்லையோவென்கண்ணி | ௱எச |
| பாயப்புலி | ௱உ | வேண்டாவோவென்கண்ணி | ,, |
| உடல்பொய்யுறவு | ௱சு | நல்லறிவேயென்கண்ணி | ,, |
| ஏசற்றவந்நிலை | ௱௰அ | பலவகைக்கண்ணி | ௱எரு |
| காடுங்கரையும் | ௱௰கூ | நின்றநிலை | ௱எசு |
| எடுத்ததேகம் | ௱உ௰ | பாடுகின்றபனுவல் | ௱எஎ |
| முகமெலாம் | ,, | ஆனந்தக்களிப்பு | ,, |
| இடமுறவே | ,, | அகவல் | ௱எகூ |
| தன்னை | ௱உஉ | வண்ணம் | ௱அக |


முற்றியது.

உ

கடவுள்துணை.

# தாயுமானசுவாமிகள்பாடல்

## திருவருள்விலாசப்பரசிவவணக்கம்.

### ஆசிரியவிருத்தம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா
    யானந்தபூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
    யகிலாண்டகோடி யெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
    தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோ டிகளெல்லாந்
    தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
    வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகி யின்பமா
    யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
    கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
    கருதியஞ்சலிசெய்குவாம். [க]

ஊரனந்தம்பெற்றபேரனந்தஞ்சுற்று
    முறவனந்தம்வினையினா
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
    தோவனந்தம்பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
    றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனாலுஞான
    சித்தியாருணர்ந்து
காரனந்தங்கோடி வருஷித்ததெனவன்ப

கருத்தரிய வானந்தமழைபொழியுமுகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந்தம்பேசிமறையனந் தஞ்சொலும்
பெரியமௌனத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப்ப ணிகுவாம
அத்துவிதவஸ்துவைச்சொப்ரகாசத்தனியை
யருமறைகண் முரசறையவே
யறிவினுக்கறிவாகி யானந்தமயமான
வாதியையநாதியேக
தத்துவசொரூபத்தை மதசம்மதம்பெறாச்
சாலம்பரகிதமான
சாசுவதபுட்பகல நிராலம்பாலம்ப
சாந்தபதவ்யோமநிலையை
நித்தநிர்மலசகித நிஷ்பரபஞ்சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்தினின்றிலகு
திவ்யதேசோமயத்தைச்
சிற்பர வெளிக்குளவாநந்தபரமதானபரம்
தேவதையை யஞ்சலிசெய்குவாம். (ரு)

திருவருள்விலாசப்பரசிவவணக்கம்.

முற்றிற்று.

---

## பரிபூரணானந்தம்.

வாசாகயிங்கரிய மன்றியொருசாதன
மானோவாயுநிற்குமவண்ணம்
வாலாயமாகவும்பழகியறி யேனுறவு
மார்க்கத்தி னிசைசைபோல
நேசானுசாரியாய் விவகரிப்பேனந்த
நினைவையுமறந்தபோது [illegible]
நித்திரைகொள்வன்றேகநிலைநில்லை [illegible]
நெஞ்சந்துடித் தயருவேனா [illegible]
பேசாதவானந்தநிட்டைக்கறிவிலாய் [illegible]
பேதைக்கும்வெகுதூரமே [illegible]
பேய்க்குணமறிந்திங்கெனைக்காத்தொருவழிகாட்டி [illegible]
பேரின்பநிட்டையருள்வாய் [illegible]

பாசாடவிக்குளே செல்லா தவர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே (௧)

தெரிவாகவூர்வன நடப்பன பறப்பன
செயற்கொண்டிருப்பன முதற்
றேகங்களத்தனையு மோகமொள பௌதிகஞ்
செனமித்த வாங்கிருக்கும்
விரிவாயபூதங்க ளொடுமேற்றொடொன்றாயழியு
மேற்கொண்ட சேடமதுவே
வெறுவெளிநிராலம்ப நிறைவுநிலையுருபசாந்த
வேதவே தாந்த ஞானம
பிரியாதபேரொளி பிறங்கவெறங்குளருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமையெனவைநகரு பிறவாமையாய்வந்து
பேசாமை யாருமெனவே
பரிவாயெனக்குநீ யறிவிக்கவந்ததே
பரிபாக கால மலவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே (௨)

ஆராயும்வேலையிற பிரமாதியானலுங்
மையவொரு செயலுமில்லை
யமைதியொடுபேசாத பெருமைபெறு குணசந்
ராமென விருந்தபேரு
நேராகவொருகோப மொருவேளை வரவந்தே
நிறைவொன்று மில்லாமலே
கெட்டுயிர்த்துதத் டழிந்தாறுவாரவசறு
கிரவாகரென்ற பேரும்
பூராயமாயொன்று பேசமிடமோவறைய
புலம்புவார் சிவராத்திரிப்
போதுதுயிலோமென்ற விரதியருமறிதுயிற்
போலேயிருந்து துயில்வார்
பராதிதனிலுள்ள செயலெலாமுடிவிலே
பாழாகினின் செயலல்லவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே (௩)

பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே (௫)

ஆழாழிகரையின்றிநிற்கவிலையோகொடிய
ஆலமமுதாகவிலையோ
அக்கடலின்மீதுவடவனனிற்க வில்லையோ
அந்தரத்தகில கோடி
தாழாம னிலைநிற்கவிலலையோமேருவுந்
தனுவாகவளைய விலையோ
சப்தமேகங்களும் வச்ரதாரணையிற்
சஞ்சரித்திட விலலையோ
வாழாதுவாழவே யிராமனடியாற்சிலையு
மடமங்கை யாகவிலையோ
மணிமந்தரமாகியால வேணுடுநித்திகளாலக
மாகாசத்தில்வைக்க விலையோ
பாழாகுமெனமனங் குவியவொருதந்திரம்
பண்ணுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௬)

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி
யாளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் ளகேசனிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாதவித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற்பசிதீரவுண்பது
முறங்குவதுமாகமுடியு
முள்ளதேபோதுநா னெனக்குளெனியே
யொன்றைவிட்டொன்று பற்றிப்
பாசக்கடற்குளே வீழாமன்மனதற்ற
பரிசுத்தநிலையையருள்வாய்
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௭)

பரிபூரணானந்தம்-முற்றியது ஆக ௭

— ௦ ௐ ௦ —

உ

# பொருள் வணக்கம்

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய்
நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்
துரியநிறை சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த
மயமாகி மனவாக்கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப்
பெருவெளியைச் சிந்தைசெய்வாம். (௧)

யாதுமன நினையுமந்த நினைவுக்கு
நினைவாகி யாதின்பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி
யன்பருக்கே பேரானந்தக்
கோதிலமுதூற் றரும்பிக் குணங்குறியொன்
றற்றதனைக் கொடுத்துக் காட்டுந்
தீதில்பரா பரமான சிதாநந்தப்
பேரொளியைச் சிந்தைசெய்வாம். [௨]

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப்
பேசாதபெரியமோனம்
வருமிடமாய் மனமாதிக்கெட்டாத
பேரின்பமயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத்
தறவிழுங்கிக்கொண்டப் பாலுந்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப்பொருளந்தப்
பொருளினையாஞ்சிந்தை செய்வாம். [௩]

இகபரமுமுயிர்க்குயிரை யானெனதற்
றவரையெந்தாளுஞ்
சகபரிபூரணமான நிராலம்ப
கோசரத்தைத் துரியவாழ்வை
யகமகிழ வழுந்தேனை முக்கனியைக்
கற்கண்டை யமிர்தைநாடி
மொகுமொகெனவிருவிழிநீர் முத்திறைப்பக்
கரமலர்கள் முகிழ்த்துநிற்பாம் [௪]

சாதிகுலம் பிறப்பிறப்புப்பந்தமுத்தி
யருவுருவத் தன்மைநாம
மேதுமின்றி யெப்பொருட்குமெவ்விடத்தும்
பிரிவறநின் றியக்கஞ் செய்யும்

சோதியைமாத் தூவெளியைமனதவிழ
நிறைவான துரியவாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தைசெய்வாம் (௫)

இந்திரசாலங்கனவு கானலினீ
ரெனவுலக மெமக்குததோன்றச்
சந்ததமுஞ்சிற்பரத்தா லழியாத
தற்பரத்தைச சார்ந்துவாழ்க
புந்திமகிழுறனுஞ் தடையறவா
னநதவெள்ளம் பொலிகவென்றே
வந்தருளுங்குருமௌனி மலர்த்தாளை
யனுதினமும் வழுத்தல்செய்வாம் (௬)

பொருளாகக்கண்டபொரு ளெல்லாம்முதற்
பொருளாகிப் போதமாகித்
தெருளாகிகருதுமன்பா மிடிசீரப்
பருகவந்த செழுந்தேறலாகி
யருளாரோர்க ககமபுறமெனாறுண்ணாத
பூரணவா னந்த மாகி
யிருடாவிளங்குபொரு ளியாதந்தப்
பொருளினையா மிறைஞ்சிநிற்பாம் (௭)

அருமறையின் சிறப்பொருளாய்விண்ணவர்மா
முனிவர்சித்த ராதியானோர்
தெரிவரியபூரணமாய்க் காரணங்கற்
பனைகடந்த செல்வமாகிக்
கருதசுயமலரின்மண மௌனிலெண்ணெ
யுடலுயிர்போற கலந்தெந்நாளும
துரியநடுவூடிருந்த பெரியபொரு
ளியாததனைத் தொழுதலசெய்வாம் (அ)

விண்ணாதிபூதமெல்லாந் தன்னகத்தி
லடக்கிவெறு வெளியாயனாளக்
கண்ணாரக்கண்டவனபர் கண்ணூடே
யானந்தக் கடலால்வேறென்
றெண்ணாதபடித்திரக்கித் தானாகச்
செய்தருளு மிறையேயுங்கள்
நண்ணாருஞ்சாந்தவரு டனைநினைந்து
கரமலர்க்கடலைமேற கொள்வாம் (௯)

விண்ணிறைந்தவெளியாயென் மனவெளியிற்
கலந்தறிவாம் வெளியினூடுங்
கண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த

மானபொருந்தகைமையேமின்னா
ருன்னிறைந்தி போன்மா லுள்ளுருகி
மொழிகுழறி யுள்கையாகிக்
கண்ணிறைந்தபுன லுகுப்பக்கரமுகிழ்ப்ப
மின்னருளைக்கருத்தில்வைப்பாம். (கச)

வேறு.

ஆதியந் தங்காட்டாதமுதலாயெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்தவன்னைபோல
நீதிபெறுங்குருவாகிமனவாக்கெட்டா
நிசசயமாய்சசொரூபமதாய்நிமலமாகி
வாதமிடுஞ்சமயநெறிக்கரியதாகி
மௌனத்தோர் பால்வெளியாய்வயங்காநின்ற
சோதியையென்னுயிர்த்துணையைநாடிக்கண்ணீர்
சொரியவிருகரங்குவித்துத்தொழுதல்செய்வாம் (கரு
அகரவுயிரெழுத்தனைத்துமாகிவேறு
யமர்ந்ததெனவுலகிலாண்டமனைத்துமாகிப்
பகர்வனவெல்லாமாகியல்லதாகிப்
பரமாகிச்சொலலரிய பான்மையாகித்
துகளறுசங்கற்ப விகற்பங்களெல்லாந்
தோயாதவறிவாகிச் சுத்தமாகி
நிகரில்பசுபதியானபொருளைநாடி
நெட்டுயிர்த்துப்பேரன்பா னினைதல்செய்வாம் (கசு)

பொருள்வணக்கம் முற்றியது ஆ-உ-கசு.

# சின்மயானந்தகுரு

அங்கைகொடுமலர்தூவியங்கமது புளகிப்ப
வன்பினா லுருகிவிழிநீ
ராறாகவாரா முத்தியினதாவேச
வாசைக் கடற்கண்மூழ்கிச்
சங்கரசுயம்புவே சம்புவேயென்றுமொழி
தழுதழுத்திடவ ணங்குஞ்
சன்மார்க்கநெறியிலாத் துன்மார்க்கனேனையுந்
தன்னருள் கொடுத்தாண்டவை

துங்கமிகுபக்குவச் சனகன்முதன் முனிவோர்க
டொழுதருமின்னிற்றிருப்பக்
சொல்லரியநெறியையொரு சொல்லாலுணர்த்தியே
சொரூபானுபூதிகாட்டி
செங்கமலபீடமேற்கல்லாலடிக்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயா னந்த குருவே (௧)

ஆக்கையெனும்பிடிகரையை மெய்யென்றபாவிகா
னத்துவிதவாஞ்சையாத
லரியகொம்பித்தேனைமுடவனிச் சித்தபடி
யாகுமறிவவிழவின்பந்
தாக்கும்வினைக்கேதிநாட்சரியைகிரியாயோகஞ்
சாதனம்விதித்ததெல்லாஞ்
சன்மார்க்கமல்லவிவைவிறகவென்மார்க்கங்கள்
சாராதபேரறிவதாய்
வாக்குமனமுங்காதபூரணப்பொருள்வந்து
வாய்க்கும்படிக்குபாயம்
வருவிதது வட்டாத பேரின்பமானசுக
வாரியினைவாய்மடுத்து
தேக்கித் திளைத்தநீ முன்னிற்ப தென்றுகாண்
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயா னந்த குருவே (௨)

அவ்வியமிருக்கநா னென்கின்ற வாணவ
மடைந்திட்டிருக்கலோப
மருளின்மைகூடக் கலந்துள்ளிருக்கவே
லாசாபிசாசுகளொடும்
வெவ்வியகுணம்பலவிருக்குமென்னறிவூடு
மெய்யநீவீற்றிருக்க
விதியில்லையென்னிலோபூரணமெனும்பெயர்
விரிக்கிலுரை வேறு முண்டோ
கவ்வுலமாகின்றகாதகபாதகத்திலுங்
கட்டுண்ட வுயிர்கண் மூர்ச்சை
கடிதகலவுயவரு ஞானசஞ்சீவியே
கதியானபூரணமுடி
செல்வமின்வளர்ந்தோங்குதில்லையங்குன்மேருவே
சித்தாந்தமுத்திமுதலே

சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௩)

ஐவகையெனும்பூதமாதியை வகுத்தது
னசராசரபேதமான
யாவையும்வகுத்துநல் வறிவையும்வகுத்துமறை
யாதிநூலையும்வகுத்துச
சைவமுதலாவளவில் சமயமும்வகுத்துற்மே
சமயங்கடந்தமோன
சமரசம்வகுத்துநீயுன்னைநானணுகவுந்
தண்ணருள் வகுக்கவிலையோ
பொய்வளருநெஞ்சினர்களை காணாதகாட்சியே
பொய்யிலார் மெய்யறிவிற்
போதபரிபூரணவகண்டிதா காரமாய்ப்
போக்குவரவற்ற பொருளே
தெய்வமறைமுடிவானபிரணவசொரூபியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே (௪)

ஐந்துவகையாகின்றபூதபேதத்தினா
லாகின்ற வாகமைநீர்மே
லமிர்கின்றகுமிழியெனநிற்கின்றதென்னநா
னறியாதகாலமெல்லாம்
புத்திமகிழுறவுண்டுடுத்தின்ப மாவதே
போந்தநெறியென்றிருந்தேனை
பூராயமாகவினை தருளவந்துணர்ந்தவினை
போனவழி தெரியவில்லை
யெந்தநிலைபேசினு மிணங்கவிலையல்லா
லிறப்பொடுபிறப்பையுள்ளே
யெண்ணிணெஞசதுபகீரெனுந்துயிலுரு
திருவிழியுமிரவுபகலாயுச
செந்தழலின்மெழுகானதங்கமினிவையென்கோலோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரிவிளங்கவருதட்சிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே (௫)

காரிட்டவாணவக கருவறையிலறிவற்ற
கணணிலாககுழவியைப்போற்
கண்டுணடிருநதவெமை வெளியில்விட்டீல்லலாங்
காப்பிட்டதறகிசைந்த

பேரிட்டுமெய்யென்று பேசபாழ்ப்பொய்யுடல்
        பிலக்கவிளையமுதமூட்டிப்
பெரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற
        பெரியவிளையாட்டைமைத்திட்
டேரிட்டதன்சுருதிமொழிதப்பின்னைவிட்
        டிடருறவுருக்கியுடர்தீர்த்
திரவுபகலில்லாதபேரின்பவீட்டினி
        லிளைந்துதுயில்கொண்மினென்று
சீரிட்டவுலகன்னை வடிவானவெந்தையே
        சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷணாமூர்த்தியே
        சின்மயானந்தகுருவே. (௬)

கருமருவுகுகையனையகாயத்தினடுவுட்
        களிம்புதோய்மெம்மலையயான்
காண்டகவிருக்குநீஞானவனன்மூட்டியே
        கனிவுபெறவுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின்னருளானகுளிகைகொடு
        பரிசித்துவேதிசெய்து
பத்துமாற்றுத்தங்கமாக்கியேபணிகொண்ட
        பக்ஷத்தையென்சொல்லுவே
னருமைபெறுபுகழ்பெற்ற வேதாந்தசித்தாந்த
        மாதியாமந்தமீது
மத்துவிதநிலையராயென்னையாண்டென்னடிமை
        யானவர்களறிவினூடுந்
திருமருவுகல்லாலடிக்கீழும்வளர்கின்ற
        சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷணாமூர்த்தியே
        சின்மயானந்தகுருவே (௭)

கூடுதலுடன்பிரித லற்றுயிர்த்தொந்தமாய்க்
        குவிதலுடன்விரிதலற்றுக்
குணமற்றுவிரவினொடுயோக்கற்றுநிலையான
        குறியற்றுமலமுமற்று
நாடுதலுமற்றுமேல்கீழ்நடுப்பக்கமென
        நணுகுதலு மற்றுவிந்து
நாதமற்றுறைவகைப்பூதபேதமுமற்று
        ஞாதுருவின்ஞானமற்று
வாடுதலுமற்றுமேலொன்றறவிரண்டற்று
        வாக்கற்றுமனமுமற்று

மன்னுபரிபூரணச் சுகவாரிதன்னிலே
வாய்மடுத்துண்டவசமாய்த்
தேடுதலுமற்றவிடமில்லையென்றமௌனியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே (௮)

தாராதவருளெலாந் தந்தருளமௌனியாய்த்
தாயனையகருணைகாட்டித்
தாளிணையென்முடிசூட்டியருளிற்சமாதியே
சாசுவதசம்பரதாய
மோனமன்மந்திரமுமுன்றுமன்முதனிலே
யொன்றோடிரண்டெனும
லொளியெனவும்வெளியெனவுமுருவெனவு
மொலியெனவுமுணர்வுறுமத்
பாராதுபார்ப்பதேயேதுசாதனமற்ற
பரமவனுபூதிவாய்க்கும்
பண்பென்றுணர்த்தியதுபாராமலந்நிலே
பதிந்தவின்பழவடியர்தஞ்
சீராயிருக்கநினை தருள்வேண்டு மையனே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே (௯)

பேதமாயாதிநடுவந்தமுமிலாததாய்ப்
புனிதமாய்விகாரமாய்ப்
போக்குவரவில்லாதவின்பமாய்நிறைநின்
பூரணப்புகலிடமதா
லாதரவுவையாமல் றிவினைமறைப்பதுநி
னருள்பின்றுமருவின்மைதீர்த்
தறிவித்துநிற்பதுநினருளாகிலெளியனேற்
கறிவாவதேதிவிலா
வேதம்வருவகையேது வினையேதுவினைதனக்
கீடானகாயமேதென்
னீசசுதந்தரஞ் சிறிதுமிலையீசபர
மிரண்டினுண்மலைவுதீரத்
தெளிவருள்கொண்டினியுணர்த்தியெனையாள்வையோ
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே (௰)

பத்திநெறியிலேநின்று நவகண்டபூமிப்
பரப்பை வலமாகவந்து
பாலையிடைமூழ்கியு நதிகளிடைமூழ்கியும்
பசிதாக மின்றியெழுநா
மத்திடைநின்றுமுதிர் சருகுபுனல்வாயுவினை
வன்பசி தனக் கடைத்து
மௌனத்திருந்துமுயிர் மலைநுழைவுபுக்கியு
மன்னுதச நாடிமுறறுஞ்
சுத்திசெய்தும்மூலப்ராணனோ டங்கியைச
சோமவட்டத் தடைத்துஞ்
சொல்லரியவமுதுண்டு மற்பவுடல்கற்பங்க
டோறுநிலை நிற்கவிறு
சித்திசெய்துஞ்ஞான மலதுகதிகூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மையா னந்த குருவே. (௰க)

சின்மயானந்தகுரு-முற்றியது - ஆ - கக

# மௌனகுருவணக்கம்

ஆசைநிகளத்தினை நிர்தூளிபடவுதறி
யங்காரமுனையை யெறறி
யனாதுவிதமதமாகி மதமாறுமாறுக
வங்கையினவிலாழி யாகநிப
பாசவிருடன்னிழ லெலசசுளித்தார்த்துமேற்
பார்த்துப் பரந்தமனதைப்
பாரித்தகவளமாய்ப் பூரிககவுண்டுமுக
படாமன்ன மாயைநூறித்
தேசுபெறநிலைத்த சினமுதாரகுசச
செங்கைக்குளே யடங்கிச
சின்மயானந்தசுக வெளளபபடிந்துநின
திருவருட் பூர்த்தியான
வாசமுறுசறசார மீதெனனையொருஞான
மத்தகெச மௌனவளாததாய்
மந்த்ரகுருவேயோக தந்ரகுருவேமூலன
மாபிலவரு மௌனகுருவே (க)

ஐந்துவகையாகின்ற பூதமுதனுதழு
மடஙகவெளியாக வெளிசெய

தற்பரமைப்பதிவாகி யறிவாகவறிவார்க
ளறிவாக நின்றநிலையிற்
சிந்தையடங்கவென்று சும்மாவிருத்திமேற்
சின்னயமானந்த வெள்ளந்
தேக்கித்திளைத்துநா னூறுவாயிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகா
ணெந்தைவடவாசற்பிரம குருவாழ்கவாழ்வரு
ளியாநந்த மாபுவாழ்க
வென்றடியாமனமகிழ வேதாகமத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுருவேவீறு சிவஞானசித்திநெறி
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வரு மௌனகுருவே (உ)

ஆதிக்கங்கிளவ ராரிந்தமாயைக்கெ
ணறிவன்றி யிடமில்லையோ
வந்தாப்புஷ்பமுங் கானலின்னீருமோ
ரவசரத் துபயோகமோ
யோகிதநிலையை மயக்குதேயபயநான்
புககவரு டோத்திடாமற்
பொய்யானவுலகத்தை மெய்யாகிறுத்தியெம்
புத்திக்கு ளிந்திரசாலஞ்
சாதிக்குதேயிதனை வெல்லவுமுபாயநீ
தந்தருள்வ தென்றுபுகல்வாய்
சண்மதஸ்தாபனமும் வேதாந்தசித்தாந்த
சமரசநிரவாக நிலையு
மாதிக்கொண்டப பரப்பெலாமறியவே
வந்தருளு ஞானகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வரு மௌன குருவே (௩)

மின்னனையபொய்யுடலை நிலையென்றுமையிலகு
விழிகொண்டு மையல்பூட்டி
மின்னார்களின்பமே மெய்யென்றுவளர்மாட
மேல்வீடுசொர்க்க மென்றும்
பொன்னையழியாதுவளர்பொருளென்று போற்றியிப்
பொய்வேஷ மிகுதிகாட்டிப்
பொறையறிவுதுறவீதலாதிநற்குணமெல்லாம்
போக்கிலே போகவிட்டுத்

தன்னிகரி லோபாதி பாழும்போய் பிடித்திட
　　தரணிமிசை லோகாயுதன்
சமையநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
　　சமரச சிவானுபூதி
மன்னவொரு சொற்கொண்டெனைத்தடுத்தாண்ட
　　பின் வாழ்வித்த ஞான குருவே
மந்த்ரகுரு வேயோகதந்த்ரகுருவேமூலன்
　　மரபில்வரு மௌனகுருவே (௬)

போனகமிருக்கின்றசாலையிடவேண்டுவ
　　புசித்தபிற்கிருக்குமதுபோற்
புருஷர்பெறு தர்மாதிவேதமூடாகமம்
　　புகலுமதினுலாம்பயன்
ஞானநெறிமுக்யநெறி காட்சியநுமானமுத
　　லானவிதங்கடோர்ந்து
காணுமெனக்குளநுபடையுடைபெயர்த்திடவு
　　நான்குசாதனமு மோர்ந்திட்
டானநெறியாஞ்சரியையாதிசோ பானமுற்
　　றணுபக்ஷ சம்புபக்ஷ
மாமிருவிகற்பமுமாயாதி சோலையு
　　மறிந்திரண்டொன்றென்றுமோர்
மானதவிகற்பமற வென்றாகிற்பதுநமது
　　மரபென்றபரம குருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
　　மரபில்வரு மௌனகுருவே (௭)

கல்லாதவறிவுமேற் கேளாதகேள்வியும்
　　கருணைசிறிதேதுமில்லாக்
காட்சியுங் கொலைகளவுகட்காமமாட்சியாக்
　　காதலித்திடுநெஞ்சமும்
பொல்லாத பொய்மொழியுமல்லாதுநன்மைகள்
　　பொருந்துகுண மேதுமறியேன்
புருஷர்வடி வானதேயல்லாதுகனவிலும்
　　புருஷார்த்த மேதுமில்லே
னெல்லாமறிந்தநீயறியாததன்றெனக்
　　கெவ்வண்ண முய்வண்ணமோ
விருளாயிருளென்றவர்க்கொளிதாரகம்பெற
　　மெனக்குநின்னருடாகாம்
வல்லானெனும்பெய ருனக்குள்ளதேயிந்த
　　வஞ்சகனையாளவினையாய்

மந்த்ரகுருவேயோக தந்தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே [சு]

கானகமிலங்குபுலி பசுவொடுகுலாவுநின்
கண்காண மத்யானைநீ
கைகாட்டவுங்கையா னெகிடிக் கெளப்பெரிய
காட்டைமிக வேந்தி வருமே
போனகமமைந்ததென வக்காமதேனுவின்
பொன்னடியி னின்றுசொலுமே
புலிராசர்கவிராசர் தவராசனென்றுனைப்
போற்றிசய போற்றியென்பார்
ஞானகருணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர் களுமுன்
னட்பினைவிரும்புவார் சுகர்வாம தேவர்முதன்
ஞானிகளு முனைமெச்சு வார்
வானமுமண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன்
மகிமையது சொல்ல வெளிதோ
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே (எ)

சருகுயலபக்ஷணிகளொருகோடியல்லாற்
சகோரபட்சிகள் போலவே
தவளநிலவொழுகமிர்த தாரையுண்டழியாத
தன்மையரனந்தகோடி
யிருவினைகளற்றிரவுபகலென்பதறியாத
வெதாந்த மௌன ஞான
வின்பநிஷ்டையர்கோடி மணிமந்த்ரசித்திநிலை
யெய்தினர்கள் கோடிசூழக்
குருமணியிழைத்திட்ட சிங்கா தனத்தினமிசை
கொலுவீற்றிருககுநின்னைக்
கும்பிட்டனந்தமுறைதெண்டனிட்டென்மனக்
குறையெலாந் திரும்வண்ண
மருமலரொடுத்துணிரு தாளையர்சிக்கவெனை
வாவெனறழைப்பதெந்நாண
மந்தரகுவுவேயோகதந்தரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே (அ)

ஆங்கார மானகுல வேடவெம்பேய்பாழ்தத
வாணவத்தினிம்வலிதுகா
ணறிவினை மயக்கிடு நடுவறியவொட்டாதி
யாதொன்றுதொடினுமதுவாய்த்

தங்காதுமொழிபேசு மரிகரப்பிரமாதி
தம்மொடு சமானமென்னுந்
தடையற்றதேரிலஞ்சுருவாணிபோலவே
தன்னிலசையாதுநிற்கு
மிங்காரெனக்குநிகரென்னப்பிரதாபித்
திராவணா காரமாகி
மிதயவெளி யெங்கணுந்தன்னரசு நாடுசெய்
திருக்குமிதனொடேநேரமும்
வாங்காவி லாவடிமை போராட முடியுமோ
மௌனோபதேச குருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன
மரபில்வரு மௌன குருவே (௯)

பற்றுவெகுவிதமாகியொன்றைவிட்டொன்றனைப்
பற்றியுழலகிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தைபெறநான் வெளியாக நின்னருள்
பகர்ந்துமறியென்றுவிதமோ
சிற்றறிவதனறியுமெவரேனுமொருமொழி
திடுக்கென் றுரைத்தபோது
சிந்தைசெவியாகவேபறையுறைய வுதரவெங்
தீநெஞ்சமளவளாவ
வுற்றுணரவுணர்வற்றுன் மத்தவெறி யினர்போல
வுளறுவேன்முத்திமார்க்க
முணர்வதெப்படியின்பதுன்பஞ் சமானமாக
யுறுவதெப்படியாயினு
மற்றெனக்கைநீ சொன்னவொரு வார்த்தையினை
மலையிலக்கெனநம் பினேன
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
பரபிலவருமௌனகுருவே (௰)

மௌனகுருவணக்கம்-முற்றியது ஆ ௪௬

## கருணாகரக்கடவுள்.

நிர்க்குணநிராமயநிரஞ்சனநிராலம்ப
நிர்விஷய கைவல்யமா
நிஷ்களவசங்கசஞ்சலரகிதநிர்வசன
நிர்த்ததொந்தநித்தமுத்த
தற்பரவிஸ்வாதீதவ்யோமபரிபூரண
சாதானந்த ஞானபகவ

சமபுசிவசங்கரசர்வேச வென்றுநான்
சர்வகாலமுநினைவனோ
வறபுதவகோசர நிவர்த்திபெறுமன்பருக
கானந்தபூர்த்தியான
வத்துவிதநிச்சயசொரூபசக்ஷாத்கார
வனுபூதியனுசூதமும்
கற்பனையறககாணமுககணுடன்வடநிழற்
கண்ணூடிருந்தகுருவே
கருதரியசிறசபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரககடவுளே [க]

மணாறுதியைந்தொடுபுறத்திலுளகருவியும்
வாக்காதி சுரோத்ராதியும
வளர்கின்றசப்தாதி மனமாதிகலையாதி
மனனுசுததாதியுடனே
தொணணூறறொடாறுமற் றுள்ளனவுமெளனியாயச்
சொனனவொருசொறகொண்டதே
தூவெளிய தாயகண்டானந்தசுகவாரி
தோறறுமதை யென்சொல்லுகேன
பண்ணுருமிசையினொடு பாடிப்படித்தருட்
பானமெநெறி நினறுதவருப
மக்குவவிசேஷராய்நெக்குநெககுருகிப
பணிநதெழுந திருகைகூப்பிக
கண்ணறுகலைாபுரளநின்றவனபவைரயெலாம
கைவிடாக்காட்சியுறவே
கருதரிய சிறசபையிலானந்தநிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே [உ]

எல்லாமுனடிமையேயெல்லாமுனுடைமையே
யெல்லாமு னுடைய செயலே
யெங்கணும்வியாபிநீயெனறுசொலுமியல்பென்
றிருககாதி வேதமெல்லாஞ
சொலலொன் முறைகியது மிககவுபகாரமாச
சொல்லிறந் தவருமவிண்டு
சொன்னவையுமிவைநலலகுருவானபேருந
தொகுத்தநெறிதானுமிவையே
யல்லாமலிலலையென்நன்றுவறிந்தே
நமிநதபடிநின்றுசுகநா
னுசாதவண்ணமேயிவ்வணணமாயினே
னதுவுநின தருளென்னவே

கல்லாதவறிஞனுக் குள்ளேயுணர்த்தினை
  கதிக்குவகையேது புகலவாய்
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
  கருணாகரக கடவுளே (௩)

பட்டப்பகற்பொழுதை யிருளென்றமருளாதம
  பக்ஷமோ வெனது பக்ஷம்
பார்த்தவிடமெங்கணுங் கோத்தநிலைகுலையாது
  பரமவெளியாக வொருசொற்
றிட்டமுடன்மௌனியா யருளசெயதிருகவுஞ்
  சோாம லாரா கநான.
சிறுவீடுகட்டியதி னடிசேற்றையுண்டுண்டு
  தேக்குசிறி யாரகள்போல
நட்டணையதாக்கற்ற கல்வியும்விவேகமு
  நன்னிலய மாகவுன்னி
நானென்றுநீயென் றிரண்டில்லையென்னவே
  நடுவேமுளை தத மனைதக்
கட்டவறியாமலே வாடினேனெப்போது
  கருணைக் குறித்தாவனோ
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
  கருணா கரக கடவுளே (௪)

மெய்விடாநாவுள்ள மெய்யருளிருந்துநீ
  மெய்யான மெய்யை யெல்லா
மெயயெனவுணர்த்தியது மெய்யிதற்கையமிலை
  மெயயேது மறியாவெறும்
பொயவிடாப்பொய்யினே னுள்ளத்திருந்துதான
  பொய்யானபொய்யை யெல்லாம்
பொய்யெனவுண்ணமேபுகலவைத்தாயெனிற
  புன்மையேனென்செய் குவேன
மைவிடாதெழுநீல கண்டகுருவேவிஷ்ணு
  வடிவான் ஞானகுருவே
மலர்மேவிமறையோது நான்முகக்குருவே
  மதங்கடொறு நின்றகுருவே
கைவிடாதேயெனற வன்பருககன்பாய்க
  கருத்துா டுணர்ந்து குருவே
கருதரியசிறசபையி லானந்தநிர்த்தமிடு
  கருணா கரக்கடவுளே (௫)

பண்ணேனுனக்காக பூசையொருவடிவிலே
  பாவித் திறைஞ்சு வாங்கே

பார்க்கின்ற மலருடுநீயெ யிருத்தியப்
பனிமலரெடுக்கமனமு
நண்ணேனலாமலிருகைதான் குவிக்கவெனி
ணுமென்னுளநிற்றிநீ
நான்கும்பிடும்போ தணக்கும்பிடாதலா
ஞன்பூசைசெயயனா முறையோ
விண்ணெவி ணதியாம்பூதமேநாதமே
வேதமேவேதாந்தமே
மேதககேளவியே கேள்வியாம்பூமிக்குள்
வித்தேயவித்தினமுளையே
கணணேகருத்தேயெ ணண்ணேயெழுத்தே
கதிககான மோனவடிவே
கருதரிய சிறசபையி லானந்தநிர்த்தமிடு
கருணா கரக கடவுளே [சு]

சந்ததமும் வேதமொழி யாதொன்றுபற்றினது
தானவந்து முற்றுமெனலாற்
சகமீ திருந்தாலுமரணமுண்டெனபது
சதாநிஷடர்நினைவதிலலை
சிந்தையறி யார்க்கிது போதிப்பதல்லவே
செப்பினும் வெகுதாக்கமாந்
திவ்யகுண மார்க்கண்டர்சுகாதிமுனிவோர்கள்
சித்தாந்தநித்யரலவோ
விந்த்ராதிதேவதைகள பிரமாதிகடவுள
ரிருககாதி வேதமுனிவ
ரொண்ணரிய கணநாதா நவநாதசித்தர்கள்
ளிரவிமதியாதியோரகள
கந்தருவாகினராகள மற்றையர்களியாவருங
கைகுவித்திடுதெய்வமே
கருதரிய சிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரககடவுளே (எ)

துள்ளுமறியாமனதுபலிகொடுத்தேன்கர்ம
துஷ்டதே வதைகளிலலை
துரியநிறை சாந்ததேவதையாமுனககே
தொழும்பனன வபிஷேகநீ
ருள்ளுறையி லென்னுவிணைநவேதநியய்ப்ராண
னேங்குமதிதூபதீப
மொருகாலமன்றிதுசதாகாலபூசையா
வொப்புவித் தேன்கருணைகூர

தெள்ளிமறை வடிகட்ட வமுதப்பிழம்பே
　　தெளிந்ததேனே சீனியே
திவ்யரச மியாவுந்திரண்டொழுகுபாகே
　　தெவிட்டாதவனந்தமே
கள்ளமறியாமேலோருள்ளமௌன வெளியாய்க்
　　கலக்கவரு நல்லறவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
　　கருணாகரக்கடவுளே (௮)

உடல்குழையவென்பெலாநெக்குருக விழிநீர்க
　　ளூற்றென வெதும்பியூற்ற
வூசிகாந்தத்தினைக் கண்டணுகல்போலவே
　　யோருறவு முன்னியுன்னிப்
படபடெனநெஞ்சம்பதைத்துணர்வுகெட்டுறப்
　　பாடியாடிக்குதித்துப்
பனிமதி முகத்திலேநிலவனைய புன்னகை
　　பரப்பியார்த்தார்த்தெழுந்து
மடலவிழ்மலரனைய கைவிரித்துக்கூப்பி
　　வானேயவானிமையே
மழையேமழைத்தாரை வெள்ளமேநீடூழி
　　வாழியெனவாழ்த்தியேதுதி
கடன்மடைதிறந்தனைய வன்பரன்புகளிளைய
　　கன்னெஞ்சனாக வெளியேனோ
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
　　கருணாகரக்கடவுளே (௯)

இங்கற்றபடியங்குமெனவறியுநல்லறிஞ
　　ரெக்காலமுமமுதவுவா
ரின்சொறவறாபொய்மையாமிருக குரையா
　　ரிரங்குவார் கொலைகள் பயிலா
சங்கற்பசித்தரவருள்ளக்கருத்தினிலுறை
　　சாட்சிநீ யிகபரத்தும்
சந்தான கற்பகத்தெளிவாயிருந்தே
　　சமஸ்தவினைபமுழுதவுவாய்
சிங்கத்தையொத்தனைப் பாயவருவினையினைச்
　　சேதிக்கவருசிம்புளே
சிந்தாகுலத்திமிரமகலவருபானுவே
　　தீனனென்கறையேறவே
கங்கற்றபேராசை வெள்ளத்தின்வளரருட்
　　கனவட்டக்கப்பலே

கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே (ய)

கருணாகரக்கடவுள்-முற்றியது ஆக-௫௬.

# சித்தர்கணம்

திகசொடுதிகந்தரும் மனவேகமென்னவே
சென்றோடியாடிவருவீர்
செம்பொன்மகமேருவொடு குணமேருவென்னவே
திகழ்துருவனளவளாவி
யுகரமிகுசகரதரனொன்னிர்பீர்கையி
லுத்தமிழுமாசமனமா
வோரேழுகடலையும் பருகவல்லீரிந்த்ர
ஞலகுமயிராவதமுமே
கைக்கெளியபந்தா வெடுத்துவிளையாடுவீர்
ககனவட்டத்தையெல்லாங்
கடுகிடையிருத்தியே யஷ்டகுலவெற்பையுங்
காட்டுவீர்மேலுமேலு
மிகசித்திகளெலாம் வல்லீரடிமைமுன்
விளங்கவரி சித்தியிலையோ
வேதாந்த சித்தாந்த சமரசானனிலைபெற்ற
வித்தகசித்தர்கணமே (க)

பாட்டளிதுதை்ந்துவளர்கற்பகநீழலைப்
பாரினிடைவரவழைப்பீர்
பத்மநிதிசங்கநிதியிருபாரிசத்திலும்
பணிசெயுந்தொழிலாளர்போற்
கேட்டதுகொடுத்துவரநிற்கவைப்பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போரையும்
கிரீடபதியாகக்குவீர்கற்பாந்த
கேணியிடைகுறுகவைப்பீ
ரோட்டினையெடுத்தாயிரத்தெட்டுமாற்றுக
வொளிவிடும பொன் ஞக்குவீர்
ருரகனுமிளைப்பாறயோகதண்டத்திலே
யுலகுசுமையாகவருவான்
மீட்டிடவும்வல்லீர்மனமனக்கல்லையனெ்
மெழுகாகவைப்பதரிதோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகசித்தர்கணமே (உ)

பாரோடுநன் னீராதி யொன்றொடொன் றாகவே
பற்றிலய மாகு போது
பரவெளியின்மருவுவீர கற்பாந்தவெள்ளம்
பரந்திடினதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த்துவண்டுசிவயோகநிலை
நிற்பீர் விகற்ப மாகி
நெடியமுகிலேழும் பரந்துவருஷிக்கிலோ
நிலவுமதி மண்டலமதே
யூறென விளங்குவீர் பிரமாதிமுடிவிலவிடை
யூர்தியருளாலுலவுவீ
ருலபங்கள்கீழ்மேலதாகப் பெருங்காற்
றுலாவினற்.றுரணையி னுள்
மேருவென வசையாம னிற்கவல்லீருமது
மேதக்கசித்தியெளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசனன்னிலைபெற்ற
வித்தகக்சித்தர் கணமே [௫]

எண்ணரியபிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினும் மரிதரிதுகா
னிப்புறவி தப்பினலெப்பிறவிவாய்க்குமோ
வேதுவருமோ வறிகிலேன்
கண்ணகனிலத்துநா னுள்ளபொழுதேயருட்
ககனவட்டத்தினின்று
காலூன்றிநின்றுபொழியானந்தமுகிலொடு
கலந்துமதியவச முறவே
பண்ணுவதுநன்மையிந்நிலைபதியுமட்டுமே
பதியாயிருந்ததேகப்
பவுரிகுலை யாமலேகௌரிகுண்டலியாயி
பண்ணவிதனருளினலே
விண்ணிலவுமதியமுதமொழியாது பொழியவே
வேண்டுவேனுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகசித்தர்கணமே (௬)

பொய்திகழுமுலகநடை யென்சொல்கேனென்சொ
ல்கேன் பொழுதுபோக்கே தென்னிலோ
பொய்யுடனிமித்தம்புசிப்புக்கலந்திடல்
புசித்தபின்கண்ணுறங்கல்
கைதவமலாமலிது செய்தவமதல்லவே
கண்கெட்டபேர்கரும்வெளியாய்க்

# சித்தர்கணம்

கண்டதிது விண்டிதைக்கண்டுத்துநிற்றலெக்
காலமோவதையறிகிலேன்
மைதிகழு முகிலினங் குடைநிழற்றிடவட்ட
வரையினெடுஞ்செம்பொன்மேரு
மால்வரையினை முதுகூடும் யோகதண்டகோல்
வளைந்துசெயவிருதுகாட்டி
மெய்திகழு மஷ்டாங்கயோக பூமிக்குள்வளர்
வேந்தரேகுணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமாசநன்னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே (௫)

கெசதுரகமுதலான சதுரங்கமனமாகி
கேள்வியி னிசைநதுநிறயக்
கெடிகொண்டதலமாறு மும்மண்டலத்திலுங்
கிள்ளாகருசெலலமிக்க
தெசவிதம தாயநின்றநாதங்க ளோலிடச
சிங்காசனாதிபர்களாயத்
திகருத்திகந்தமும்பூரண மதிக்குடை
திகழ்நதிட வசந்தகால
மிசையமலா மீதுறைமனம்போலவானந்த
மிதயமேறகொளளுமவண்ண
மென்றைகருமழியாத சிவராச யோகமா
மிநத்ராதி தேவர்களெலாம்
விசயசய சயவென்ன வாசிசொலவேகொளு
விருகருறும பெருமையெளிதே
வேதாத்தசிந்தாந்தசமரசநனனிலைபெற்ற
வித்தகச சிததாகணமே. (௬)

ஆணிலேபெணணிலேயென்போலவொருபேதை
யகிலத்தின மிசையுள்ளதோ
வாடியகறங்குபோலோடியுழல் சிந்தையை
யடக்கியொரு கணமேனும்யான்
காணிலேன் திருவருளையல்லாதுமௌனியாய்க்
கண்மூடியோடு மூசசைக்
கட்டிக்கலமாதிலய முட்டவே மூலவெங்
கனலினை யெழுப்பநினைவும்
பூணிலேனித்தைகாட் கற்றதுங்கேட்டதும்
போக்கிலேபோகவிட்டுப்
பொய்யுலகநயினைநயினுங்கடையான
புன்மையேனின்னமின்னம்

வீணிலேயலேயாமன் மலேயிலக்காகநீ
வெளிப்படத் தோற்றல்வேண்டும்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலேபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. [எ]

கன்னலமு தெனவுமுக்கனியெனவும்வாயூறு
கண்டெனவுமடியெடுத்துக்
கடவுளர் கடந்ததலவமுதமுதுபேய்போற்
கருத்திலெமு கினறவெல்லா
மென்னதறி யாமையறிவென்றுமிருபகுதியா
லீடுதமிழென்றமிழினுக
கின்னல்பகராதுலகமாராமைமேலிட்
டிருத்தலாலித்தமிழையே
சொன்னவணியாவனவன் முதநிசித்திகளெலாந்
தோயந்தநெறி யேபடித்தீா
சொலலுமென வவர்நீங்கள்சொன்னவலையிற்சிறிது
தோயந்தகுணசாந்தனெனவே
மின்னல்பெறவேசொலலவசசொல்கேட்டடினமமனம்
விகசிப்ப வெந்தநாளோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலேபெற்ற
வித்தகசசித்தர்கணமே. [அ]

பொற்பினொடுகைகாலில வள்ளுகிர்படைத்தலாற்
போந்திடையொடுககமுறலாற்
பொலிவான வெண்ணீறுபூசியேயருள்கொண்டு
பூரித்த வெண்ணீரமையா
லெற்படவிளங்குககனத்திலிமையாவிழி
யிசைந்துமேனோககமுறலா
லிரவுபகலிருளான கனதந்திபடநூறி
யிதயங்களித்திடுதலாற
பற்பல விதங்கொண்ட புலிகலேயினுரியது
படைத்துப்ரதாபமுறலாற்
பனிவெயில்கள்புகுதாமனெடியவான்றொடர்நெடிய
பருமரவனங்களாறும்
வெற்பினிடையுறைதலாறறவராஜசிங்கமென
மிக்கோருமைப்புகழ்வார்கண்
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலேபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. [கூ]

கல்லாதயோர்களேநல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறிவிலலாதவென்

கன்மத்தையென்சொல்வ னிலையென்சொல்லு
வேன்கேவல ஞானநீதி
நல்லோருரைக்கிலோ கன்மமுக்கியமென்று
நாட்டுவேன் கன்மமொருவ
னாடினோ பழைய ஞானமுக்கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லானொருத்தன் வரவுந்த்ராவிடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவரையு மருட்டிவிடவகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகசித்தர் கணமே [௰]

சித்தர்கணமுற்றுப்பெற்றது ஆ ௩௩

# ஆனந்தமானபரம்.

கொல்லாமையெத்தனை குணக்கேட்டைநீக்குமக்
குணமொன்று மொன்றிலேன்பாற்
கோரமெத்தனைபக்ஷ பாதமெத்தனையவன்
குணங்களெத்தனை கொடியபாழ்ங்
கல்லாமையெத் தனையகந்தையெத்தனைமனக்
கள்ளமெத்தனை யுள்ளசற்
காரியஞ்சொல்லிடினு மறியாமையெத்தனை
கதிக்கென் றமைத்தவருளிற்
செல்லாமையெத்தனைவிரு தாகோஷ்டியென்னிலோ
செல்வமெத் தனைமுயற்சி
சிந்தையெத்தனைசலன மிந்த்ரசாலம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலா
யல்லாமையெத்தனை யமைத்தனையுனக்கடிமை
யானே னிவைகருமமோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரமே [௧]

தெருளாகிமருளாகி யுழலுமனமாயமனந்
தோய்ந்துவளர் சித்தாகியச்
சித்தெல்லாஞ் சூழ்ந்தசிவ சித்தாய்விசித்ரமாய்த்
திரமாகி நானாவிதப்

பொருளாகியப்பொருளை யறிபொறியுமாகியைம்
புலனுமா யைம்பூதமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரமுஞ்சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
யிருளாகியொளியாகி நன்மைதீமையுமாகி
யின்றாகி நாளையாகி
யென்றுமாயொன்றுமாய்ப் பலவுமாயாவுமா
யிவையல்ல வாயநின்னை
யருளாகிநின்றவர்க ளறிவதல்லாலொருவ
ரறிவதற கெளிதாகுமோ
வண்டபகிரண்டமுமடங்க வொருநிறைவாகி
யானந்த மானபரமே. [௨]

மாறுபடுதர்க்கந் தொடுக்கவறிவார்சாண்
வயிற்றின பொருட்டாக
மண்டலமும்விண்டலமு மோனமுறு மனதுமல
மாலாகிநிற்கவறிவார்
வேறுபடுவேடங்கள்கொள்ளவறி வாரொன்றை
மௌனமென் றகம்வேறதாம்
வித்தையறிவாரெமைப் போலவே சந்தைபோன்
மெய்ந்நூல் விரிக்க வறிவார்
சீறுபுலிபோற்சீறி மூச்சைப்பிடித்துவிழி
செக்கச் சிவக்கவறிவார்
திறமென்று தந்தம் மதத்தையேதாமத
செய்கைகொடு முளறவறிவா
ராறுசமயங்கடொறும் வேறுவேறாகிவிளை
யாடுமுனை யாவரறிவா
ரண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே [௩]

காயிலையுதிர்ந்தகனி சருகுபுனன்மண்டிய
கடும்பசிதனைக்கடைத்துங்
கார்வரையிருண்முழையிர் கருங்கல்போலசையாது
கண்மூடி நெடிதிருந்தும
தீயினிடைவைகியுந் தோயமதி மூழ்கியுந
தேகங்களென் பெலும்பாயத
தெரியநின்றுஞ் சென்னிமயிர்கள்கூடாககுருவி
தெற்றவெயி லூடிருந்தும்
வாயுவையடக்கியுமனத்தினையடக்கியு
மௌனத்திலே யிருந்தும்

மதிமண்டலத்திலே கனல்செல்லவமுதூண்டு
வானமுடியிருந்துவறிஞ்
ராயுமறைமுடிவான வருணாடி னாடிமை
யகிலத்தைநாடன் முறையோ
வண்டபகி ரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. [௪]

சுத்தமுமசுத்தமுந் துக்கசுக பேதமுந்
தொந்தமுட னிர்த்தொந்தமும்
ஸ்தூலமொடுசூக்ஷமமு மாசையுநிராசையுஞ்
சொல்லுமொருசொல்லினமுடிவும்
பெத்தமொடு முத்தியும் பாவமொடுபாவமும்
பேதமொடபேதநிலையும்
பெருமையொடுசிறுமையுமருமையுட னெளிமையும்
பெண்ணினுடனாணுமற்று
நித்தமு மனித்தமுமஞ்சனநிரஞ்சனமு
நிஷ்களமு நிகழ்சகளமு
நீதியுமநீதியு மாதியொடநாதியு
நிர்விஷய விஷயவடிவு
முத்தனையுநீயல தௌத்தனையுமில்லையெனின்
யாங்களுனையன்றியுண்டோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே (௫)

காராருமாணவக்காட்டைக்களைந்தறக்
கண்டகங் காரமென்னும
கல்லைபிளந்துநெஞ்சகமானபூமிவெளி
காணதிருத்தியேமேன்மேற
பாராதியறியாத மோனமாம்வித்தைப்
பதித்தன்புநீராகவே
பாய்ச்சியதுபயிராகு மட்டுமாமாயைவன
பறவையணு காதவண்ணம்
நேராகநின்றுவிளை போகம்புசித்துண்ட
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின்படிக்குநீ முன்னின்றுகாப்பதே
நின்னருட் பாரமென்று
மாராறுமறியாத சூதானவெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரமே (௬)

வானாதிபூதமா யகிலாண்டகோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகியிரவியாகி மற்றுளவெலாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நானாகிநின்றவனு நீயாகிநின்றிடவு
நானென்ப தறிந்திடாதே
நானானெனக்குளறி நானாவிகாரியாய்
நானறிந் தறியாமையாய்
போனாலதிட்டவழி வெல்லவெளிதோயகற
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள்வானறனை யெழுப்பவசமோவினிப்
போதிப்ப தெந்தநெறியை
யானாலுமெனகொடுமை யனியாயமனியாய
மாபாலெடுத்து மொழிவே
னண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரனே (௭)

பொய்யினேன்புலையினேன் கொலையினேனின்னருள்
புலப்படவறிந்து நிலையாப்
புன்மையேனகலாத நன்மையேனன்மைபோற்
பொருளலாப் பொருளைநாடும்
வெய்யனேன்வெகுளியேன் வெறியனேன்சிறியனேன்
வினையினே னென்றெனைநீ
விட்டுவிடநினைவையேற றட்டழிவதல்லாது
வேறுகதி யேதுபுகலாய்
துய்யனேமெய்யனே யுயிரினுக்குயிரான
துணைவனே யிணையொன்றிலாத்
துரியனேதுரியமுங் காணவதீதனே
சுருதிமுடி மீதிருந்த
வையனேயப்பனே யெனுமறிஞரறிவைவிட்
டகலாத கருணைவடிவே
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்த மானபரனே (அ)

எத்தனைவிதங்கடான் கற்கினுங்கேட்கினுமென்
னிதயமு மொடுங்கவில்லை
யானெனுமகந்தைதா னெள்ளளவுமாறவிலை
யாதினும் மபிமானமென்
சித்தமிசைகுடிகொண்ட தீமையோடிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன

சீலமொடுதவவிரதமொருகனவி லாயினுந்
தெரிசனங்கண்டறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்குமெய்ம்மொழி
புகன்றிடேனபிறாகேட்கவே
போதிப்பதல்லாது சுமமாவிருந்தருள்
பொருந்திடாப்பேதைநானே
யந்தனைகுணகேடர்கண்டதாக் கேட்டதா
வவனிமிசையுண்டோசொலா
யண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்தமானபரமே. [௬]

எக்காலமுநதனக கென்னவொருசெயலிலா
வேழைநீயென்றிருந்திட்
டெனதாவியுடலபொருளுமௌனியாய்வந்துகை
யேற்றுநம தென்றவென்னே
பொயககால தேசமும்பொய்ப்பொருளில்வாஞ்சையும்
பொய்யுடலைமெய்யென்னலும்
பொயயுறவுபற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும்பொய்யாகையான்
மைக்காவிருட்டனையவிருளில்லையிருவினைகள்
வந்தேறவழியு மில்லை
மனமில்லையமமனத்தினமில்லைவேறுமொரு
வரவில்லைபோக்குமில்லை
யக்காலமிககால மென்பதிலையெல்லா
மதீதமயமானதன்றோ
வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. [௭]

ஆனந்தமானபர முற்றுப்பெறறது ஆ-எக

## சுகவாரி

இனனமிதுகனிபாருகறகண்டுசீனிதே
னெனருசித்திடவலியவந்
தின்பநகொடுத்தநினை யெங்ஙோநின்னன்ப
ரிடையறு துருகிநாடி
யுன்னியகருத்தவிழவுரைகுளறியுடபுலெங்கு
மோய்ந்தயர்ந்தவசமாகி
யுணர்வரியபேரின்பவனுபூதியுணர்விலே
யுணர்வார்க் குள்ளபடிகாண்

கன்னிகையொருத்திசிற் றின்பம்வேம்பென்னும்
    கைக்கொள்வள் பக்குவத்திற்
கணவனருள்பெறின்முனே சொன்னவாறென்னென்க்
    கருதி நகையாவளதுபோற்
சொன்னபடி கேட்குமிப்பேதைக்குநின்கருணை
    தோற்றிற்சுகாரம்பமாஞ்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்
    சோதியே சுகவாரியே (௧)

அன்பின்வழியறியாத மென்னைத்தொடர்ந்தென்னை
    யறியாதபக்குவத்தே
யாசைப்பெருக்கைப்பெருக்கொடுத்துநா
    னற்றேனலந்தேனென
வென்புலமயங்கவே புத்தேற்றிவிட்டா
    யிரங்கியொருவழியாயினு
மின்பவெள்ளமாகவந்துள்ளங்களிக்கவே
    யெனைநீகலந்ததுண்டோ
தனபருவ மலருக்கு மணமூட்டுவண்டுண்டு
    தண்முகைதனக்குமுண்டோ
தமியனேற்கிவ்வண்ணந்திருவுளமிரங்காத
    தன்மையாற் றனியிருந்து
துன்பமுறி னெங்ஙனேயழியாதநின்னன்பர்
    சுகம்வந்து வாய்க்குமுரையாய
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்
    சோதியே சுகவாரியே (௨)

கல்லேனுமையவொரு காலத்திலுருகுமென்
    கன்னெஞ்ச முருகவிலையோ
கருணைக்கிணங்காத வன்மையையுநான்முக
    கற்பிக்கவொருகடவுளோ
வல்லான்வகுத்ததேவாய்க்காலெனும்பொரு
    வழக்குக்கிழக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையாயிரங்கியெனை
    வாழ்விப்பதுன்பாரங்காண்
பொல்லாதசேயெனிற்றாய்தள்ளனிதமோ
    புகலிடம்பிறிது முண்டோ
பொய்வார்த்தை சொல்லிலேதிருவருட்கிழுக்குமாய்ப்
    புன்மையேனுவனந்தோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச்
    சும்மா விருக்க வருளாய்

சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (௩)

என்பெலா நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்பவுட
லிளகமனதழலின்மெழுகா
யிடையறாதுருகவருமழைபோலிரங்கியே
யிருவிழிக ணீரிறைப்ப
வன்பினான் மூர்ச்சித்தவனபருக்கங்களே
யமிர்தசஞ்சீவி போல்வந்
தானந்தமழைபொழிவையுள்ளன்பிலாதவெனை
யார்க்காகவடிமைகொண்டாய்
புன்புலான் மயிர்தோ னரம்பென்புமொய்த்திடு
புலைக்குடிலி லருவருப்புப்
பொய்யல்ல வேயிதனை மெய்யெனறுநமபியென்
புந்திசொலுமோபாழிலே
துன்பமாயலையவோ வுலகநடையைய்யவொரு
சொற்பனத்திலும்வேண்டிலேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுக வாரியே. (௪)

வெந்நீர்பொருதெனுடல் காலின்முட்டைக்கவும்
வெடுக்கெனறசைத்தெடுத்தால
விழியிமைதங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறொன்றையொருவர்சொல்லி
னந்நேரமையோவென முகம்வாடிநிற்பதுவு
மையரின்னருளறியுமே
யானுமெத்தப் பயந்தவனி யானெனனை
யாண்டநீகைவிடாதே
யிந்நேரமென்றிலையுடறசுமையதாகவு
மெடுத்தாலிறக்கவென்றே
யெங்கெங்குமொருசீரவையாயமுண்டாயினு
மிறைஞ்சுசுகராதியான
தொன்னீர்மை யாளர்க்குமானிடம்வகுத்தவரு
டுணையெனறுநம்புகின்றேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (௫)

பறறுவனவறறிடு நிராசையென்றொருபூமி
பற்றிப்பிடிகரு மியோகப்
பாங்கிறபிராணலய மென்னுமொருபூமியினவ
பற்றின்மன மறுமென்னிலே.

கற்றையஞ் சடைமௌனிதானேகனிந்தகனி
கனிவிக்கவந்தகனிபோற்
கண்டதிந்நெறியெனத்திருவுளக்கனிவினொடு
கனிவாய்திறந்து மொன்றைப்
பெற்றவனுமல்லேன பெறுதவனுமல்லேன்
பெருக்கத்த தவித்து ளறியே
பெண்ணீர்மையென்னவிரு கண்ணீரிறைத்துநான்
பேயபோ லிருககவுலகண்
சுற்றிநகைசெயயவே யுலையவிட்டாயெனிற்
சொலலவினி வாயுமுண்டோ
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியே சுகவாரியே (௬)

அரும்பொனே மணியே யென்னன்பேயென்னன்பான
வறிவே யெனறிவி லூறு
மானந்தவெள்ளமே யென்றென்றுபாடினே
னாடினே னாடிநாடி
விரும்பியே கூவினே னுலறினேனலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரியென்னவிருகண்மாரிபெய்யவே
வேசற்றயர்ந்தே னியா
னிருமபுநேர்நெஞ்சககள்வனா னாலுமுனை
யிடைவிட்டு நின்ற துண்டோ
வென்றுநீயன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனுமறியா வெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுதனீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க்குணமான பரதெயவமேபரஞ்
சோதியே சுகவாரியே (௭)

பாராதியண்டங்க ளத்தனையுமவைக்கின்ற
பரவெளியினுண்மை காட்டிப்
பறறுமனவெளிகாட்டி மனவெளியினிற்றோய்ந்த
பாவியேன்பரிசு காட்டித்
தாராளமாய்நிற்கநிசசிந்தைகாட்டிச்
சதாகாலநிட்டையெனவே
சகசநிலைகாட்டினை சுகாதீதநிலயங்
தனைக்காட்டநான் செல்லுமோ
காராரவெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றிமழைபொழிதல்போற்

கால்விசி மின்னிப்படர்ந்துபரவெளியெலாங்
கம்மியானந்த வெள்ளஞ்
சோராதுபொழியவே கருணையினமுழங்கியே
தொண்டரைககூவுமுகிலே
சுத்தநிரகுணமான பரதெய்வமேபராரு
சோதியேசுக வாரியே. (அ)

பேதித்தசமயமோவொன்றுசொனபடியொன்று
பேசாதுதுற வாகியே
பேசாதபெரியோர்க ளிருவிகற்பத்திஞற்
பேசாகள்பரம குருவாய்ப்
போதிகரு முக்கணிறைநோமையாய்க்கைக்கொண்டு
போதிபபதாச்சமியிலே
போககுவரவறவினப நீககமறவசனமாய்ப
போதிப்பதெவரையனே
சாதித்தசாதனமு மியோகிகளமதென்று
சஙகிப்பராதலாலே
தானிலேதானையாந்துவிடுவோமெனத்
தனியிருநதிடனங்ஙனே
சோதிகசமனமாகயதனையேவினுலடிமை
சுகமாவதெப்படிசொலாய
சுத்தநிரகுணமானபரதெயவமேபராரு
சோதியேசுகவாரியே. (௯)

அண்டமுடிதனனிலோ பகிரணடமதனிலோ
வலரிமணடல நடுவிலோ
வனனடுவிலோவமிர்தமதிநடுவிலோவன்ப
ரகமுருகிமலர்கடுவித
தெண்டமிடவருமூர்த்திநிலையிலோதிக்குந்
திகந்ததிலோவெளியிலோ
திகழுவிந்துநாதநிலை தன்னிலோவேதாந்த
சித்தாந்தநிலைதனனிலோ
கண்டபலபொருளிலோ காணாதநிலையெனக
கணடசூனியமதனிலோ
காலமொருமூனறிலோ பிறவிநிலைதனனிலோ
கருவிகரணங்களோய்ந்த
தொண்டர்களிடததிலோநீவீறறிருப்பது
தொழும்பனேற்குளவுபகலாய
சுததநிரகுணமானபரதெய்வமேபராரு
சோதியேசுகவாரியே. (௰)

எந்நாள்கருணைக் குரித்தாகுவேனெனவு
மென்னிதயமெனைவாட்டுதே
யேதென்றுசொல்லுவேன்முன்னேபெண்மலைவறவு
மிற்றவரையாதுபெற்றேன்
பந்தமானதிவிட்டமெழுகாதியுள்ளங்
பதைத்துப்பதைத்துருகவோ
பரமசுகமாவது பொறுப்பரியதுயரமாய்ப்
பலகாலுமூர்ச்சிப்பதோ
சிந்தையானதுமறிவயென்னறிவிலறிவான
தெய்வநீயன்றயுளதோ
தேகநிலையல்லவேயுலகப்பல்கப்பலாய்த்
திரையாழியூடுசெலுமோ
சொந்தமாயண்டநீயடியார்கள்போலவே
துனபத்திலாழத்தனமுறையோ
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்
சோதியேசுக வாரியே (௰௧)

எந்நாளுமுடலிலே யுயிராமுனைப்போ
லிருக்கவிலையோமனதென
மியானுமென் னடபாமபிராணனுமெமைசடமு
தெனறுனைசஅுதமென்றுமே
யந்நாளிலெவனோபிரிதகா னதைககேட்ட
வனறுமுதலின்றுவரையு
மநியாயமாயெமையடக்கிக்குறுக்கே
யடாநதரசுபண்ணியெங்கள்
முன்னாகநீயெனனகோடடைகொண்டாயென்று
மூடமனமிகவுமேச
மூண்டெரியுமனவிட்டமெழுகா யுளஙகருகன
முறைமையோபதிஞபிரஞ்
சொன்னாலுநின்னருளிரங்கவிலையேயினிச
சுகமவருவதெப்படிசொலாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபராஞ்
சோதியேசுகவாரியே (௰௨)

சுகவாரி-முற்றுப்பெற்றது-ஆக-அஅ

# எங்குநிறைகின்றபொருள்

அவனன்றி யோரணுவு மசையாதெனும்பெரிய
வாப்தர்மொழி யொன்றுகண்டா
லறிவாவதேதுசில வறியாமை யேதிவை
யறிந்தார்க ளறியார்களார்
மௌனமோடிருந்ததா ரென்போலுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கேயிருந்துவரும்
வன்மையோ டிரக்க மெங்கே
புவனம்படைப்பதென சாதகமெவ்விடம்
பூதபேதங்க ளெவ்விடம்
பொய்யமெய்த்தம்மிதமேல வருநன்மைதீமையொடு
பொறைபொறாமையு மெவ்விட
மெவர்சிறியரெவர்பெரிய ரெவருறவரெவர்பகைஞர்
யாதுமுனை யன்றியுண்டோ
விகபரமிரண்டினு முயிருக் குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே (க).

அன்னேயனேயென்று சிலசமயமின்னேயே
ஐயாவையா வென்னவே
யலறிடுஞ் சிலசமய மல்லாதுபேய்போல
வலறியே யொன்றுமில்லாமல்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமயமேற்
பேசரிய வொளியென்று மௌவெளியென்றுநாதப்
பிரமமே நிலையமென்றுந்
தன்னறிவி லார்க்கோ ரூபென்று ரூபிதத்
தன்மையாங் காயமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையலா வேறதாய்ச்
சதாஞான வானந்தமா
யென்னையென்னே கருணை விளையாட்டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ
விகபர மிரண்டினு முயிருக் குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே (உ)

வேதமுடனாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைகளெல்லா
மிக்காக வத்துவித துவிதமார்க்கத்தையே
விரிவா யெடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே யத்துவிதஞானத்தை
யுண்டுபண்ணு ஞான மாகும்

மூகமனுபவசன மூன்றுக்குமொவ்வுமீ
துபயவா திகள சம்மத
மாதவிசெனக்கினிச சரியையா திகள்போது
மியாதென்று பாவிக்கநா
னதுவாதலாலுனை நானென்றுபாவிக்க
வத்துவித மார்க்க முறலா
மேதுபா வித்திடினு மதுவாகிவந்தருள்செ
யெந்தைநீ குறையுமுண்டோ
இகபரமிரண்டினொடு முயிருக்குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே (௮)

சொல்லானதிறசற்றும் வாராதபிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டியாட்டித்
துடையினைக்கிள்ளல்போற சங்கற்ப மொன்றிற்
றெருட்டுக் தொடுத்தழிக்கும்
பொல்லாதவாதனையை யெற்றுஞ்சப்தபூமியிடை
போந்துதலை சுற்றியாடும்
புருடனிலடங்காத பூவைபோற்றானே
புறம்போந்து சஞ்சரிக்கும்
கல்லோடிரும்புக்கு மிகவன்மைகாட்டிடுங்
காணாது கேட்ட வெல்லாங்
கண்டதாககாட்டியே யனுவாசக்ருக்கிடுங்
கபடநாடக சாலமோ
எல்லாமுழ்வலதிந்த மனமாயையேழையா
மென்னா லடக்கவசமோ
இகபரமிரண்டினொடு முயிருக்குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே (௯)

கண்ணாரநீர்மல்கி யுள்ளநெக்குருகாத
கள்ளனே னானாலுமோ
கைகுவித்தாடியும் பாடியும விடாமலே
கண்பனித் தாரைகாட்டி
யண்ணாபரஞ்சோதி யப்பாவுனக்கடிமை
யானெனவு மே லெழுந்த
வன்பாகிநாடக நடித்ததோர் குறைவில்லை
யகிலமுஞ் சிறி தறியுமேற்
றண்ணருள் நின்றருள் ளரியாததல்லவே
சற்றேனு மினிதிரங்கள்
சாசுவத முத்திநிலை யீதென் றுணர்த்தியே
சகசநிலை தந்து [illegible]

றெண்ணுமனுள்ளபடி சுகமாயிருக்கவே
யேழையேற் கருள்செய்கண்டா
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே. (௫)

காகமானதுகோடி கூடிநின்றாலுமொரு
கல்லின்முன்னெதிர் நிற்குமோ
கர்மமானதுகோடி முன்னேசெய்தாலுநின்
கருணைப்ரவாக வருளைத்
தாகமாய்நாடினரை வாதிக்கவல்லதோ
தமியனேற் கருட்டாகமோ
சற்றுமிலையென்பதுவும் வெளியாசகவினையெலாஞ்
சங்கேதமாய்க் கூடியே
தேகமானதைமிகவும் வாட்டுதேதுன்பங்கள்
சேராமலயோக மார்க்க
சித்தியோவரவில்லை சகசநிஷ் டைக்குமென்
சிந்தைகரும் வெருதாரநா
னேகமாகின்றே டிருககுநாளெந்தநா
ளிந்நாளின முறறுறுதோ
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே. (௬)

ஒருமைமனதாகியே யல்லலறநின்னருளி
லொருவனான் வந்திருக்கி
னுலகம்பொறாததோ மாயாவிசித்ரமென
வோயுமோ விடமில்லையோ
வருளுடையநின்னன்பர் சங்கைசெய்திடுவாரே
வலதுயிர்த் தியகர்த்தரா
யகிலம்படைத்தெம்மை யாள்கின்றபேர்சில
ரடாதெளபரோ வசன்ற
பெருமைபெறுபூரணங் குறையுமோபூதங்கள்
பேய்கோல மாய்விதண்டை
பேசுமோவலதுதான் பரிபாககாலம்
பிறக்கவிலையோ தொல்லையா
மிருமைசெறிசடவினை யெதிர்த்துவாய்பேசுமோ
வேதுளவு சிறிதுபுகலாய்
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே (௭)
நில்லாதுதேகமெனுங் கிளைவுணர்வுமேதகநிலை
நின்றிடவு மௌனியாகி

நேரேயுபாயமொன் றருளினையையோவினை
நின்றனுட்டிக்க வென்ருற்
கல்லாதமனமோ வொடுங்கியுபரதிபெறக்
காணவிலை யாகையாலே
கைகேற்றனும்புசிப் பொவ்வாதநாளுமுன்
காட்சியிலிருந்து கொண்டு
வல்லாளராயியம் நியமாதிமேற்கொண்ட
மாதவர்க் கேவல்செய்து
மனதின்படிக்கெலாஞ் சித்திபெறலாஞானம்
வாய்க்குமொரு மனுவெனக்கிங்
கில்லாமையொன்றினையு மில்லாமையாகவே
யிப்போ திரங்குகண்டாய்
இகபரமிரண்டினிலு முயிருக்குயிராகி
யெங்குநிறைகின்ற பொருளே (௮)

மரவுரியுடுத்துமலைவனமெற் கொரித்துமிதிர்
வனசருகு பாசிலைவருந்தால்
வன்பசிதவிர்தமனல் வெயிலாதிமழையால்
வருந்தியும்மூல வனலைக்
சிரமளவெழுப்பியு நீரினிடைமூழ்கியுந்
தேகநம தல்லவென்று
நிர்ச்சுகவபேக்ஷையாய் நின்னன்பர்யோகஞ்
செலுத்திரு ரியாம்பாவியோ
விரவுமறுசுவையினொடு வேண்டுவபுசித்தரையில
வேண்டுவ வெலாமுடுத்தி
மேடைமாளிகையாதி வீட்டினிடைவைகியே
வேறொரு வருத்தமின்றி
யிரவுபகலேழையர்கள் சையோகமாயினு
மெப்படி பிழைப்பதுரையாய்
இகபரமிரண்டினிலு முயிருக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே (௯)

முத்தனையமூரலும் பவளவாயின்சொலு
முகத்திலகு பசுமஞ்சளு
மூர்ச்சிக்கவிர்கசன் னதமேற்றவிருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெனைமயக்கியிரு கண்வலையைவீசியே
மாயா விலாசமோக
வாரிதியிலாழ்த்திடும் பாழானசிற்றின்ப
மடந்தையர்கள் சிற்றின்பமோ

புத்தமிர்தபோகம் புசித்துவிழியிமையாத
    பொன்னாட்டும் வந்த தென்றாற்
போராட்டமல்லவோ பேரின்பமுத்தியிப்
    பூமியிலிருந்து காண
வெத்தனை விகாதம்வரு மென்றுசுகர்சென்றநெறி
    யிவ்வுலக மறியாததோ
யிகபரமிரண்டினிலு முயிரினுக் குயிராகி
    யெங்குநிறை கின்றபொருளே (௰)

உன்னிலையுமென்னிலையு மொருநிலையெனக்கிடந்
    துளறிவி மவத்தையாகி
யுருவுதான் காட்டாதவானவமு மொளிகண்
    டொளிககின்ற விருளென்னவே
தன்னிலைமைகாட்டா தொருங்கவிருவினையிறை
    றுவுசுகதுககவேலை
தட்டழியமுற்றுமில் லாமாயையதனாற்
    றடிதகில பேதமான
முன்னிலையொழிந்திட வகண்டிதாகாரமாய்
    முதறிவு மேலுதிபப
முன்பினொடுகீழ்மே னடுப்பக்கமென்னுமன்
    முற்றுமானந்த நிறைவே
யென்னிலைமையாய்நிற்க வியல்புகூருள்வடிவ
    மெநநாளும் வாழிவாழி
யிகபரமிரண்டினிலு முயிரினுக் குயிராகி
    யெங்குநிறைகின்ற பொருளே. (௰௧)

எங்குநிறைகின்றபொள்-முற்றியது-ஆ ௬௬,

# சச்சிதானந்தசிவம்

பாராதிககனப் பரப்புமுண்டோவென்று
    படர்வெளியதாகி யெழுநாப்
பரிதிமதி காணுச மயஞ்சோதியா யண்ட
    பகிரண்டவுயி ரெவைக்கு
நோாகவறிவா யகண்டமா யேகமாய்
    நித்தமாய் நிர்த்தொக்தமாய்
நிற்குணவிலாசமாய் வாக்குமனமணுகாத
    நிர்மலானந்த மயமாய்ப்
போராதுநிற்றி நீசும்மாவிருந்துதான
    பேரின்பமெய் திடாமற்

பேய்மனதையண்டியே தாயிலாப்பிள்ளைபோற்
   பித்தாகவோ மனதைநான்
சாராதபடியறிவி னிருவிகற்பாங்கமாஞ்
   சாசுவத நிஷ்டையருளாய்
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
   சச்சிதானந்த சிவமே (௧)

குடக்கொடுகுணக்காதி திக்கினையுழக்கூடு
   கொள்ளல்போ லைந்துபூதங்
கூடுஞ்சருங்கிலைச் சாலோகமொன்பது
   குலாவுநடை மனையைநாறும்
வடக்கயிறு வெண்ணரம் பாவெளபுதசையினுன்
   மதவேளவிழா நடத்த
வைக்கின்றகைத்தேசை வெண்ணீர்செநீர்கணீர்
   மலர்நீர்பு ணீரிறைக்கும்
விடகருத்துருத்தியைக் கருமருந்துக்கூட்டை
   வெட்டவெட்டத் தளிர்க்கும்
வேட்கைமாமுருகின்ற சுடுகாட்டைமுடிவிலே
   மெய்போலிருந்து பொய்யாஞ்
சடக்கைச்சடக்கெனச சதமென்றுசின்மயந்
   தானுகிநிற்ப தென்றோ
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
   சச்சிதானந்த சிவமே (௨)

பாகத்தினுற்கவிகை பாடிப்படிக்கவோ
   பத்திநெறி யில்லைவேத
பாராயணப்பனுவன் மூவர்செய்பனுவலது
   பகரவோ விசையுமில்லை
யோகத்திலே சிறிதுமுயல்வென்றாற்றேக
   மொவ்வாதி லுணவெறுததா
லுயிர்வெருத்திடலொக்கு மலலாதுகிரியைக
   ளுபாயத்தினுற் செய்யவோ
மோகத்திலேசிறிது மொழியவிலைமெய்ஞ்ஞான
   மோனத்தினிற்க வென்றுன்
முற்றுதுபரிபாக சத்திகளனேகமின்
   மூதறிவிலே யெழுந்த
தாகத்திலேவாய்க்கு மயிர்தந்ரவாகமே
   தன்னந்தனிப் பெருமையே
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
   சச்சிதானந்தசிவமே (௩)

இமையளவுபோதுமொரு கற்பகாலம்பண்ணு
மிவ்வுலகமெவ் வுலகமோ
வென்றெண்ணம்வருவிகரு மாதர்சிற்றின்பமோ
வெண்ணின்மகமேரு வாக்கிச
சுமையெடுமினென்றுதான் சும்மாடுமாயெமைச்
சுமையாளு மாக்கினாளுந்
துர்ப்புத்திபண்ணியுள நற்புத்தியாவையுஞ்
சூறையிட்டிந்த சால
மமையவொருகூத்துஞ் சமைந்தாடுமெனமாயை
யம்மம்ம வெல்லவெளிதோ
வருள்பெற்றபேர்க்கெலா மொளிபெற்றிருக்குமீ
தருளோவலாது மருளோ
சமையநெறிகாணாத சாட்சிநீசூக்ஷமமாத்
தமியனேற்குளவு புகலாய்
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதா னந்தசிவமே (௫)

இனியேதெமக்குனருள் வருமோவெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ
யின்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திட மில்லையே
யனியாயமாயிந்த வுடலைநானென்றுவரு
மந்தகற்கா ளாகவோ
வாடித்திரிந்துநான் கற்றதுங்கேட்டது
மவலமாய்ப்போத லன்றே
கனியேனுமவறிய செங்காயேனுஞ்சருகு
கந்தமூலங்க ளேனுங்
கனல்வாதைவந்தெய்தி னள்ளிப்புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியேயிருப்பதற் கெண்ணினேனெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதா னந்தசிவமே (௬)

மத்தமதகரிமுகிற் குலமென்னநின்றிலகு
வாயிலுடனமதி யகடுதோய்
மாடகூடச்சிகர மொய்த்தசந்திரகாந்த
மணிமேடை யுச்சிமீது
முத்தமிழ்முழக்கமுடன் முத்தநகையார்களொடு
முத்துமுத் தாய்க்குலாவி

மோகத்திருந்துமென் யோகத்தினிலைநின்று
மூசசைப்பிடித் தடைத்துக்
கைத்தலநதைப்படை விரித்தபுலிசிங்கமொடு
கரடிநுழை நுழைகொண்ட
கானமலையுச்சியிற்குகையூடிருந்துமென்
கரதலாமலக மென்னச
சத்தமறமோனநிலை பெற்றவர்களுய்வர்காண்
சனகாதி முனிவிதன்றோ
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சசசிதா னந்தசிவமே (௬)

கைத்தலம்விளங்குமொரு நெல்லியங்கனியெனக்
கண்டவே தாகமத்தின
காட்சிபுருஷார்த்தமதின் மாட்சிபெறுமுத்தியது
கருதினொறு மானமாதி
யுத்திபலவாநிருவி கற்பமேயில்லையா
லொன்றோ டிரண்டென்னவோ
வுரையுமிலைநீயுமிலை நானுமிலையென்பது
முபாயநீ யுண்டுநானுரு
சித்தமுளநானிலை மெனும்வசனநீயறிவை
தெரியார்க டெரியவசமோ
செப்புகேவலநீதி யொப்புவமையல்லவே
சின்முத்திராங்கமரபிற்
சந்தமறவெனையாண்ட குருமௌனிகையினுற்
றமியனேற் குதவுபொருளே
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சசசிதானந்த சிவமே (௭)

காயாதமரயீதுகல்லேறுசெல்லுமோ
கடவுணீ யாங்களடியேம
கர்மபந்ததினுற்சனமபாதம்பெறக்
கறபிததுன்னதருமோ
வாயாரவுண்டபேர் வாழ்த்துவதுநொந்தபேர்
வைவதுவுமெஙகளுலக
வாய்பாடுநிறகநின் வைதிகவொழுங்குநினை
வாழ்த்தினுறபெறுபேறுதா
னேயாதுபெறுவரெனமுறையிட்டதாற்பின்ன
ருளறுவது கருமமன்று
முபயநெறியிதெனனிறுசிந்தைநெறியெந்த நெறி
யுலகிலேபிறழுபொருடு

தாயான கருணையுமுனக் குண்டெனக் கினிச்
சஞ்சலங்கெடவருள்செய்வாய்
சர்வபரிபூரணவகண்டதத் துவமான
சச்சிதானந்தசிவமே (௮)

இனமென்பிறப்பதற்கிடமென்னினிவ்வுடல
மிறவா திருப்பமூலத
தெழுமங்கி யமிர்தொழுகுமதிமண்டலத்திலுற
வென்னெம்மைகுண்டலினிபாற்
பின்னம்பிறக்காது சேயௌவனாத்திடப்
பேயேனலகவேண்டும்
பிறவாத நெறியெனக்குண்டென்னினிம்மையே
பேசுகாயப்பூரிப
மின்றுய படிகக்கண்டாகார வன்னைபால்
வினையேனை யொப்புவித்து
விட்டுநெறிகூட்டிடுதல் மிகவானதிலையன்றி
விவகார முனைவுடனெனிலோ
தன்னனந்தனிச்சிறிய ஞற்றிலேன்போற்றிவளர்
சன்மார்க்க முதன்முதலே
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே (௯)

வேதாவையிவ்வண்ண விதத்தித்தே தென்னினுன்
வினைப்பகுதி யெனபடைந்த
வினைபேசவறியாது நிற்கவிலையமனதால்
விளங்குதான மனைதைநாடிற்
போதயே நிற்குமப் போதத்தைநாடிலோ
போதகமுன்னி ருல்விளக்கம
பொய்யனறுதெய்வமறை யாவுமேநீயென்று
போதகுவர வரநிகழ்ந்தது
மாதாரவாதேயமுழுதுநீயாதலா
லகிலமீ தெனையாட்டி
யாடல்கண்டவனுநீ யாடுமவனுநீ
யருளுநீ மௌனஞான
தாதாவுநீபெற்ற தாயுநானந்தானுநீ
தமருநீ [illegible]
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே (௰)

கொந்தவிழ்மலர்ச்சோலை நறுநீழலூடுகையிலுறு
குளிர்தீம்புனலாயகருவீனை

கொள்ளுகின்றமந் நீண்டத்திலே தொடிறும்
குளிர்சந்த வாடைமட்வர்
வுந்துலவுகின்றதென் முன்றிலிண்டயுலவவே
வசதிபெறுபோது வெளாலே
வட்டமதிபய்டய் பகறபோலநிலவுதர
மகிழுபோதும் வேலையமுதம்
விந்தைபெறவறுசுவையில்வந்ததெனவமுதுண்ணும
வேளையிலு மாலைகந்தம்
வெள்ளிலையடைக்காய் விரும்பிவேண்டியவண்ணம
விளையாடி விழிதுயிலினுஞ்
சந்ததமுநினையருளை மறவாவரந்தந்து
தமியேனை ரக்ஷைபுரிவாய்
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே (௰௧)

சச்சிதானந்தசிவம்-முற்றியது-ஆ ௱௰

---

# தேசோமயானந்தம்

மருமலர்ச்சோலைசெறி கனிநீழன்மலையாதி
மனதுமுனி வாக்கேவலாய்
மந்தரம்மிலைசொல்லு மியமநியமாதியா
மாசகத்தி னின்றுகொண்டு
கருமருவுகாளத்தை நிர்மலமதாகவே
கமலாச னுதிசேர்த்துக்
காலைப்பிடித்தனலை யம்மைகுண்டலியடிக்
கலைமதியி னூடுதாக்கி
யுருகிவருமமிர்தத்தை யுண்டுண்டுறங்ரகப்
னுணர்வான விழியைநாடி
யொன்றோடிரண்டெனுச சமரச்சொருபசுக
முற்றிடவென் மனதின்வண்ணந்
திருவருண்முடிக்கவித் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே (க)

இப்பிறவியென்னுமொ ரிருட்கடலின்மூழ்கிநா
னென்னுமொரு மகரவாய்பட்
டிருவினையெனுந்திரையி னெற்றுண்டுபுற்புத
மெனக்கொங்கை வரிசைகாட்டுங்

துப்பிதழ்மடந்தையர் மயற்சண்டமாருதச்
சுழல்வந்து வந்தடிப்பச
சோராதவாசையாங்காற்றுவானதி
சுரந்ததென மேலுமார்ப்பக்
கைப்பரிசுகாரர்போலறிவானவங்கமுங்
கைவிட்டுமதிமயங்கி
கள்ளவங்கக்காலர் வருவரென்றஞ்சியே
கண்ணருவி காட்டுமெளியேன்
செப்பரியமுத்தியாங் கரைசேரவுங்கருணை
செய்வையோசத்தாகியென
சித்தமிசை குடிகொண்டவறிவானதெய்மே
தேசோ மயானந்தமே் (௨)

தந்தைதாய்தமர்தார மகவென்றுமிவையெலாஞ்
சந்தையிற கூட்டமிதிலோ
சந்தேகமிலலைமணி மாடமாளிகைமேடை
சதுரங்கசேனையுடனே
வந்ததோர்வாழ்வுமோ ரிந்த்ரசாலக்கோலம்
வஞ்சனைபொறாமை லோபம்
வைத்தமனமாங்கிருமி சேர்ந்தமலபாண்டமோ
வாஞ்சனையிலாதகனவே
யெந்தநாளுஞ்சரியெனத்தேர்ந்துதேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய்நின்றநின்னருள்வெள்ளமீதிலே
யானென்பதறவுமூழ்கிச்
சிந்தைதான்றெளியாது சுழலுவகையென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (௩)

ஆடாமலோய்ந்திட்டபம்பரம்போல்விசை
யடங்கிமனம் வீழநேரே
யறியாமையாகின்ற விருளகலவிருளொளியு
மல்லாதிருந்த வெளிபோற்
கோடாதெனைக்கண்டெனக்குணிறைசாந்தவெளி
கூடியின் பாதீதமுங்
கூடினேனேசரியை கிரியையின்முயன்றுநெறி
கூடினேனோ வல்லவனியா
னீடாகவேயாறு வீட்டினினிரம்பியே
யிலகிவளர் பிராணனென்னு

மிருகிதியினைக்கட்டியோகபானுகாம
லேழைக்குடும்பனாகித்
தேடாதழிக்கவொரு மதிவந்ததென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (௪)

பாடாதுபாடிப் படித்தளவில்சமயமும்
பஞ்சுபடு சொல்லனிவனைப்
பார்மினோபார்மினோ வென்றுதவைகூடவும்
பரமார்த்தமிதுவென்னவே
யாடாதுமாடிநெஞ் சுருகிநெக்காடவே
யமலமேயேகமேயெம்
மாதியேசோதியேயெங்குநிறைகடவுளே
யரசேயெனக் கூவினான்
வாடாதுவாடுமென் முகவாட்டமுங்கண்டு
வாடாவெனக்கருணைநீ
வைத்திடாவண்ணமே சங்கேதமாவிந்த
வண்மையை வளர்ப்பித்ததார்
தேடாதுதேடுவோர்தேட்டற்றதேட்டமே
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (௫)

பிறியாததண்ணருட் சிவஞானியாய்வந்து
பேசரிய வாசியாலே
பேரின்பவுண்மையையளித்தனையென்மனதறப்
பேரம்பலக்கடவுளா
யறிவாயிருந்திடுநாதவொலிகாட்டியே
யமிர்தப்ரவாகசித்தி
யருளினையலாதுதிரு வம்பலமுமாகியெனை
யாண்டனைபிளெய்திநெறியாய்க்
குறிதானளித்தனைநன் மரவுரிகொளந்தணக
கோலமாயசபாநலங்
கூறினபின்மௌனியாய்ச் சும்மாவிருக்கநெறி
கூட்டினையெலாமிருக்கச்
சிறியேன்மயங்கமிக வறிவின்மையாவனோ
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே (௬)

ஆராரெனக்கென்ன போதித்துமென்னவென்
னறிவினை மயக்கவசமோ
வண்டகோடிகளெலாங் கருப்பவறைபோலவு
மடுக்கடுக்கா வமைத்து
பேராமனின்றபர வெளியிலேமனவெளி
பிறங்குவதலா தொன்றிலும்
பின்னமுறமருவாது நன்னயத்தாலினிப்
பேரின்ப முத்திநிலையுந்
தாராதுதள்ளவும் போகாதுனாலது
தன்னிலும் போகேனியானா
றடையேதுமில்லையாண் டவனடிமையென்னுமிரு
தன்மையிலு மெனவழக்குத்
தீராதுவிடுவதிலை நடுவானகடவுளே
தேடரிய சத்தாகியென
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (எ)

கந்துகமதக்கரியை வசமாநடத்தலாங்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாமொருசிங்க முதுகின்மேற்கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம்வைத்தைந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர்காணும் லுலகத்துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாஞ்
சந்ததமுமிளமையோ டிருக்கலாமற்றொரு
சரீரத்தினும் புகுதலாஞ்
சலமேனடக்கலாங் கனன்மேலிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாஞ்
சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (அ)

எல்லா மறிந்தவரு மேதுமறி யாதவரு
மில்லையெனு மிவ்வுலகமீ
தேதுமறி யாதவனெனப்பெயர்தரித்துமிக
வேழைக்கு ளேழையாகிக்
கல்லாத வறிவிற் கடைப்பட்டநானென்று
கையினு லுண்மைஞானக்

கற்பித்தநின்னரு ளினுக்கென்னகைம்மாறு
காட்டுவேன் குற்றேவனு
னல்லார்ந்தமேனியொடு குண்டுகட்பிறையெயிற
றுபாச வடிவமான
வந்தகாநீயொரு பகட்டார்பகட்டுவே
தடாதடா காசுநம்பாற
செல்லாதடாவென்று பேசுவாயதுதந்த
செல்வமே சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோ மயானந்தமே (௬)

மின்போலுமிடையொடியு மொடியுமெனமொழிதலபோன்
மென்சிலம் பொலிதளார்ப்ப
வீங்கிப்புடைத்துவிழு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள பின்னேவலா
லென்போலலைந்தவர்கள் கற்றூர்கள்கல்லார்க
ளிருவர்களி லொருவருண்டோ
வென்செய்கே னம்மம்மவென்பாவமென்கொடுமை
யேதென்றெடுத்து மொழிவே
னன்பால்வியந்துருகி யடியற்ற மரமென்ன
வடியிலே வீழ்ந்து வீழ்ந்தெம்
மடிகளேயுமதடிமை யாஙகளெனு நால்வருக்
கரமாதி பொருளுரைப்பத்
தென்பாலின் முகமாகிவடவா லிருக்கின்ற
செல்வமே சததாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெயவமே
தேசோ மயானந்தமே (௭)

புத்தமிர்தபோகமுங கற்பகநனிழலிற்
பொலிவுரவிருக்கு மியல்பும்
பொன்னுலகிலயிராவதத்தேறு வரிசையும்
பூபண்ட லாதிக்கமு
மத்தவெறியினர்வேண்டு மாலென்று தள்ளவுமெ
மாதுமொரு சுட்டுமறவே
வைக்கின்றவைப்பாளன்மௌனதேசிகமனவன
வந்தநின் னருள்வாழிகாண்
சுத்தபரிபூரணவகண்டமேயேகமே
சுருதிமுடிவான்பொருளே
சொல்லரியவுயிரினிடையங்கணுகு நின்றருள்
சுரந்துபொழி கருணைமுகிலே

சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே (௰௧)

தேசோமயானந்தம முற்றியது-ஆ-௱௨௧

## சிற்சுகோதயவிலாசம்

காகமோடு கழுகலகை நாய்நரிகள்
சுற்றுசோ றிடுதுருத் தியைக்
காலிரண்டு நவ வாசல்பெற றுவளர்
காமவே ணடன சாலையை
மோகவாசைமுறி யிடடபெட்டியைமு
மலமிருந்தொழுகு கேணியை
மொயததுவெங் கிருமிதத்துகும்பியை
முடங்கலார்கிடை சரக்கினை
மாகவிந்தரதனு மின்னையொத்திலக
வேதமோ தியகுலாலனார்
வனையவெயய தடிகாரனையமன
வந்தடிககுமொரு மட்கலத்
தேகமானபொய்யை மெயயெனக்கருதி
யையவைய மிசைவாடவோ
தெரிவதற கரிய பிரமேயமல
சிறசுகோதய விலாசமே (௧)

குறிகளோடுகுண மேதுமின்றியனு
லொழுகநின்றிடு மிரும்பனற
கூடலின்றி யதுவாயிருந்தபடி
கொடியவாணவ வறைக்குளே
யறிவதேதுமற வறிவிலாமைமய
மாயிருக்கு மெனையருளினு
லளவிலாததனு கரணமாதியை
யளித்தபோதுனை யறிந்துநான
பிறிவிலா தவண நின்றிடா தபடி
பெலமிறங் கவரு மமலமாய்ப்
பெரியமாயைபி லழுந்திநின்னது
ப்ரசாதநல்லருண் மறந்தினு
சிறியனேனுமுனை வந்தனைந்துசுக
மாயிருப்ப தினியென்று காண்

டெரிவதற்கரிய பிரமமேயமல
சிறசுகோதய விலாசமே (௨)

ஐந்துபூதமொரு காளனீரென
வடங்கவந்த பெருவானமே
யாதியந்தநடுவேது மின்றியரு
ளாய்நிறைந்திலகு சோதியே
தொந்தரூபமுட னரூபமாதிகுறி
குணமிறந்துவளர் வஸ்துவே
துரியமேதுரிய வுயிருனுக்குணாவு
தோனறநின்னருள் சுபாவமே
யெந்தநாளுநடு வாகிநின்றெருளிரு
மாதியேகருணை நீதியே
யெநதையேயென விடைந்திடைந்துருகு
மெளியனேன்கவலை தீரவுஞ
சிந்தையானதை யறிந்துநீயுனருள்
செய்யநாளுமினி யுயவனோ
தெரிவதறகரிய பிர்மமேயமல
சிற்சுகோதய விலாசமே (௩)

ஐவரென்றபுல வேடர்கொட்டம
தடங்கமர்க கடவனமுடடியா
யட்விநின்றமலை யருகினின்றுசரு
காதிதினறுபனி வெயிலினுன
மெய்வருந்துதவ மிலலைநற்சரியை
கிரியையோகமெனு மூன்றதாய
மேவுகினறசவு பானநன்னெறி
விரும்பவில்லை யுலகத்திலே
பொயமுடங் குதொழில்யாததற்குநல
சாரதிதொழி னடததிடும
புதிபூகமறி வற்றமூகமிவை
பொருளெனக் கருதுமருளன்யான்
றெய்வநல்லருளபடைத்த வன்பரொடு
சேரவுங்கருணை கூர்வையோ
தெரிவதற்கரிய பிரம்மேயமல
சிறசுகோதயவி லாசமே (௪)

ஏகமானவுரு வானநீயருளி
னலனேகவுரு வாகியே
யெந்தநாளகில கோடிசிர்ஷ்டிசெய
விசையுநான்வரைய நான்முகன்

லாகநாளதுவரைக்குமுன் னடிமை
கூடவே சனன மானதோ
வனந்த மூண்டுநல ஞானமீதிதனு
ளறியவேண்டுவ தறியலா
மோகமாதிதரு பாசமானதை
யறிந்துவிட்டுனையு மென்னையுமே
முழுதுணர்ந்துபர மானவீடுபெற
மூழ்க வேண்டுமிது வின்றியே
தேகமோநழுவி நாளுமோ நழுவின்
பின்னையா ருய்யுமவகை யுளதோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சுகோதய விலாசமே (௬)

நியம லக்ஷணமு மியமலக்ஷணமு
மாசனத்துவித பேதமு
நெடிதுணர்ந் திதய பத்மபீடமிசை
நின்றிலங்கு குமுதச் சாயலைத்
தியலறிந்துவளர் மூலகுண்டலியை
யினிதிறைஞ்சி யவளருளினா
லெல்லையற் றுவளர் சோதிமூலவன
லைக்கனன் மோனமந்திர முறையிலே
வயமிருந்து வருமமிர்த மண்டல
மதிக்குள் மதியை வைத்துநான்
வாயுமடுத்தமிர்த வாரியைப் பருகி
மனதுமாயமிகு வடிவமாய்ச்
செயமிருந் துவருசித்த யோகநிலை
பெற்றுஞானநெறி யடைவனோ
தெரிவதற் கரிய பிரமமேயமல
சிற்சுகோதய விலாசமே (௭)

எறிதிரைக கடனிகர்த் தசெல்வமிக
வல்லலென வெறுத்துவாப் பினைச்செல்வ
மில்லை யென்றுரை பேசிடா துலகி
லெவரு மாமென மதிக்கவே
நெறியினை வைகிவளர் செல்வமும் முதவி
நோய்களற்றசுக வாழ்க்கையாய்
நியமமாதிநிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவுமெநாளுமே
யறிவினின்று குரு வாயுணர்த்தியது
மன்றி மோனகுரு வாகியே

யகிலமீதுவர வந்தசீருளை
    யையவையவினியென்சொல்கேன
சிறிய னேழைநம தடிமையென்றுனது
    திருவுளத் தினி லிருந்ததோ
தெரிவதற்கரிய பிரமமே யமல
    சிற்சுகோதய விலாசமே (௭)

எவ்வுயிர்த்திரளு முலகிலென்னுயி
    ரெனக்குழைந்துருகி நன்மையா
யிதமுரைப்பவென தென்ற யாவையு
    மெடுத்தெறிந்து மதயானைபோற
கவ்வையற்றநடை பயில வன்பரடி
    கண்டதேவருளின் வடிவமாய்க்
கண்டயாவையு மகண்டமென னவிரு
    கைகுவித்துமலர் தூவியே
பவவ வெணடிணை கொடுத்ததணடரளம்
    விழியுதிரப்பமொழி குளறியே
பாடியாடியுளுடைந் துடைந்தெழுது
    பாவையொத் தசைதலின்றியே
இவ்யவன்புருவ மாகியன்பரொடு
    மின்பவீட்டினி லிருப்பனோ
தெரிவதறகரிய பிரமமேயமல
    சிற்சுகோதய விலாசமே (அ)

மத்தர்பேயரொடு பாலர்தன்மையது
    மருவியேதுரிய வடிவமாய்
மன்னுதேசமொடு காலமாதியை
    மறந்துநின்னடிய ரடியிலே
பத்தியாய்நெடிது நம்புமென்னையொரு
    மையறந்தகில மாயையைப்
பாருபாரென நடந்த வந்தென
    பாரதத்தினுமி துள்ளதோ
சுததசித்தவியல பாகுமோவுனது
    விசுவமாயை நடுவாகவே
சொல்லவேணும்வகை நல்காதிகதை
    சொல்லு மாயையினு மில்லையென்
சித்தமிப்படி மயங்கு மோவருளை
    நம்பினோர்கள் பெறுபேறிதோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
    சிற்சுகோதய விலாசமே (௯)

பன்முகச் சமய நெறி படைத்தவரு
மியாங்களே கடவுளென்றிடு.
பாத கத்தவரும் வாததர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்,
தன்முகத் திலுயிர் வரவழைக்கருமெம
தருமனும் பகடு மேயக்கியாய்த்
தனி யிருப்ப வடகீழலூடு வளர்
சனக னதிமுனி வோர்கடஞ்
சொனமயக் கமது தீரவங் கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்த வருளியல்பதாகவுள
சோம சேகரகிர்பானுவாய்த்
தென்முகத்தின முகமாயிருந்தகொலு
வெம்முகத்தி திறும் வணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரமமேயமல
சிற்சுகோ தயவிலாசமே (௰)

சிற்சுகோதயவிலாசம் முற்றியதுஆகாங்க

# ஆகாரபுவனம்-சிதம்பரரகசியம்

ஆகார புவன மின்பாகாரமாக
வங்ஙனே யொருமொழியா லகண்டா கார
யோகானு பூதிபெற்றவன்பராவிக்
குறுதுணையே யென்னளவுமுகந்தநட்பே
வாகாரும் படிகதிசை கிண்கிணிவாயென்ன
மலர்ந்த மலரிடைவாசம்வயங்குமாபோற்
றேகாதி யுலகமெங் குங் கலந்துதானே
திகழனந் தானந்தமயத்தெய்வக் குன்றே (க)

அளந்தபத வுயிர்கடொறு முயிராயென்று
மானந்த நிலையாகியளவைக்கெட்டாத்
தனந்தனிச் சின்மாத்திர மாய்க்கீழ்மேல்காட்டாச்
சதசத்தாயருட்கோயிற் றழைத்ததேவே
யினம்பிரிந்த மான்போ னிடையாவண்ண
மின்பமுற வன்பர்பக் கலிருத்திவைத்துங்
கனந்தருமாகனமேதண்ணருளீற்றனே
கனிபலித்தவானந்தக் கட்டிப்பேறே (உ)

பேறனைத்து மனுவெனவே யுதறித்தள்ளிப்
பேரின்பமாகவந்தபெருக்கே பேசாப்

வீறனைத்துமிந்நெறிக்கே யென்னையென்னை
　　மேவென்ற வரத்தேபாழ்வெய்ய மாயைக
கூறனைத்துங கடந்த வெல்லைசேடமாகிக்
　　குறைவறநின் றிடுநிறைவே குலவாநின்ற
வாறனைத்தும் புகுங்கடல்போறசமயகோடி
　　யத்தனையுந்தொடர்ந்துபுகுமாதிநட்பே (௫)

ஆதியந்த மெனுமெழுவா யீறற்றோங்கி
　　யறுமறையின னமுங்காணு தாற்றநாணு
பேதமதங்களுமலைய மலைபோல்வாதப்
　　பெற்றியரும்வாய்வாதப் பேயராகச்
சாதகமோனத்திலென்ன வடவானீழற்
　　றண்ணருட்சந் திரமௌலிதடகைக்கேற்க
வேதகசின் மாத்திரமா யெம்மனோர்கரும்
　　வெளியாகவந்த வொள்ளேவிமலவாழ்வே (௬)

விமலமுதற் குணமாகி நூறறெட்டாகி
　　வேதமெடுத் தெடுத்துரைததவிருத்திக்கேற்க
வமையுமிலக்கணவடிவாயதுவும்போதா
　　தப்பாலுக்கப்பாலா யருட்கண்ணுகிச
சமமுமுடன் கலப்புமவிழ் தலுமியாஙகாணத்
　　தண்ணருடந்தெமைக்காக்கு சாட்சிப்பேறே
யிமையளவு முபகார மல்லால் வேறொன்
　　றியக்காகிர்க் குணக்கடலா யிருந்தவொன்றே (௭)

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக்கண்ட
　　வொளியாகி வெளியாகியுருவுமாகி
நன்றாகித்தீதாகி மற்றுமாகி
　　நாசமுட னுற்பத்தி நண்ணதாகி
யின்றாகி நாளையுமாய்மேலுமான
　　வெந்தையேயெம்மானேயெனவென்றேங்கிக்
கன்றாகிக்கதறினர்க்குச் சேதாவாகிக
　　கடிதினில்வந் தருள்கூருங்கருணைவிண்ணே (௮)

அருள்பழுத்த பழசுவையே கரும்பே தேனே
　　யாரமிர்தே யென்கண்ணேயரியவான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணைநீங்காப்
　　பூரணமாய நின்றவொன்றே புனிதவாழ்வே
கருதரிய கருத்ததனுட்கருத்தாய்மேவிக
　　காலமுந்தேசமும்வகுத்துக் கருவியாதி
விரிவினையுங கூடடியுயிர்த்திரளையாட்டும்
　　விழுப்பொருளேயானசொலும் விண்ணப்பங்கேளே

விண்ணவரின் திரன்முதலோர்நாரதாதி
விளங்குசப்தரிஷிகள்கண வினைவல்லோ
ரெண்ணரியசித்தர்மனு வரதிவேந்த
ரிருக்காதிமறைமுனிவ ரெல்லாமிந்தக்
கண்ணகன்ஞாலம்மதிக்கத் தானேயுள்ளங்
கையினெல்லிக் கனிபோலக்காட்சியாகத்
திண்ணியநல்லறிவாலிச சமயத்தன்றோ
செப்பரியசித்திமுத்தி சேர்ந்தாரென்றும் (அ)

செப்பரியசமயநெறி யெலலாந்தன்றன்
றெய்வமேதெய்வமெனுஞ் செயற்கையான
வப்பரிசாளருமஃதே பிடித்தாலிப்பா
லடுத்ததந்நூல்களும விரித்தேயனுமானாதி
யொப்பவிரித்துரைப்பரிங்ஙன் பொய்மெயயென்ன
வொன்றிலையொனறெனப்பாரப்பதொவ்வாதார்க்கு
மிப்பரிசாஞ்சமயமுமா யல்லவாகி
யாதுசமயமும்வணங்கு மியல்பதாகி (கூ)

இயல்பென்றுந்திரியாமலியமமாதி
யெண்குணமுங்காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளபபொருள்கள்பரி வாரமாகிப்
பண்புறவுஞ்சௌபான பக்ஷங்காட்டி
மயலறுமந்திரஞ்சிட்சை சோதிடாதி
மற்றங்கநூல்வணங்க மௌனமோலி
யயர்வறசென்னியில்வைத்து ராசாங்கத்தி
லமர்ந்ததுவைதிகசைவ மழகிதந்தோ (௰)

அந்தோவீததிசயமிச சமயமடோவின்
றறிஞரெல்லாநடுவறிய வணிமாவாதி
யுந்தாடித்திரிபவர்க்கும் பேசாமோனம்
வைத்திருந்தமாதவர்கரு மற்றுமறறு
மிந்த்ராதிபோகநலம் பெற்றபோகரு
மிதுவன்றிதாயகம்வே றிலலையிலலை
சந்தானகற்பகம்போ லருளைக்காடடத்
தக்கநெறியிந்நெறியே தான்சன்மார்க்கம் (௰க)

சன்மார்க்கஞானமதின் பொருளும்வீறு
சமயசங்கேதப்பொருளுந் தானொன்றாகப்
பன்மார்க்கநெறியினிலுங் கண்டதில்லை
பகர்வரியதில்லைமன்றுட பார்த்தபோதங்

தென்மார்க்கமிருக்குதெல்லாம் வெளியேயென்ன
வெச்சமயத்தவர்களும்வந் திறைஞ்சாநிற்பர்
சன்மார்க்கநெஞ்சமுள வெனக்குந்தானே
கண்டவுடனானந்தங் காண்டலாகும். (௰௨)

காண்டல்பெறப்புறத்திலுள்ள படியேயுள்ளுங்
காட்சிமெய்ந்நூல்சொலும்பதியாங்கடவுளேநீ
நீண்டநெடுமையுமகலக் குறுக்குங்காட்டா
நிறைபரிபூரணவறிவாய் நித்தமாகி
வேண்டுவிருப்பொடுவெறுப்புச சமீபந்தூரம்
விலகலணுகுதன்முதலாம் விவகாரங்கள
பூண்டவளவைகணமனவாக காதியெலலாம்
பொருந்தாமலகம்புறமும் புணாகலையாகி (௰௩)

ஆகியசற்காரியவூ கத்துக்கேற்ற
வமலமாய்நடுவாகி யனந்தசத்தி
யோகமுறுமானந்த மயமதாகி
யுயிர்கருயிராயென்னாளு மோங்காநிறப
மோகவிருண்மாயைவினை யுயிர்கட்கெலலா
மொய்த்ததென் கொலுபகாரமுயர்ச்சியாகப்
பாகமிகவருளவொரு சத்திவந்து
பதிந்ததென்கொளுனெனு வப்பான்மையென்கொல்

நானென்னுமோரகந்தை யெவர்க்கும்வந்து
நலிந்தவுடன் சகமாயைநானுவாகித்
தான்வந்துதொடருமித்தால் வளருந்துன்பச்
சாகரத்தின்பெருமையெவர் சாறறவல்லா
ரூனென்றுமுடலென்றுங் கரணமென்று
முள்ளென்றும்புறமென்று மொழியாநின்ற
வானென்றுங்காலென்றுந் தீநீரென்று
மண்ணென்றுமலையென்றும் வனமதென்றும் (௰௪)

மலைமலையாங்காட்சிகண்காணுமையாகி
மறப்பெனறுநினைப்பென்று மாயாவாரி
யலையலையாடிக்குமின்ப துன்பமென்று
மதைவிளக்குவினைகளென்று மதனைத்தீர்க்கத்
தலைபலவாஞ்சமயமென்றுந் தெய்வமெனறுஞ்
சாதகரென்றும்மதற்குச் சாட்டியாகத
கலைபலவாநெறியென்றுந் தர்க்கவெனறுங்
கடலுறுநுண்மணலெண்ணிக் காணும்போதும் (௰௫)

காணரியவல்லவெல்லாந்தானேகட்டுக
காட்டாகவினையுமதைக்கடடேடதான்

விண்ணிற்கர்ப்பூரமலை படுதிப்பட்ட
விந்தையெனககாணவொரு விவேகங்காட்ட
வூனுறக்கமின்பதுன்பம் பேருராதி
யொவ்விடவுமெனைப்போல வுருவங்காட்டிக்
கோணறவோர்மான்காட்டி மானையீர்க்குங்
கொள்கையெனவருண்மௌனகுருவாய்வந்துமெ

வந்தெனுடல்பொருளாவிமூன்றுந்தன்கை
வசமெனவேயத்துவா மார்க்கநோக்கி
யைந்துபுலனைம்பூதங் கரணமாதி
யடுத்தகுணமத்தனையு மல்லையல்லை
யிந்தவுடலறிவறியா மையுநீயல்லை
யாதொன்றுபற்றினத னியல்பாய்நின்று
பந்தமறும்பளிங்கனைய சித்துநீயுன்
பக்குவங்கண்டறிவிக்கும் பானமையேயாம் (யஅ)

அறிவாகியானந்த மயமாயென்று
மழியாதநிலையாகி யாதின்பாலும்
பிரியாமற்றண்ணருளே கோயிலான
பெரியபரம்பதியதனைப் பெறவேவேண்டி
நெறியாககூறுவன்கே ளெந்நாளு
நிறக்குணநிறகுளம்வாய்த்து நீடுவாழ்க
செறிவானவறியாமை யெல்லாநீங்க
சிறசுகம்பெற்றிடுகபந்தந் தீர்கவென்றே (யகூ)

பந்தமறுமெய்ஞ்ஞான மானமோனப
பண்பொனறேயருளியந்தப் பண்புக்கேதான்
சிந்தையிலலைநானென்னும் பானமையிலலை
தேசமிலலைகாலமில்லை திககுமில்லை
தொந்தமில்லை நீககமில்லை பிரிவுமில்லை
சொலலுமில்லையிராப்பகலாந் தோற்றமில்லை
யந்தமிலலை யாதியிலலை நடுவுமிலலை
யகமுமில்லைபுறமுமில்லை யனைத்துமில்லை [உய]

இலலையிலலையென்னினென்று மில்லாதல்ல
வியலபாகியென்றுமுள்ள வியற்கையாகிச்
சொலலரியதனமையதா யான்றுனென்னத்
தோன்றுதெலலாம்விழுங்குஞ் சொரூபமாகி
யல்லையுண்டபகல்போ லவவித்தையெல்லா
மடையவுண்டுதடையறவுன் னறிவைத்தானே

வெல்லவுண்டிங்குன்னையுந்தா னாகக்கொண்டு
வேதகமாய்ப் பேசாமைவிளக்குந்தானே (உக)

தானானதன்மயமே யல்லாதொன்றைத்
தலையெடுக்கவொட்டாது தலைபட்டாங்கே
போனாலுங்கற்பூர தீபம்போலப்
போயொளிப்பதல்லாது புலம்வேறின்றே
ஞானாகாரத்தினொடு ஞேயமற்ற
ஞாதுருவுநழுவாம னழுவிநிற்கும்
மானாலுமிதனபெருமை யெவராற்சொல்வா
ரதுவானாலதுவாவரதுவேசொல்லும் (உஉ)

அதுவென்றாலெதுவெனவொன் றடுக்குஞ்சங்கை
யாதலினாலதுவெனலு மறவேவிட்டு
மதுவுண்டவண்டெனவுஞ் சனகனாதி
மன்னவர்களசுகமுதலோரா வாழ்ந்தாரென்றும்
பதியிந்தநிலையெனவு மௌனையாண்ட
படிக்குநிருவிகர்ப்பத்தாற பரமானந்த
கதிகண்டுகொள்ளவுநின னருளாலிந்தக
கதியன்றியுறங்கேன்மேற கருமம்பாரேன் (உங)

பாராதிவிண்ணளைத்து நீயாசசிந்த
பரியமடலாவெழுதிப் பார்த்துப்பார்த்து
வாராயோவென், ப்ராண நாதாவென்பேன்
வளைத்துவளைத்தேனை நீயா வைத்துக்கொண்டு
பூராயமாமேலொன் றறியாவண்ணம்
புண்ணாளர்போனெஞ்சம் புலம்பியுள்ள
நீராளமாயுருகிக் கண்ணீர்சோர
நெட்டுயிர்த்துமெய்ம்மறந்தோர் நிலையாயிருப்பேனை

ஆயுமறிவாகியுன்னைப் பிரியாவண்ண
மணைந்துசுகம்பெற்றவனா யையோவென்னைத்
தீயகொலைச்சமயத்துள் செல்லச்சிந்தை
தெளிந்திடவுஞ்சமாதானஞ்செயவேன்வாழ்வா
காபிலைபுன்சருகாதி யருந்தக்கானங்
கடன்மலையெங்கேயெனவுங் கவலையாவேன்
வாயில்கும்பம்போற்கிடந்து புரள்வேனவானின்
மதிகதிரைமுன்னிலையா வைத்துநேரே (உரு)

நேரேதானிரவுபகல் கோடாவண்ண
சிக்கம்வடவங்கலையிந் நிலைகளேவெத்தா

ராரேயங்கவா பெருமை யென்னேயென்பே
னடிககினறகாறறேநீ யாராலேதான்
பேராதேசுழலகின்ற யென்பேன்வந்து
பெயகினறழுகில்காளெம் பெருமாறும்போற்
றுராளமாககருணை பொழிசசெய்யுரு
சாதகமென்னேகருதிச சாற்றுமென்பேன் (௨௬)

கருதரியவிண்ணேநீயெங்குமாகிக
கலந்தனையேயுனமுடிவின காட்சியாக
வருபொருளெபபடியிருககுஞ சொலலாயென்பேன
மண்ணேயுன்முடிவிலெயதுவயங்குமாங்கே
துரியவறியுடைசசேட ஸிறறியினுண்மை
சொலலாஞெசொலலெனபேன சுருதியேநீ
யொருவரைப்போலனைவருககு முன்னைமயாமுன
னுரையனஞேவுனமுடிவை யுரைநீயென்பேன் (௨௭)

உரையிறந்துபெருமைபெறறுத திரைக்கைநீட்டி
யொலிகின்றகடலேயிவ் வுலகஞசூழக்
கரையுமின்றியுனனைவைத்தா ரியாரேயென்பேன
கானகததிறைபைங்கிளிகாள கமலமேவும்
வரிசிறைவணடினங்காளோ திமங்காடுது
மார்க்கமனஞேநீஙகளிது வையையிலேயும்
பெரியபரிபூரணமாம் பொருளைககணடு
பேசியதுண்டோவொருகாற் பேசுமெனபேன் (௨௮)

ஒருவனவன் யானெகெடக் குடததுட்சங்கை
யோடுதலபோனுன்பேதை யுபபோடபவை
மருவவிடடுங்கர்ப்பூர மதனிறறீபம்
வயங்கவிட்டுமைககியமுனனி வருநகிகிறபே
னருளுடையபரமென்றே வன்றுதானே
யானுளனென்றும் மெனககேயாணவாதி
பெருகுவினைககட்டென்று மெனறுகட்டிப்
பேசியதன்றேயருநூல் பேசிறறனறே (௨௯)

அன்றுமுதலின்றவரைச்சனனகோடி
யடைந்தடைந்திங்கியாதனையா லழிந்ததல்லா
லின்றைவரைமுததியின்றே யெடுததததேக
மெப்போதேதெரியாதேயிப்போதேதான்
றுன்றும்மனக்கவலைகெடம் புலைசயேனைத்
தொழும்புகொளச்சீகாழித் துரையேதாது
சென்றிடவேபொருளை வைத்த நாவலோய்நன்
சிவனப்பாவென்றவருட் செல்வத்தேவே (௩௰)

தேவர்தொழும் வாதவூர்த் தேவேயெனபேன்
 றிருமூலத்தேவேயிற் சகத்தோர்முதநிக
காவலுறசிவவென்வாக் குடனேவந்த
 வரசேசும்மாவிருந்துன் னருளேச்சாரப்
பூவுலகில்வளரருணே கிரியேமறறைப்
 புண்ணியர்காளோவென்பேன்புரையொன்றில்லா
வோவியமபோலசைவரவுந் தானேநிற்பே
 ணேதரியதுயர்கெடவே யுரைகருமுனனே (௯௧)

ஓதரியசுகர்போல வேனேனென்ன
 வொருவரிலலேயோவெனவு முரைப்பேன்றுனே
பேதமபேதங்கெடவு மொருபேசாமை
 பிறவாதோவாலடியிற பெரியமோன
நாதனெருதரமூலகம் பார்ககவிசசை
 நண்ணுேேவென்றெனறே நாளுவாகிக்
காதனமிகுமணியினழையா ரெனவாடுநறேன்
 கருத்தறிந்து புரப்பதுனமேற் கடனமுக்காலும் (௯௨)

காலமொடுதேசவர்த்த மானமாகி
 கலந்துநின்றநிலேவாழி கருணேவாழி
மாலறவுஞ்சைவமுதன மதஙகளாகி
 மகாதிதமானவருண் மரபுவாழி
சாலமிகுமெளியேயில் வழக்குப்பேசத்
 தயவுவைத்துவளர்த்தவருட்டன்மைவாழி
யாலடிவீறபரமகுரு வாழிவாழி
 யகண்டிதாகாரவரு ளடியார்வாழிவாழி (௯௩)

ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்-முற்றியது-ஆ௱௯௪

# தேன்முகம்

தேன்முகம்பிலிற்றுப்பைந்தாட் செய்யபங்கயத்தின்மேவு
நான்முகத்தேவேநின்னை நட்டியவகிலமாயை
கான்முயறகொம்பேயென் கோகானலம்புனலேயென்கோ
வான்முகமுனரியென்கோமற்றென்கோவிளம்பல்வேண்டும் (௧)

வேண்டுவபடைத்தாய்நந்தை விதிப்படிபுரந்தரனத்தைக்
காணடகவழித்தாள்முகக்ட் கடவுடாளினேயவாற்று
லாண்டவனெவனோவென்ன வறிகிலாதகிலநீயே
யீண்டியவல்லநீரவெம்மனோர்ககியம்புகண்டாய் (௨)

கண்டனவல்லவென்றே கழூத்திடுமிறுதிக்கண்ணே
கொண்டதுபரமானந்தக்கோதிலாமுதநியுத்தாற்

பண்டைபிற்படைப்புங்காப்பும் பறந்தனமாயையோட
வெண்டலைவிழிகைகாலில் விளங்கிடநின்றான்யாவன் (௩)

விளங்கவெண்ணீறுபூசி விரிசடைக்கங்கைதாங்கித்
துளங்குநன்னுதற்கண்டோன நசகுழல்வளிநெடுமூச்சாகக்
களங்கமிலுருவந்தானே ககனமாயப்பொலியப்பூமி
வளர்ந்தாளென்னவுள்ள மன்றெனமறையொன்றின்றி (௪)

மறைமுழக்கொலிப்பத்தானே வாதமோடபயக்கைகண்
முறைமயினெங்காத முரசெனக்கறங்கவெங்குங்
குறைவிலாவணிநிறைந்து கோதிலாநடனஞ்செய்வா
னிறையவனெனலாமியார்க்கு மிதயசம்மதமீதல்லால் (௫)

அலலலரந்தொழில்படைத்தே யடிக்கடியுருவெடுத்தே
மல்லன்மாஞாலங்காக்கவருபவர் கடவுளென்னிற்
றொல்லையாம்பிறவிவேலை தொலைந்திடாதிருணீங்காது
நல்லதுமாயைத்தானு நானெனவந்துநிற்கும் (௬)

நானெனவந்துநிற்குஞான ஞானமன்றந்தஞான
மோனமாயிருக்கவொட்டா மோனமின்றாகவேதான்
றேனெனருசிக்குமன்பாற் சிந்தைநைந்துருகும்வண்ணம்
வானெனநீறைந்தானந்த மாகடல்வளைவதின்றே (௭)

இன்றெனவிருப்போவென்னி னென்றுஞ்சூனியமாமுத்தி
கன்றொடுதீதுமன்றி நாமுன்னேபெறுமவித்தை
நின்றதுபெத்தந்தானே நிரந்தரமுத்தியென்னி
னென்றொருவரைநான்கேட்க வுணர்விலைகுருவுமிலலை (௮)

இலலையென்றிடினிப்பூமி யிருந்தவாறிருப்போமென்னி
னல்லவன்சாருவாக னென்சொலுநெறிக்குவீனிற்
றொல்லையேஞைகமாதி தொடுப்பதேன்மயக்கமேதிங்
கொல்லைவந்திருமினென்ன வுறவுசெய்திடுவனந்தோ (௯)

அந்தனர்நால்வர்காண வருட்குருவாகிவந்த
வெந்தையேயெல்லாந்தானின் றியம்பினனெமைப்படைத்த
நந்தைநீயெம்மைக்காக்குந் தலைவனேநுந்தையன்றோ
பந்தமில்சுத்திமுத்திபடைக்க நின்னருள்பாலிப்பாய (௰)

தேன்முகம் முற்றியது. ஆ-[illegible].

## பன்மாலை

பன்மாலைத்திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
மாலைக்கேநீதான் பட்சமென்று
நன்மாலையாவெடுத்துச சொன்னார்நல்லோர்
நலமறிந்தகல்லாத நானுஞ்சொன்னேன்

சொன்மாலைமாலையாக் கண்ணீர்சோரத்
தொண்டனேனெந்நாளுந் துதித்துநிற்பே
னென்மாலையறிந்திங்கே வாவாவென்றே
யெனைக்கலப்பாய்திருக்கருணை யெம்பிரானே (க)

கருணைமொழிசிறிதில்லை னீதலில்லேன்
கண்ணீர்கம்பலையென்றன்கருத்துக்கேற்க
வொருபொழுதும்பெற்றறியே னென்னையாளு
மொருவாபுன்னடிமைநானொருத்தனுக்கோ
விருவினையுமுக்குணமுங் கரணநான்கு
மிடர்செயுமைம்புலனுக்காமாதியாறும்
வரவரவுமேழைக்கோரெட்டதான
மதத்தொடுமவந்தெதிர்த்தநவ வடிவமன்றே [உ]

வடிவனைத்துந்தந்தவடிவில்லாச்சுத்த
வான்பொருளே யெளியனேம் மனமாமாயைக்
குடிகெடுக்கத்துசங்கட்டிக் கொண்டமோன
குருவேயென்றெய்வமே கோதிலாத
படியெனககானந்தவெள்ளம் வந்துதேக்கும்
படியெனக்குன்றிருக்கருணை பற்றுமாறே
யடியெடுத்தேன்முடியினினம் வைகவேண்டு
மடிமுடியொன்றில்லாத வகண்டவாழ்வே (௩)

வாழ்வனைத்துமயக்கமெனத் தேர்ந்தேன்றேர்ந்த
வாறேநானப்பாலோர் வழிபாராமற்
றாழ்வுபெற்றிங்கிருந்தேன் றெண்ணமாயந்
தடையுற்றுன்மேற்கதியுந்தடையதாமே
யூழ்வலியோவல்லதுன்றன் றிருக்கூத்தோவிங்
கொருதமியேன்மேற்குறையோவுணர்ந்தாயின்னம்
பாழவதிப்படவெனக்கு முடியாதெல்லாம்
படைத்தளித்துதுடைக்கவல்ல பரிசினனே [௪]

நானினிங்கெனுமகந்தை யெனக்கேன்வைத்தாய்
நல்வினைதீவினையெனவேநடுவேநாட்டி
யூனுருமுடற்சுமையென்மீதேன்வைத்தா
யுயிரெனவுமென்னையொன்றாயுள்ளேன்வைத்தா
யானமையாயகில நிகிலபேத
மனைத்திலுள்ளுந்தானாகியறிவானந்தத்
தேனாகிப்பாலாகிக்கனியாய்க்கன்னற்
செறும்பாகாய்க்கற்கண்டாய்த் திகழ்ந்தவொன்றே (௫)

ஒனறியொன்றிநின் றுநின்று மென்னையென்னை
யுன்னியுன் னும்பொருளைநீயுன் பாலன்பா
னின்றதன்மைக்கிரங்கும் வைராக்கியனல்லே
னிவர்த்தியவைவேண்டுமிந்த நீலனுக்கே
யென்றுமென் றுமிங்கெறியோர் குணமுமில்லை
யிடுக்குவார்கைப்பிள்ளை யேதோவேதோ
கன்றுமனத்துடனுடு தழைதின்றுற்போற்
கல்வியுங்கேள்வியுமாகிக் கலக்குன்றேனே (சு)

உற்றதுணைநீயல்லாற் பற்றுவேறென்
றுளனேனென்பன்னூலகத் தோடியாடிக
கற்றதுங்கேட்டதுமிதனுக்கேதுவாகுங்
கற்பதுக்கேட்பதுமமையுநகானுநீத
நற்றுணையேயருட்டாயே யின்பமான
நாதாந்தப்பரம்பொருளே நாரணுதி
சுற்றமுமாய்நல்லன்பர் தமைசசேயாகத்
தொழும்புகொள்ளுங்கனகனமேசோதிக்குன்றே (எ)

குன்றுதமுவுருவா யருவாய்ஞானக்
கொழுந்தாகியறுசமயக் கூத்துமாடி
நின்றுயேமாயையெனுந் திரையைநீக்கி
நின்னையாரறியவல்லார் நினைப்போர்நெஞ்ச
மன்றுடவின்பக் கூத்தாடவல்ல
மணியேயென்கண்ணேமா மருந்தேநால்வர்க்
கன்றுலில்கீழிருந்து மோனஞான
மமத்தசின்முத்திரைக்கடலேயமரரேறே (அ)

திரையில்லாக்கடல்போலச் சலனந்தீர்ந்து
தெளிந்துருகும்பொன்போலச் செகத்தையெல்லாம்
கரையவேகனிந்துருக்கு முகத்திலேநீ
கனிந்தபரமானந்தக் கட்டியிந்நாள்
வரையிலேவரககாணே னென்னுற்கட்டி
வார்த்தைசொன்னுற்சுகம்வருமோ வஞ்சனேனை
யிரையிலேயிருத்திநிரு விகற்பமான
வின்பநிஷ்டைகொடுப்பதையா வெந்தநாளோ (சு

எந்தநாளுனக்கடிமை யானநாளோ
வென்நாளோகதிவருநா ளெளியனேனென்றன்
சிந்தைநாளதுவரைக்கு மயங்கிற்றல்லாற்
றெளிந்ததுண்டோமௌனியாய்த் தெளியவோர்சொற

நந்தநாண்முதலின்பக் கால்சற்றல்லாற்
றடையறவானந்தவெள்ளந் தானேபொங்கி
வந்தநாளிலலைமெத்த வலைந்தேனுன்னை
மறவாவின்பத்தாலே வாழ்கின்றேனே (௰)

பன்மாலை-முற்றியது ஆக ௱௮௰

# நினைவொன்றுஞானிகளிடம்

## பொருளேவல.

நினைவொன்றுநினையாம னிற்பினகமென்பார்
நிற்குமிடமேயருளா நிஷ்டையருளொட்டுந்
தனையென்றுமறந்திருப்ப வருள்வடிவானதுமேற்
றட்டியெழுந்திருக்குமின்பந் தன்மயமேயதுவாம்
பினையொன்றுமிலையந்த வின்பமென்றுநிலயம்
பெற்றாரைபிறவாமை பெற்றார்மற்றுந்தான்
மனையென்றுமகவென்றுஞ் சுற்றமென்றுமசுத்த
வாதனையாமாசையொழி மன்னொருசொற்கொண்டே (௧)

ஒருமொழியேபலமொழிக்கு மிடங்கொடுக்குமந்த
வொருமொழியேபலமொழிக்கு மொழிக்குமெனமொழிந்த
குருமொழயேமலையிலககு மறைமொழியெலலாங்
கோடின்றிவட்டாடல் கொள்வதொககுங்கண்டாய்
கருமொழியிங்குனக்கில்லை மொழிககுமொழிருசிக்கக
கரும்பனையசொற்கொடுனைக் காடடவுங்கண்டனைமேற்
றருமொழியிங்குனக்கில்லை யுன்னைவிட்டுநீங்காத்
தற்பரமாயானந்தப் பொற்பொதுவாய்நில்லை (௨)

நில்லாதவாக்கைநிலை யன்றெனவேகண்டாய்
நேயவருண்மெய்யென்றோ நிலயமதாநிற்கக்
கல்லாதேயேன்படித்தாய் கற்றதெல்லாமூடங்
கற்றதெல்லாமூடமென்றே கண்டனையுமன்று
சொல்லாயேபயனில்லை சொன்னமுடிவைத்தானே
தொடர்ந்துபிடிமர்க்கடம்போற் றொட்டதுபறாநில்
லெல்லாருமறிந்திடவே வாய்ப்பறைகொண்டடிநீ
யிராப்பகலில்லாவிடமே யெமக்கிடமென்றறிந்தே (௩

இடம்பொருளேவலைக்குறித்து மடம்புகுநாயெனவே
யெங்கேநீயகப்பட்டா யிங்கேநீவாடா
மடம்பெறுபாழ்நெஞ்சாலே யஞ்சாதேநீராசை
மன்னிடமேயிடமந்த மானிலந்தேபொருளுந்

இடம்பெறவேநிற்கினெல்லா வுலகமும்வந்தேவல்
செய்யுமிந்தநிலைநின்றோர் சனகன்முகதன்முனிவர்
கடம்பெறுமாமதயானை யென்னவுநீபாசக்
கட்டானநிகளபந்தக் கட்டவிழப்பாரே (௪)

பாராதியண்டமெலாம் படர்கானசலம்போற
பாத்தனையேமுடிவினின்று பாரெறுதானின்ற
தாராலுமறியாத சத்தன்றோவதுலா
யங்கிருநீயெங்கிருந்து மதுவாவைகண்டாய்
பூராயமாகவுநீ மற்றொன்றைவிரித்துப்
புலம்பாதேசஞ்சலமாப் புத்தியைநாட்டாதே
யோராதேயொன்றைநீ முன்னிலைவையாதே
யுள்ளபடிமுடியுமெலாமுள்ளபடிகாணே (௫)

உள்ளபடியென்னவுநீ மற்றொன்றைத்தொடர்ந்திட்
டுளங்கருதவேண்டாநிஷ் களங்கமதியாகிக
கள்ளமனத்துறவைவிட் டெல்லாந்துறந்ததுறவோர்
கற்பித்தமொழிப்படியே கங்குல்பகலற்ற
வெள்ளவெளிக்கடன்மூழ்கி யின்பமயப்பொருளாய்
விரவியெடுத்தெடுத்து விள்ளவும்வாயின்றிக
கொள்ளைகொண்டகண்ணீருங் கம்பலையுமாகிக
கும்பிட்டுச்சகம்பொய்யென்றத்தம்பட்டமடியே (௬)

அடிமுடியுநடுமற்ற பரவெளிமேவிகொண்டா
லத்துவிதவானந்த சித்தமுண்டாநமது
குடிமுழுதும்பிழைக்குமொரு குறையுமில்லையேந்த
கோலமெல்லாநனமுருகுங் குறைவுநிறைவறவே
விடியுமுதயம்போல வருளுதயம்பெற்ற
வித்தகரோடுங்கூடிவிளையாடலாகும்
படிமுழுதும்விண்முழுதுந் தந்தாலுங்களியாய
பாலருடனுன்மத்தர் பிசாசர்குணம்வருமே (௭)

வரும்போமென்பனவுமின்றி யென்றுமொருபடித்தாய
வாஞதிதத்துவத்தை வளைந்தருந்திவெளியா
மிரும்போகலலோமரமோ வென்னுநெஞ்சைக்களமென்
விட்டமெழுகாவுருக்கு மின்பவெள்ளமாகிக்
கரும்போகண்டோசீனிச் சருக்கரையோதேனோ
கனியமிர்தோவெனருசிக்குங் கருத்தவிழ்ந்தோருணர்வா
ரரும்போநனமணங்காட்டுங் காமரசங்கன்னி
யறிவாளோரவபத்துவர்க்கோ வந்நலந்தான்விளங்கும் (௮)

தானேயுமிவ்வுலக மொருமுதலுமாகாத்
  தன்மையினாற்படைத்தளிக்குந் தலைமையதுவான
கோனகவொருமுதலிங் குண்டெனவும்யூகஞ
  கூட்டியதுஞ்சகமுடிவிற் குலவுறுமெய்ஞ்ஞான
வானகவம்முதலே நிற்குநிலைநம்மான்
  மதிப்பரிதாமெனமோனம் வைத்ததுமுன்மனமே
யூனாலுமனஞ்சடமென் றழுங்காதேயுண்மை
  யறிவித்தவிடங்குருவா மருளிலதொன்றிலையே (௯)

நினைவொன்றுஞானிகளிடம்-முற்றியது-ஆக-௱௯௯.

---

## பொன்னைமாதரை

—(*)—

பொன்னைமாதரைப் பூமியேநாடிடே
னென்னைநாடிய வென்னுயிர்நாதனே
யுன்னைநாடுவ னுன்னருட்டுவெளி
தன்னைநாடுவன் றன்னந்தனியனே (௧)

தன்னதென்றுரை சாற்றுவனவெலா
நின்றதென்றனை நின்னிடத்தேதந்தே
னின்னமென்னை யிடருறக்கூட்டினாற்
பின்னையுய்கிலென் பேதையனாவியே (௨)

ஆவியேயுனை யானறிவாய்நின்று
சேவியேன்களச் சிந்தைதிறைகொடேன்
பாவியேனுள பான்மையைக்கண்டுநீ
கூவியாளெனை யாட்கொண்டகோலமே (௩)

கோலமின்றிக் குணமின்றிநின்னருட்
சீலமின்றிச் சிறியன்பிழைப்பனோ
ஞாலமுண்டு மமிர்துருவாய்வந்த
காலமெந்தை கதிநிலைகாண்பதே (௪)

காணுங்கண்ணிற் கலந்தகண்ணேயுனை
சேணும்பாருந் திரிபவர்காண்பரோ
வாணும்பெண்ணு மதிவெனும்பான்மையும்
பூணுங்கோலம் பொருந்தியுணிற்கவே (௫)

நிற்குநன்னிலை நிறகப்பெற்றாருள்
வாகமன்றி மனிதரான்றேலயா

துர்க்குணக்கடற் * சோங்கன்னமாவியேற்
கெற்குணங்கண் டெனபெயர்சொல்வதே (சு

சொல்லையுன்னித் துடித்ததலாலரு
ளெல்லையுன்னி யெனையன்குவைத்திலேன்
வல்லநீயென்னை வாவென்றிடாவிடிற்
கல்லையாமிக் கருமிகடக்கையே (எ)

கையுமெய்யுங் கருத்துக்கிசையவே
யையதந்தவற் கையம்னியுண்டோ
பொய்யினேசிந்தைப் பொய்கெடப்பூரண
மெய்யதாமின்ப மென்றுவிளைவதே (அ)

என்றுமுனனை யிதயவெளிக்குளே
துன்றவைத்தன னேயருட்சோதிநீ
நின்றதன்மை நிலைக்கெனனேர்மையா
நன்றுநீதற வைத்தநடுவதே (கூ)

வைத்ததேகம் வருந்தவருந்திடும்
பித்தனனருள் பெற்றுந்திடமிலேன்
சித்தமோன சிவசின்மயானந்தம்
வைத்தவைய வருட்செம்பொறசோதியே (ம)

செம்பொன்மேனிச் செழுஞ்சுடரேமுழு
வம்பனே னுனைவாழ்த்துமதியினறி
யிம்பர்வாழ்வினுக் கிசைவைத்தேனமன
நம்பிவாவெனி னுனெனகொல்செய்வதே (மக)

செய்யுஞ்செய்கையுஞ் சிந்திக்குஞ்சிந்தையு
மையநின்னதென் றெண்ணுமறிவின்றி
வெய்யகாம வெகுளிமயககமாம
பொய்யிலேசுழன்றெ னென்னபுன்மையே (மஉ)

புன்புலானரம் பென்புடைப்பெய்யுட
லனபர்யார்க்கு மருவருப்பல்லவோ
வெனபொலாமணி யேயிறையேயித்தாற
றுனபமனறிச் சுகமொன்றுமிலலையே (மங)

இல்லையுண்டென் றெவர்பக்கமாயினுஞ்
சொல்லவோவறியாததொழும்பனயான்

* சோங்கு, மரக்கலம்.

செல்வேறொரு திக்கறியேனெலாம்
வல்லநீயென்னை வாழ்விக்கவேண்டுமே (௰௪)

வேண்டுஞ்சீரருண் மெய்யன்பர்க்கேயன்பு
பூண்டநாளெனென் புலமறியாததோ
வாண்டநீயுன் னடியவனென்று
தூண்டுவேனன்றித்தொண்டனென்சொல்வதே ௰௫

எனக்குளேயுயி ரென்னவிருந்தநீ
மனக்கிலேசத்தை மாற்றல்வழக்கன்றோ
கனத்தசீரருட் சாட்சியலாதொன்றை
நினைக்கவோவறியாதனற னெஞ்சமே [௰௬]

நெஞ்சகந்தனை நேசித்தமார்க்கண்டர்க்
கஞ்சலென்ற வருளறிந்தேயையா
தஞ்சமென்றுன்சரணடைந்தேனெங்குஞ்
செஞ்சவேணின்ற சிற்சுகவாரியே (௰௭)

வாரியேழு மலையும்பிறவுந்தான்
சீரிதாநின சின்மயத்தேயென்றோ
லாரிலேயுள தாவித்திரளதை
யோரிலேனென்னை யாண்டவொருவனே [௰௮]

ஒருவரென்னுளத் துள்குங்குறிப்பறிந்
தருளவரோவெனை யாளுடையண்ணலே
மருளனேனபட்ட வாதைவிரிக்கினோ
பெருகுநாளினிப் பேசுவிதியின்றே [௰௯]

இன்றுனக்கன் பிழைத்திலனென்றே
வன்றுதொட்டனை யாளரசேயென்று
நின்றாற்றிய நீலனைக்கைவிட்டால
மன்றமெப்படி நின்னருளவாழ்த்துமே [௨௰]

வாழ்த்துநின்னருள் வாரம்வைத்தாலன்றிப்
பாழ்த்தசிந்தைப் பதகனுமுய்வனோ
சூழ்ந்துநின்ற தொழும்பரையானந்தத்
தாழ்த்துமுக்க ணருட்செம்பொற்சோதியே [௨௧]

சோதியேசுடரே சுகமேதுணை
நீதியேநிசமேநிறைவேநினை
யாதியேயுனையானடைந்தேனகம்
வாதியாதருள வாயருள்வானையே (௨௨)

வானைப்போலவளைந்துகொண்டாநந்தத்
தேனைத்தநதெனைச சேர்ந்துகலந்தமெய்ஞ்
ஞானத்தெய்வத்தை நாடுவனென்று
மீனப்பாழ்கெட வென்றுமிருப்பனே (௨௩

இரும்பைக்காநத மிழுக்கின்றவாறெனைத்
திரும்பிப்பார்க்க வொட்டாமற்றிருவடிக
கரும்பைத்தந்துகண் ணீர்கம்பலையெலா
மரும்பசசெய்யென தன்னையொப்பாமனே (௨௪)

அன்னையப்பனென் னாவித்துணையெனுந்
தன்னையொப்பற்ற சற்குருவென்பதென்
னென்னைப்பூரணவின்ப வெளிக்குளே
துன்னவைததசுட ரெனத்தக்கதே [௨௫]

தக்ககேள்வியிற் சார்நதநற்பூமியின்
மிக்கதாகவிளங்கு முதலொன்றே
யெக்கணுந்தொழ யாவையும்பூத்துக்காய்த்
தொக்கநின்று மொன்றாய் நிறைவானதே [௨௬]

ஆனமானசமயங்க ளாறுக்குந்
தானமாய்நின்று தன்மயங்காட்டிய
ஞானபூரண நாதனைநாடியே
தீனனேனின்பந் தேக்கித்திளைப்பனே [௨௭]

தேக்கியின்பந் திளைக்கத்திளைக்கவே
யாக்கமாயெனக கானந்தமாகியே
போக்கினோடு வரவற்றபூரணந்
தாக்கிநின்றவா தன்மயமாமதே [௨௮]

அதுவென்றுன்னு மதுவுமறநின்ற
முதியாஞானிகண் மோனப்பொருளது
வெதுவென்றெண்ணி யிறைஞ்சுவனேழையேன்
மதியுணின்றின்ப வாரிவழங்குமே [௨௯]

வாரிக்கொண்டெனை வாய்மடுத்தின்பமாம்
பாரிற்கண்டவை யாவும்பருகினே
யோரிற்கண்டிடு மூமன்கனவென
யாருக்குஞ்சொல வாயிலையையனே [௩௰]

ஐயமற்றவறிவ ருணர்கெலாங்
கையிலாமலகக் கனியாகிய

மெய்யனேயிந்த மேதினிமீதுழல்
பொய்யனேற்குப் புகலிடமெங்ஙனே [௬க]

எங்ஙனேயுய்ய யானென்னதென்பதற்
றங்ஙனேயுன் னருண்மயமாகிலேன்
றிங்குகள்பாதி திகழப்பணியணி
கங்கைவார்சடைக் கண்ணுதலெந்தையே (௬உ)

கண்ணிற்காண்பதுங் காட்சியையாற்றுறில்
கண்ணல்பூசை பகர்வதுமந்திர
மண்ணெறுடைந்தும் வழங்குயிர்யாவுமே
யண்ணலேநின் னருளவடிவாகுமே (௬௩)

வடிவெலாநின் வடிவெனவாழ்த்திடாக்
கடியனேனுமுன் காரணங்காண்பனோ
நெடியவானென்ன வெங்குநிறைந்தொளி
ரடிகளேரசே யருளத்தனே (௬௪)

அத்தனேயகண் டானந்தனேயருட்
சுத்தனேயென் னுனைத்தொடர்ந்திலேன்
மத்தனேன்பெரு மாமலமாயவான்
கத்தனேகல்வி யாததுகற்கவே (௬௫)

கற்றுமென்பலன் கற்றிடுநூன்முறை
சொற்றசொற்கள் சுகாரம்பமோநெறி
நிறறல்வேண்டு நிருவிகற்பச்சுகம்
பெற்றபேர்பெற்ற பேசாப்பெருமையே [௬௬]

பெருமைக்கேயிறு மாந்துபிதற்றிய
கருமிக்கைய கதியுமுண்டாங்கொலா
வருமைசசிரன்பார்க ளன்னையொப்பாகவே
வருமப்பேரொளியே யுன்மனுந்தமே (௬௭)

உன்மனிக்கு மொளிர்பரஞ்சோதியாஞ்
சின்மயப்பொருளே பழஞ்செலவமே
புன்மலத்துப் புழுவனபாவியேன்
றுன்மனத்தைக் கரைக்கக்கடவதே [௬அ]

கரையிலின்பக் கடலமுதேயிது
வரையினுனை வந்துகலந்திலே
னுரையிலாவின்ப முள்ளவர்போலவித்
தரையிலேநடித்தே னென்னதன்மையே (௬௯)

மையுலாம்விழி மாதர்கடோதகப்
பொய்யிலாழும் புலையினிப்பூரைகாண்
கையிலாமல கக்கனிபோன்றவென்
னையனையெனை யாளுடையண்ணலே (சய)

அண்ணலேயுன் னடியவர்போலருட
கண்ணினாலுனைக் காணவும்வாவனப்
பண்ணினாலென்ப சுத்துவம்போயுயும்
வண்ணமாக மனோலயம்வாய்க்குமே (சக)

வாய்கருங்கைகரு மௌனமௌனமென்
றேயக்குருசொற்கொண் டிராப்பகலற்றிடா
நாய்க்குமினபமுண்டோ நலலடியரைத்
தோய்கருமானந்தத் தூவெளிவெள்ளமே (சஉ)

தாயதான துரியவறிவெனும்
தாய்நீயின்பத் தந்தையுநீயென்றுஞ்
சேயதாமிந்தச் சீவத்திரளன்றோ
வாயும்பேரொளி யானவகண்டமே (சங)

அகண்டமென்ன வருமறையாகமம்
புகன்றதின்றமை போதத்தடங்குமோ
செகங்களெங்குந் திரிந்துநன்மோனத்தை
புகந்தபெருனை யொன்றுவரையனே (சச)

ஐயனேயுனை யன்றியொருதெய்வங்
கையினாற்றொழவுங் கருதேனகண்டாய
பொய்யனாகிலும் பொயயுரையேனசுதத
மெய்யனாமுனக் கேவெளியாகுமே (சரு)

வெளியினின்ற வெளியாய்விளங்கிய
வொளியினின்ற வொளியாமுன் றன்னைநான்
றெளிவுதந்தகல் வாலடித்தேவென்று
களிபொருந்தவன் றோகற்றகல்வியே (சசு)

கல்லையுறற கருத்தினர்கார்கிறத்
தல்லையொத்த குழலினராசையா
லெல்லையற்ற மயல்கொளவோவெழிற்
றில்லைநிற்றிகழுந் திருப்பாதனே (சஎ)

திருவருட்டெய்வச செல்விமலைமக
ளுருவிருக்கின்ற மேனியொருபரங்
குருவைமுக்கணெங் கோவைப்பணிநெஞ்சே
கருவிருக்கின்ற கன்மமிங்கில்லையே (சஅ)

கன்மமேது கடுநாகேதுமேற்
சென்மமேதெனை தீண்டக்கடவதோ
வென்மனோத மெய்தும்படிக்கரு
ணன்மைகூர்முக்க ணதனிருக்கவே (௪௯)

நாதகீதனென் றுதன்முக்கட்பிரான்
வேதவேதியன் வெள்விடையூர்திமெய்ப்
போதமாய்நிறை புண்ணியன்பூந்திருப்
பாதமேகதி மற்றில்லைபாழ்நெஞ்சே (௫௰)

மற்றுனக்குமயக்கமென்வன்னெஞ்சே
கற்றைவார்சடைக் கண்ணுதலோனருள்
பெற்றபேரவரே பெரியோரெலா
மூற்றுமோர்ந்தவர் மூதுரையர்ததமே (௫௧)

உரையிறந்துளத் துள்ளவிகாரமாந்
திரைகடந்தவர் தேடுமுக்கட்பிரான்
பிரைநிறைந்த பரப்பெங்கனங்ஙனே
கரைகடந்தின்ப மாகக்கலப்பனே. (௫௨)

கலந்தமுத்தி கருதினுங்கேட்பினு
நிலங்களாதியு நின்றமைப்போலவே
யலந்துபேயின மென்னுமருமறை
மலர்ந்தவாய்முக்கண் மாணிகக்சசோதியே (௫௩)

சோதியாதெனைத்தொண்டருட்கூட்டியே
போதியாதவெல் லாமெளப்போதிகக
வாதிகாலத்தி லுன்னடிக்காந்தவம்
மேதுநான்முயன்றேன் முககணைந்தையே (௫௪)

எந்தநானைக்கு மீன்றருடாயென
வந்தசீரருள்வாழ்க வென்றுன்றுவேன்
சிந்தைநோக்கந் தெரிந்தருளிப்பெலாந்
தந்துகாக்குந் தயாமுககணுதியே (௫௫)

கண்ணகன்றவிக்காசினியூடெங்கும்
யெண்ணொடாண்முத லாமென்பிறவியை
யெண்ணவோவெரி தேழைகதிபெறும்
வண்ணமுக்கண் மணிவந்துகாக்குமே (௫௬)

காக்குநின்னருட காட்சியல்லாலொரு
போக்குமில்லையெ ன்புந்திக்கிலேசத்தை
நீக்கியாளுகை நின்பரமன்பின
ராக்கமேமுக்க ணனந்தமூர்த்தியே (௫௭)

ஆனந்தங்கதி யென்னவென்றானந்த
மோனஞ்சொன்ன முறைபெறுமுக்கணெங்
கோனிங்கீந்த குறிப்பதனால்வெறுந்
தீனன்செய்கை திருவருட்செய்கையே (௪௮)

கையினாற்றொழு தேத்திக்கசிந்துள
மெய்யினாலுனைக் காணவிரும்பினேன்
ஐயனேயரசே யருளேயருட்
டையலோர்புறம் வாழ்சகநாதனே (௪௯)

சகத்தின்வாழ்வைச் சதமெனவெண்ணியே
மிகுத்ததீமை விளையவிளைக்கின்றே
னகத்துளாரமு தாமையநின்முத்தி
சுகத்தினான்வந்து தோய்வதெக்காலமே (௫௰)

காலமூன்றுங் கடந்தொளிராநின்ற
சீலமேநினதிரு வருளாலிந்தச
சாலமாமிச் சகமெனவெண்ணிநின்
கோலநாடுத லென்றுகொடியனே (௫௧)

கொடியவெவ்வினைக் கூற்றைத்துரந்திடு
மடிகளாம்பொருளே நினதன்பினறிப்
படியிலேழைமை பற்றுகின்றேன்வெறு
மிடியினேன்கதி மேவும்விதியினறே (௫௨)

விதியையும்விதித் தென்னைவிதித்திட்ட
மதியையும்விதித் தமமதிமாயைபிற
பதியவைத்த பசுபதிநின்னருட்
கதியையெப்படி கண்டுகளிப்பதே (௫௩)

கண்டகண்ணுக்குக் காட்டுங்கதிரெனப்
பண்டுமின்றுமென் பானின்றுணர்த்திடு
மண்டனேயுனக் கோர்பதிலுயிரந்
தெண்டனென்பொய்ம்மை தீர்த்திடல்வேண்டுமே (௫௪)

வேண்டும்யாவு மிறந்துவெளியிடைத்
தூண்டுவாரற்ற சோதிப்பிரானின்பாற்
பூண்டவன்பாதம் பொறபணிவாயகருமே
மீண்டுசென்ம மெடுப்பனனந்தமே (௫௫)

எடுத்ததேக மிறக்குமுனேயெனைக்
கொடுத்துநின்னையுங் கூடவுங்காண்பனோ
வடுத்தபேரறிவா யறியாமையைக்
கெடுத்தவிளக் கிளர்மணிக்குன்றமே (௫௬)

குன்றிடாத கொழுஞ்சுடரேமணி
மன்றுளாடிய மாணிக்கமேயுனை
யன்றியார்துணை யாருறவார்கதி
'யென்றுநீயெனக் கின்னருள்செய்வதே (சுஎ)

அருளெலாந்திரண் டேசர்வடிவாகிய
பொருளெலாம்வல்லபொற்பொதுநாதவென்
மருளெலாக்கெடுத் தேயுளமன்னலா
விருளெலாமிரிந் தேங்கொளித்திட்டதே (சுஅ)

எங்குமென்னை யிகலுறவாட்டியே
பங்கஞ்செய்த பழவினைபற்றற்று
லங்கணுவுன் னடியிணையன்றியே
தங்கவேறிட முண்டோசகத்திலே (சுகூ)

உண்டவர்க்கன்றி யுற்பசியோயுமோ
கண்டவர்க்கன்றி காதலடங்குமோ
தொண்டருக்கெளி யானெனறுதோன்றுவான்
வண்டமிழ்ககிசை வாகமதிககவே (எ0)

மதியுங்கங்கையுங் கொன்றையுமத்தமும்
பொதியுஞ்சென்னிப் புனிதநின்புனனடிக
கதியைவிட்டிந்தக காமத்திலாழ்நதவென
விதியையெண்ணி விழிதுயிலாதனறே (எக)

அன்றெனச்சொல் வாமெனவற்புத
நன்றெனச்சொல நண்ணியநன்மையை
யொனறெனச்சொன வொணபொருளேயொளி
யின்றெனக்கருள் வாயிருளேகவே (எஉ)

இருவரேபுகழ்ந் தேத்தற்கினியரா
மொருவரேதுணை யென்றுணராய்நெஞ்சே
வருவரேகொடுங் காலாகளவந்தெதிர்
பொருவரேயவர்க் கென்கொல்புகலவதே [எங]

புகழுங்கல்வியும் போதமும்பொய்யிலா
வகமும்வாய்மையு மன்புமளித்தவே
சுகவிலாசத் துணைப்பொருடோற்றமாங்
ககனமேனியைக கண்டனகண்களே [எச]

கண்ணுணின்ற வொளியைக்கருத்தினை
விண்ணுணின்று விளங்கியமெய்யினை

யெண்ணியெண்ணி யிரவும்பகலுமே
நண்ணுகின்றவர் நான்முழுதெய்வமே. (எ௩)

தெய்வம்வேறுள தென்பவர்சிந்தனை
யைவரென்பதுகற்பாதற்பா
சைவசிறசிவனேயுனைச சார்ந்தவ
ருயவரெனபதும் யாறுணர்ந்தேனுற்றே (எ௪)

உற்றவேனைக் குறுதுணையாயிந்தச
சுற்றமோநமைக்காக்குமெ சொலாய்நெஞ்சே
கறறைவார்சடைக் கணணுதல்பாதமே
பறறதாயிற் பரசுகமபற்றுமே (எ௫)

பற்றலாம்பொருளே பரம்பற்றினு
லுறறமாதவாக குணமையநல்குமே
மறறுமவேறுள மார்க்கமெலாமெடுத்
தெறறுவாய்மனமே கெதியெய்தவே (எ௬)

பொனனைமாதரை -முற்றியது-ஆக-௨௭௧

# ௨

# ஆரணம்.

ஆரணமாரக்கத் தாகமவாசி
யறபுதமாய் நடந்தருளுக
காரணமுணாந்துங் கையுநின்மெய்யுங்
கணகண்மூன்றுடைய வெண்கண்ணே
பூரணவறிவிற கண்டிலமதனுற்
போறறியிப் புநதியோடிருந்து
தாரணியுளளமடடுமே வணஙகத
தமியனேன் வேண்டிததகுமே (௧)

இடமொருமடவா ளுலகனைத்தினுட்
டெவ்வுலகத்தையு மீனறுந்
தடமுறுமகில மடஙகுநாளம்ம ம
தன்னையுமொழிதது விண்ணெனவே
படருறுசோதிக் கருணையகடலே
பாயிருட்படு கிறிகிடக்கக்
கடனதோகினைப்பு மறபபெறுந்திரையக
கவர்ந்தெனை வளர்ப்பதுங்கடனே (௨)

வளம்பெறுஞான வாரிவாய்மடுத்து
மணணையும் விண்ணையுந்தெரியா

தளம்பெறுந்துரும் பொத்தாவியோடாக்கை
யானந்தமீர்கவே யலந்தேன்
களம்பெறு வஞ்சநெஞ்சினர்காணக்
காட்சியே சாட்சியேயறிஞ
ருளம்பெறுந்துணையே பொதுவினிநடிக்கு
முண்மையே யுள்ளவாறிதுவே (௩)

உள்ளமேநீங்கா வென்னைவாவாவென்
றுலப்பிலாவானந்தமான
வெள்ளமேபொழியுங் கருணைவான்முகிலே
வெப்பிலாத் தண்ணருள்விளக்கே
கள்ளமேதுறக்குந் தூவெளிப்பரப்பே
கருவெனகிடந்த பாழ்மாயப்
பள்ளமேவீழா தென்னைக்கரையேற்றிப்
பாலிப்பதுன்னருட் பரமே (௪)

பரம்பரமாகிப் பக்குவம்பழுத்த
பழவடியார்க்கருள் பழுத்துச்
சுரந்தினிதிரங்குந் தானகற்பகமே
சோதியே தொண்டனேனின்னை
யிரந்துநெஞ்சுடைந்து கண்டுயில்பொரும
விருந்ததுமென்கணி யிருட்டைக்
கரந்துனின்கண்ணுற் றுயில்பெறவேண்டிக்
கருதினேன் கருத்திதுதானே (௫)

கருத்திடுகருத்தா யிருந்துநீயுணர்த்துங்
காரணங்கண்டு சும்மாதான்
வருத்தமற்றிருந்து சுகம்பெறுவண்ணம்
வருந்தினேன் மதியின்மைதீர்ப்பா
ரொருத்தராருளப்பா டுணர்பவர்யாவ
ருலகவர் பன்னெறிறெனக்குப்
பொருத்தமோசொல்லாய் மௌனசற்குருவே
போற்றினின் பொன்னடிப்போதே (௬)

அடியெனுமதுவுமருளெனுமதுவு
மறிந்திடினிர்க் குணநிறைவு
முடியெனுமதுவும்பொருளெனுமதுவு
மொழிந்திடிற் சுகமனமாயைக
குடிகெடவேண்டிற்பணியறநிற்றல்
குணமெனப்புன் னகைகாட்டிப்
படிமிசைமௌனி யாகிநீயாளப்
பாக்கியமென் செய்தேன்பரனே (௭)

என்செயலின்றி யாவுநின்செயலென்
றெண்ணுவே னெவ்வொருகாலம்
புன்செயன்மாயை மயக்கினேன்செயலாம்
பொருந்துவே னஃதொருகாலம்
பின்செயல்யாது நினைவின்றிக்கிடப்பேன்
பித்தனேனன்னிலை பெறநின்
றன்செயலாக முடித்திடல்வேண்டுஞ்
சச்சிதானந்தசற் குருவே [அ]

குருவுருவாகி மௌனியாய்மௌனக்
கொள்கையையுணர்த்தினை யதனாற்
கருவுருவாவ தெனக்கிலையிந்த
காயமேரபொய்யெனக் கண்ட
திருவுருவாள ரனுபவநிலையுஞ்
சேருமோவாவலோ மெத்த
வருவுருவாகி யல்லவாய்ச்சமய
மளவிடாவானந்த வடிவ [கூ]

வடிவிலாவடிவாய்மனநினைவனுகா
மாரக்கமாய்நீககருஞ்சுகமாய்
முடிவிலாவீட்டினவாழக்கைவேண்டினர்க்கு
மோனமல்லால்வழியுண்டோ
படியிருளகலசின்மயம்பூத்த
பசுஙகொம்பையடக்கியோர்கல்லா
லடியிலேயிருந்தவானந்தவரசே
யன்பரைப்பருகுமாரமுதே. (ய)

ஆரணம் முற்றுப்பெற்றது-ஆ-உஅக.

## சொல்லற்கரிய

சொல்லற்கரியபரம்பொருளே சுகவாரிதியேசுடர்க்கொழுந்தே
வெல்லற்கரியமயலிலெனைவிட்டெங்கொளித்தாயாகெட்டேன்
கல்லிற்பசியநாருரித்துக்கடுகிற்பெரியகடலடைக்கு
மல்லிற்கரியவந்தகனுக்காளாக்கினையோவறியேனே. (க)

அறிவிற்கறிவுதாரகமென்றறிந்தேயறிவோடறியாமை
நெறியிற்புகுதாதோர்படித்தாய்நின்றநிலையுந்தெரியாது
குறியகற்றகண்டாதிதமயக்கோதிலமுதேநினைக்குறங்கிம்
பிறிவற்றிருக்கவேண்டாவோபேயேற்கினிநீமேசாபே. (உ)

பேசாவனுபூதியையடியேன்பெற்றுப்பிழைக்கப்பேரருளாற்
றேசோமயந்தற்றினியொருகாற்சித்தத்திருளுந்தீர்ப்பாயோ
பாசாடவியைக்கடந்தவன்பர்பற்றுமகண்டப்பரப்பான
வீசாபொதுவினடமாடுமிறைவாகுறையாவின்னமுதே (௩)

இன்பக்கடலிற்புகுந்திடுவோனிரவும்பகலுந்தோற்றும
லன்பிற்கரைந்துகரைந்துருகியண்ணாவரசேயெனக்கூவிப்
பின்புற்றழுஞ்சேயெனவிழிநீர்பெருக்கிப்பெருக்கிப்பித்தாகித்
துன்பக்கடல்விட்டகல்வேனோசொருபானந்தச்சுடர்க்கொழுந்தே (௪)

கொழுந்துதிகழ்வெண்பிறைச்சடிலக்கோவேமன்றிற்கூத்தாடற்
கெழுந்தசுடரேயிமயவரையென்றாய்கண்ணுக்கினியானே
தொழுந்தெய்வமுநீகுருவுநீதுணைநீதந்தைதாயுநீ
யழுந்தும்பவநீநன்மையுநீயாவியாக்கைநீதானே (௫)

தானேயகண்டாகாரமயந்தன்னிலெழுந்துபொதுநடஞ்செய்
வானேமாயப்பிறப்பறுப்பான்வந்துன்னடிக்கேகரங்கூப்பித்
தேனேயெனைப்பருகவல்லதெள்ளாரமுதேசிவலோகக்
கோனேயென்றுசொன்னினதுசெவிகொள்ளாதென்னோகூறாயே (௬)

கூறாநின்றவிடர்க்கவலைக்குடும்பக்கூத்துட்டுளைந்துதடு
மாறாநின்றபாவியைநீவாவென்றழைக்கலாகாதோ
நீறார்மேனிமுக்கணுடைநிமலாவடியார்நினைவினிடை
யாறாய்ப்பெருகும்பெருங்கருணையரசேயென்னையாள்வானே (௭)

வானேமுதலாம்பெரும்பூதம்வகுத்துபுரந்துமாற்றவல்ல
நானென்றபாவிதலை நாணுநாளெந்நாடோ (௬)
வேலையிலாவேதனை விதிதவிந்தரசாலவுடன்
மாலைவியாபார மயக்கொழிவதென்னாளோ (௭)
ஆழந்துவினைக்கினைரோசிகமாமிவ்வுடலில்
வாழந்துபெறும்பேறறைமதிக்குநாளெந்நாளோ (௮)
மும்மலச்சேறுனைமுழுக்கும்பாகமெனு
நிம்மலகாயத்தி னிகழ்ச்சிவைப்பதென்னாளோ (௯)
நாற்றமிக்ககாட்டு நவவாயில்பெற்றபசுஞ்
சோற்றுத்துருத்தி சுமையென்பதென்னாளோ (௰)
உருவிருப்பவுள்ளேதா னூறுமலக்கேணி
யருவருப்புவாழ்க்கையைக்கண்டஞ்சுநாளெந்நாளோ (௰௧)

முற்றுப்பெற்றது. ஆக-சூ௱௨௭.

## மாதரைப்பழித்தல்

மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளான்மறைத்துப்
பொய்வீசும்வாயார் புலையொழிவதென்னாளோ (க)
இன்னியநெஞ்சைப்பறவை சிக்கக்குழற்காட்டிற்
கண்ணிவைப்போர்மாயங் கடக்குநாளெந்நாளோ

கண்டுமொழிபேசிமனங் கண்டுகொண்டுகைவிலையாக்
கொண்டுவிடுமாதர்பொய்க் கூத்தொழிவதெந்நாளோ (௩)
காமனைவாவென் றிருணட கண்வலையைவீசுமின்னார்
நாமமறந்தருளை நண்ணுநாளெந்நாளோ (௪)
கண்களில்வெண்பூளைகரப்பக்கருமைபிட்ட
பெண்கண்மயறப்பிழைக்குநாளெந்நாளோ (௫)
வீங்கித்தளர்ந்துவிழு முலையாரமேல்விழுந்து
தூங்குமதன்சோமபைத துடைக்குநாளெந்நாளோ (௬)
கசசிருக்குங்கொங்கை கரும்பிருக்குமினமாற்றம்
வைசசிருக்குமாதர்மயக்கொழிவதெந்நாளோ (௭)
பசசென்றகொங்கைப் பசுப்பியர்பாழானமய
னச்சென்றறிந்தருளை நண்ணுநாளெந்நாளோ (௮)
உந்திசசுழியாலுளத்தைசசுழித்தகன
தந்தித்தனத்தார் தமைமறப்பதெந்நாளோ (௯)
தட்டுவைத்தசேலைகொய் சகத்தி ற்சிங்கையெல்லாங்
கட்டிவைக்குமாயமின்னார் கட்டழிவதெந்நாளோ (௰)
ஆழாழியென்னவளவுபடா வஞ்சநெஞ்சப்
பாழானமாதர்மயற் பற்றொழிவதெந்நாளோ (௰௧)
தூயபனித்திங்களை சுடுவதெனப்பித்தேற்று
மாயமடவார் மயக்கொழிவதெந்நாளோ (௰௨)
ஏழைக்குறும்புசெயு மேநதிழையார்மோகமெனும்
பாழைக்கடந்து பயிராவதெந்நாளோ (௰௩)
விண்டுமொழிதேனி வேட்கைவருமொண்டுத்தூந்
தொண்டியாகள்கடைபித சுற்றொழிவதெந்நாளோ (௰௪)
மெய்யிற்சிவம்பிறக்க மேவுமின்பமபோன்மாதர்
பொய்யயின்பின்றென்று பொருந்துநாளெந்நாளே (௰௫)

முற்றுப்பெற்றது-ஆ-தா௪௨

## தத்துவமுறைமை.

ஐம்பூதத்தாலேயலகாழிந்ததோஷமற
வெம்பூதநாதனரு ளெய்துநாளெந்நாளோ (௧)
சத்தமுதலாம்புனிற சஞ்சரித்தகள்வரெனும்
பித்தர்பயந்தீர்ந்து பிழைக்குநாளெந்நாளோ (௨)
நாளும்பொறிவழியையோட்டத்வண்ணமெமை
யாளும்பொறியாலருள் அருள்வதெந்நாளோ (௩)
வாக்காதியானகன்ம மாயைதம்பால்வீண்காலம்
போக்காமலுண்மை பொருந்துநாளெந்நாளோ (௪)

ஊனமானவானைக் கைம்மாலையாகாம
லென்னையாளடிகளடி செய்துநாளெந்நாளோ (௬)

வேட்டைப்புலப்புலையர் மேவாதவண்ணமனக்
காட்டைதிருத்திக் கரைகாண்பதெந்நாளோ

உந்துபிறப்பிறப்பை யுற்றுவிடாதெந்தையருள்
வந்துபிறக்கமன மிறப்பதெந்நாளோ (௭)

புத்தியெனுந்துத்திப்பொறியரவின்வாய்த்தேரை
யொத்துவிடாதெந்தையரு ளோங்குநாளெந்நாளோ (அ)

ஆங்காரமெனனுமத யானைவாயிற்கரும்பா
யேங்காமலெந்தையரு ளெய்துநாளெந்நாளோ (௯)

சித்தமெனும்பௌவத்திரைக்கடலில்வாழ்துரும்பாய்
நித்தமலையாதருளினிறகுநாளெந்நாளோ (௰)

வித்தியாதத்துவங்களேழும் வெருண்டோடச்
சுத்தபரபோகததைததுய்க்குநாளெந்நாளே (௰௧)

சுததவித்தையேமுதலாத் தோன்றுமோரைந்துவகைத்
தத்துவத்தைநீங்கியருள்சாருநாளெந்நாளோ (௰௨)

பொல்லாதகாமப் பிலேதகொழிலிலென்னறிவு
சொல்லாமல்நன்னெறியிற் சேருநாளென்னாளோ

அடிகளடிகீழ்க்குடியாயம்வாழாவண்ணங்
குடிகெடுக்கும்பாழடிமைக் கூறொழிவதென்னாளோ (௰௪)

ஆனபுறக்கருவியாறு மாறுமற்றுளவும்
போனவழியுங்கூடப் புன்முளைப்பதென்னாளோ (௰௫)

அந்தகனுக்கெங்கு மிருளானவாறுவழியில்
வந்தவிருள வேலைவடியுநாளென்னாளோ (௰௬)

புன்மலத்தைச்சேர்ந்துமல போதமபொருந்துதல்போய்
நின்மலத்தைசசேர்ந்துமல நீங்குநாளெந்நாளோ (௰௭

கண்டுகண்டுந்தேறாக கலக்கமெலலாநதீர்வண்ணம்
பண்டைவினைவேரைப் பறிக்குநாளெந்நாளோ

எபங்கூழவினைதான படுசாவியாகவெமக்
கெங்கோனகிரணவெயி லெயதுநாளெந்நாளோ ௰௯)

குறித்தவிதமாதியாற கூடும்வினையெல்லாம்
வறுததவிததாம்வண்ண மருள்வந்திடுநாளெந்நாளோ (௨௰

சஞ்சிதமேயாதி சரககானமுச்சேரும்
வெந்தபொறியாகவருண் மேவுநாளெந்நாளோ (௨௧)

தேகமுதனான்கரத்திரண் டொன்றாய்நின்றிலகு
மோகமிகுமாயை முடியுநாளெந்நாளோ (௨௨)

சத்தமுலதாத்தமைத்திங் கெமக்குணர்த்துஞ்

சுத்தமாமாயைதொடக்கறுவ தெந்நாளோ (உ௩)
எம்மைவினையை யிறையையெம்பாற்காட்டாதே
வம்மைதிரோதை யகலுநாளெந்நாளோ (உ௪)
நித்திரையாய்வந்து நீனைவழிக்குங் கேவலமாஞ்
சத்துருவைவெலலுஞ் சமர்த்தறிவதெந்நாளோ ௨௫)
சன்னலபின்னலான சகளமெனுங்குப்பையிடை
முன்னவன்ஞானக்கனலை மூட்டுநாளெந்நாளோ உ௬)
மாயாவிகார மலமொழிசுத்தாவத்தை
தோயாவருளைத் தொடருநாளெந்நாளோ (உ௭)
முற்றுப்பெற்றது- ஆ௨- தாகூகூ.

## தன்றுண்மை

உடம்பறிவுமென்று மந்தவூழலெல்லாந்தீரத்
திடம்பெறவேயெம்மைத் தெரிசிப்பதெந்நாளோ (க)
செம்மையறிவாலறிந்து தேகாதிகளிசைந்த
வெம்மைப்புலப்படவே யாமறிவதெந்நாளோ (உ)
தத்துவமாம்பாழ்த்த சடவுருவைத்தான்சுமந்த
சித்தருவாமெம்மைத் தெரிசிப்பதெந்நாளோ (௩)
பஞ்சப்பொறியையுயி ரெனவுமந்தப்பஞ்சமறச
செஞ்செவேயெம்மைத் தெரிசிப்பதென்றுளோ (௪)
அந்தக்கரணமுயிராமென்றவந்தரங்க
சிந்தைக்கணத்திலெமமைத் தேர்ந்தறிவதென்றுளோ
மூக்குணத்தைசீவனென்று மூடத்தைவிட்டருளா
லக்கணமேயெம்மை யறிந்துகொளவதென்றுளோ (௬)
காலையுயிரென்றுங் காலாதிகள்சொறகேளாமற
சீலமுடனெம்மைத் தெளிந்துகொள்வதென்றுளோ (எ)
வான்கெடுத்துத்தேமெனி கேடர்போலவெமமை
நானகெடுத்துத்தேடாம னகறிவதென்றுளோ (அ)
முற்றுப்பெற்றது-ஆக-தாஎஎ.

## அருளியல்பு

ஈனந்தருமுடிது நமக்குவேண்டாமென்
றுனந்தருட்டிலவதரிபப தெந்நாளோ (க)
பொய்க்காட்சியான புவனத்தைவிட்டருளா
மெய்க்காட்சியாம்புவனமேவுநாளெந்நாளோ [உ]
ஆதியந்தங்காட்டாம லம்பரம்போலெங்கிலறந்த
நீதிலருட்கடலைச்சேருநாளெந்நாளோ [௩]
எட்டுத்திசைக்கீழ்மேலெங்கும்பெருகிவரும்
வெட்டவெளிவின்றுறறின்மெய்தோய்வதெந்நாளோ [ ]

ஆதாரமென்றுசுருதியெல்லாமோலமிடு
மீதானமானவெற்றை மேவுநாளெந்நாளோ (௫)

வெந்துவெடிக்கின்றசிந்தை வெப்பகலத்தண்ணருளாய்
வந்துபொழிகின்ற மழைகாண்பதெந்நாளோ (௬)

சூரியாகளசந்திரர்க டோன்றுசசொயஞ்சோதிப்
பூரணத்தேயத்திற பொருந்துநாளெந்நாளோ (௭)

கனறுமனவெப்பக கலககமெலாந்தீரவருட்
டென்றல்வந்துவீசுவெளி சேருநாளெந்நாளோ (௮)

கடடுமனசெஙகோல கடாவடிகருங்கோலாக
வெட்டவெளிப்பொருளை மெவுநாளெந்நாளோ (௯)

சாலககபாடத்தடை நீரவெம்பெருமா
னாலககமண்டபத்து ளோடுநாளெந்நாளோ (௰)

விண்ணவன்றுளென்றும வெரிநிலாமண்டபத்திற்
றண்ணிருந்நித தளாவொழிவதெந்நாளோ (௰௧)

வெய்புலிபார்த்து விழித்திருநதவலலறைத
துயயவருளக றுயிலுநாளெந்நாளோ (௰௨)

வெய்யபிறவிவெயில் மெப்பமெலாம்விட்டகல
வையனடிநீழலணையுநா ளெந்நாளோ (௰௩)

வாதைப்பிறவி கலைகடலைநீந்தையன
பாதப்புணையிணையைப் பற்றுநாளெந்நாளோ (௰௪)

ஈனமில்லாமெய்ப்பொருளை யினமையிலேகாணவெளி
ஞானமெனுமஞ்சனத்தை நான்பெறுவதெந்நாளோ

எலலாமிறந்தவிடத் தெந்தைநிறைவாமவடிவைப்
புலலாமற்புலவிப் புணருநாளெந்நாளோ (௰௬)

சடதது்ருயிர்போலெமக்குத் தாறுயிராய்ஞான
நடததுமுறைகண்டுபணி நாமவிடுவதெந்நாளோ (௰௭

எக்கணுமாந்துன்ப விருட்கடலைவிட்டருளா
மிக்கரையேறி வெளிப்படுவதெந்நாளோ (௰௮)

முற்றுப்பெற்றது. ஆ-ரு௬௩

# பொருளியல்பு

கைவிளக்கினபினனே போயககாணபார்போன்மெய்ஞ்ஞான
மெய்விளக்கின்பினனேபோய் மெய்காண்பதென்றோ

கேடில்பசுபாசமெல்லாங் கீழ்ப்படவுந்தானேமே
லாடுஞ்சுகப்பொருளைக கணபுறுவதெந்நாளோ (௨)

ஆணவத்தைநீக்கியறிவுடேயைவகையாய்க
காணவத்தைகககப்பாலைக் காணாநுவனெந்நாளோ ௩]

நீக்கப்பிரியாவினைக்கழறக்கூடாய்
போக்குவரவற்ற பொருளைவதெந்நாளோ (௪)
அண்டருக்குமெய்யில்லைப்பாமாமுதையென்னகத்திற்
கண்டுகொண்டுநின்று களிகூருநாளெந்நாளோ (௫)
காட்டுந்திருவருளேகண்ணாகக்கண்டுபா
வீட்டின்பமெய்ப்பொருளை மேவுநாளெந்நாளோ (௬)
நானெனதென் னுமுழுவியே யெவ்வுயிர்க்குந்
தானெனவுண்மைதனைச் சாருநாளெந்நாளோ (௭)
சிந்தைமறந்துதிருவருளாய் நிற்பவர்பால்
வந்தபொருளெம்மையுந்தான் வாழ்விப்பதெந்நாளோ (௮)
எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குமவியாபகமா
யுள்ளவொன்றையுள்ளபடியோருநாளெந்நாளோ (௯)
அருவுருவமெல்லா மகன்றதுவயான
பொருளெமக்குவந்து புலப்படுவதெந்நாளோ (௰)
ஆரணமுகங்காணு வகண்டிதாகாரபரி
பூரணம்வந்தெம்மைப்பொருந்துநாளெந்நாளோ (௰௧)
சத்தொடுசித்தாகித் தயங்கியவானந்தபரி
சுதவகண்டசிவந் தோன்றுநாளெந்நாளோ (௰௨)
எங்கெநகும்பார்த்தாலு மிணையுருவாயநீக்கமின்றித்
தங்குந்தனிப்பொருளைச் சாருநாளெந்நாளோ (௰௩)
அடிமுடிகாட்டாதசுத்த வம்பரமாஞ்சோதி
கடுவெளிவந்தென்னைக் கலக்குநாளெந்நாளோ (௰௪)
ஒன்றனையுங்காட்டா வுளத்திருளைச் சூறையிட்டு
நின்றபராஞ்சோதியுட னிற்குநாளெந்நாளோ (௰௫)
எந்தச்சமயமிசைந்துமறிவூட றிவாய்
வந்தபொருளே பொருளாவாஞ்சிப்பதெந்நாளே (௰௬)
எவ்வாறிங்குறறுணர்தார் யாவரவர்தமக்கே
யவ்வாறாய்நின்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ (௰௭)
பெண்ணணலியெனவும் பேசாமலென்னறிவின்
கண்ணூடேநின்றவொன்றைக் காணுநாளெந்நாளோ (௰௮)
நினைப்புமறப்புமற நின்றபராஞ்சோதி
தலைப்புலமாவென்னறிவிறசந்திப்பதெந்களோ (௰௯)

முற்றுப்பெற்றது-ஆ௲௨௱௰௪

# ஆனந்தவியல்பு

பேச்சுமூச்சில்லாத பேரின்பவெள்ளமுற்று
நீச்சுநிலைகாணமை னிற்குநாளெந்நாளோ (௧)

சித்தந் தெளிந்தோர் தெளிவிற் றெளிவான
சுத்தசுகக் கடலுட் டோயுநா ளெந்நாளோ
சிற்றின்ப முண்டுழலுஞ் சிறையவனந் தங்கடல்போன்
முற்றின்ப வெள்ளமென்னை மூடுநா ளெந்நாளோ (௪)
எல்லையில் பேரின்பமய மெப்படியென் றோர்தமக்குஞ்
சொல்லரியா வூமைகனாப்போற் சொலலுநா ளெந்நாளோ
அண்டரண்ட கோடியனைத்து முகாந்தவெள்ளங்
கொண்டதெனப் பேரின்பங் கூடுநா ளெந்நாளோ (௫)
ஆதியந்த மில்லாத வா[illegible] ஒரு
சோதியினைப் பற்றாடே துய்யுநா ளெந்நாளோ (௬)
சாலோகமாதி சவுக்கியமும் விட்டகம்பான
மேலான ஞானவின்ப மேவுநா ளெந்நாளோ (௭)
தற்பரத்தி னுள்ளேயுஞ் சாலோகமாதியாலும்
பொற்பமிந்தானந்தம் பொருந்துநா ளெந்நாளோ (௮)
உள்ளத்தி னுள்ளேயோதா லூறுஞ் சிவானந்த
வெள்ளந் துளைந்து விடாய்தீர்வ தெந்நாளோ (௯)
கன்னலுடன் முக்கனியுங் கற்கண்டுஞ் சீனியுமாய்
மன்னுமின்பவாரமுதை வாய்மடுப்ப தெந்நாளோ (௰)
மண்ணாடு மொன்றமயக்க மெல்லாந்தீர்ந்திடவும்
விண்ணாடெழுந்த சுகமேவுநா ளெந்நாளோ (௰௧)
கானற்சலம்போன்ற கட்டுழலைப் பொய்யுதீர
வானமுதவாவி மருவுநா ளெந்நாளோ (௰௨)
தீங்கரும்பென் றேயினியா [illegible] பனபோற்
பாகு [illegible] பேரின்பம் படைக்குநா ளெந்நாளோ (௰௩)
புண்ணியபாவங்கள் பொருந்தா மெய்யன்பரெல்லாம்
நண்ணியபேரின்பசுக நாமணைவ தெந்நாளோ (௰௪)

முற்றியது - அடி - ௨௨௮.

---

# அன்புநிலைமை

தக்கரவி கண்டசரோ ருகம்போலென் னிருதயம்
மிக்கவருள் கண்டு விகசிப்ப தெந்நாளோ (௧)
வானமுகில் கண்டமயூரபட்சிபோல வையன்
ஞானநடங்கண்டு நடிக்குநா ளெந்நாளோ (௨)
சந்திரனைநாடுஞ் சகோரபட்சிபோல நிலை
வந்தபரஞ்சோதியையா மாவுசிப்ப தெந்நாளோ (௩)
சூத்திர மெய்யப்புறத்தக் குண்டலிப்பாம்பென்றோட்டுஞ்
சித்தனையென் கண்ணாற் றெரிசிப்ப தெந்நாளோ (௪)

அந்தரத்தே நின்றாடு மானந்தக்கூத்தனுக்கென்
சிந்தைதிரைகொடுத்துச் சேவிப்பதெந்நாளோ (ரு)
கள்ளனிவனென்றுமெள்ளக் கைவிடுதலகாரியமோ
வள்ளலேயென்று வருந்துநாளெந்நாளோ (சு)
விண்ணுடர்காணு விமலாபரஞ்சோதி
யண்ணாவாவாவென் றழுதாறுநாளெந்நாளோ (எ)
ஏதேதுசெய்தாலுமென்பணிபோதின்பணியா
மாதேவாவென்று வருந்துநாளெந்நாளோ (அ)
பண்டுங்காணேனை பழம்பொருளேயின்றுமுனைக்
கண்டுங்காணேனெனவுங்கைகுவிப்பதெந்நாளோ (கூ)
பொங்கேதமான புறசமயமெல்லாங் கிரவிபோல
மெங்கேயெங்கேயென் றிரங்குநாளெந்நாளோ (ம)
கடலின்மடைதிறந்தாற்போற் கண்ணீராறாக
வுடலமெல்லாமயிர்ப்பூசலித் துருகுநாளெந்நாளோ (மக)
புலர்ந்தேனை முகஞ்சருகாயப் போனேனிற்கானை
வலந்தேனென் றேயழி யழுகுநாளெந்நாளோ (மஉ)
புண்ணீரமையாளர் புலம்புமாபோற் புலம்பிக்
கண்ணீருங்கம்பலையுங் காட்டுநாளெந்நாளோ (மங)
போற்றேனென்றுவமெனைப் புரந்துசெய்யும்வேதனைக்கின்
காறேனென்றேயென்ன நாற்றுநாளெந்நாளோ (மச)
பொய்முடங்கும்பூமிசில போட்டலறப்பூங்கழலை
கைமுடங்கஞானச்செலக் கட்டறுவதெந்நாளோ (மரு)
கற்குணத்தைப்போன்றவருச்ச காராகனலைக்கோவாம
கற்குணத்தார்க்கைக்கோதது நான்றிரிவதெந்நாளோ மசு
ஆட்டினைமாமாயைச் சிழைணிகியந்தரமே
விட்டினியோவென்று வியக்குநாளெந்நாளோ (கஎ)

முற்றியது-ஆ. கஉசரு.

# அன்பர்நெறி

அத்துவாவெல்லா மடங்கச்சோதித்தபடிச்
சித்துருவாய்நின்றோர் தெளிவறிவதெந்நாளோ (க)
மூச்சற்றுச்சிந்தை முயற்சியற்றுமூதறிவாய்ப்
பேச்சற்றோர்பெற்றவொருமைப்பெற்றிநாளெந்நாளோ
கோட்டாலையான குணமிறந்தநிர்க்குணத்தோர்
தேட்டாலேதேடுபொருள் சேருநாளெந்நாளோ (ங)
கெடுத்ததேசுத்துவத்தைக் கேடிலாவானந்த
மடுத்தோரடுத்தபொருட்காளமைப்பதெந்நாளோ

கற்கண்டாலோடுகின்ற காகமெனப்போக்குமாயைச்
சொற்கண்டாலோடுமன்பர் தோய்வழியெந்நாளோ (௫)
மெய்த்தகுலங்கல்விபுனை வேடமெல்லாமோடவிட்டுச்
சித்தரொளாருஞ்சோரச் செயலறிவதெந்நாளோ (௬)
குற்றச்சமயக்குறும்ப டர்ந்துதற்போத
மறவர்கட்கற்றபொருட் கன்புவைப்பதெந்நாளோ (௭)
தர்க்கமிட்டுப்பாழாஞ் சமயக்குதர்க்கம்விட்டு
நிற்குமவர்கண்டவழி நேரடருவதெந்நாளோ (௮)
விதியவேதாந்தமுதன் மிக்ககாலாந்தவரை
யாருமுணர்ந்தோருணர்வுக் கன்புவைப்பதெந்நாளோ (௯)
கண்டவிடமெல்லாங் கடவுண்மயமென்றறிந்து
கொண்டநெஞ்சர்நேயரொடு கொண்டிருப்பதெந்நாளோ
பாக்கியங்களெல்லாம் பழுத்துமனம்பழுத்தோர்
நோக்குந்திருக்கூட்டத்தை நோக்குநாளெந்நாளோ (௰௧)
எவ்வுயிருந்தன்னுயிர்போ லெண்ணுந்தபோதனர்கள்
செவ்வழிவைநாடிமிக்கச் சிந்தைவைப்பதெந்நாளோ (௰௨)

முற்றியது - ஆ. ௲௨௫ள

---

# அறிஞருரை

இருநிலனுய்த்யோகி யென்றதிருப்பாட்டின்
பெருநிலையைக்கண்டணைந்து பேசருவதெந்நாளோ (௧)
அறதலாகடகற்றறிவனு மென்றவத்துவித
முற்றுமொழிகண்டருளின் மூழ்குநாளெந்நாளோ (௨)
தானென்னைமுன்படைத்தா னென்றகதவுரையை
நானெனவுண்மைபெற்று நானுணர்வதெந்நாளோ (௩)
என்னுடையதோழனுமா யென்றதிருப்பாட்டின்
ன்னெறியைக்கண்டுரிமை நானுசெய்வதெந்நாளோ (௪)
ஆருடனேசேருமறி வென்றவவ்வுரையைத்
தேரும்படிக்கருடான் சேருநாளெந்நாளோ (௫)
உன்னிலுன்றுமென்ற வுருமொழியாலெண்ணியதயக்
தன்னிலுன்னிநன்னெறியைச் சாருநாளெந்நாளோ (௬)
நினைப்பரவேதானினைந்தே னென்றநிலைநாடி
யனைத்துமாமப்பொருளி லாழுநாளெந்நாளோ (௭)
சென்றுசென்றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாகி
நின்றுவிடுமென்றநெறிநிற்குநாளெந்நாளோ (௮)
ஆதியந்தமில்லா வரியபரஞ்சோதி
நீதிமொழிகண்டதுவாய் நிற்குநாளெந்நாளோ (௯)

பிறிதொன்றிலாசையின்றிப் பெற்றிருந்தேனென்ற
நெறியுடையான்சொலவினிலே நிற்குநாளெந்நாளோ (௰)
திரையற்றநீர்போற் றெளியவனத்தேர்ந்த
வுரைபற்றியுற்றங் கொடுங்குநாதெந்நாளோ (௰க)
அறியரறிவி லவிழ்ந்தேரவென்ற
நெறியாமுறையுணர்ந்து நிற்குநாதெந்நாளோ (௰உ)
எனக்குநீயென்று மியக்கையாய்ப்பின்னு
முனக்குநானென்ற வுறுதிகொளவதெந்நாளோ (௰௩)
அறிவையறிவதுவே யாகும்பொருளென்
றுறுதியைசொன்னவுண்மையினை யோருநாளெந்நாளோ)

முற்றியது - ஆக - கூஉஎக

# நிர்க்குநிலை

பண்ணினிசைபோலப் பரமன்பானின்றதிர
னெண்ணியருளாகி யிருக்குநாளெந்நாளோ (க)
அறிவோடறியாமை யற்றறிவினூடே
குறியிலறிவுவந்து கூடுநாதெந்நாளோ (உ)
சொல்லானமனததீற் றொடராசசம்பூரணத்தி
னில்லாநிலையாய நிலைநிற்பதெந்நாளோ (௩)
செங்கதிரினமுன்மதியன் தேசடங்கிநின்றிடல்போ
லங்கணனார்தாளி லடங்குநாதெந்நாளோ (௪)
வானூட்டங்கும் வளிபோலவினபுருவாங்
கோனூடடங்குங் குறிபடாறிவதெந்நாளோ (௫)
செப்பறியதன்கருணைச சிற்சுகனார்பூரணத்தி
லிப்பினிடையப்பா யணையுறுதெந்நாளோ (௬)
தூயவறிவான சுகரூபசோதிகணபாற
றீயினிரும்பென்னத் திகழுநாளெந்நாளோ (௭)
நிதனையாககர்ப்பூர தீபமெனநானகண்ட
சோதியுடனொன்றித் துரிசறுவதெந்நாளோ (௮)
ஆராருங்காணுதவறடிதனார் பொற்படிக்கீழ்
நீரார்நிழல்போ னிலாவுநாளெந்நாளோ (௯)
எட்டத்தொலையாத வெந்தைபிரானசன்னிதியிற்
பட்டப்பகல்விளக்காய் பண்புறுவதெந்நாளோ (௰)
கருப்புவட்டைவாய்மடுத்துத் கண்டார்நாப்போல
விருப்புவட்டாவின்புருவை மேவுநாளெந்நாளோ (௰க)
துசசுபுலனார் சுழலாமற்றண்ணருளா
லுச்சிக்கதிர்படிக மொவ்வுநாளெந்நாளோ (௰உ)

இம்மாநிலத்தி லிருந்தபடியேயிருந்து
சும்மாவருநிலைத் தொடருநாளெந்நாளோ (௰௩)
தானவனுந்தன்மையெய்தித் தண்டமெனவெண்டமெய்ஞ்
ஞானமயமானே நடத்துநாளெந்நாளோ (௰௪)
ஒன்றிரண்டுமில்லதுவாய் யொன்றிரண்டுமுள்ளதுவா
நின்றசமயத்துநிலை நேர்பெறுவதெந்நாளோ (௰௫)
பாசமகலாமற் பதிநீங்கலாமன்
மாசிலசமத்துமூழ்த்து வாய்க்குநாளெந்நாளோ (௰௬)
சித்தவிவுமொள்ளச் சிதைசுகமெமானபோதிவை
புரையிலாவண்ணமறிந்த கொள்ளுநாளெந்நாளோ (௰௭)
தந்திரக்கதைமந்திரக்கதைச சாரிகையயாமறிவென்
றெங்கேதுணையோயடிவா ரெய்துநாளெந்நாளோ (௰௮)
போக்குவரவறவொளி போலனைத்தியோகநிலை
நீக்கமறக்கூடி நின்றுபெறுவதெந்நாளோ (௰௯)
காண்பாருங்காட்சியதுங் காட்சியுமாயினாதந்த
வீண்பாவமெல்லாம்போய் மேவுநாளெந்நாளோ (௨௰)
வாடாதேநெஞ்சுவாய மாறாதேபெக்கோவை
நாடாதுநாம நயப்பெறுவதெந்நாளோ (௨௧)
ஆடலையேகாட்டியெம காடவொழிக்காண்டவன்பொற்
றொடலைமேநாடிக தழைக்குநாளெந்நாளோ (௨௨)
மேலொலிக்கிறவாக விக்கநாதமுறட்டோ
பாலொலிபோற்கலந்து பணிபுரிவதெந்நாளோ (௨௩)
அறியாதயிந்தெல்லாமயா யன்னையிலாதாகக்
குறியாதவண்ணங் குவிக்குநாளெந்நாளோ (௨௪)
ஓராமனமந்திரமு முறையுமறப்பாலைப்
பாராமபார்த்துப் படிக்குநாளெந்நாளோ (௨௫)
ஊர்பருமெனக்கேதுறையப் பொருட்பூரணமாப்பால்
வாளையறுங்காண்போன மருவுநாளெந்நாளோ (௨௬)
ஆண்டானமவுனி யளித்தவியோலிலை மைத்
தாண்டாமற்றாணடிக்கு ளாகுநாளெந்நாளோ (௨௭)
ஆனைகதோடக்குவித மானப்பழமெயிலைனநாணசு
தானாவிநோத்துவிதரு சாருநாளெந்நாளோ (௨௮)

முற்றியது - கூ - ௩௨௬௦

---

## நிஷ்பூரிந்தோர்கூறுதற்குபாயம்

[illegible]
[illegible]
[illegible] (௧)
[illegible]

ஞானநெறிதானே நடுவிடினுமப்பதத்து
 மோனமுத்திநல்குமென வன்புறுவதெந்நாளோ (௨)
பன்மார்க்கமான பலவடிபட்டேனுமொரு
 சொன்மார்க்கங்கண்டு துலங்குநாளெந்நாளோ (௩)
அத்துவிதமென்ற வன்னியச்சொற்கண்டுணர்ந்து
 சுத்தசிவத்தை தொடருநாளெந்நாளோ (௪)
கேட்டன்முதனன்காலே கேடிலாநற்பதமும
 வாட்டமறவெமக்கு வாய்க்குநாளெந்நாளோ (௫)
என்னதியானென்பதற வெவ்விடமுமென்றுசான்
 சன்னிதியாக்கண்டுநிட்டை சாதிப்பதெந்நாளோ (௬)
நாம்பிரமமென்று நடுவேயொன்றுண்டாமா
 றேம்பியெல்லாமொன்றுய்த்திகழுநாளெந்நாளோ (௭)
மூச்சகமேயாதி முழுதுமகண்டாகார
 சச்சிதானந்தசிவந் தானெனலபதெந்நாளோ (௮)
எவ்வடிவுப்பூரணமா மெந்தையுருவென்றிசைந்த
 வவ்வடிவுக்குள்ளோ யடங்குநாளெந்நாளோ (௯)
சிந்தித்ததெல்லாஞ் சிவபூரணமாக
 வந்தித்துவாழ்த்தி வணங்குநாளெந்நாளோ (௰)
தாங்கியபார்விண்ணாதி தானேஞானக்கினியா
 யோங்குமிகயோகவுணர் வுறுநாளெந்நாளோ (௰௧)
ஆசனமூர்த்தங்க ளறவசண்டாகாரசிவ
 பூசைசெயவாசைபொருந்துநாளெந்நாளோ (௰௨)
அஞ்செழுத்தினுண்மை யதுவானவப்பொருளை
 நெஞ்சழுத்தியொன்றுகி நிற்குநாளெந்நாளோ (௰௩)
அவ்வுயிர்போலெவ்வுயிரு மானபிரானனடிமை
 யெவ்வுயிருமெனறுபணியாஞ்செய்வதெந்நாளோ (௰௪)
தேசிகர்கோனான திறமைவுனிநந்தமக்கு
 வாசிகொடுக்க மகிழுநாளெந்நாளோ (௰௫)
குருலிங்கசங்கமமாக் கொண்டதிருமேனி
 யருண்மயமென்றன்புற்றருள்பெறுவதெந்நாளோ (௰௬)

எந்நாட்கண்ணி-முற்றியது-ஆக ௩௱௰௫

## காண்பேனோவென் கண்ணி

சிந்திக்குந்தோறுந் தெவிட்டாவமுதேயென்
 புந்திக்குள்நீதான் பொருந்திடவுங்காண்பேனோ (௧)
கேவலநிறைவிடத்து மேய்ப்பாடாதின்பவருட்
 கேவலப்பாலொன்றிக் கலந்திடவுங்காண்பேனோ (௨)

துரியங்கடந்தவொன்றே தூவெளியாய்நின்ற
பெரியநிறைவேயுனைநான் பெற்றிடவுங்காண்பேனோ (௩)

மாசற்றவன்பர்நெஞ்சே மாறாதபெட்டகமாத்
தேசுற்றமாமணிநின் றேசினையுங்காண்பேனோ (௪)

மாயாவிகாரமலமகல வெந்தைபிரா
னேயாநுபூதி நிலைபெறவுங்காண்பேனோ (௫)

பொய்யுலகும்பொய்யுறவும் பொய்யுடலும்பொய்யெனவே
மெய்யநினைமெய்யனவே மெய்யுடனேகாண்பேனோ (௬)

வாலறப்பட்டமென மாயாமனப்படலங்
காலற்றுவீழவுமுக கண்ணுடையாய்காண்பேனோ (௭)

உள்ளும்புறம்பு மொருபடித்தாயநின்றுசுகங்
கொள்ளும்படிகநிறைநீ கூட்டிடவுங்காண்பேனோ (௮)

காட்டுவினையாழுகக் கரும்பேகனியேயென்
னாட்டமெல்லாநீரவுன தாடலையுங்காண்பேனோ (௯)

தூங்காமற்றூங்கிச் சுகம்பெருமானினன்னிறைவி
னீங்காமனிற்குநிலை பெறவுங்காண்பேனோ (௰)

வாதவூராளிதனை வாங்கருணையாலவிழுங்குமப்
போதவூரோறெநின பொன்னடியுங்காண்பேனோ (௰௧)

சாட்டையிலாப்பம் பரம்போலாடுஞ்சடசால
நாட்டமறவெந்தைசுத்த ஞானவெளிகாண்பேனோ (௰௨)

மன்றுதமவாழ்வே மரகதஞ்சேர்மாணிக்கக்
குன்றேநின்றிருட்கீழ்க்குடிபெறவுங்காண்பேனோ (௰௩)

பொய்யென்றறிந்துமெய்ம்மை போகவொட்டாதையவிந்த
வையங்களமயக்க மாறிடவுங்காண்பேனோ (௰௪)

தாயினும்நல்லதயாளுவே நினையுன்னித்
தீயினமெழுகொத்துருகுஞ்சிந்தைவரக்காண்பேனோ (௰௫)

என்செயினுமென்பெற்றிறு மென்னிறைவாவேழையன்யா
னின்செயலேயென்றுநினைவுவரக்காண்பேனோ (௰௬)

என்னாதனையுமிரக்க மிலாவன்பாவி
யுள்ளத்துமெந்தையுலாவிடவுங் காண்பேனோ (௰௭)

வஞ்சகத்துக்காயலமாம் வல்வினையேறுகெடுவெ
நெஞ்சகத்திலையாநீ சேர்வரவுங்காண்பேனோ (௰௮)

தொல்லைப்பிறவித் துயர்கெடவுமெங்கைபிரான்
மல்லுழக்குமலர் வழங்கிடவுங்காண்பேனோ (௰௯)

வாளாருங்கண்ணா மயற்கடலிலாழ்ந்தேசற்
றாளாகவெந்தையருள் செயவுங்காண்பேனோ (௨௰)

பஞ்சாய்ப்பறக்குநெஞ்சப் பாவியைக்கைவிடையா
வஞ்சாதேயென்றின்னருள்செயவுங்காண்பேனோ (௨௰௧)

ஆடுகநங்கா பகிலமதிலுமன்றமனும்
வாடுமெனையாளவனை யுங்காண்பேனோ (௨௨)
சிட்டர்க்கெளிய சிவனேயோகிவினையென
மட்டறவாசை மயங்குறுவதுமுங்காண்பேனோ (௨௩)
உண்ணாமுணர்ந்துமுலைப்பிலாவென்னை நீத்து
தண்ணெயாளாய்சாந்தவருளாற் சார்ந்திடவுங்காண்பேனோ (௨௪)
ஒடுக்கருக்தொடுங்க வுளாருணாவுந்தானேநினைக்
கூடும்படிக்கிறைநீ கூடிடவுங்காண்பேனோ (௨௫)
வாக்காலுமனமதனால் மனப்பரியாயநியமனைருளோ
போக்காமனோகங்கிடக்க நின்னாவிழுங்காண்பேனோ (௨௬)
இவ்வுடம்புநீங்குமுனே யெங்காயமேவினனருளா
மவ்வுடம்புகுந்தோனே யவதரிக்கக்காண்பேனோ (௨௭)
நித்தமாயோன்றாய் நிராதரமாய்நிற்குமணமாகு
சுத்தவெளியீவெளியாடக் தோயப்பெறவுங்காண்பேனோ [௨௮
கண்ணிறந்த மோனக்கருத்தேயென்கண்ணேயெ
னுண்ணிறைந்தமாயையொழிந்திடவுங்காண்பேனோ (௨௯)
அத்தாவிமலா வருளாநாவாரார்ந்த
சித்தாவெனக்குனருள் செய்திடவுங்காண்பேனோ
வீணேபிறந்திறந்துவேசத்தேனுசையர
காணேனினதுணிவு கருணைபெறக்காண்பேனோ (௩௧)
சட்டையொத்தவிவ்வுடலைத் தள்ளிநானேநானென்கச
நிட்டையைப்பெற்றியானிருவிகற்பங்காண்பேனோ (௩௨)
எல்லாந்தெரியுமிறைவாவெனுமவெலாஞ்
சொல்லாமுனீகாண் சொரூபநிறங்கக்காண்பேனோ (௩௩)
அண்டபிரண்டமனைத்துமொருபடித்தாக
கண்டவர்கள்கண்டதிருக் காட்சியையுங்காண்பேனோ (௩௪)
ஊனிருந்தகாயமுடனிருப்பப்பெண்கைகனியாய்ப்போல
வானிருந்ததெனவுநானிவந்திருக்கக்காண்பேனோ (௩௫)
இழவுங்கவலையுந்தெளியாமுயப்பாவியே
னினைவுபாபரமேபருநனீ நோபோவுங்காண்பேனோ (௩௬)
அன்பமெனுந்திட்டனைத்துஞ்சூறையிடவையாவே
பின்பவென்னமலக்கிய கெதிரப்படவுங்காண்பேனோ (௩௭)

முற்றியது - அடி - ௭௪

## ஆகாதோவென் கண்ணி

(✻)

கல்லாதபேர்களுக்கே நல்லவனாக்கத் தெரிந்தும்
வல்லமையின் வாக்கிப்பிழைத்திருக்கலாகாதோ [௧]

என்னைப் பிரியவெனக்கிங்கெவ்வின்றறிவின்
தன்னைப் பதித்திலங்கு சாகசவைத்தாலாகாதோ (௨)

பொய்ம்மயமேயான புன்மைதனை வென்றதுன்ப
மெய்ம்மயமாய்நின்றுதனை விழுங்கவைத்தாலாகாதோ (௩)

மட்டிலா சித்தசுகமாம் வாழ்வெனக்கப்பருகச்
சிட்டர்போலயர்ந்திருந்து தேக்கவைத்தாலாகாதோ (௪)

அத்தாவிப்பொழுதே யடிக்கேயடிமையாம்
பித்தாக்கிப் பின்பம் பெருகவைத்தாலாகாதோ (௫)

மெலவியலாமோகவிருப்பைப்பேயாகின்
னெவ்வெல்லாநந்தமிசைந்தாலாகாதோ (௬)

சுட்டழுதாயென்றுமனமுந் துவண்டிட்டமையக்
கட்டழக நீயென்னைக் கலக்கவைத்தாலாகாதோ (௭)

சோதியேயநந்தாசுகவடிவேதூவெளியே
யாதியேயென்னை யடிமைவைத்தாலாகாதோ (௮)

நேசனுசிதம்பரமே நின்மலனேயென்னடிக்கே
வாசனுசெயவிரங்கி வாவென்றாலாகாதோ (௯)

என்னைவிடுத்தவனே யிருந்ததுபோயினியாவே
நின்னப்பிரிவினையாளுக்கவைத்தாலாகாதோ (௰)

ஆதிப்பிரானேயென்னாவலவிருளகல
சோதிப்பிரகாசமடைந்தோனாய்விருத்தாலாகாதோ (௰௧)

ஆசைசுழற்கடலிலாழாமலையாநின்
னேசைப்புணைதந்தெனைநிறுத்தினாலாகாதோ (௰௨)

பாசபிணங்களெல்லாம் பருகாகசசெனுசேவே
மிசவெனவென நிறுவினாலாகாதோ (௰௩)

ஓயாவுளவுபாயுருவொய்விட்டறறிச்
செயாவியென்னைநின்னைச் சேரவைத்தாலாகாதோ [௰௪]

ஆதியாய்வாழ்வாயகண்டிகமாய்நின்றபரம்
சோதிநீயென்னைக்கொழும்பவென்றாலாகாதோ [௰௫]

விண்ணாரகண்டவிறிபோறபரஞ்சோதி
கண்ணாநனினவிறைவுகண்ணைவைத்தாலாகாதோ [௰௬]

சேராமற்சேர்ந்துநின்று சின்மயனேயின்பமுத்தைப்
பாராமற்பார்வைநீபட்சம்வைத்தாலாகாதோ [௰௭]

கண்ணாடிபோலவெல்லாங் காட்டுந்திருவருளை
யுண்ணாடியையாவுருகவைத்தாலாகாதோ [௰௮]

மூலவிருள்கால்வாங்க மூதறிவுதோன்றவருட்
கோலம்வெளியாகவென்னைக்கூடுவித்தாலாகாதோ [௰௯]

சாத்திரியனீசன்பவென்னக் குருவினிலைக்கி
ஊற்றமுறுமென்னைநினையவைத்தாலாகாதோ [௨௰

கையுங்குவித்திரண்டு கண்ணருவிபெய்யவரு
ளையநின்றருட்கீழே யடிமையின்றுலாகாதோ (௨௧)

முற்றுப்பெற்றது-ஆ-௩௬௭௩.

## இல்லையோவென் கண்ணி

ஏதுந்தெரியா தெனைமறைத்தவல்லிருளை
நாதநீக்கவொரு ஞானவிளக்கில்லையோ [௧]
பணியறநின்றுபதைப்பறவென்கண்ணூன
மணியொத்தசோதியிணை வாரியெனக்கில்லையோ [௨]
எம்மாலறிவதற வெம்பெருமானயாதுமின்றிச
சும்மாவிருக்கவொரு சூத்திரந்தானில்லையோ [௩]
நாய்க்குங்கடையானே னைந்தினைவினைப்பயம்
வாய்க்குமபடியினியோர் மந்திரந்தானில்லையோ [௪]
ஊனுக்கிரங்குமுனா வைமறந்தையா நீ
தானாகநிற்கவொரு தந்திரந்தானில்லையோ [௫]
அல்லும்பகலுமகண்டவடிவையுனைநான
புல்லும்படியெனக்கோர் போதனைதானில்லையோ [௬]

முற்றுப்பெற்றது-ஆ-௩௬௭௯

## வேண்டாவோவென் கண்ணி

கண்டவடிவெல்லாநின் காட்சியென்றேகைகுவித்துப்
பண்டுமினநின்றவெனைப்பார்த்திரங்க வேண்டாவோ
வாதனையோடாடு மனப்பாம்புமாயவொரு
போதனைதந்தையா புலப்படுத்தவேண்டாவோ (௨)
தன்னையறியத் தனிப்பருளாயினின்றருளு
மென்னையறிந்தென்னறிவை நீக்கினிற்கவேண்டாவோ (௩)
அள்ளக்குறையா வகண்டிதானந்தமென்னும்
வெள்ளமெனக்கையா வெளிப்படுத்தவேண்டாவோ (௪)
அண்டனேயண்டரமுதேயென்னாருயிரை
தெண்டனிட்டெனைப் தொகுத்திரங்கவேண்டாவோ (௫)
பாராதேனின்று பதையாதேசும்மாதான்
வாராயென்வும்வழிகாட்டவேண்டாவோ (௬)

முற்றுப்பெற்றது-ஆ-௩௬௮௫

## நல்லறிவேயென் கண்ணி

எண்கண்ணிறைந்தமென்னைப்படைத்தவுயிர்க்குமுயிராய்க்
கண்ணிறைந்தசோதியேநாங்காணவோநல்லறிவே (௧)
சித்தானதாமென்சடத்தைதாமென்னவென்னறு
[illegible] நல்லறிவே (௨)

அங்குமிங்கு மெங்குநிறை யருணுருட் பொற்பதிந்து
பங்கயத்துள் வண்டாய்ப் பயன்பெறவா நல்லறிவே (௯)
கான்றசோ றென்னவிந்தக் காசினிவாழ் வத்தனையுந்
தோன்றவருள் வெளியிற் றோன்றவா நல்லறிவே (௰)

முற்றியது - ஆக - ௬௩௪க.

## பலவகைக்கண்ணி

என்னாசை கேட்டிலையோ வென்செயலோ வேதுமில்லை
தன்னாசு நாடாகித் தத்துவங்கூத் தாடியதே (௧)
பண்டொருகா லின்பாற் பழக்கமுண் டோவெந்தனைக்
கண்டொருகா றப்போ தகக்கருத்துங் கருதியதே (௨)

வேறு.

கண்டனவே காணுமன்றிக் காணுவோ காணுமென்
கொண்டறிவே யெந்தைதனைக் கூடுங்குறிப் பினையே (௩)
கல்லாலடியில்வளர் கற்பகமே யுள்ளவோ
பொல்லாவினைக்குப் பொருத்தந்தான் சொல்லவோ (௪)
தப்பிதமொன் றியது தானாக நிற்கவுண்மை
செப்பியது மல்லாலென் சென்னியது தொட்டனையே (௫)

வேறு,

மாசான வெனுஞ்சனிவன் வஞ்சனென்றே வாய்திறந்து
பேசாமவுனம் பெருமான படைத்ததுவே [௬]
கற்பதெல்லாங் கற்றேமுக் கண்ணுடையா னின்பானியாய்
நிற்பதுகற் றனறே நிருவிகற்பமாவதுவே [௭]
முன்னளவில் கனமழையனாருனிவனென்றே
வென்னளவிலெந்தா யிரங்கா திரந்ததுவே [௮]

வேறு,

நெஞ்சகம்வேராகி வினைக்கூட லென்னுகின்ற
வஞ்சகனுக் கின்பமெந்தாய் வாய்க்குமா றெவ்வாறே [௯]

வேறு,

பள்ளங்கடோறும் பரந்தபுனல் போலுலகி
லுள்ளம் பரந்தா லுடையா யென்செய்வேனே [௰]
முன்வினைக்கப் பின்மறைக்கு மூலவிருளா கெடவே
யென்வினைக்க வென்மறக்க வெந்தைபெருமானே [௧௧]
வல்லாளமோ நானின் வான்கருணை யென்னிடத்தே
யில்லாதே போனு லெவ்வண்ணமுய்வேனே (௧௨]

வேறு,

யாக்கு மனஞ்சூ ழவுனமுற வெங்கனின்னை
நோக்குமவு னமிந்த நானிலத்தி லுண்டாமோ [௧௩]

ஒன்றுப்பல்லா யுலகமெங்குந்தானேயாய்
நின்றுனையாமென்னி நீக்கற்கெளிதாகுமோ (௰௪)
ஆவித்துணையே யருமருந்தேயென்றனை நீ
கூவியழைத்தின்பங் கொடுத்தாற்குறையாமோ (௰௫)
எத்தனையோநின்விளையாட் டெந்தாய்கேளிவ்வளவென்
றத்தனையுமென்று லறியுங்காமாமோ (௰௬)
தேடுவார்தேடுஞ் சிவனேயோநின்றிருத்தாள்
கூடுவாள்பட்டதுயர் கூறற்கெளிதாமோ (௰௭)

வேறு,

பற்றின்மைப்பற்றுமெந்தாய் பற்றுவிட்டாற்கேகல்லந்தி
லுறறுவிநெஞ்சமுனை யொன்றிநிற்பதெப்படியோ (௰௮)
ஒப்பிலாவொன்றேநின் னுண்மையொனறுக்காட்டாமல்
பொய்ப்புவியைமெய்போற் புதுக்கவைத்ததென்னையோ ()
காலல்வழிநடவுங் காலததேகணமூளத்தார
போலேயெனதமிழ்ற் போங்கரிவாய்நில்லாயோ (௨௰)
தன்னரசுநாடாஞ் சடசாலபூமிமிசை
யென்னரசேயென்னை யிறையாகநாட்டினையோ (௨௧)

வேறு,

இக்கின்றுதாநின் றிருவாக்கைவிட்டாசே
பொங்குகிடமினைய பொய்ந்துல்புலம்புவனோ (௨௨)
... வலனையெந்த் தானி பூங்குகின்னைநனை
யினானின்னைங்காறுமை லெகதாயசுழல்வேனே (௨௩)
ஆரால்யுயுக்கையூ வானநகவாழியென்பா
ரூராமலையுநீ தனளிவிடவந்ததென்னே (௨௪)
பலவருவுக்கதனனனி - முற்றியது. - ஆ. - ௩௪௱௰௯

## நின்ராநிமல

கிக்றநிலையே ளிரியமாகதாளங்க
ளிலைகாமலுளிருவிசெய்துணிலையுமாநி
மெய்யூவிழியாதவிய தெவளங்கதேகமு
யிருககவினைந்தொடாந்து தொடாந்திருக்குமந்தோ (௧)
இருக்காதிமறைநமுவுஞ் சிவாகமாதி
யிதழுங்கைகாட்டிவோ மிதயத்துள்ளே
யொறுக்கவேடுனிந்தவிக்ட் டெக்காதந்த
ளையியிந்தவின்பவெள்ளந்தனி (௨)
றநிக்கட்டுந்நானை யேதுக்காக்க
கடம்பின்றிருமேக்ோ கல்லாவேயிருள்
குற்றமறநீக்காட்டு கருக்கந்தக்கு
குணக்குமியாவின்பணிட்ட கூடவன்றோ (௩)

## பாடுகின்றபணுவல்

பாடுகின்றபணுவலோர்க - டேடுகின்றசெல்வமே
நாடுகின்றஞானமன்றி - லாடுகின்றவாழ்கனே (௧)
அத்தனென்றுன்னையே பத்திசெய்துபணுவலார்
பித்தனென்றுபேசவே - வைத்தகொள்ளவாரமே (௨)
சிந்தையன்புசேரவே - நைந்துநின்னைநாடினேன்
வந்துவந்துவின்பமே - தந்திருக்குதானுவே (௩)
அண்டரண்டமயாவுநீ , கொண்டுநின்றகோலமே
தொண்டர்கண்டுசொரிகணீர் - கண்டநெஞ்சுகரையுமே (௪)
அன்னைபோலவருளிருக்கு - மன்றுஞானவரதனே
யென்னையேயெனக்களித்த - நின்னையானுநினைவனே (௫)
பாடுகின்றபணுவல் - முற்றுப் பெற்றது - ஆக ௩௪௨௧

## ஆனந்தகளிப்பு

சங்கர சங்கர- சம்பு- சிவ சங்கர - சங்கர சங்கர - சம்பு

ஆதியநாதியுமாகி - எனக்கானந்தமாயறி- வாயநிலை யிலங்குஞ்
சோதிமௌனியாத் - தோன்றி- அவனசொல்லாத- வார்த்தையைச்
சொன்னாண்டிதோழி - சங்கர (௧)

சொன்னசொல்லைக்கேன்று சொல்லுவன்- யென்னைசரூதாய்த்
தனிக்கவே- சும்மாவிருக்கி- முனனிலை யேதுமில்லாத- சுக- முற்றச்
செய்தே யெனைப் பற்றிகொண்டாண்டி- சங்கர (௨)

பற்றிய பற்றற-உள்ளே கண்ணைப் பற்றச சொன்னான்பார்ப்பா
ர்த்தவிடத்தே- பெற்றதைப்பெற்றென்று- சொல்லுவேன்- சற்றும்பேசா
தகாரியம்பேசினான் தோழி சங்கர. ( )

பேசாவிடும்பைகள்-பேசிச்சுத்தப் பேயனாமாகிப் பிதற்றித்திரிந்
தேன் - ஆசாபிசாசைத் துரத்தி ஐம் வடிவினை - யடக்கிக்
கொண்டாண்டி சங்கர (௪)

அடக்கிப் புலனைப்பிரிக்கே அவனைய மெளனிலென்னைவென்ற்
தேன்மடக்கிகொண்டானை-நினைந்தவட் சற்றும், வாய்பேசாவ
ண்ண-மாயுஞ்செய்தாண்டி சங்கர. (௫)

மரணைக கெடுத்தனை கெடடேன் - இந்தை-வாய்விட்டுச்சொ
ல்லின்வாழ்வெனக்கில்லை காவுபுற நி நமலனை என்னைக்காக்குந்தல
மைக்கடவுள்காண் மின்னே,சங்கர. (௬)

கட்டிவிடும்மடைவிண்டதென்ன- இருகண்களுமானந்தக்கண்ணீர்சொ
ரிய- உடலும் புளகிதமாக என்துள்ளமுருகவுபாயஞ்செய்தாண்டி-ச
ங்கர. (௭)

உள்ளதுமில்லதுமாய- முன்-னுணர்வதுவாயுன் -னுள்ங்கண்டதெல்லாந்தள்ளெனச் சொல்லி யென்னையன் - என்னைத் தானுக்கிக் கொண்டசமர்த்தைப்பார்தோழி சங்கர (அ)

பாராதிபூதநீயல்லே உன்னிப் -பாரிங்- கிரியங்கரணநீயல்லேவா ராயுணர்வுநீ யென்றுன் ஐய- னன்பாயுரைத்தசொல்-லானந்தந்தோழி சங்கர. (௯)

அன்பருக்கன்பான மெய்யன் - ஐய னுனந்தமோனனருட் குருநாதன் தன்பாதனு சென்னியிலவைததான-என்னைத்தானறிந்தேன் மனந்தானிறந்தேனே சங்கர. (௰)

இறப்பும்பிறப்பும்பொருந்த-எனக்கெவ்வணம்வந்ததென்றெண்ணியான்பார்க்கின்-மறப்புநினைப்புமாய்நின்றவஞ்சமாயமானத்தால்வளர்ந்ததுதோழி சங்கர. (௰௧)

மனதேகல்லாலெனக்கன்றே- தெய்வ மௌனகுருவாகிவந்து கைகாட்டி எனதாம்பணியறமாற்றி அவனின் னருளவெள்ளத்திருத்தி வைத்தாண்டி-சங்கர. (௰௨)

அருளாலெவையும்பாரென்றான்- அத்தையறியாதேசுட்டியென்னறிவாலேபார்த்தேன இருளானபொருளகண்டதல்லாறகண்ட வென்னையுங்கணடிலனென்னேடிதோழி- சங்கரா (௰௩)

என்னையுந்தன்னையும் வேறு-உள்ளத்தெண்ணாத வண்ணமிரண்டறநிற்கச சொனனது மோவொருசொலலேஅந்தச- சொல்லால் விளைந்தசுகத்தையெனசொலவேன சங்கர (௰௪)

விளையுஞ்சிவானந்தபூமி அந்த வெட்டவெளிநண்ணித் துட்டவிருளாங் களையககளைந்து பினபார்தேன ஐயன்களையன்றிவேறொன்றுங்கணடிலனதோழி சஙகர (௰௫)

கண்டார் நகைப் புயிர்வாழ்க்கை இரு- கண்காண நீங்கவுங் கண்டோந்துபிறா- கொண்டாற் போர் போனுலும் போகும் இதிற்குணமேது நலமேது கூறாய் நீதோழிசங்கர (௰௬)

நலமேதுமறியாத வென்னைசசுத்த - நாதாந்த - மோனமாநாட்டந்தத் தேசனுசலமேது மிலலாமலெலலாம் வல்லான் றுளாலென் சலமீது தாகசினுன்தோழி - சங்கா (௰௭)

தாக்குநல்லானந்தசோதி - அணு - தன்னிச்சிறிய வெனைத்தன்னருளாற் - போக்குவா வத்திருக்குனு சுததபூரணமாககினுன்- புதுமைகாண் மின்னே - சங்கரா (௰௮)

ஆக்கியளித்துத் துடைக்குந் - தொழிலத்தனைவைத்து - மெள்ளத்தனையேனுந் தாக்கறநிற்குனு சமர்த்தன்- உன்னசாட்சியைச்சிந்திக்கத் தககதுதோழி - சங்கர (௰௯)

சிந்தைபிறந்து மங்கலே அத்தச் - சிந்தை பிறந்துதெளிந்தது.

சதந்தரளையுமா

மாங்கே- எந்தநிலைகளுமாங்கே - கண்ட யான்றனிரண்டற்றிருந்தது
மாங்கே - சங்கர (உ0)

ஆங்கென்று மீங்கென்றுமுண்டோ- சச்சி-தானந்தசோதியகண்
டவடிவாய் - ஓங்கிநிறைந்தது கண்டாற்- பின்னர் - ஒன்றென்றிரண்
டென் றுரைத்திடலாமோ-சங் ர (உக)

என்றுமழியு மிக்காயம் - இத்தை யேதுக்கு மெய்யென்றிருந்தி
ருலகீர் ஒன்றுமறியாதநீரோ-யம- னோலைவந்தாற்சொல்ல- வுத்தரமு
ண்டோ-சங்கர (உஉ)

உண்டோ நமைப்போலவஞ்சர் - மல - மூறிந் ததும்பு முடலை
மெய்யென்றுகொண்டோ பிழைபபதிங் லகையோ- அருட்கோலத்தை
மெய்யென்று கொள்ளவேண்டாமோ - சங்கர (உங)

வேண்டாம் விருப்பும்வெறுப்பும்- அந்தவில்லங்கத்தாலேவி'ளா
யுஞ்சனனம் ஆண்டா னுரைத்தபடியே சற்றுமசையா திருந்துகொள்
ளறிவாகி நேஞ்சே - சங்கர (உச)

அறிவாருமில்லையோவையோ - என்னை - யாரென்றறியாதவங்க
தேசத்தில் வழிதேசாமத்தீவிற் சிக்கி - உள்ள - வானபொருடோற்க
வோவந்தே னன்தோழி சங்கர (உரு)

வந்தவரவைமறந்து மிகக மாதர் பொன்பூமி மயக்கத்திலாழும்
இந்தமயக்கத்தையறுகக - எனக - தெந்தைமெயஞானவெழிலவா
ள் கொடுத்தான் - சங்கர (உசா)

வாளாருங் கண்ணியர் மோகம்மம - வாதக்களலை வளர்க்குமெ
ய்யென்றே - வேளானவனு மெய்விட்டான் - எண்ணின் - மிக்கோர
துறக்கை விதியன்றோதோழி சங்கர (உஎ)

விதிக்கும் பிரபஞ்சமெல்லாஞ் சுத்தவெயில் மஞ்சளென்னவே
வேதாகமங்கள - மதிக்குமதனை மதியார் - அவாமாக்கந் துன்மார்க்
கஞசன் மார்க்கமோ மானே - சங்கர (உஅ)

துன்மார்க்கமாதர்மயக்கம்மனத் தூயர்க்குப்பற்றுதுசொன்னே
ன்சனகன் - தனமார்க்கநீத்திட்டாந்தம்-அவனானந்தமானசதான
ந்தனன்றோ - சங்கர (உகூ)

அன்றென்று மாமென்று முண்டோ - உனக்கானந்தம்வேண்டி
னறிவாகிச்சறறே -நின்றுநறெறியுமெனவேமறை -நீதியெம்மாதிரிகழ்
த்தினன்தோழி -சங்கர சங்கரசம்பு -சிவ- சங்கரசங்கர சஙகர சமபு

ஆனந்தக்களிப்பு-முற்றியது-ஆக - கூசஉக

---

# அகவல்

திருவருண்ஞானஞ் சிறந்தருள்கொழிக்குங்
குருவடிவான குறைவிலா நிறைவே

நின்றதொன்றே நின்மலவடிவே
குன்றாப்பொருளே குணப்பெருங்கடலே
ஆதியுமந்தமு மானந்தமயமாஞ்
சோதியேசத்தே தொலைவிலாமுதலே
சீர்மலிதெய்வத் திருவருளதனாற்
பார்முதலண்டப் பரப்பெலாநிறுவி
அண்டசமுதலா மெண்டருநால்வகை
ஏழுபிறவியிற றுழாதோங்கும்
அலங்கியோனியி னிலம்பெறமல்க
அறுமுதலசல மாறாவாக்கையுங்
கணமுதலளவிற் கற்பகாலமுங்
கன்மப்பகுதித் தொன்மைகேடா
இன்பம்பொழுதேனுந் தமக்கெளவறிவிலா
எனையுயர்கதியுள வாறமைத்தனை
எவ்வுடலெடுத்தா ரவ்வுடல்வாழ்க்கை
இன்பமெனவே துன்பமிலையெனப
பிரியாவண்ண முரிமையினவளாகக
ஆதரவாக்கக் காதலுமமைத்திட்
டகம்மறியே தேகநானென
அறிவுபோலறி யாமையியக்கிக்
காலமுங்கணமுங் கட்டுங்காட்டியே
மேலுநரகமு மேதகுசுவர்க்கமும்
மாலறவருத்தனை யேலும்வண்ணம்
அமையாக்கக்காதலிற சமயகோடி
அறம்பொருளாதி திறம்படுநிலையிற்
குருவாயுணர்த்தி யொருவர்போலனைவருந்
தத்தநிலையே முத்திமுடிவென
வாததாசகமும போதநூலகளும்
நிறைவிறகாட்டியே குறைவினறிலயங்க
அங்கங்குநின்றனை யெங்குமாகித்
சமயாதீதத் தன்மையாகி
இமையோர்முதலிய யாவருமுனிவருந்
தம்மைக்கொடுத்திட் டெம்மையாளென
வெசற்றிருக்க மாசற்றஞான
நலமுங்காட்டினை ஞானமிலேற்கு
நிலையுங்காட்டுதி நின்னருட்கடலே

அகவல் முற்றியது - ஆக [illegible]

# வண்ணம்

அருவென்பனவுமன்றி உருவென்பவனுமன்றி.
அகமும்புறமுமன்றி முறைபிறழாது
குறியுங்குணமுமன்றி நிறைவுங்குறைவுமன்றி
மறையோனென விளம்ப விமலமதாகி
அசலம்பெறவுயர்ந்து விபுலம்பெறவளர்ந்து
சபலஞ்சபலமென்று ளறிவிலர்காண
ஞானவெளியிடை மேவுமுயிராய்

அனலொன்றிடவெரிந்து புகைமண்டிடுவதன்று
புனலொன்றிடவறிந்து மடிவிலதாதை
சருவும்பொழுதயர்ந்து சலனம்படுவதன்று
சமரகொண்டழிவதன்றே ரியல்பினதாகும்
அவனென்பதுவுமன்றி அவளென்பதுவுமன்றி
அதுவென்பதுவுமன்றி எழிலகொடிலாவும்
ஆருமிலை யரியாப்படியேவ (௧)

இருளென்பதுவுமன்றி ஒளியென்பதுவுமன்றி
எவையுந்தனுளடங்க ஒருமுதலாகும்
உளதென்பதுவுமன்றி இலதென்பதுவுமன்றி
உலகந்தொழவிருந்த வயனமுதலோர்கள்
எவருங்கவலைகொண்டு சமயங்களில்விழுந்து
சுழலும்பொழுதிரங்கி அருள்செயுமாறு
கூறரியசகமாயையறவே

எனதென்பதையிகழ்ந்த அறிவின்றிரளினின்று
மறிவெனவென விளங்கு மபயமதாக
அறியுந்தரமுமன்று பிறியுந்தரமுமன்று
அசரஞ்சரமிரண்டி னொருபடியாகி.
எதுசந்ததநிறைந்த தெதுசிந்தனையிறந்த
தெதுமங்கலசுபகோள சுகவடிவாகும்
யாதுபரமதை நாடியறிநீ (௨)

பருவங்குலவுகின்ற மடமங்கையர்தொடங்கு
கபடந்தனில்விழுந்து கெடுநிலையாகி
வலையின்புடைமறிந்த மறியென்றவசமுண்டு
வஞ்சந்திரமுமின்றி அவரிதழூறல
பருகுந்தொழிலிணங்கி யிரவும்பகலுமின்சொல்
பகரும்படிதுணிந்து குழலழகாக
மாலைவகை பலசூடியுடனே

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவ எல்லப்பநாவலர்.

அருளிச்செய்த.

# அருணாசலபுராணம்-

## மூலமும் - உரையும்.

இவை,

திருத்தணிகை.

விசாகப்பெருமாளையரவர்கள்

மாணாக்கரில் ஒருவராகிய

திருவண்ணாமலை

அல்லாளப்பேரிந்திரையர் சகோதரர்.

அருணாசலையரால்.

முன்பதிப்பித்தப் பிரதிக்கிணங்கப்

பரிசோதித்து

திருவண்ணாமலைப்படலம்-௧.

பிரமன்-மால்-அடிமுடியறியாதபடலம்-௧.

பார்வதியம்மை-திருவவதாரப்படலம்-௪.

இடப்பாகம்பெற்றபடலம்-௬.

திருக்கண்புதைத்தபடலம்-௧.

ஆக-ஐந்துபடலங்களுடன்.

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்-குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௮௨௵



உ

சிவமயம்.

புராணத்தின் சருக்கங்களி னுடைய

# அட்டவணை.


| சருக்கங்கள். | பக்கம். |
|---|---|
| பாயிரம். | க |
| முதலாவது-திருநகரச்சருக்கம் | க |
| உ-வது-திருமலைச்சருககம் | உக |
| ங-வது-திருவவதாரச்சருக்கம் | ருஉ |
| ச-வது-திருக்கண்புதைத்தசருக்கம் | எசு |
| ரு-வது-இடப்பாகம்பெற்றசருக்கம் | கூஎ |
| சு-வது-வச்சிராங்கதபாண்டியன்சருக்கம் | ளயச |
| எ-வது-தீர்த்தச்சருக்கம் | ளஉரு |
| அ-வது-திருமலைவலம்புரிச்சருக்கம் | ளஉசு |
| கூ-வது-ஆதித்தச்சருக்கம | ளசுசு |
| ய-வது-பிரதத்தச்சருக்கம் | ளசுஎ |
| யக-வது-பாவந்தீர்த்தச்சருக்கம் | ளருங |
| யஉ-வது-புளகாதிபச்சருக்கம் | ளஅங |


ஆகபாயிரம்உள்படச்சருக்கம்யங.

சருக்கம்அட்டவணை

முற்றிற்று.

திருவண்ணாமலை





முதலாவது நந்திகேசுரர்-மார்க்கண்டேயருக்கு-உபதேசித்தபடம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அருணாசலபுராணம்.

## மூலமும் - உரையும்.

## பாயிரம்.

### விநாயகர்தோத்திரம் - கலிவிருத்தம்.

மிக்கவேதவியாசர் விளம்பிய
விக்கனைத்தக்கிலைய யின்றருளசெய்திட
முக்கண்வெற்பினை முக்கமதவாரியைக்
மெய்க்களிற்றினைக் கைதொழுதேறுவாம்.

(இ-ள்பொருள்)

அநேகவேதங்களை இடல் ஞகவேஉணர்ந்த வியாசரால் அருளிச்செ
ய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்தில் உருத்திரசங்கிதையிலிருக்கும் இக அ
ருணாசலசரித்திரத்தைத் தமிகாலத்தில் தமிழினுற்சொல்ல இதற்கு இடை
யிலேயொன்றுஞ் சொல்லும்படி அனுக்கிரகம்பண்ணுதற்கு மூன்றுகண்
களையுடைய மலையீன்றபார்வதியைச் சமுத்திரம்போன்ற மும்மதத்தையு
முடைய யானைமுகமொருகொம்பையுள்ள விநாயகக்கையிலுள்
ளைமன ஸ்தோத்திரஞ்செய்வோம் எந்த நூல இடையூறில்லாமல்

(சபாபதி துதி)

மூன்றுஞ்சுவைமதுரம்பெற மொழியுந்தமிழ்விரகன்புகழ்
பதிகம்புனைபவனையமினர் பவபஞ்சனைமலன்கதி
குதிரும்படிபகிரம் முமுறை யும்படியிலகும்படி
யதிருமபடிநடனம்புரி பதிருங்கழலதிருங்கழல்

(இ-ள்.) மிகுந்தமதுராசமுண்டாகப்பாடுகின்ற திருஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகளால் ஸ்தோத்திரம்பண்ணப்பட்ட பதிகமாகிய மாலையைதரிக்கின்றவராகியும் தம்மையடைந்தவர்கள் பிறவியைக்கொடுப்பவராகியும் மலரகிதராகியுமிருக்கின்றசபாபதியினுடையசூரியனுதிரவும் டிராணைடமுடைய வும் விளங்குகின்றபூமியதிரவும்நடனத்தைச்செய்யாநின்ற மிகவுஞ்சப்திக்கின்றவீரகண்டையைத்தரித்தபாதத்தைவணங்குவோம்-எ-று. (இச்செய்யுளுக்குப்பயனிலைவருவிக்கப்பட்டது.) (௧)

ஸ்தலமகிமை அறுசீரடியாசிரிய விருத்தம்.

இரவிகள்சந்திரர் வயிரவர்விஞ்ஞைய ரிமையவ ரெண்டிசையோ
ருரகருந்தவர்முனிவரர்பங்கயருவணகொடிக்கொடியோர்
பாவிகெருங்கவிலுலகநிறைந்தவர்பணியுமிடங்கிடையா
தாகாவென்பதுகடலின்முழங்கியதருணைவளமபதியே.

(இ-ள்.) சூரியரும்சந்திரரும்வயிரவரும் வித்தியாதரரும் தேவரும் அஷ்டதிக்குப்பாலகரும் நாகலோகத்தாரும் அரியதபசிகளும் முனிவரும்பிரமாக்களும் கருடகொடியையுடையவிஷ்ணுக்களும் பாருநெருங்குதலினால் உலகநிறைந்து அவர்கள்வணங்குதற்கு இடங்கிடையாததாயவாகளாலேசொல்லப்பட்ட அரகரவென்கிறசப்தமான துசமுத்திரத்திலும் அதிகமாகமுழங்கும்வளப்பத்தையுடையது அருணாசலமென்னும்ஸ்தலமாம்-எ-று. (௨)

இளமுலைமங்கையர்முகமுகெருங்கியவிருகுழையும்பகலே
யொளிவொருசந்திரனுடனிருசெங்கதிருதயமெனுந்தனியூர்
தலையவிழுந்தொடைமகபதிதன்பதிதனபதின்பதியு
மளகைவளம்பதிதனிலும்வளம்பதியருணைவளம்பதியே.

(இ-ள்.) இளமையாகிய ஸ்தனங்களையுடையபெண்கள்முகங்களும் அவர்களணிந்தஇரண்டு இரத்நகுண்டலங்களும்பகலிலே பிரகாசிக்கின்றஒருசந்திரனுடனே இரண்டுசூரியருதயமானார்களென்றுசொல்லும்படியாகியதுப்பற்றலூர்முறுக்கவிழ்ந்த கற்பகமாலையைத் தரித்த தேவேந்திரனுடையபட்டணமாகிய அமராவதியையும்குபேரனுடைய நகரமாகிய அளகாபுரியையும்பார்க்கிலுமவளத்தையுடையது அருணாசலமென்னும்ஸ்தலமாம்-எ-று. (௩)

# பாயிரம்.

காலனெதிர்த்திட மார்பிலுதைத்தவர் காமனுருப்பொடியா
னாலமிடற்றினர் மாலைமதிக் குறையாடரவப்பணியா
னைமுகத்தவன் ஞானமளிப்பவனுமேசற்கரியார்
மூலவெடுப்பவர் மேவு திருப்பதி சோணகிரிப்பதியே.

(இ-ள்.) யமனெதிர்க்கமார்பி லுதைத்தவராகியும மன்மதனுடைய் தேகத்தைப்பொடியாகச் செய்தவராகியும்விஷத்தைக்கண்டத்திலதரித்தவராகியும் மூன்றாமபிறையை மாலையாகத்தரித்தவராகியும ஆடுகின்ற சர்ப்பத்தை ஆபரணமாகப்பூண்டவராகியும் பிரம்மாவிஷ்ணுவும் தேடுதற்கரியவராகியும் மூலதனத்தையெடுத்தவராகியும விளங்குகின்றபரமசிவன் வாசஞ்செய்கின்ற அழகாகியபதி அருணாசலமென்னுயதலமாம். எ-று.

சந்தக்கலிவிருத்தம்-பரமசிவவணக்கம்

உறவொடுபகையற வொருமுதலெவனவ
னிருநிலவுலகரு ளிறையவனெவனவன்
மறைமுடி வினிடம் வளர்பவனெவனவன்
னறிவினிலறிபவ னடியிணை தொழுவாம்,

(இ-ள்.) உறவும்பகையுமில்லாததுப்பற்றற்றதன்மையானவனெவன் சாவசங்காரமானசெப்பு உலகத்தை உண்டாக்குகிறவனெவன் வேதமுடிவிலேசகலத்தையுமறிகிறவனெவன் அப்படிப்பட்டதன்மையையுடையசிவனது திருவடிகளையாம வணங்கினோம் எ-று. (௫)

கலிநிலைத்துறை-அருணாசலேசர் துதி.

மணிகொண்டநெடுங்கடலில்விழிவளருந்திருமாலுமறையினனும்
பணிகொண்டபாதலத்துமபூதலத்துமீதலத்துமபரிந்துதேட
வணிகொண்டபிரமாண்டகோளகைபொற்கோளகையாயழகுகாட்டக்
கனிகொண்டவொருவரையாமொருவரையாமகலாதுகருத்துட்சேர்ப்பாம்

(இ-ள்) இரத்தினங்க ளிருப்பிடமாகிய நீண்டகடலில் நித்திரை செய்கின்றவிஷ்ணுவும்பிரம்மாவும நாங்கள்வாசஞ்செய்கின்ற பாதாளத்திலும்பூமியிலும் மேலுலகத்திலும்வருந்திததேட அவர்களால்எட்டப்படாமல அழகாகிய பிரமாண்டகோளமானது பொன்னாற்செய்யப்பட்ட கோளகையாக அழகுகாண்பிக்கவன்மை கொண்ட ஒப்பற்ற அக்கினிமலையாகிய பரமசிவத்தை நீங்காது இருதயத்தில் சேர்த்துக்கொள்வோம் எ-று, (௬)

ஒருமானைக்கரத்தினில்வைத் தொருமானைச்சிரத்தினில் வைத்துமை
யொருமா தருமானையிடத்தினில்வைத்தருளவானைப்பவளமேனிச்சயிலம்
போல, வருமானைமுகத்தானையளித்தானைப் பொருமானையகிழ்வேறும்.
பெருமானையருணகிரிப் பெம்மானையடிபணிந்து பிறவிதீர்ப்பாம்,

(இ-ள்) தாருகாவனரிஷிகள் வரவிட்ட மானைக்கையிலேயேந்துஞ் சிரசிலே ஒருமான்போன்ற கங்கையைச்சடையில்வைத்தும ஏழுலகத்தையும்பெற்றஉமாதேவியை வாமபாகத்தில்வைத்தும் அடியார்களுக்கருள் செய்கிறவரும் பவளம்போல்வருகின்ற ஆனைமுகத்தையுடைய கணபதியைப்பெற்றவருமபோர்செய்கிறரிஷபவாகனத்தில் லெழுந்தருளுகின்ற ஆண்டவருமாகிய அருணாசலஸ்தலத்தில்வீற்றிருக்கின்ற பரமசிவன்பாதத்தைவணங்கி இனிமேலவரும்பிறப்பைதீர்த்துக்கொள்ளுவோம் எ-று. (எ)

உண்ணாமுலையம்மை துதி.

காரெழுகுங்குழலாளைக கருணைவழிந்தொழுகுமிரு கடைக்கண்ணாளை
மூரலிளநிலவொழுகப் புழுகொழுகழ கொழுகுமுகத்தனாளை
வாரெழுந்தனத்தாளை வடிவொழுகுந்தெரியாகமருங்குலாளைச்
சீரொழுகுமபதத்தாளையருணையுண்ணாமுலையாளைச்சிந்தைசேர்ப்பாம்

(இ-ள்) மேகம்போன்ற கூந்தலையும் கிருபைவழிந்தொழுகாநின்ற இரண்டுகடைக்கண்களையும தந்தங்களின்காந்தி இளநிலாவாகியசந்திரிகைபோல்பிரகாசிக்க புழுகுவாசிக்கின்ற அழகுபொருந்தியமுகத்தையுமலிகைச்சரிதத்தஸ்தனங்களையும் அதிகவழகையுடையதாயொருவருக்குந்தெரியாத இடுப்பினையும் சிறப்புபொருந்திய பாதங்களையுமுடையவளாய் அருணாசலஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற உண்ணாமுலையம்மனைமனதிலநினைத்துக்கொள்ளுவோம்-எ-று. (அ)

யானைதிறைகொண்டவிநாயகர்துதி.

மதமூன்றுமாறாருவருவகளிற்று முகத்தானைமனத்திலேதான்
பதமூன்றுமறுத்தவர்க்குபயமூன்றுங்கடந்தபதம்பாலிப்பானை
விதமூன்றுபுரமடித்தாரளித்தருளுமெய்க்குருமுதலைவேடோசந்
சிதமூன்றுபிறப்பொழிக்குமானைதிறைகொண்டவனைசிந்தைசேர்ப்பாம்

(இ-ள்) மும்மதங்களும் ஆறாகஓடிவருகின்ற யானைமுகமுள்ளவரும்மனதில்தாமுடைய பாதங்களைச்சிந்திக்கின்ற அரியதவத்தையுடையவர்களுக்கு நான்காம்பதமாகிய சாயுச்சியத்தைக் கொடுப்பவருமமூப்புரத்தைநீறுசெய்த சிவனாலேபெறப்பட்டவரும் ஒப்பற்றமூதலசிப சஞ்சிதவினையையுடையபிறப்பைக்கெடுக்கின்ற வருமாகியயானைதிறைகொண்டவனென்னும்விநாயகனைமனதிற்சேர்த்துக் கொள்ளுவோம-எ

சுப்பிரமணியர்துதி.

கொந்தாருமலர்சோலைபரணைநெடுங்கோபுரத்திற்குமாரவேளை
கந்தாசலவாழ்விக்கவடவிந்தனிலுறையுமயிலினானைக்
கந்தாருகடகளிற்றுயகவாறருகக்குநிமுலுவளைகளாடுங்
தந்தளையலர்க்கடப்பந்தாரானைப்பணிவாதாடலைமேற்கொள்வாம்

இ-ள் பூங்கொத்துக்களையுடையசோலைசூழ்ந்த அருணாசலத்துக்கிழக்குகோபுரவாசலுக்கடுத்தமேல் புறத்து மண்டபத்திலிருக்கிறவரும் தம்மை

டைந்தவர்களைப் பிழைப்பிக்கச்செய்ய வடவீதியிலே வாசஞ்செய்கிற மயில்வாகனக்கடவுளும் தறியிற்கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்திலேறுகின்ற தேவேந்திரனுக்குத்தெய்வலோகத்தையுங்கற்பகவிருட்சத்தினிழலையும் கொடுத்தவரும கடப்பமாலையைத் தரித்தவருமாகிய சுப்பிரமணியக்கடவுளை வணங்குகிற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல்வைத்துக கொளவோம்-என்றவாறு. (ய)

(சைவசமயாசாரியர்கள் துதி.)

வாதுகொண்டபாசமய கோளரியையடிவணங்கி வன்கற்றூணற் றீதுகொண்டசருங்கடலைக் கடந்தசெழுந் தமிழ்க்கடலின் றிருத்தாள் போற்றி, காதுகொண்ட விழிப்பாவை திருமனைக்கெம் பெருமானைக் கால்கேவைத், தூதுகொண்டசுந்தரனை தம்பிரான்றன்றோழனையாந் துதிசெய்வோமே.

(இ-ள்.)வாதுகொண்டுஜெயிக்கவந்தசமணர்களாகியயானைகளுக்குச் சிங்கமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளது பாதத்தைவணங்கி வலியகருங்கல்லோடு சேர்த்துக்கட்டிச் சமணர்கள் சமுத்திரத்திற்போட அக்கல்லினாலேதானே அச்சமுத்திரத்தைக்கடந்த செந்தமிழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பாசுவாமிகளதுபாதத்தைவணங்கி காதளவுந்தாவிய கண்களையுடைய பாவைநாச்சியாருடைய திருமனைக்கு இரண்டுபாதங்களுமநோக நடந்தாண்டவரைத் தூதாகவனுப்பியதம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளைவணங்குவோம். (எ-று)

(தரவு-கொச்சகக் கலிப்பா.)

அத்தனூர் பெருந்துறைபுக் கரியவினைக்கடல்கடந்து
புத்தனூர் மதங்கடிந்து புனிதமாகியசிவன்
மூத்தனூர் மாணிக்க வாசகனூர்மூத்திக்கு
வித்தனூர் வாதவூர் வித்தகாதாள்போற்றி.

(இ-ள்.) பரமசிவன்குருமூர்த்தமாக எழுந்தருளி யிருந்த திருப்பெருந்துறைக்குப்போய் அச்சாமியினுடைய அனுக்கிரகம்பெற்று அரிதாகிய தீவினைக்கடலைத்தாண்டி அநதக்காலததில் வியாபித்திருந்தபவுத்தாகளுடைய மதத்தைக்கண்டனஞ்செய்து பரிசுத்தமாகியசிவன் முதத்தனசையடைந்தவரும் அம்முத்தியாகிய நிலத்திற்கு விரையாகியும திருவாதவூரிற்பிறந்த ஞானசொரூபராகியுமிருக்கின்ற மாணிக்க வாசகசுவாமிகளுடைய பாதத்தைவணஙகுவாம்-எ-று. (யஉ)

(திருத்தொண்டர்கள்துதி.)

அறுசீரடியாசிரியவிருத்தம். (ய)

மனையாளையாற்களித்துமணங்களித்தவியற்பகையார்மலர்த்தாள்போற்றி
தனையாரும்பெருமானுக செச்சிலிடுங்கண்ணப்பர் சரணம்போற்றி
வினையாளாறியாத திருநீலகண்டரடி விருப்பிப்போற்றி
எனையாளுமிளையானறன் குடிமாறநாயனாரடியை யிறைஞ்சுவோமே.

(இ-ள்.) பரமசிவன் அடியார்வேடம்பூண்டுவந்து பெண்சாதியை யெனக்குக்கொடுத்துவிடென்றுகேட்க அதற்காக அதிகசந்தோஷத்தையடைந்து சுவாமிகளுக்குத்தன்மனையாளைக்கொடுத்தது அதனால் அதிக மகிழ்ச்சிபொருந்திய இயற்பகைநாயனாருடைய மலர்போன்றபாதங்களை வணங்கி தன்னையாட்கொண்ட சுவாமிக்குத் தான்தின்று ருசிபார்த்தஎச்சிலைக்கொடுத்த கண்ணப்பசுவாமிகளது பாதத்தைவணங்கி வினையையுடையவர்களறியாத திருநீலகண்டநாயனாருடையபாதத்தை மகிழ்ந்துவணங்கி அடியேனையாட்கொண்டருளும் இளையான்குடிமாறநாயனாருடைய பாதத்தைவணங்குவேன்-எ-று. (௰௩

ஐயடிகள்காடவர்கோ னீரடியைவணங்கிமகவறுத்தெம்மாற்கு, செய்ய
டிசிலுடன்படைத்தார் திருவடியைத்தொழுதிறை நீறுமசேரமூலர்,
மெய்யடியைப்புகழ்ந்துதெய்வவுலாசசொன்னசோனடிவிருமபினுதி
ப்,பொய்யடிமையில்லாத புலவர்முதலனைவரையும போற்றுவோமே.

(இ-ள்) ஐயடிகள்காடவர்கோனாயனாரது இரண்டுபாதத்தையும் வணங்கி எமதுசுவாமிக்குப்பிள்ளையை அறுத்துச்சமைத்தகறியை மெய்யிட்ட அன்னத்துடனே படைத்த சிறுத்தொண்டநாயனாருடைய மெய்மையாகிய பாதத்தைவந்தித்துத் தெய்வீகம்பொருந்திய உலாப்பிரபந்தம்பாடிய சேரமான்பெருமானாயனாருடையபாதத்தைப் பூசையுமாற்றிப்பணிந்து மெய்யடிமையையுடைய புலவர்கள்முதலாகிய பலரையும் வணங்குவோம்-எ-று. (௰௪)

(நந்திகேசுரர்-துர்க்கை-கௌதமர்-சண்டேசுரர்துதி.)

நந்திதிருவடியிறைஞ்சி விநதையடிபுகழ்ந்துமறை நான்கிற்கைநதாய்
வந்தருளுங்கௌதமனார் மலரடியென்முடிக்குமுடி மாலையாக்கித்
தந்தைவிருபதஞ் சிதைத்துசிதையாதபதததிருந்த தண்டிதாளைச்
சிந்தையிலைசக்குடியிருத்தியருணகிரிநினைபவர்தாளசென்னிசேர்ப்பாம்

(இ-ள்.) நந்திகேசுரருடைய அழகியபாதங்களைத் தொழுதுதுர்க்காதேவியினுடைய பாதத்தைவணங்கி நான்குவேதத்தினின்றும் ஐந்தாம்வேதசொரூபமென்றுசொல்லப்பட்ட கௌதமருடைய தாமரைபோன்றபாதத்தை என்சிரசுக்குத்தரிக்கப்பட்ட மாலையாகச்செய்துதம்முடைய தகப்பனாரதுஇரண்டுபாதங்களையும்வெட்டி அதனால்கெடாத மோட்சபதத்திலிருந்தசண்டேசுரருடைய பாதத்தை இருதயத்திற்குடியிருக்கச்செய்து அருணாசலஸ்தலத்தை நினைப்பவருடையபாதத்தைச்சிரசிற்சேர்த்துக்கொள்ளுவோம்-எ-று. (௰௫)

(அவையடக்கம்.)

தேறுகின்றகலைகலையுந் தெளிந்தசுவையிருநான்குந் திகழும்பாடல்
கூறுகின்றபுலவர்முன்னே தமியேனுஞ்சிலபுகல்சொற் குறித்தவாறு
வீறுகின்றமறைவிரிஞ்சனேறிவருமனத்திருமூர்ந் றுமவிரிஞ்சன்றுறைதை
யேறுகின்றகருடன்முன்னுமொருமசகம்பறவையெனவிரிதல்போலு

(இ-ள்.) பலநூல்களையுங் குறைவறக்கற்றுஎட்டுச்சுவையும்பொருந்திய தமிழ்ப்பாடல்களைச்சொல்லுகின்றவித்துவான்கள்முன்னே ஒன்றுமறியாதயானுஞ்சிலபாடல்களைப்பாட நினைத்ததிதம் விளங்கியநாலுவேதங்களையுடைய பிரமனுடைய அன்னவாகனத்தின் முன்னும் அவன்தகப்பனாகிய விஷ்ணு ஏறும்படியான கருடன்முன்னும ஒருசிறியகொசுதானுமொரு பறவையெனப்பறத்தல்போலும் -எ-று. (௰௪)

நீரிருக்குதெனப்பழித்துவிடுவரோவதுபாலினிசமுமானால்
நாரிருக்குதெனக்கழித்து விடுவரோவதுமலரினண்ணுமானா
லாரிருக்குஞ்சடைமுடியார் விடமிருக்குந் திருமிடற்ற ருணைநாதர்
பேரிருக்குந்தகைமையினாலெனதுரையையிகழுவரோபெருமையோரே

(இ-ள்.) பாலொடுகலந்திருக்கின்ற நீரைச்சகவாசயோக்கியதையால்தள்ளாமலெடுத்துக்கொள்ளுவார்கள்புஷ்பமாலையோடுசேர்ந்தநாரையும் அப்படியேகொள்ளுவார்கள் ஆத்திமாலையைச் சூடிய சடைமுடியையும ஆலகாலமிருக்குங் கண்டத்தையுமுடைய அருணஜலேசுரதுநாமமிருக்கிற பெருமையினாலே என்னாற்செய்யப்பட்ட புன்பாடலையும் பெரியோர்கள ஒப்புக்கொள்வார்களேயன்றி யிகழார்கள்-எ-று.

அழகுதாக்கனிந்தாச்சமாம்பழையதெனினுமதிலமுதுண்டாமோ
விழைவுதருசுவைக்கரும்புபுதியதுவேயெனினுமதன் விரதம்போமே
இழிவுறுபாடலுமுயர்வு தங்கியசெய்யுளுமவைபோ லிருக்குமாகில்
பழமையெனநலந்தருமோ புதுமையென விகழ்படுமோ பயன்கொள்வார்க்கே.

(இ-ள்.) அழகியசிவப்புநிறம்பொருந்தப் பழம்பழுத்தஎட்டிமரம் வெகுநாளையமரமாயிருந்தபோதிலும் அதில்மாதுரியமுண்டாகாது சர்வதாரானும் இச்சிக்கப்பட்ட இனிதாகியகரும்பு கொஞ்சநாளையதாயிருந்தாலும அதில்கசப்புஉண்டாகாது அப்படிபோல் குற்றத்தோடுகூடியசெய்யுள் பழமையாயிருந்ததினாலே ஒருநன்மையைக கொடுக்காதியாதொருதோஷமுமில்லாமல் உயர்வுபொருந்தியபாடல் சிலநாளைக்குமுன் னுண்டாயிருந்ததினாலேயே இகழப்படாது பிரயோசனத்தைககொள்வோர்களுக்கு-எ-று. (௰௫)

இளையளவுந்தமிழ்மிடியிற் றகிமதாம்பிறந்தகல்வித் திறமையோருங்
கிளையுமியற்சுவையறியாமூடர்பருவமறிவின்முன்னே நிற்கலாமோ
விளையடருங்குவளைவிழியனிச்சமலரணையதிருமேனியாளோ (டிடாரே
புனைவின்மதன்மலர்க்கணையைப் பொறுப்பதல்லாலமரினைப்பொறுத்

எட்டுஞ்சுவையாவன-சிங்காரம்-வீரம்-பெருநகை-கருணை-ரௌத்திரம்-குற்சை-அற்புதம்-பயம்.

(இ-ள்.) திளையளவுகூடச் செந்தமிழ்த்தரிதநிம் இன்றி அதிகம ரம்பிறந்தசல்வியல்லவாகளும இலக்கணாசமேஅறியாத மூடாகளை தமிருந்த அறிவையுடைய கல்விப்பிரசங்கத்தின்முன் நிற்கார்கள் கொ ல்லுந்தொழிலடைகின்ற நீலோற்பலம்போன்றகண்களையும் அனிச்ச ப்பூவொத்தஉடம்பினையுமுடைய பெண்கள் கருப்புவில்லைத்தரிக்கின் றமன்மதனாலே விடப்பட்ட புஷ்பபாணத்தைப் பொறுப்பாகளேய ல்லாமல்கொடிதாகியயுத்ததில்விடுகிற அம்பைப்பொறுக்கார்களது போல்-எ-று (௰௯)

(நூல்வரலாறு.)

கருத்தருகவிறைவணங்கிக்கருள்புரியநந்திமார்க்கண்டற்கோத,விரு த்திமறைவியாசமுனிக்கவனுரைக்கச் சூதனுக்கு வியாசன்சொல்லப் பொருத்தமனவிருடியருக்கருட்சூதன் மொழிந்தசிவ புராணங்கோடி, யுருத்திரசங்கிதையுரைத்தவருணகிரிவளத்தினையா னுரைக்கலுற்றேன

(இ-ள்) மனதுருகப்பரமசிவன்-நந்திகேசுவருக்கு அருள்புரியநந் திகேசுரரும் மார்க்கண்டேயருக்கருள்செய்ய மாரக்கண்டேயாவேதங்க ளையொழுங்குசெய்த வியாசருக்கருள்செய்ய வியாசர் - சூதமுனிவருக் குச்சொல்ல சூதாஒருவழிப்பட்டமனதையுடைய சவுனகாதிரிஷிகளு க்கருள்செய்த சிவபுராணங்கோடியாகும-அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் உருத்திரசங்கிதையிற சொல்லிய அருணாசலஸ்தலமகி மையைச்சொல்லத்தொடங்கினேன-எ-று. (௨0)

அருணைநகர்வளமையுமாலயனகந்தைவிடவழல் வெற்பானவாறும் பொருவில்மகமழித்ததுவும் ஆனுமையை மணந்துங்கண்புதைத்தவா றும், வருமகிடற்றொலைத்ததுவுமிறைவியிடங்கலந்ததுவும்வயிரப்பூண் ணிருவினையையகற்றியதுவடகலைதென்கலைவிதியாலிசைக்கலுற்றேன.


(இ-ள்.) அருணாசலஸ்தலமகிமையும் பிரமாவிஷ்ணுவினுடையக ர்வமடங்க-அக்கினிமலையானதும்,ஒப்பில்லாததக்கனுடையயாகததை- அப்த்துப்போட்டதும், பரமசிவன-பார்வதியைக் கலியாணஞ்செய்த தும், அப்பார்வதி-சுவாமியினுடையகண்களை மூடியதும, மகிடாசுர னை-உமாதேவிகொன்றதும்; அப்பார்வதி-வாமபாகத்திற் சேர்ந்ததும, வச்சிராங்கதபாண்டியனுடைய பாவத்தைநீக்கினதுமாகிய சரித்திரங் களைச் சொல்லுகின்ற கிரந்தத்தை தமிழ் மொழியினாலே சொல்லத் தொடங்கினேன் -எ-று. (உக)

---

பாயிர - முற்றிற்று.

---

ஆக-திருவிருத்தம்-உக.



சிவமயம்.

முதலாவது

# திருநகரச்சருக்கம்.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

துங்கமழுவுழைபிரம்பு சுரிகையகலாதகையான் றுகிர்க்குன்றூடே திங்களுமிழ்நிலவனைய வெண்பொடியான் சடைமுடியான் செறிமூசுகண்ணான், பொங்குதிருவரையகலாப் புலித்தோலான் புயநாலான் புரிமுந்நூலான், கங்கைமதிதவழ்சடையான் றிருவாணை செலுத்தும்வெள்ளிக்கயிலைகாப்பான்.

(இ-ள்) உயர்வாகியமழுவும் மானும்பிரம்பும் உடைவாளும் நீங்காதகையையுடையவர்-பவளமலையில் சந்திரன்பொழிகின்றநிலவுபோலத்தேகத்தில் அணிந்த விபூதியையுடையவர்- சடைமுடியையுடையவர்-நெருங்கியமூன்றுகண்களையுடையவர், விளங்குகின்றஇடுப்பில்எந்நாளும்நீங்காதபுலித்தோலையுடையவர், நான்குபுசங்களையுமுடையவர் மூன்றுபுரியாகிய பூணூலையுடையவர், கங்கையும் சந்திரனும் தவழாநின்றசடையையுடைய பரமசிவனது கட்டளையைச்செலுத்திக்கொண்டுகைலாசகிரியைக்காக்கிறவர்-எ-று. (க)

கொய்வனசமலர்பிறந்தான்மைவளருந்திருமிடற்றான் குலவேள்னேற்றான், சைவமெனும்பயிர்தழைக்க கருணைமழைபொழிமேகந்தன்னையொப்பான், னைவரையுமகத்தடக்குஞ் சிலாதர்க்குப்புறத்துலவுமணிபோல்வான், றெய்வமெல்லாந்தொழச்சிவந்த மலர்ப்பதத்தானந்தியெனுந்திருநாமத்தான்.

(இ-ள்.) செய்யப்பட்டதாமரைமலரையொத்த நிறத்தையும் விளங்கும்பொருந்திய கண்டத்தையும்நல்லவெண்மையாகிய ரிஷபவாகனத்தையுமுடைய பரமசிவனுக்கு சம்பந்தமாகிய சைவசமயமென்னும் பயிரானது தழைப்பதற்கேதுவாகிய மழையைப்பொழிகின்ற மேகம்போன்றவர் பஞ்சேந்திரியங்களையும்அகத்தில்நின்றும் புறத்தில்தீமையாகியபொருள்களிற் போகவொட்டாமல்அடக்கிய சிலாதாரிஷிக்குப் புத்திரராகிச்சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவர் விஷ்ணுமுதலாகியதேவர்களெல்லாம்வணங்க அதனாற்சிவப்பேறிய தாமரைப்பூவொத்தபாதங்களையுடையவர் இப்படிப்பட்ட தன்மையையுடையநந்திகேசுரரென்கிற அழகியநாமத்தைப்பெற்றவர்-எ-று. (உ)

ஈசனணிநதிமதியுந் திருவுருவுந்திருவுருவி லிசைந்தநீறும்
கேசவெனவிளங்குமொரு கயிலாயச்சிலம்புளதச் சிலம்பின்மீதே
வாசவனேமுதலிமையோர்நெருங்குதலான்மகுடமொடு மகுடந்தாக்கி
யோசையுடன்கனகமணிப்பொடியுதிர்ந்துகனகமலைக்குவமையாகும்

(இ-ள்.) பரமசிவன் தரிக்கின்ற கங்கையுஞ்சந்திரனும் மேற்சொன்னசுவாமியினது வெண்மையாகிய திருவுருவமும் அவ்வுருவத்தில் அணிந்ததிருநீறுமாகிய இந்நான்கினுடைய காந்திபோலப்பிரகாசிக்குங் கைலாசமென்று ஒருதிருமலையுண்டு அந்த திருமலைமேல் வணங்குகின்றதற்காகத் தேவேந்திரன்முதலாகிய தேவர்கள் நெருங்குகிறபடியினாலே கிரீடத்தோடுகிரீடம் இடிபட்டுச் சப்தத்துடனே சொர்ணப்பொடிகளும் ரதனப்பொடிகளும் உதிர்ந்துமகமேருகிரிக்குச் சமானமாகக்குவியும்-எ-று. (௩)

இந்திரநீலச்சிலையா லிசைத்தகடந்தெரியாமலெழுதிச்சேர்த்து
மந்திரமாமெனவயிரத் தூணிறுத்திமாணிக்க மதலைகூட்டிச்
செந்துகிராற்போதிகையு மரகதத்தாலுத்திரமுஞ் செறித்ததுமீதே
சந்திரகாந்தத்தகடு பரப்பியமண்டபமுளதச் சயிலமீதே.

(இ-ள்.) இந்திரநீலக்கல்லினாலேயொன்றொடொன்றுசேர்த்துசந்து தெரியாமல் சித்திரமெழுதிச்சுவரவைத்து மந்திரகிரிபோல் வயிரத்தூண்களைநிறுத்தி மாணிக்கத்தினாற்செய்தகொடுங்கைசேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாலேபோதிகையும் மரகதத்தினால் உத்திரமுஞ்சேர்த்து அதன்மேற்சந்திரகாந்தத் தகடுவேய்ந்த மண்டபம் ஒன்றுண்டு அந்தமலையின்மேல்-எ-று. (௪)

இருமருங்குந்தானமணி யிழைத்தவரியாசனத்தி லிருந்துநீலப்
பருமணியா லிழைத்தவொரு பாதபீடிகையின்மலர்ப் பதத்தையூன்றி
யுருவுபெருங்கயிலையின்மீதிருந் தமுயலகன்முதுகில்வலதாளூன்றி
யருமறையைமுனிவருக் குரைக்குமிலையெனவிருந்தா னந்தவேளை.

(இ-ள்.) அந்தமண்டபத்தில்இரண்டுபக்கமும் முத்துகளிழைத்த சிம்மாதனத்திலிருந்துபெரியநீலரத்தினத்தினாலே இழைக்கப்பட்டிருக்கிறபாதக்குறட்டின்மேலேமலர்போன்றபாதங்களை வைத்துக்கொ

ண்டிகேஸ்வரர் சிவகணங்களாலே மருவப்பட்ட பெருமையுடைய கைலாயகிரியில்எழுந்தருளியிருந்து முயலகன்மேல வலப்பாதத்தை வைத்து அரிதாகியவேதப்பொருளை முனிவர்களுக்குத்திருவாயமலர்ந்தருளிய பரமசிவம்போல் இருந்தார் அந்தவேளையில்-எ-று. (௬)

குற்சனுரோமசன்குமுதன் குமுதாக்கன்சகடாயன்கும்பசாதன்
வற்சலைவசம்பாயனாக ஞசிமுனிபுலிக்காலன் வாமதேவன்
சற்சனகன்சனக்குமான் வாதராயணன்மதங்க னடனத்தாளை
யர்ச்சனைசெய்யனந்தமுனி முதலனந்தமுனிவர்தயமருகிற்சூழ

(இ-ள்.) குற்சர்ரோமர் குமுதர் குமுதாட்சர் சகடாயர் அகத்தியர் வற்சாலைசம்பாயனர் கஞசிவியாக்கிரபாதர் வாமதேவர்சனகர்சனற்குமாரர் வியாசர்மதங்கர்சுவாமியினது நடனமபொருந்திய திருவடிகளில் அர்ச்சனைசெய்கின்ற பதஞ்சலிமுதலாகிய அனந்த முனிவர்கள் தமமுடையபக்கத்திலசூழ-எ-று. (௭)

மன்னியமார்க்கண்டமுனி யுடனெழுந்துபணிந்துயிர்கண் மழைமின்போல, வின்னிலத்திற்பிறப்பதுவு மிறப்பதுவுமிருவினையுமெமக்குத்தோன்றச, சொன்னவொருதனிமுதலேமுத்திபெறும் பரிசெமக்குக்சொல்வ.யென்று, னன்னவுரைசெவிப்புகலு நந்தியருள்சுரந்துமுனிக்கருளவதானான்.

(இ-ள்.) நிலைபெற்றவயதினையுடைய மார்க்கண்டேய முனியானவர்சீக்கிரத்திலெழுந்திருந்து நந்திகேசுரரை வந்தனஞ்செய்து சுவாமி மேகத்தில்தோன்றிஅதிசீக்கிரத்தில் அழியுமின்னல்போல உயிர்களானவைஇவ்வுலகத்தில்பிறக்கிறதும இறக்கிறதும் இவைகளுக்குக்காரணமாகிய நல்வினைதீவினைகளாகிய இரண்டும் எங்களுக்கு விளங்கும்படியாகஅருளிச்செய்தருப்பற்றுகட வுளேநாங்கள்மோட்சத்தையடைகிறதற்குத் தக்கவழியைக் கிருபை செய்யவேண்டுமென்றுகேட்க அந்தவார்த்தையைக்கேட்டவுடனே மிகுந்தகிருபையுண்டானவராகி நந்திகேசுரர் மார்க்கண்டேயருக் கருளிச்செய்யத்தொடங்கினார்-எ-று. (௮)

கம்பநதிகுமபநதி காவிரிகோதாவேரி கண்ணவேணி
பம்பைநதிவேகநதி வேதநதிசரயுநதி பரமாங்கங்கை
செம்புநதிபொன்முகிநல்யமுனைநதி நருமதைமேற் செப்புஞ்சோணை
யம்புவியின்மிகவுளவங்காடினர்தம் வினையகற்று மதுவல்லாமல்.

(இ-ள்) கம்பைநதி கும்பநதி காவேரி-கோதாவரிகிருஷ்ணவேணி-பம்பைநதி-வேகவதி-வேதவதிசரயுநதி-எல்லாநதிகளுக்கு மேன்மையகங்காநதி-தாமிரபரணி பொன்முகி - யமுனாநதி -நர்மதாநதி-மேன்மையாகச்சொல்லப்பட்ட சோணைநதியென்று அழகுபொருந்திய பூவுலகத்தில் அனேகநதிகளுண்டு அவைகளாதயமீடததில் ஸ்நானஞ் செய்தவர்களுடைய பாவத்தைநீக்கும் அதுவல்லாமல்-எ-று.

காசியெனுமொருதலமிக் கயிலையெனுஞ்சிறப்புளது கங்கைநித்தம்
வீசுதிரைக்கொழுந்தோட்டிப்பாகதிக்கு வேறோட்டும்வியநுமுழ்கின்
மாசிறுடலதிலிறந்தான் மாமேனும்விலங்கேனுமனிதரேனு
மீசனருளுபதேசஞ் செவிப்புகலா லிறைவனெனவிருக்கலாமே.

(இ-ள்.) காசிஎன்கிற ஒருதிவ்யத்தலமானது இந்தக் கைலாசத்தைப்பார்க்கிலும் சிறப்புள்ளது அக்காசியில்வருகின்ற கங்காப்பிரவாகமானது எறிகின்ற அலைகளைக்கொழுந்தாக ஓடச்செய்து தன்னிடத்தில் விரும்பிமுழுகினால் அவர்களுக்குமோட்சத்துக்குவழிகாட்டும் கனங்கம்பொருந்தியதேகம் அவ்வூரில்விட்டால் மாமாவது மிருகமாவது மனிதராவது பரமசிவனதுதாரகப் பிரம்மோபதேசம் செவியிற்சோதலாலே சிவசாருப்பியத்தை யடைந்திருக்கலாம்-எ-று. (௬)

போகியொருபுற்றிடங்கொண் டிருப்பதுகண்டிடுதலல்லாற்புனிதர்போற்றும், யோகியொருபுற்றிடங்கொண்டிருந்ததலங்கண்டதுண்டோ வுரைப்பக்கேளு நாகமிசைநடித்தவநுக்குயிர்வேண்டித் திருதவஞ்செய் கனினக்கோயில், சேருமனத்தவான மறுவாரூர் தனையெரித்த திருவாரூரே.

(இ-ள்.) சர்ப்பமானதுபுற்றை யிடமாகக்கொண்டிருந்ததைப்பார்த்ததேயல்லாமல் ஞானிகள்போற்றுகின்ற யோகியானவர் புற்றினிடத்திலே யிருந்ததலததைப்பார்த்ததுண்டோ அதுயாதெனிற்சொல்லக்கேளுங்கள காளிங்கனென்னும்பாம்பினமேலேறி நடனஞ்செய்த விஷ்ணுவுக்குஉயிர்பிச்சைவேண்டி லட்சுமியானவள்பூசைசெய்துக்கொண்டிருந்த கமலாலயமென்னும் தலமாகிவஞ்சம்பொருந்திய மனதையுடைய திரிபுராதிகளையெரித்தசிவன்வாசஞ்செய்கின்ற ஊராகிய திருவாரூர் என்னுந் திவ்வியத்தலந்தான்-எ-று. (௭)

தக்கவிராட்புருடன்மனத்தலமெனுமோர்தலமுளதத் தலத்தின் மீதே
முக்கணனார்நடிப்பாவர்மூர்த்தியிலாயிரத்திலொரு மூர்த்திதானே
யிக்கயிலையிடத்துறைவதன்னிலத்தின் பெருமைநம்மாலிசைக்கலாமே
யக்கனகசபைகண்டா ரரியயன்காணாதமுத்தியடைகுவாரே.

(இ-ள்.) பெருமைபொருந்திய விராட்புருடனுடையஇருதயத்தலமாகிய சிதம்பரமென்று ஓர்தலமுண்டு அதிலுள்ளதாகிய கனகசபையில் மூன்றுகண்களையுடையபரமசிவன் ஆனந்தத்தாண்டவஞ் செய்வார் அவருடையமூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன்றுதான் இக்கைலாசபதத்திலிருக்குமென்றால் அந்தஸ்தலத்தினது பெருமையை நம்மாற்சொல்லக்கூடுமோ அப்படிப்பட்ட அழகுபொருந்தியகனகசபையைக்கண்டவர்கள் விஷ்ணுவினாலும பிரமனாலுமகாணப்படாத மோட்சததையடைவார்கள்-எ-று. (௮)

தாங்காழிபவன்சிவனை வழிபடுந்தொல்லையந்ததலத்தைப்பார்க்கி, லோகைாரவடிவதிலேயுயிரிழுங்காலுடலழியாதொளிகெடாது-வீங்காதுநெகிழாதுபிறவுயிரால்வருந்தாது வெடிதிடாது-நீங்காமண்ணிருமி பிறவாதுகிடக்கும் வலச்செவிமேலாக.

(இ-ள) சக்கரத்தைக்கையில்தரிக்கின்ற விஷ்ணுவானவர் பரமசிவனைபூசைபண்ணிய விர்ததாசலமென்று ஒருலைதலமுண்டு அந்தத்தலத்தைப்பார்க்குமிடத்தில் அதுபிரணவசொரூபமாயிருக்கும் அந்தஸ்தலத்தில் உயிர்விட்டால்தேகமழியாது நிறங்குன்றுதுவீங்கமாட்டாதுகட்டுசழுவாது மற்றபட்சிமிருகங்களால்பின்னமாகாதுவெடிப்படாது அகிலதுர்க்கந்தமும்புழுவும்உண்டாகாமல்வலதுகாது மேலாகக்கிடக்கும்-எ-று. (௰௨)

பொய்மகிடமுகனைவென்றவம்மையிடமகலாதபுனிதமூர்த்தி,செம்மையிடமென்றிருந்த கருமகிடமுகமாகச்செறிகேதார-மிம்மையிடர்மறுமையிடர்ஞானமில்லாச் சிறுமையிடரெலாந்தீர்க்கும், மும்மையிடம்பெறமுலகுக்கெளிதாகத் தனியிருந்தமுத்திபோலும்

(இ-ள்) மெய்யையாகியவெருமை முகத்தினையுடையகிடாசூரனை ஜயித்தபார்வதிவாமபாகத்தில் நீங்காதபரிசுத்தராகிய பரமசிவனானவர் செம்மையாகியவிடம இதுதானென்று எழுந்தருளியிருக்கிற கறுப்பாகிய எருமையினதுமுகம்போல் விளங்கியதிருக் கேதாரமென்னுமலைதலமானது இந்தஜெனமத்தில்வருகிறதுக்கமும் மறுமையில்வருகிறதுக்கமும்ஞானமில்லாதநிலைலே உண்டாகிறதுக்கமுமாகிய எல்லாததுயரதனையுமநீக்கிறதற்குமூன்றுலகத்தாருக்குமெளிதாகிய தனியேயிருந்த முத்திஸ்தானம்போல்இருக்கின்றது-எ-று. (௰௩)

இருப்பணத்தன்பருப்பதத்திற் பிரமராம்பிகையுடனென்றிரண்டுபோதுமு-மிருப்பனத்தன் பணிந்திமையோருலகுமுதலனைத்துலகும்விதித்தான்மற்றைத்-திருப்பதிக்கேயிருப்பவனுந் தேவர்களுஞ்சராசரமாய்சசெனித்தல்லூரி-யிருப்பதற்குமுயல்வரென்றா லத்தலமுமத்தலத்துக்கிணையதாமோ.

(இ-ள்) மல்லிகார்ச்சுனமென்கிற பர்வதத்தில் பிரமராம்பிகையுடனேபரமசிவனானவர் எழுந்தருளியிருக்கிறாரென்று அன்னவாகனத்தையுடையபிரமாவானவர் அந்தபதியோடுஇரண்டுவேளையும் வணங்கிஅவருடையஅருள்பெற்றுத்தேவலோகமுதல் எல்லாலோகத்தையுமபடைத்தார்மற்றைதிருப்பதியிலிருக்கின்ற வெங்கடாசலபதியும் தேவர்களும் அந்தஸ்தலத்தில்சரமாகவும் அசரமாகவும பிறந்திருப்பதற்குத்தவஞ்செய்வார்களென்றால் எப்படிப்பட்டஸ்தலங்களும் அந்தக்ஷேத்திரத்துக்குச் சமானமாகுமோ-எ-று. (௰௪)

விருப்படியார்சொரிந்தவறுகலருணேவிழியிடர்க்தவேடர்காவித்செருப்படியுமுகந்தபிரான் காளத்திகசமெனுஞ்செய்வபூமி - பருப்பத

பாசிப்புல் விளைந்தன்னதுருக்கொடிகொடுங்குயவர்ப் பதுமையோடு - கருப்ப
டியுந்துபுயமாரம்பல வடம்மூவிலக்கூம்பொருக்குந்த வண்மையகமாதேபா.

(இ-ள்.) திருக்காளத்தியென்னும் தெய்வீகம்பொருந்திய ஸ்தலத்தில் ஆதிசைவப்பிராமணராகிய சிவகோசரியாரோடு திருதிராக அர்ச்சனைசெய்த அநுகுபுஷ்பங்கள் இலையுடனே கண்ணப்பரென்கிற பத்தர் கணைப்பங்களைகளுக்காகச் செருப்பையும் விருப்பமாக ஏறுந்தொண்டர்களுக்குச்சாருமாகிய பின்னர் தாம் சுகிர்தபொருந்திய தேன் சொரிகின்ற தாமரைமலரிலிருக்கின்ற லட்சுமியோடு வாசனையுற்றதுளவமாலையணிந்தமார்பினையுடைய விஷ்ணுவானவர் வேகமுடையன்னமாகிய ரூபத்தில் தேடிக்காணாமல் தரிசனஞ்செய்து காணக்கூடும்பொருட்டு அந்தக் காலத்தில் மலையாகியும் விளங்குகிறார் - எ-று. (௰௫)

தேக்குநாவிருதிசையும்புகழ்ந்த தொண்டைநாடெனுமோர் தெய்வ
நாட்டு-ளேகிஞால்வினையகற்றுமொருதலமுண்டதனையுரையாநிற்கக்
கேளும்-வாக்குநாயகிக்கணவன் படைத்தபுவித்தொழுக்கமும் வளர்த்துமத
காக்கும்-காக்குநாயகியுடனே கம்பநாயகருறையுங்கச்சிமூதூர்.

(இ-ள்) அநந்தநாட்டுத்திக்கிலுள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கிற தொண்டைமண்டலமென்னுந் தெய்வீகம் பொருந்திய நாட்டில் தரிசனஞ்செய்தவர்களுடைய பாவத்தைப்போக்குகின்ற ஒருஸ்தலமுண்டு அதனுடைய பெயரைச்சொல்லுகிறேன் கேளுங்கள் சரஸ்வதியின் கணவனாகிய நான்முகன் படைத்த உலகத்திலுள்ள உயிர்களை பிழைக்கும்படி கருப்பந்திரண்டு தருமத்தையும் பரிபாலனஞ்செய்துள்ளனாகிய காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசுரர் எழுந்தருளியிருக்கிற காஞ்சிபுரமாகும் - எ-று.

பழுதறவேயெழுகடலும் புவியெழுதலமும்படைத்தவேதக்
கிழவனறியாமுடியையொருபாலன் நிருத்தபதிகிளர்த்தக்கேளு
மழுதருநடபுரியுமிறைவருக்கம்பிகைபூசையயனோர்பூசை
வழுவறுதருமர்பூசைகால்பூசைபுரிந்ததிருவிரிஞ்சைமூதூர்.

(இ-ள்.) யாதொருபழுதுமில்லாமல் ஏழுசமுத்திரத்தையும் ஏழுமலையையும் ஏழுலகத்தையும் படைத்தபிரமனாலும் அறியக்கூடாத () சிரசை ஆதிசைவப்பிராமணப்பிள்ளையானது அறிந்த கதையைச்சொல்லுகிறேன் கேளுங்கள் ஆனந்தத்தாண்டவஞ்செய்தசுவாமிக்கு பார்வதியாரும் பிரமாவும் சிவனேசமித்த தருமனும் காலும் பூசித்தவிரிஞ்சிபுரமென்னும் ஸ்தலமாம்-எ-று. (௰௬)

() சுவாமியினது சிரசைப்பாலன் அறிந்ததாவது அபிஷேகமுதலியவை செய்கிறதற்குச் சுவாமியினுடைய திருமுடியானது ஒருவருக்குந்தகளுடையபிள்ளையின் கைக்கு எட்டாமையினாலே அந்தப்பிள்ளை மனம்தபூசாகாலக்குறைகிறதென்று செய்யவேண்டுமென்று விசனப்பட்டபோது சுவாமிக்குமுடியைச்சாய்ப்பவிக்க சிரசைச்சாய்த்தருளினார்.

பொய்யாத புனல்பெருகுங் காவேரி யிக்கரையிற் சீகாழியு
மையாறு மிடைமருதுந் திருக்குடந்தை வளநகரு மானைக்காவு
மையாறு மிடற்றார் திரிசிரமலையு மாணிக்கமலையுந் தோன்று
மெய்யாக வவற்றினதும் பெருமை யெல்லாம் விரித்துரைக்கும் வேதத்தானே.

(இ-ள்) பொய்க்காமல் பெருகிவருகின்ற காவேரிநதி இருகரையிலும் சீகாழி திருவையாறு திருவிடைமருதூர் ஆவளம் பொருந்திய கும்பகோணம் திருவானைக்காவிலும் பொருந்திய சடைதனையுடைய மாதொருபாகேசுரர் எழுந்தருளியிருக்கின்ற திரிசிராப்பள்ளி இரத்தினகிரி இவைமுதலாகிய தலங்களில் விளங்கிக்கொண்டிருக்கும் அந்தத் திவ்யக்ஷேத்திரங்களுடைய பெருமையெல்லாம் வேதமானது தான் மெய்மையாக விரித்துச் சொல்லும்-எ-று. (௰௮)

பருவரையார் பரிக்குங் கைக்கநிக்கரையின் மதுரையறுபத்து நாலு
திருவிளையாட் டிறைவனியற் றியதலமா மதன்பெருமை செப்பலாமோ
கருவிளையாட் டகற்றுமிரா மேச்சரத்தென் கடற்கரையிற் காணுமங்கே
செருவிளையாட் டிராகவனு மிராவணனைத் தொலைத்தபழி தீர்த்திட்டானே.

(இ-ள்) பெரியசந்தனங்கள் முழங்குகின்ற வைகையாற்றின் கரையில் சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல் செய்தருளிய மதுரையென்னுந் தலமானது அந்தத்தலத்தின் பெருமை யாவராலுஞ் சொல்லப்படாது தென்சமுத்திரக்கரையில் ஜனனத்துக்கரையைப் போக்குகின்ற ராமேச்சரமென்னுந் தலமுண்டு அந்தத்தலத்திலே யுத்தவிளையாட்டாகச் செய்கின்ற இராமரானவர் இராவணனைக்கொன்றதனாலான தோஷத்தை அந்தத்தலத்தில் சிவனைப்பூசித்துத் தீர்த்துக்கொண்டார்-எ-று. ()

அத்தலையார்த் தலங்கடமிற் பிறக்கவுட னிறக்கவுந்தீ யாமையக்காணச்
சுத்தவெளி தனிலாடுஞ் சுடரொளிக்கு மனக்களிப்பதாய் சீராட்ட
வித்தமதை யடைத்துரைத்துச் சிவாலயமும் வீதிபொழிலு நீவுண்டாக்க
வுத்தமமா கியபலமக கியுளதென் றுரைக்குமுனி யுரைப்பநாலோன்.

(இ-ள்) அப்படிப்பட்ட தன்மையையுடைய தலங்களிலே யாவருகிலும் பிறந்தாலும் இறந்தாலும் மெய் தரிசித்தாலும் பரிசுத்தராகிய ஆகாசத்தில் நிருத்தஞ்செய்யுமிருக்கப் பிரகாசமாகிய சொரூபமாகிய சிவனுக்கு திருவுள்ளமானது களிக்கும்படி தூய்மையாகிய சீரினால் அபிஷேகஞ்செய்தாலும் கிரியைகளைச் செலவுசெய்து சிவாலயங்கட்டுவித்தாலும் வீதிகளும் சோலைகளும் நந்தனவனங்களு முண்டாக்கினாலும் பெருமையாகிய பலமுண்டாமென்று நந்திகேசுவரர் அருளிச்செயக்கேட்டு மார்க்கண்டேயர் இல்லத்தொடர்காரிக்கு—எ-று. (௨௰)

இங்கிதமாநதிதோறுந் தலந்தோறுமிப்படியேயியற்றவென்றால்
முன்னியவமரருக்குஞ் சித்தருக்குமுனிவருக்கு மரிதாமுற்று
மின்னிகருஞ்சிறுவாழ்க்கை மனிதர்தமக்கெளிதாமோமேவினாலு
முந்தியமாமிறவுமாகு மாதருக்குங்கிடையாதேயையவென்றான்

(இ-ள்.) இப்படிப்பட்ட தன்மையையுடைய நதிகள்தோறும் ஸ்தலங்கள்தோறும்போய்த் தேவரீர்கட்டளையிட்டவிதமாகவே தீர்த்தமாடி வழிபாடுமுதலானவைகளைச் செய்யவேண்டுமென்றால் மிகுந்தசிறப்புப்பொருந்திய தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும்முடியாது அப்படியாகமின்னலைப்போற்றோன்றி க்ஷணத்திலழியுஞ்சிறியவாழ்நாளையுடைய மனிதர்களுக்கு எளிதல்முடியுமோ அப்படிமுடிந்தாலும்மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் விருட்சங்களுக்குங்கிடைக்க மாட்டாதே சுவாமியென்றுசொன்னார் மார்க்கண்டேயர்—எ-று. (உக)

ஆடுமந்தநதிதோறுமினிதெனுமத்தலந்தோறுமனந்தகாலம்
தேடுகின்றபயனுல்லவுஞ் சிவஞானம்வருந்தாமற்சிறிதுபோதி
னாடுகின்றவுறுப்பிலார்க்கு மறிவிலர்க்கும்புலையருக்குஞ்சராசரங்களாவார்க்கு [றான்
மோடுகின்றவிலங்கினுக்குமற்றெவைக்குந்தருமொன்றையுணர்ப்பாமயன்

(இ-ள்.) மனிதர்கள் ஆடுகின்ற அந்தநதிகள்தோறும் இனிதாகிய அந்தஸ்தலங்கள்தோறும் அனேககாலமாகஸ்நானஞ்செய்து தரிசனமுதலியவைகளைச்செய்ததினால் உண்டாகிய பிரயோசனமாகிய சிவஞானத்தை வருத்தப்படாமல்கொஞ்சகாலத்தில்தானே பிரதட்சணஞ்செய்தல்கும்பிடுதல் தரிசனஞ்செய்தல் முதலியவற்றிற்கு ஏதுவாகியகைகால்கண்களற்றவர்களுக்கும்விவேகசூனியர்களுக்கும் நீசர்களுக்கும்நரகத்திலவிழத்தகுந்த பாவஞ்செய்தவர்களுக்கும் சஞ்சரிக்கின்ற மிருகங்களுக்கும் மற்றுமுள்ள எல்லாச்சீவராசிகளுக்கும் கொடுக்கின்றதொருஸ்தலம் அருளிச்செய்யவேண்டுமென்றுகேட்டார்மார்க்கண்டேயர்.—எ-று. (உஉ)

இப்படியேயமனைவென்றபெருந்தவனுமிருக்கவருமிடம்பியேத்திக்
கைப்பதுமமலர்கொடுதன்காற்பதுமந்தீண்டிநலுங்கருணைபாகி [ன்னை
அப்படியேமுநிதருமொருதலமுண்டுனக்குதுமென் றமைதந்தாம்பி
மைப்படியுங்கண்டத்தா னருணகிரியினைத்துப்பாவசத்தனானன்

(இ-ள்.) எமனைச்செயித்தபெருமையாகிய தவத்தினையுடையமார்க்கண்டேயரும்மற்றுமுள்ள முனிவர்களும் இந்தப்பிரகாரமாகச்சொல்லிதோத்திரஞ்செய்து தாமரைமலர்போன்றகைகளால் நந்திகேஸ்வரருடைய தாமரைமலரொத்த திருவடிகளைதரிசித்துவந்தனஞ்செய்யுமளவில் அவர்கிருபையுள்ளவராகி நீங்கள்சொன்னபடியேமோட்சங்கொடுக்கிறதல்லம் ஒன்றுண்டு அதைச்சொல்லுகிறோமென்றுசொல்லியமாத்திரத்திற்பின்பு விஷத்தங்கியகண்டத்தையுடையபரமசிவம்எழுந்தருளியிருக்கிற அருணாசலமென்னும்ஸ்தலத்தினைத்துப்பரவசமானார்நந்திதேவர்—எ-று.

அங்கமெல்லாமயிர்பொடிப்ப கண்டுவிழியிரண்டு மதிவிப்பாய, செங்கையிணைமலர்க்குவிய மொழிதவறவெம்போது தெளிவில்லாமல், கங்கையணிசடையானே யருணகிரிப்பெருமானே கனற்கண்ணுனே, யெங்களையாளுடையானே யெனத்துதித்து விழித்ததற்பின்னைசெப்பதானுன்.

இ-ள். தேகமெல்லா மயிர்க்குச்செறியக் கம்பிதங் கொண்டு இரண்டுகண்களிலும்நின்று அருவிபோல் ஆனந்தபாஷ்பம் வரமலர்போன்ற இரண்டுகைகளும ஒன்றாய்க்குவிய வார்த்தைதடுமாற அநேகநாழிகை ஞாபகமில்லாமல் கங்கையைத்தரித்திருக்கின்றசடையையுடையவரே அருணகிரியில்எழுந்தருளியவரே அக்கினிக்கண்களையுடையவரேஎங்களையாட்கொண்டவரேஎன்று தோத்திரஞ்செய்து விழுந்தெழுந்துகொண்டு அதன்பின்பு சொல்லத்தொடங்கினார்நந்திகேசர்-எ-று உக

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சத்தியமதாமொழிவன் முத்திதருமூறது தனக்குரியதாமயிகளுண், டத்தனையுரான் பொழியவேததனை வலேநதிலொரபவளவேடிசலுவேன், சித்தியுதவுங்கௌரிதேசநக ரென்றுபெயர் தென்னருணையென்றுபெயர்சீர்,வைத்தசிவலோகநக ரென்றுபெயர் நீடுசதுர் வாயுநகரென்றுபெயரே.

இ-ள். அப்படிஸ்தோத்திரஞ் செய்தபின்பு நந்திகேசர் சொல்வார்கேளும மார்க்கண்டேயரே சத்தியமாகச்சொல்லுகிறேன் மோட்சத்தைக்கொடுக்கிற ஸ்தலமொன்றுண்டு அதற்குரிய நாமங்களோ அநேகம்அந்தனை பெயரையுஞ் சொல்லுகிறதற்கு நான்எவ்வளவுசக்தியுடையவன் ஆகிலும அவைகளில் சிலநாமமாத்திரம் சொல்லுகிறேன் சித்தியைக்கொடுக்கிறகௌரிநகரமென்றும் தேசநகரமென்றும அழகிய அருணாசலமென்றும் சிறப்புப்பொருந்திய சிவலோக நகரமென்றும் நாகரீகமிகுந்த வாயுநகரமென்றும் நூல்களில்சொல்லப்பட்ட திருநாமங்களையுடையது-எ-று. உ௭

சத்தபுரியேமுதலெடுத்தலம் யாவுமொருதட்டுமொரு தட்டதனிலே, யத்தலமுமிட்டெடுதிரா சிருக்கவளவை கட்கதிகமானதொனிநகரம, மூத்திநகரென்றுபெயர் ஞானநகரென்று பெயர்மூந்தியதவேச்சாமெனுஞ், சுத்தநகரென்றுபெயர் தென்கைலையென்று பெயர்சோணகிரியென்று பெயரே.

இ-ள்.பின்னும் நந்திகேசர்சொல்வார் சத்தபுரிகளென்கிற அயோத்திமதுரை மாயாபுரி காசி-காஞ்சிபுரி-அவந்தி-துவாரகை முதலாகிய

லாத்தாங்களையும் ஓர்தட்டிலும் அந்த அருணாசலத்தை ஓர்தட்டிலும் வைத்துநிறுக்க அந்தத்தலமொன்றுக்கேயெல்லாம் அதிகனத்தையுடையதாயிருந்து பிரகாசிக்கின்ற அந்தத்தலத்துக்கு முத்திநகரமென்றும் ஞானநகரமென்றும் முதன்மையாகிய தலேச்சரமென்றும் சுத்தநகரமென்றும் தட்சணகைலாசமென்றும் சோணகிரியென்றும் பெயராம்-எ-று

வாதமிகுகாலமழலூழியிலெ ழுபுயல் வாரைசெய்புரியாதககொஞ்சுதெ
மூகலாணமிணி நிலைமிடையூறுபசி சேரவரிதானதோட, மாதவாசனை
மாதவர்கள் பூசைபுரிமாகரமாதவாகளுமிமலர், போதிலுறை வே
தியாதொண்ணூறு கோடியோ டறுவர் பூசைபுரிதேவகாம்.

(இ-ள்). இறுதிக்காலத்திலுண்டாகிய பிரசண்டவாயுவினாலும் ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினாலும் பொங்கிவரும் சமுத்திர பிரளயத்தினாலும் யுகமுடிவில் பொழிகின்ற எழு மேகங்களினாலும் யாதொரு வாதையும் அடையாததலம் வைசித்தியம் மூகலானமிணிகள் நிலைமையாகிய இடையூறுகள் பசியிவைகள் சேராததலம் மகத்தாகிய தவசிகள் அநேகவிஷ்ணுக்களுடைய நாபிகளாகிய தாமரைமலர்களில் உண்டாகிய தொண்ணூற்றாறு பிரமாக்கள் பூசித்த தெய்வீகம்பொருந்தியதலம அருணாசலமென்னும் ஸ்தலமாம்-எ-று. (௨எ)

ஒன்றுளதுபூமிதனி லின்றுபுதிதன்றுலகு மும்பருமுயர்ந்தவெளி
யு மென்றுளதொருனது வேதமுடிமீதனிலிருப்பதகலாம லதிலோர்
குன்றுதவிலாதருவெற்புளது புண்டரிககோளகையுமூடுருவியே நின்
றுளது தென்றிசையிலென்று மழியாதுகெடு நீருலவுவாழ்வுபெறவே

(இ-ள்) இப்படிப்பட்ட சன்மமையடையஸ்தலம் ஒன்றுண்டு அந்தஸ்தலம் இன்றைக்கு புதிதாகவுண்டானதல்ல இந்தப்பூவுலகமும் மேலுலகமும் ஆகாயவெளியும் என்றைக்கு உண்டானதுகளோ அந்தகாலிலே தானே உண்டாயிருக்கின்றது நீங்காமல்வேதத்தின் முடியிலுள்ளது அந்தஸ்தலத்தில் கெடுதலில்லாததாகிய மலையுண்டு அதுதென்திக்கில் என்றும் நிலைபெற்று பிரமாண்டகோளகையையூடுருவி நிற்கின்றது நெடிய கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் வாழும்படிக்கு-எ-று. ௨அ

கலிவிருத்தம்.

ஆரிடமிராக்கதஞ்சரந்தேவதந்
தாருடைமானிடஞ் சம்புவென்றுநாம்
பேரிடுமிலிங்கமே பிறங்குமெங்கணு
மேருடைப்பருப்பத மின்கோலது.

(இ-ள்.) ஆரிஷமென்றும் ராட்சசமென்றும் ஆசுரமென்றும் தைவதமென்றும் மாலையைத்தரிக்கின்ற மானிடமென்றும் நாமங்களைப்பெற்ற லிங்கங்கள் அநேகஸ்தலங்களிலும் பிரகாசிக்கும் இந்தஸ்தலத்திலோவென்னில் மலையே லிங்கமாயிருக்கின்றது ரிஷிகளாலே பூசைசெய்யப்பட்டது ஆரிஷலிங்கம் ராட்சசர்களாலே ராட்சசலிங்கம் தேவர்களாலே தைவதலிங்கம் மானிடராலே மானிடலிங்கம்—எ-று. (௬௯)

செங்கனன்முதல்யுகந் திரேதைமாமணி
பொங்கியதுவாபரம் பொலிந்தபொன்னிறந்
தங்கியகலியுகந் தன்னிலேசிலை
யங்கமாமதன்பெய ரருணபூதரம்

(இ-ள்.) முதல்யுகமாகிய கிரேதாயுகத்தில் சிவப்பாகிய அக்கினிமலையாகவும் திரேதாயுகத்தில்மாணிக்கமலையாகவும் துவாபரயுகத்தில்மிகுந்தபிரகாசத்தையுடைய பொன்மலையாகவும்கலியுகத்தில் கல்மலையாகவுந் திருவுருக்கொண்ட அந்தமலைக்கு அருணாசலமென்னுந்திருநாமம்-எ-

கருவியாமுகக்கடைச் சொரியுங்காரினை
முருவமேழன்றியோ வொன்றுகோடியாய்
பருவமாயிரந்துளி பனையிற்பெய்யினு
மருவியாயடங்குமவ் வசலமீதினில்.

(இ-ள்.) எல்லாச்சீவராசிகளும்கருவழியும்படியுகாந்தகாலத்தில்பொழிகின்றமேகங்கள் ஏழென்கிற எண்ணிக்கையில்லாமல் ஒவ்வொன்றுகோடியாகி ஆயிரம்வருஷம் ஒவ்வொருதுளிபனைமரம்போலப்பருமனாகப்பெய்தாலும் அந்தமலையின்மேல்சிறியஅருவியாய்ச்சுவறிஅடங்கிப்போமல்லாமல் புறத்தில்வரமாட்டாது—எ-று. (௭௧)

அரியயனளவிடா தனந்தகாலமாய்த்
திரிதலினதற்கிணை செப்பலாகுமோ
சுரநதியாவதிற் சுனையினீருணை
விரவிதன்புரவிமே லேறிச்செல்லுமே.

(இ-ள்.) விஷ்ணு-பன்றியாகியும்-பிர்மா-அன்னமாகியும்- அனேககோடிகாலமாய்த்தடி அடிமுடிகாணாமல் வருந்துவார்களாதலால் அந்த அருணாசலத்துக்கு ஒன்றையுஞ்சமானமாகச்சொல்லக்கூடுமோ அஃதன்றி ஆகாசகெங்கையானது சம்பிரதாயமாகிய பெண்ணுஸ்துதிசெய்கின்ற அந்தமலையிலிருக்கின்றசுனையிலே நீருணைச்சூரியன் தேரிற்கட்டியகுதிரையானதுகளை யடைக்கும்—எ-று. (௭௨)

வெண்மைசேர்புயலத னடியிற்போவதை
வெண்மதிமயிலைமீ திருப்பதொக்குமா

நன்மைபெர்கார்த்திகை விளக்கையேற்றுதல்
மன்னமகன்மகுடமாணிபிறங்கென்றுமே.

(இ-ள்.) வெள்ளைநிறமாகியமேகங்கள் அந்தமலையடிவாரத்தில்சேர்ந்தால்யாவராலும் எண்ணப்பட்ட கைலாசகிரிமேல்அந்தமலையிருக்கிறது போலாம் குளிர்ச்சிபொருந்திய கார்த்திகையாதத்தில் கார்த்திகாதீபம அந்தமலைமேல்ஏற்றினால் பூமிதேவியினுடையகிரீடத்தில்பதித்தரத்தினம்போலாம—எ-று. (௩௩)

ஆன்றமாறிசை முகனொடுமாலுநன்
மன்றல்சேர்ந்திடுமலை வடிவுகொள்கையா
னன்றுகமமருகனு மாமமோர்குல
மென்றுளமகிழ்ந்ததே மிமையபூதரம்.

(இ-ள்) முற்காலத்தில் பிர்மாவினாலும் விஷ்ணுவினாலும் அறியப்படாத பரமசிவன்கீர்த்திபொருந்திய அக்கினிமலையுருவங் கொண்டதினாலே இமோதபாவதாரசனென இத்தனைகாலமவனுக்கும்வேறுசாதியாயிருந்தநம்முடையமருமகன்நம்முடையசாதியாய்ப்போய்விட்டானென்றுமனதுசந்தோஷித்தான்-எ-று. (௩௪)

பன்னிருதிங்களும பரிதியானது
மன்னியமதியமும் வலமதாய்வரு
மந்நிலையுரைக்கவென் னறிவுபோதுமோ
வுன்னியவாசையா லுரைக்கலுற்றனன்.

(இ-ள்.) பன்னிரண்டுமாதமும்சந்திரசூரியர்கள்மகாமேருவைவலஞ்செய்தல்போலப்பிரதட்சணஞ்செய்துவருவார்களென்றான் அந்தஅருணாசலத்தினது பெருமையைச்சொல்வதற்குஅற்பமாகியஎன்னுடையபுத்தி போதுமோ ஆனாலுஞ்சொல்லவேண்டுமென்று நினைவுகொண்டபத்தியினால் சொல்லததொடங்கினது—எ-று. (௩௫)

அற்கமாமலையுள தடுத்தகீழ்த்திசை
நற்கணாயிரத்தவ னண்ணிவாழ்த்துவன்
தெறகிலேயுளதுபுத்தேளிர்மாமலை
பொறலைவேந்தசன்றினம் புகழ்ந்துபோற்றுவான்

(இ-ள்.) அருணாசலமென்னு மலைக்கு அடுத்த கிழ்ப்பக்கத்தில் அர்க்கமலையென்று ஒருமலையுண்டு அதில ஆயிரங்கண்களையுடையதேவேந்திரன் இருந்துகொண்டுசுவாமியை ஸ்தோத்திரஞ்செயவான் அவ்வருணகிரிக்கு அந்தத்தென்பாரிசத்தில் தெய்வமலையென்று ஒன்றுண்டு அதில்சிவததைகளையுடைய யமன்புகழ்ந்துகொண்டு வணங்குவான்—எ-று. (

மேற்றிசைத்தண்டமாவிலங்கலுண்ட திற்
சேற்றிசைவருணன் முன்செங்கைகூப்புவன்

தோற்றிடுப்வட திசைச் சூலமால்வரை
போற்றிப்வளைகையான் பொருந்திவாழ்ந்துவான்.

(இ-ள்.) இந்த அருணாசலமென்னுந் திருமலைக்குமேல்பாரிசத்தி தண்டலையென்று ஒருமலையுண்டு அதில் மகரவாகனத்தி லேறுகிறவ ணராஜன சிவத்தைக்கூப்பி அந்தமலையை வணங்குவார் வடபா சத்தில் சூலமலையென்று ஒருமலையுண்டு அதில் சகலாலும்போற்றப்ப டகுபேரனவன் இருந்துக்கொண்டு அநசெய்வான்-எ-று. (கூ

மற்றுநால்வரைகளில் வாயுதீயவ
னெற்றிசேர்விழியவ னிருதிபோற்றுவான்
சுற்றுவமலைதொறுஞ் சுரருஞ்சித்தரு
முற்றசீரவசுக்களு முறைந்துபோற்றுவார்.

(இ-ள்) மற்றநான்குதிக்குகளிலும் இருக்கிறமலைகள் நான்கிலும் இ ருந்துகொண்டுவாயு அக்கினிஈசானன் நிருதி யிந்தநாலவர்களும் வண குவார்கள் அவைகளைச்சுற்றியிருக்கிற மலைகளிலெல்லாம் தேவர்க சித்தர்களும சிறப்புபொருந்திய அஷ்டவசுக்களும் இருந்துகொ டுவணங்குவார்கள்-எ-று. (கூஅ

தன்னையேநிகருமத் தலத்திலேபுவி
யன்னையாதவம்புரி தகிகமாகவே
யென்னையாளுடையவ னிடங்கலந்தவை
பின்னையுமந்நலம் பேசலாகுமோ,

(இ-ள்.) தனக்குத்தானேஒப்பாகிய அந்தஸ்தலததில் லோகத்துக்குத் தாய இப்பார்வதியம்மை மகத்தாகிய அரியதவஞ்செய்து என்னையாட்கொண்டபரமசிவனுடைய இடப்பாகத்திற்சேர்ந்தாள் ஆனபடியினாலேஅந்த அருணாசலததின்பெருமையைசசொல்லவேண்டுமோ-எ

தன்னிகர்மந்திரம் புவனந்தத்துவம்
வன்னமாயவிளங்குமவ் வனாதைமாலய
னன்னமுமேனமு மாகிநாடிடு
மின்னமுமளவிடா திடும்படீசகிஞர்

(இ-ள்.) தனக்குத்தானேசமானமாகிய மந்திரம்புவனம் தத் இவைகளினுருவமாய விளங்கும் அருணாசலத்தை விஷ்ணுபிரமா வரும் பன்றியும் அன்னமுமாகித்தேடி இத்தன்மையையுடையதென் று அறியக்கூடாமையினாலேலகத்துக்குடையசர்வத்தைநீக்கினார்கள்-எ-.

மருவியபெரும்புகழ் வச்சிராங்கத
னருணைவலபுரித் தமலனையினன்
கருவியலாதான் காந்திசாலியென்
றிருவரும்பாதிதியெயதினாதில்.

(இ-ள்.) மகத்தாகிய கீர்த்திபொருந்திய வச்சிராங்கதபாண்டியன் அருணாசலத்தைப் பிரதட்சணம் வந்ததினாலே தன்னுடைய பாவத்தை நீங்கினான் பெருமைபொருந்திய கலாதரன் காங்கிசாலி இந்திரயிந்வரும அந்தஸ்தலத்தைவலம்வந்து மோட்சத்தையடைந்தார்கள்-எ-று. (சக)

எழுசீரடியாசிரியவிருத்தம்

ஆதியாமிவர்களொடங்கியின்றளவுக்கனேகருண்டருணையைநினைந்தும்-காதலாலுரைத்துங்கேட்டுமுன்கண்டுங்கால்களால்வலமதில்செய்தும் நீதியாயிருந்துநெறியினுண்டந்நெடுங்கயம்படிந்தறம் புரிந்துஞ் சோதிதாடொழுதும் பணிவிடைசெய்துந் துளக்கிலா மூத்திபெற்றிருந்தார்.

(இ-ள்.) சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத் தொடங்கி அன்று முதல் இன்றையவரைக்கும் அனேகம்பேர் அருணாசலத்தைநினைத்தும் ஆசையோடுஸ்தோத்திரஞ்செய்தும்கேள்விப்பட்டும் தரிசனஞ்செய்தும்கால்களாலே பிரதட்சணஞ்செய்தும் அதில்நீதிபொருந்தியவேதமார்க்கத்தை அநுசரித்துக்கொண்டிருந்தும் மகத்துவம்பொருந்திய தீர்த்தங்களிலேமுழுகியும் தருமங்களைச்செய்தும்சோதிசொரூபமாகிய சிவனைத்தொழுதும் திருப்பணிசெய்தும் கெடுதலில்லாத மோட்சத்தை பெற்றிருந்தார்கள்-எ-று. (சஉ)

அப்பதிதமிழ்நாட்டுள திடைபெண்ணையாறுசெய்யாறுபிங்கலையாஞ் செபபிபகமலைநதி சுழிமுனையாஞ்செய்த தொன்றுயிரம்பலமாமுப்பத்துமூன்றுகோடிதேவர்களுமுனிவருந் தவஞ்செயவாரதற்கோர் ஒப்புவேறில்லையிமயாநாட்டிடத்துமும்பாநாட்டிடத்துமென்றுரைத்தார்,

இ-ள். அந்த அருணாசலஸ்தலமானது தமிழ்நாட்டின்கண்ணிருக்கிறது அந்தப்பதிக்கு வலப்பக்கத்திலே வருகிறபெண்ணையாறு இடையென்னும்நாடியாகும் இடப்பக்கத்திலே வருகிறசெய்யாறு பிங்கலையென்னும்நாடியாகும் கமலையென்கிறநதி சுழிமுனையென்னும நாடியாகும் அந்தநதிகளில் ஸ்நானஞ்செய்தால் ஒன்றுக்கு ஆயிரம்பங்குபலன்வரும் முப்பத்துமூனகோடி தேவர்களும்முனிவர்களும் அந்தஸ்தலத்தில்தவஞ்செயவார்கள் அதற்குச்சமானம இந்தலோகத்திலும் மேலுலகத்திலும இல்லையென்றுசொன்னார் நந்திகேசுரர்-எ-று. (சரு)

அற்றமிலவன்சொலருணையின்சிறப்பாலகமகிழ்ந்துருகியமுனிவன் மற்றுளதலத்திலதிகமென்றுரைத்தவாய்வமையமணங்கொளாதுவைப்பார்; இற்றதீவுடையேனுதலாலொருசொற்றெளிந்திலேனெனச்சொனு

னைதற் குறுமற் றுளமுணர்ந்தான்மொழியெனமொழிந்தான்முனிவனு ம வர்க்கிதைமொழிவான்.

(இ-ள்.) சிவபத்தியிற் சோர்வில்லாத நந்திகேசுரர் சொல்லப்பட்ட அருணாசலத்தின் மகான்மியத்தினாலே இருதயமகிழ்ந்து உருக்கத்தை யடைந்த மார்க்கண்டேயர் மற்றசிவஸ்தலங்களைப் பார்க்கிலும் அருணா சலம் அதிகமென்று சொன்னதைமனதில் ஒப்புக்கொள்ளாமல் சொல்வா ர் சுவாமீ நான் சிறிய அறிவையுடையவனானபடியினாலே நீங்கள் திருவுள ம்பற்றிய தானன்றாயது தோன்றவில்லையென்று சொல்ல அதுகேட்டுச்சக லத்தையும் உள்ளத்திலுணர்ந்த நந்திகேசுரர் உமக்குண்டான சந்தேகத் தைசொல்லுமென்றுகேட்க மார்க்கண்டேயர்சொல்வார்-எ-று. (சச)

தில்லையைக்காணக்காசியிலிறக்கச்சிறக்குமாரூர்தனிற்பிறக்க, வெல் லையில்பெருமையருணையை நினைக்கவெய்தலா முத்தியென்றுரைத்தீர். சொல்லரிதாலுதலங்களுந் தம்மிலொக்குமென்றுரைத்திடாதடிகேளல் லிருந்தருணை பதிகமென்றுரைத்தருளெனவருள்செய்வானவனும்.

(இ-ள்.) சிதம்பரத்தைத் தரிசனஞ்செய்தாலும் காசியிலே தேகத் தைவிட்டாலும் சிறப்புள்ள திருவாரூரிலேபிறந்தாலும் அளவில்லாதபெ ருமையுடைய அருணாசலத்தை நினைத்தாலும் முத்திகிடைக்குமென்று அருளிச்செய்தீர் இதனாலுஸ்தலங்களையும் ஒன்றுக்கொன்று சமானமெ ன்று திருவுளம்பற்றாமல்சுவாமி அல்லிமலர்களையுடைய தடாகஞ்சூழ்ந் த அருணாசலத்தைமாத்திரம் அதிகமென்றுகட்டளையிட்டதை அனுக்கி ரகஞ்செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயர்கேட்க அந்தநந்திகேசுர ரும அருளிச்செய்கிறார்-எ-று. (சரு)

இறந்திடுந்தொழிலும்பிறந்திடுந்தொழிலுமெண்ணியபடியவைமு டியா, பறந்திடுமவைக்குஞ்சிலவிலங்கினுக்கும்பாதவமுதலோருயிர்க்கு, நிறைந்தபுன்வீசரந்தனக்குமக்கு நிருத்தமண்டபத்தொழுகோரதற்கி கழ்மயனாசிலாசிலாக்கெளிதாமல்லவர்க்கரியதாமதுவே.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே ஒருவன் இறக்குந்தொழிலும் பிறக்குந்தொழிலும் நினைத்தபடிமுடியாது அது இருக்கட்டும் பட்சிஜா திகளுக்கும், மிருகங்களுக்கும் விருட்சமுதலாகியஜீவர்களுக்கும்புன் மைநிறைந்த நீசருக்கும், குருடருக்கும், சபாபதியினது நிருத்தசபையை தரிசனம்பண்ணக்கூடாது பூர்வஜன்ம புண்ணியத்தினாலே அந்தச்ச பைக்குப் போய்க்காணத்தக்கதவர்களாகிய சிலர்க்குமாத்திரம் கிடைக் கும் மற்றவர்களுக்கு அரியதாகும் அந்தஸ்தலம்-எ-று. (சசு)

குண்டகர்பதிதருக்கோளகர்புலையர்கொலைஞர்பிணிக்குறைந் தோர், கண்டகர்நெடுந்தூரத்தினிலிருப்போர்கருணைசேரருணை-யூர்

ரத எண்டகவொருகா லினைத்திடமுத்தி யிவரலால்விலங்கு புள்மரங்
கள்முண்டகமுதலாயினவுமன் காணமுளைத்திடமுத்தியேபெறுமால்

(இ-ள்.) ஸ்திரீயானவள் தன்கணவனுக்கன்றிவேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டகர்களுக்கும், பாவிகளுக்கும் விதவை பெறப்பட்ட கோளகருக்கும்-நீசருக்கும்-கொலைசெய்கிறவர்களுக்கும் அவையவங் குறைந்தவர்களுக்கும்-தீமைசெய்கின்றவர்களுக்கும்-பெரும்பாதகத்திலிருப்போர்களுக்கும்-கிருபைபொருந்திய அருணசலஸ்தலத்தை நன்றாக ஒருதரமினைக்க முத்தியுண்டாகும் இவர்களல்லாமல்மிருகங்கள்- பட்சிகள்-மரங்கள்-தாமரைமுதலாகிய கொடிபூண்டுகளும் அந்தவூரில் முளைத்தால்முத்தியையடையும்-எ-று. (௬௭)

சிலையெலாமிலிங்கமது சிவலோகந்தேவர்பாதவங்கள்பாதவங்க
ளலையுலாம்புனல்கள்சடையுலாங்கங்கையருந்துமுணவமாருண்ண முதா
மூலவியேவருதல்புவிவலம்வருதலுரைத்தசொல்சுருதியாமுறங்கல
மலைவருசமாதியாகுமத்தலத்தைமானுமோமற்றொருதலமே.

(இ-ள்.) அந்தஸ்தலத்திலிருக்கிற சிலைகளெல்லாம் லிங்கங்களானபடியினாலே அதுசிவலோகமாகும் அந்தஸ்தலத்திலிருக்கிற விருட்சங்களெல்லாம் கர்ப்பகவிருட்சங்களாகும் அந்தஸ்தலத்திலிருக்கிற அலைபொருந்தியநீரெல்லாம் சுவாமியின்சடையிலிருக்கிறகங்கையாகும், அந்தஸ்தலத்திலிருக்கிறவர்கள் சாப்பிடுகிறவுணவுகளெல்லாம் தேவாமிர்தமாகும்-அந்தஸ்தலத்தில் சஞ்சரித்தால் பூமிப்பிரதட்சணஞ் செய்ததாகும்-அவ்வூரில்சொல்லும்வார்த்தைகள் வேதமாகும்- அந்தஸ்தலத்தில் நித்திரைசெய்தால்நிஷ்டைகூடி சமாதியிருத்தலாம் ஆனபடியினாலே அதற்குமற்றொருஸ்தலம்சமானமாகுமோ-எ-று. (௬௮)

முத்தழல்புரிந்தோர்கண்மறைதெளிந்தோராவகைவேள்வியுமுடித்தோ, ரொத்தவம்புரிந்தோ ரெவ்வறஞ்செய்தோ ரெண்வகை யோகியரெனினு மத்தலநினையா தவர்க்கிலைமுத்தியாதலா லயாவரானிடத்துஞ்சுத்தமானிடராய்ப் பிறந்ததைநினைத்தத துவக்கிலாமுத்திபெற்றிருப்பார்.

(இ-ள்.) காருகபத்தியம்-ஆகவனீயம்-தட்சணாக்கினியம் என்கிற மூன்றக்கினியைவளர்த்தவர்களும்-ருக்குயசுர்-சாமம் அதர்வணம் என்னுநான்குவேதங்களை யுணர்ந்தவர்களும்-பிரமயாகம்-தெய்வயாகம்-பூதயாகம்-பிதிர்யாகம்-மானுடயாகம்-என்கிறஐவகை யாகங்களையு நிறைவேற்றினவர்களும் இதுதன்மையாகிய தவஞ்செய்தவர்களோராப்படிப்பட்ட தருமஞ்செய்தவர்களும்-இயமம்-நியமம்-ஆசனம்-பிராணாயாமம் பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதி என்னப்படுகின்ற அஷ்டாங்க

யோகஞ்செய்தவர்களுமாகிய எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அந்த அருணாசலத்தைநினைக்கவிட்டால் அவர்களுக்குமுத்தியில்லை ஆனபடியினாலேதான் தேவர்களாய்ச் சொர்க்கலோகத்திலிருந்தவர்களுமஞ்ஞானமுள்ள மானிடராகப் பூமியிற்பிறந்து அந்த அருணாசலத்தைத்தியானஞ்செய்துகெடுதலில்லாதமுத்திநிலையையடைந்திருப்பார்கள். (சுகூ)

பொருவிலாசுவர்க்கத் தமிர்தமுண்டிருப்போர் போகபூமியைத்த
ணிபுரப்போர்,அருணைமாநகரிற்கிருமியாயப்பிறப்பததிகமென்றுநாங்கொ
ள்வார்.மருவுமப்பதியிற்பிறப்பது நூறு மகம்புரிந்தவர்க்கலாற்கிடையா,
திருவருள்படைத்தார்க்கெளிதலான் மற்றதேவர்கள்யாவர்க்குமரிதே.

(இ-ள்.) ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில்-நரை-திரை-மூப்புஉண்டாகாதபடி அமிர்தமுண்டிருப்போர்களாகியதேவர்களும் போகத்தையனுபவித்தற்குரிய அந்தச்சொர்க்கமுதலானலோகங்களைத்தனித்தனியாளுகின்ற தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர்களும் அருணாசலஸ்தலத்தில் கிருமியாயப்பிறக்கிறது சொர்க்கத்தின்பதத்தை அனுபவிப்பதைப்பார்க்கிலும் அதிகமென்றுபிறப்பதற்கு ஆசைப்படுவார்கள் தெய்வத்தன்மைபொருந்திய அந்தப்பதியில் பிறக்கிறது நூறுயாகஞ்செய்தவர்களுக்கு அல்லாமற்கிடையாது சுவாமியினுடையகிருபைபெற்றவர்களுக்குக் கிடைக்கும் அவர்களையன்றிமற்றதேவர்கள்முதலானமகத்துவமபொருந்தியயாவர்க்கும் அப்படிப்பிறக்கிறது கிடைக்கமாட்டாது-எ-று.

வெற்றிரும்பிடத்தில் செம்பில்வெண்கலத்தில் வெள்ளியில்வெள்
ளியபொன்னிற், குற்றமொன்றில்லாக்குயிற்றியமணிபோற்குலவியசி
வனிருந்திடுவன், மற்றையதலத்தி லருணையென்றுரைக்கும் வளம்பதி
தனிலெழுந்தருள்வன், பொற்றகட்டிடத்து மணியெனவுரைத்தான் பு
னிதனாகியவருணந்தி.

(இ-ள்.) சொற்பவிலைபெற்ற இரும்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளையபொன்னிலும் பதிக்கப்பட்ட யாதொருதோஷமில்லாத மாணிக்கரத்தினம்போல் மற்றஸ்தலங்களிலெங்குமிருக்கிறபரமசிவன் எழுந்தருளியிருப்பார்பொன்னினாற்செய்த தகட்டில் பதிக்கப்பட்ட அந்தரத்தினம்போல அருணாசலமென்றுசொல்லப்பட்ட வளம்பொருந்திய ஸ்தலத்தில் எழுந்தருளியிருப்பாரென்று பரிசுத்தமாகிய நந்திகேசுரர் திருவுளம்பற்றினார் ஆனபடியினாலே எல்லாஸ்தலத்திற்கும் இது அதிகமாயது-எ-று.

கண்ணினால் விளங்குந் திருமுகமுகத்தாற் கரியகண் விளங்குமவ்வி
ரண்டின், பண்ணினால் விளங்குமுடலெலாமதைப்போற் பரமனால் விள
ங்குமவ்வருணை, யண்ணறன் விளங்குமருணைமாநகரால மலனோடருணை
யாநகரா, லெண்ணிலாப்பதிக ளெலாவகனும் விளங்கு மெவற்றினுஞ் சி
றந்ததென்றிசைத்தான்.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே கண்களிருக்கிறதினால் முகம் பி
ரகாசிக்கிறது முகத்தினிடத்திலிருக்கிறதினால் அந்தக்கண்கள் விளங்கிக்
கொண்டிருக்கும் இந்த இரண்டினுடைய சேர்க்கை அழகினாலே தேகமெ
ல்லாம் விளங்கும் இவைபோல பரமசிவனாலே அருணாசலம் சிறப்படைந்
திருக்கும் அந்த அருணாசலத்தால் சுவாமியும் அதிக மகிமையுடையவரா
ய் விளங்குகிறார் அந்தஸ்தலத்தினாலும் அதில் எழுந்தருளியிருக்கிற சுவா
மியினாலும் எண்ணிக்கையில்லாத எல்லாக்ஷேத்திரங்களும் சிறப்பாய் வி
ளங்கும் ஆனபடியினாலே எல்லாஸ்தலங்களிலும் அது சிறந்ததென்று
திருவாய்மலர்ந்தருளினார்-எ-று. (௬௨)

இதனால் எல்லாஸ்தலங்களும் உடலாகவும், அருணாசலஸ்தலம் மு
கமாகவும் அதில் சுவாமி கண்ணாகவும் சொல்லப்பட்டது.

வீசலரிலைமெய் குளிர்ந்திடக்கொடியின் வேரினீர் சொரிந்திடுமது
போற் பூசனை யருணைநகரிலே சிறிதும் புரையறநடக்குமேயானாற் காசி
முதலெத்தலமெலாம் பூசைகளும்பெற நடந்ததாமில்லையே, லீசவாழத்
தலமெலாம் பூசை யியற்றிலெனியற்றிடாதிருந்தென்.

(இ-ள்.) ஒருகொடியினது வேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அ
தினிடத்திலிருக்கிற மணம் வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும் குளிர்ச்சியை ய
டையும் அதுபோல் அருணாசலஸ்தலத்தில் சுவாமிக்கு எவ்வளவாகிலு
ம்பூசை குறைவில்லாமல் நடக்குமானால் காசிமுதலாகிய எல்லாஸ்தலங்
களிலும் மேன்மையாகப்பூசை நடந்ததாகும் அந்த திருவண்ணாமலையில்
பூசை நடவாவிட்டால் மற்றஸ்தலங்களில் நடந்தாலென்ன நடவாவிட்
டாலென்ன ஒருபயனுமில்லை-எ-று. (௬௩)

நிலந்தொழுமருணாசலந்தனிலிருந்து வேறுஞ்சினிலையமாயப் பிரிந்
தோர், நலந்தனைவிரும்பி நடந்தவர் முன்செய் தவங்களுந் தங்குநற்றவ
ரூம், குலந்தனிலுதித்தோராயினும் புலையர் குணத்தராயினுங் கோடி
ய, குலந்தவருயிரோடிருக்கினுமதற்கோர் குவலயமிசை பவமறுமெய்தா
க்கும்.

(இ-ள்.) உலகத்தார் போற்றுகின்ற அருணாசலஸ்தலத்திலிருந்து
இதைவிட உயர்ந்தஸ்தலங்கள் இருக்குமென்று மனதில் சந்தேகங்கொ
ண்டுபிரிந்து ஒருக்ஷேத்திரத்தை நாடி நடந்தவர்களுக்கு அவர்கள் அ
த

ற்குமுன் செய்யப்பட்டதவங்களும், தருமங்களும், பிரயோசனப்படா துகள அவர்கள்நல்லகுலத்திற்பிறந்தவர்களானாலும் பின்னுமவர்கள்நல்ல குணங்களையுடையவர்களானாலும் கொடியகுணத்தாராவார்கள் அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள் அந்த அருணாசலத்துக்கு வேறேருஸ்தலங்களைச் சமானமாகச்சொன்னாலும் இந்தத்தோஷங்களெல்லாம் உண்டாகும்-எ-று. (௫௪)

என்றுதாணுவினைச் சிறப்பொடுமுனிவர்க்கேதுவோடெடுத்தினிதியம்பிக், கன்றுமானுமழுவுஞ் சூரிகையுந்தரித்த கடவுளன் திருந்தணலவனைச், சென்றுசென்னுறைந்தி நெக்குநெக்குருகிச் சென்னிமேற் செங்கைகளேற்றிக், ஒன்றுமானந்தப்பெருங்கடலிடைப்புக்குணர்ச்சியாய்முனிவனிருந்தான்.

(இ-ள்) இந்தப்பிரகாரம் அருணாசலஸ்தலத்தினுடைய பெருமையை ஏதுவோடுமுனிவர்களுக்கு இனிதாயெடுத்து அருளிச்செய்துமான்கன்றுமழு உடையவர் இவைகளைத்தரித்த நந்திகேசுரராமவர் களிப்புற்றிருந்தார் அந்தநந்திகேசுரரைப்பலதரம் வந்தனஞ்செய்து நெக்குவிட்டுருகிச் சிரசின்மேல் சிவந்தகைகளைக்கொண்டுகூப்பி ஒன்றுபட்டவராய் ஆனந்தசமுத்திரத்தில்முழுகி தன்னைமறந்தவராயிப்பின்பு ஞாபகம்வந்து இதனைச்சொல்லுவார்மார்க்கண்டேயர்-எ-று. (௫௫)

முதலாவது.

# திருநகரச்சருக்கம்.


முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௭௧.

# திருவண்ணாமலை



பிர்மா-விஷ்ணு இருவரும் பரமசிவத்தினது அடிமுடியைக்காணுதல்.



உ

சிவமயம்.

இரண்டாவது

# திருமலைச்சருக்கம்.

கலிநிலைத்துறை.

எந்தையேயரு ணந்தியேயடியவர்க்கெளியாய்
சிந்தையானது மகிழ்ந்தனனருணையின்சிறப்பா
லந்தமாக்கரிடத்திலே சிவனழல்வடிவாய்
வந்தவாறுடனது மலையாகியவகையும்.

(இ-ள்.) அருணாசலஸ்தலத்தினது மகிமையைக் கேள்வியுற்றமார்க்கண்டேயர்சொலவார்கும்முடையஆண்டவரே அடியேனுக்கு அருள்செய்த நந்திகேசுரசுவாமியே அடியார்களெளியவரே நீர்அருளிச்செய்ததிருவண்ணாமலையென்னும் ஸ்தலத்தினதுமகிமையினால்மனங்களிப்படைந்தேன் அப்படிப்பட்டஸ்தலத்தினிடத்திலே பரமசிவனானவர் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும் அதுபின்பு மலையுருவமானதும்-எ-று. (க)

அம்மலைச்சுடரடி தலைதெரிகிலாதயன்மால்
விம்மலுற்றது மவர்க்கருள்செய்ததும விளம்பாய்
கைம்மலைக்கட கரியுரிபுனைந்திடுங் கைலை
செம்மலைத்தொழுஞ் செல்வனேயெனவவன்செப்பும்.

(இ-ள்) அந்தஅக்கினிமலையினது அடியும்முடியும்அறியக்கூடாமல்பிரமாவும்விஷ்ணுவும வருத்தப்பட்டதும்பின்புசுவாமி அவர்களுக்குஅநுக்கிரகஞ்செயததும்திருவுளம்பற்றவேண்டும் கைபொருந்திய மலைக்கு ஒந்ததாயாததைபுடைய யானையினதுசர்மத்தைத்தரித்த

ளிய கைலாசவாசராகியபரமசிவனைவணங்கும்படியான செல்வத்தை யுடையவரே யென்றுசொல்ல அந்தநந்திகேசுரர் சொல்லத்தொடங்கி னார்-எ-று. (உ)

பஞ்சபாதகமொருவனப்பதியிலேபண்ண
னெஞ்சினானினைத்திடினு நினைத்ததேபாமாய்த
தஞ்சமாகியமுத்தியாமெனமறைசாற்று
மஞ்சொலாலதுமொழிந்தபேர்க்கென்னபேறரிதே.

(இ-ள்.) ஒருவன் அந்த அருணாசலஸ்தலத்திலே பஞ்சபாதகங்களைச்செய்யவேண்டுமென்றுநினைத்தாலும் அப்படிநினைத்ததே மேற்பட்டபுண்ணியமாகிஅதனால்பற்றுககோடாகிய முத்தியுண்டாகுமென்று வேதங்கள்முறையிடும் அன்பையுண்டாக்கும் நல்லசொற்களினாலேஸ்தோத்திரஞ்செய்பவர்களுக்கு என்னபேறுகிடைக்கமாட்டாது என்றவாறு. (௩)

ஆகையாலுமக் கன்றியேயெமக்குமுண்டதிகஞ
சோகமே கங்கள்தவிர்ப்பவனொருபரஞ்சுடராய்
மாகமூடுறவளர்ந்ததுமாலயாககாகப்
போகலிங்கமொன் றானதுமொருவகைபுகல்வேன்.

(இ-ள்.) ஆனபடியினாலேமார்க்கண்டேயரே இந்தமகான்மியத்தைக்கேட்கிறஉமக்கேயல்லாமல்எனக்கும் அதிகபலனுண்டாகும் துக்கத்தையும் மோகத்தையும் நீக்கிவிடுகிற சிவன் ஒப்பற்ற பெரியசோதிசொரூபமாய்ப் பிரமாவிஷ்ணு இவர்களுக்காக ஆகாசம்அளாவிவளர்ந்தும் சர்வத்திரர்க்கும் போகத்தைக்கொடுக்காநின்ற லிங்கமென்றுசொல்லும்படி திருவுருக்கொண்டதும் எனக்குத்தெரிந்தஅளவில் கொஞ்சம் சொல்லுகிறேன்-எ-று. (௪)

ஒடுங்குநாளினிலயனரியுருத்திரன்மகேச
னொடுஞ்சதாசிவன்விந்துநாதஞ்சத்திநெறியே
யடங்கிடும்பராசிவந்தனிற்பரமசிவமனைத்துங்
கடந்ததத்துவ முடிவிலேநின்றதுகருதி.

(இ-ள்.) சர்வசம்மாரகாலத்தில் முறைப்படிச் சகலஉயிர்களும் பிரமாவிடத்திலொடுங்கிப் பிரமாவிஷ்ணுவிடத்திலொடுங்குவார் விஷ்ணுமகேசுரனிடத்திலொடுங்குவார் மகேசுரன் சதாசிவனிடத்திலொடுங்குவார் சதாசிவம் விந்துவினிடத்திலொடுங்குவார் விந்துநாதத்தினிடத்திலொடுங்கும் நாதம் சத்தியினிடத்திலொடுங்கும் சத்திபரமசிவத்திலொடுங்கும் அந்தபரமசிவம் திருவுளங்கொண்டு எல்லாங்கடந்த தத்துவமுடிவிலேநின்றது-எ-று. (௫)

பரசிவத்தினில்வருபராசத்திபாற்குடிலை
விச்சிபரா தத்துவமடைவிலேவிரிந்த

மருவுமைவரு வொடுங்கியமுறையிலேவங்கா
ரரிமகன்படைத்திடுவதுநினைந்தனனகததில்.

(இ-ள்.) அப்படியெல்லாம் ஒடுங்கினகாலத்தில் தனியாகிநின்ற பரமசிவம் உலகம் உண்டாக்கவேணுமென்று திருவுளங்கொண்ட அளவில் அந்தசிவனிடத்திலேதோன்றிய பராசத்தியினிடத்தில் குடிலையென்னுஞ்சத்திதோன்றியது அதில் பெருமைபொருந்திய மறைதத்துவங்கள் முறையே உண்டானதுகள் பஞ்சகிருத்தியங்களுக்குரிய பிரமா விஷ்ணு ருத்திரன் மகேசுரன் சதாசிவன் முன்னே ஒடுங்கிய முறையே உண்டானார்கள் விஷ்ணுவினுடைய புத்திரனாகிய பிரமா லவ்வுலகத்தைச்சிருஷ்டிக்கிறதற்கு மனதில் எண்ணினார்-எ-று. ()

மரிசியங்கிரன் புலத்தியன்புலகனுண் மறையோர்
கிருதுவத்திரிசனபதி யெழுவருங்கிளைத்தா
ருரியதக்கனும வலப்பதப்பெருவிரலுதித்தான்
பிருகுமார்பினு மறத்திறைமுகத்தினும்பிறந்தார்.

(இ-ள்.) அப்படிபிரமா நினைத்தவுடனே மரீசி-அங்கிரன்- புலஸ்தியர்-புலகர்-கிருது-அத்திரி-சனபதியென்கிற எழுரிஷிகளும் பிறந்தார்கள் தக்கன் வலதுகால் பெருவிரலில் பிறந்தான் பிருகுமார்பினிடத்திற பிறந்தான் தருமதேவதைமுகத்திறபிறந்தது-எ-று. (எ)

உன்னுமைந்தரின் மரீசிபாற்காசிபனுதித்தான்
பன்னுதக்கனு மைம்பதுபெண்களைப்பயந்தா
னன்னகாசிப னவர்பதின்மூவரையணைந்தான்
முன்னளாகியவதிதிபாலிமையவர்முளைத்தார்.

(இ-ள்.) பிரமாவினிடத்திறபிறந்த பிள்ளைகளாகிய எழுவரில் மரீசிரிஷியினிடத்தில் காசிப ரிஷிபிறந்தார் தக்கனென்பவன் ஐம்பது பெண்களைப்பெறறான் அந்தஐம்பதுபெண்களில பதின்மூன்று பெண்களைக் காசிபர்விவாகஞ்செய்தார் மூத்தவளாகிய அதிதிவயிற்றில முப்பத்துமுக்கோடி தேவர்களும்பிறந்தார்கள்-எ-று. (அ)

இருமைசேர்திதி யிரணியனிரணியாக்கர்களைத்
தெரிவரின்றனள் சிறப்புறுந்திதியெனுமிளையாள்
தருணமைந்தரி லிரணியன்பிரகலாதனனோ
டருமைமைந்தர்க ளவரைப்பயந்தனனவருள்.

(இ-ள்.) அதன்பின்பு அதிதிக்கு இளையவளாகிய சிறப்புப்பொருந்திய திதியென்பவள் இரணியன் இரணியாட்சசனென்கிற இரண்டுபேரையும் பிரசவித்தாள் இந்தஇருவரில் இரணியன் பிரகலாதன்முதல் ஐந்துபிள்ளைகளைப்பெறறான்-எ-று.

பிரகலாதனன் றவத்தினால்மூவரைப்பெற்றா
னொருமூவர்மைந்தரில் விரோசனன்மாவலியளித்தான்
மாவுமாவலி வாணனென்றொருவனைப்பயந்தா
னானருச்சனைபுரிந்தவ னயன்றொழவிருந்தான்.

(இ-ள்.) அந்தப்பிரகலாதனன் தவத்தினாலே மூன்றுபிள்ளைக ளைப்பெற்றான் அந்தமூவரில் விரோசனனென்பவன் மாவலியென்பவ னைப்பெற்றான் மாவலிவாணாசூரனைப்பெற்றான் அந்தவாணாசூரன் பரமசிவனைப்பூசித்துப் பிரமாதொழுபடியாக வாழ்வு பெற்றிருந்தான் என்றவாறு. (௰)

தனுவளித்தவன் சம்பரன்முதலினோர்பதின்ம
ரனையதானவர்ப் பெற்றனன்சிங்கிகையனங்கு
பணியிராகுவே முதலொருநால்வரைப்பயந்தாள்
பினையளாமகொரு மூன்றுபேரசுரரைப்பெற்றாள்.

(இ-ள்) மலைகளினுடைய சிறகையறுக்கிறதற்குத் தேவேந்திர னுக்குத கன்முதுகெலும்பைக்கொடுத்துத தேகத்தைவிட்டவராகிய ததிசிரிஷியெனபவர் சமபரன்முதலாகிய பத்து அசுரர்களைப்பெற்றா அந்தப் பத்துப்பேரில் சிங்கிகையென்பவள் இராகுமுதல் நாலுபிள் ளைகளைப்பெற்றாள் அவளுக்கு இளையவள் மூன்றுபேர்அசுரரைப்பெ ற்றாள்-எ-று. (௰௧)

காலகேயர்களறுவரைப் பயந்தனள்காலை
காலநீள்சிறைக் கருடனுமருணனுந்தவிர
நாலுபாலரைப புதல்வராவினதையுயந்தாள்
ஆலநேர்விழிக்கத்துரு பணியெலாமளித்தாள்.

(இ-ள்.) காலையென்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும்பெற்றா ள் மிகவும்நீண்டிருக்கிற சிறகினையுடையகருடன் அருணனோடு கூட நாலுபிள்ளைகளை வினதையென்பவள்பெறறாள் விஷத்தையொத்த க ண்களையுடைய கத்துருவென்பவள் பாம்புகளெல்லாவற்றையும பெ ற்றாள்-எ-று. (௰௨)

அரிட்டையென்பவளிடத்திலேயரம்பையேமுதலாய்த
திரட்டிமங்கையர் பிறந்தனரிலங்கிளைமுனிவ
னருட்டலத்திலென் னிரட்டிகந்தருவரையளித்தா
ளருட்டிவாள்விழிக் கபிலையாற்பதின்மர்வந்துதித்தார்.

(இ-ள்.) அரிட்டையென்பவளிடத்தில்அரம்பைஊர்வசிமுதலா ன பெண்கள்பிறந்தார்கள் இலங்கிளையென்பவள் முனியினுடைய திரு வையினாலேபதினாறுவகையாகியகந்தருவர்களைப்பெறறாள்வாள்போன் றகண்களையுடையகபிலையிடத்தில்பத்துப்பிள்ளைகள் பிறந்தார்கள்-எ-று

அங்கிரர்சனபதிகள் காந்தருவரையளித்தார்
தங்குமதந்திரி கதிரமதிபுலத்தியன்றனையர
பொஙகிராக்கதர் வானரர்கின்னராபுலக
னகுமைந்தாகிம் புருடர்பின்விலங்கையுமளித்தான்.

(இ-ள்.) அங்கிரர்-சனபதிஎன்கிற இருவரும் காந்தருவரைப்பெற்றார்கள் அத்திரியென்பவர் சூரியசந்திரரிருவரையும்பெற்றார் புலத்தியா-இராட்சதர்-வானரர்-கின்னரர்-இவர்களைப்பெற்றார் புலகரிஷியென்பவர்கிமபுருடரையும மிருகங்களையும்பெற்றார்-எ-று. (௰௪)

தருணராகியவசுக்களைச் சனபதிதந்தான்
பிருகுவென்பவன் கவியுடன்சவுனரைப்பெற்று
னிருவரோடுசெந் திருவையு பிருகுபெற்றெடுத்தான்
பருவமைந்தரிற் கவியுமோவெள்ளியைப்பயந்தான்.

(இ-ள்.) சனபதியென்பவர்பின்னும் தருணம்பொருந்தியஅஷ்ட வசுக்களைப்பெற்றார் பிருகுவென்பவர் கவியென்பவனையுஞ்சவுனகரையும்பெற்றார் இந்தஇருவரைப்பெறறதுமல்லாமல் பின்பு லட்சுமியையுமபெற்றார் அந்தப்பருவம்பொருந்திய பிள்ளைகளில் கவியெனபவர் சுக்கிரனைப்பெற்றார்-எ-று. (௰௫)

பரியதானதன் றேவியூக்கிரண்டினும்பரிதி
யுரியவாண்பரி யாகிப்பிடிரியதைபூற
வரிசைபற்றிய மருத்துவரிருவரும்வந்தார்
விரி * சராசரம் பிறந்தனபலபலவிதமாய்.

(இ-ள்.) சூரியன்தன்மனைவியைச்சேருகிறதற்கு யத்தனப்பட்டபோது அவளதற்குப்பொருந்தாமல் பெண்குதிரையாயோடினாள் சூரியன் ஆண்குதிரையாயத்துரத்த அவளதிருமபிப்பார்த்தாள் அப்பொழுது சூரியன்தனதுபெண்சாதியினிரண்டுமூக்கிலும இந்திரியந்தங்கவுற வரிசையாகிய அசுவினிதேவர்களிருவர்பிறந்தார்கள் அதன்பின்பு சராசரமும அசரமும அனேகவிதமாயுண்டாயின-எ-று. (௰௬)

கலிவிருத்தம.

கண்டுலகெலாநமது கற்பனைகளென்றே
புண்டரிகவேதியன் மதத்தரிபுரத்தில்
தண்டியெதிர்கொண்டுபகை தகவிசைவண்டார்
வண்டுளபமாயனை வைதுரைவழங்கும.

(இ-ள்.) இப்படிச்சகலமும உண்டாக்கிய பிரமதேவர் இந்த உலகெல்லாமநம்முடையசிருஷ்டியினாலல்லவோ உண்டாயினவென்று அகங்காரங்கொண்டு அதனால்வைகுந்தத்தில் வலுவிற்போயெதிர்த்துப் பகைகொள்ளுமபடி சங்கீதம்பாடாநின்றவண்டுகள்சூழ்ந்த துளபமாலையைத்தரித்த விஷ்ணுவைப்பார்த்து அவமதித்தாக சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினார்-எ-று. (௰௭)

---

* சராசரம் - நடப்பன. அசரம் - நடையில்லன.

ஏழுலகேழுமேழில மேழுபுயலோடே
மூழிமுதலேழுகிரி யாமபகையியற்றி
வாழுமுயிராய வையுமாவகுக்கிட மனத்தால்
பாழிகொண்மரீசிமுதன் மைந்தர்கள்படைத்தேன்.

(இ-ள்.) வாராயவிஷ்ணுவே பதினாலுலகங்களையுஞ்சத்தமேகங்களையுஞ்சத்தசமுத்திரங்களையும், முதன்மையாகிய சத்தகுலபருவதங்களையும் உண்டாகும்படி மனத்தினாற்படைத்து எப்பொழுதும்வாழ்கின்ற எல்லாவுயிர்களையும் உண்டாக்கவலிமைபொருந்திய மரீசிமுதல் சிஷியரைப்பெற்றேன்-எ-று. (௰௮)

மைந்தர்தமைந்தர்கள் குருக்களுடன்வானோர்
சந்திரன்முதற்பெரிய தாரைவர்களானோர்
கந்தருவர்கிம்புருடர் சித்தர்கணநாத
ரிந்திரன்முதற்றிசைக ளெட்டினுமிருப்போர்.

(இ-ள்.) வாராய்விஷ்ணுவே என்னுடையபிள்ளைகளுடைய பிள்ளைகள் குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாததேவர்களும், சந்திரசூரியர்களும், அசுரர்களும், கந்தருவர்-கிம்புருடர்-சித்தர்-கணநாதர்களும் தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர் எட்டுப்பேருமாயிருக்கிறார்கள் இவர்களெல்லோரும் என்னாலல்லவோ உண்டானார்களென்று பின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர்-எ-று. (௰௯)

எஞ்சுதலிலாவிறைவ னென்பதனையென்பேர்
கஞ்சனெனுமைந்தனை மறந்திடுகர்த்தா
வஞ்சமில்படைப்பொழுதிலெப்படியளிப்பாய்
செஞ்சுவரிலாதெழுது சித்திரமுமுண்டோ.

(இ-ள்.) குறைவில்லாதசகலத்துக்கும் நானேகர்த்தனென்பதையும், என்பிள்ளைதான் பிரமாவென்பதையும், மறந்துவிடு நன்கையினாலே உலகத்தைப்படைக்காவிட்டால் எப்படிக்காப்பாற்றுவாய் சுவரில்லாமலெழுதுகிறசித்திரமுமுண்டோவென்று பின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர்-எ-று (௨௰)

அளித்திடுகளிப்பினை யகத்தினில்விடாயேல்
வெளிப்படவொருத்தனை யளித்திடவிதிப்பேன்
குளிர்ச்சியகடற்கிடை குதித்திடதனுள்ளே
யொளித்திடுசாத்திரனைச்சருவுமுன்னே.

(இ-ள்.) வாராய்விஷ்ணுவே சகலத்தையும் இரட்சிக்கிறேனென்கிற மதத்தைவிட்டுவிடு விடாமற்போனால் உனதுஉத்தியோகத்தைநீக்கி மற்றொருத்தனையுண்டாக்கி இரட்சிக்குந்தொழிலுக்குநியமித்துப்போடுவேன் உன்னுடையபுத்திரபௌத்திரர்களாகிய தேவர்கூட்டங்கள்வந்து உன்னைக்கொல்லும்படிவளைத்துக்கொள்ளுகிறதற்குமுன்னே திருப்பாற்கடலுக்குள்ளேஒளித்துப்போவென்றுசொன்னார்பிரமதேவர்-எ-று

வித்தகபுரிப்பிருகு விட்டமுனிவாலே
பதது ருவெடுததனை பகுத்தறிகிலாயோ
வத்தனையுடற்களு மமைத்தபடியாலென்
கைததலமுமிப்படி கறுததாடிபாராய்,

(இ-ள்.)ஞானசொரூபியாகிய பிரிகுரிஷி யானவரிட்ட சாபத்தினு லேபததுதாமஜூமியிலேபிறந்தாய்நீஅதைப்பகுததறிய வில்லையோ அப்படிப்பிறந்தபோதெல்லாம் அவ்வளவு பெரியஉடலுகளையெல்லாம்படைத்துப்படைத்து என்கைகள்காய்ப்பேறினபடிகறுததுப்போயினபாரென் றுபின்னுஞ்சொல்லுவார்—எ-று, ௨௨

உந்திமலரோனென விகழச்சியுரையாதே
முநதவொருதூணிடை முளைத்தனையுனக்கு
தாதையெனவோவலது தாயதெனவோசொல்
செந்தழல்பிரந்துகளை தீயப்பதறியாயோ

(இ-ள்.)வாராய்விஷ்ணுவே நம்முடைய நாபிக்கமலத்திலே தானே வந்தவனென் றுநிந்தனைசொல்லாதே முன்னாலே நீஒருதூணினிடத்திலேபிறந்தையே அந்ததகூணை உனககுதகப்பனென றுசொல்லட்டுமா அல்லதுதாயென் றுசொல்லட்டுமா ஆதத்தூண் உனக்குதந்தையானால்னககுநீதாதையாவாய் செநநிறம் பொருந்திய நெருப்புமுகிலினிடததிலேபிறந்து முன்கிலைத்தானே கொளுத்திப்போடுகிறதை யறியாயோ அபபடிஉன்னிடததிலே நான்பிறந்தாலும்உன்னையழிததுப்போடுகிறேனெனறார்பிரமதேவர்—எ-று, ௨௩

வேதனிவைசொற்றன கொடும்படைவெதுப்பிக்
காதிடை துளைத்தனல்பு கட்டினகடுப்பக்
கோதமொடெழுந்தபுகை கொண்டநகைகொண்டே
மாதவன்மதித்தனன் மறுத்திவையுரைப்பான்

(இ-ள்.)பிரமாஇப்படி சொன்னவார்த்தைகள் விஷ்ணுவுக்கு இரண்டுகாதிலும் வேலாயுதத்தைப் பழுககககாய்ச்சித துளைககவிட்டுஉள்ளேசெலுததியநெருபபுப்போலதகிககமிகுந்தகோபங்கொண்டுபுகையெழும்புமபடியாகநகைத்து இவனுககுஇநத அகங்காரம வந்ததுஎனத விததிலேயென் று ஆலோசிததுச்சிலவார்த்தைகளைச்சொன்னார்விஷ்ணு—எ-று, ௨௪

வந்தவழிதன்னையு நினைந்திலைமனத்தென்
னுந்தியுனதன்னை யெனஉன்னுதலையில்லாய்
தந்தைசிறுமைசர்நீர்பிழை தன்னையுணராரென்
றிந்தவுரைசொல்லினை யிகழந்ததுபோறேனே

(இ-ள்.)வாராய்பிரமாவே நீவந்தவழியையும் நினைத்தாயில்லைஎன்னுடையநாபியைததாயென் று ஆலோசிககவும இல்லை தாஙகளை யுருக்கிறவாகளபிள்ளைகள்செய்தபிழையை ஒருகுறறமாகநினையார்களெனறுநெதலாா்கனைதசொல்லினையோ இனிமேல இப்படிபொறுக்கமாட்டேனென் றுபினனுஞ்சொல்லுவார்.

கன்றுமதுவுக்கயிட வப்பகடூரானு
மென்றனையாகவு மிகழ்ந்ததுயிர்குடித்தேன்
மன்றமிவாருதீமைசெயின்மைந்தனெனவுண்டோ
வன்றியுடனேனையுமறத்தெறிகிலாரோ

(இ-ள்.)கோபத்தையுடையமதுவும் யானைபோன்றகைடவனும்என க்குப்பிள்ளைகளல்லவாஎன்னையிகழ்ந்துஎதிர்த்த படியினாலேகொன் றுவிட்டேன்கிலேபெற்றஒரு தீங்குசெய்தால் மகனென்று பார்க்கக்கூடு மோஅதுவல்லாமல்தேகத்திலே ஒருகட்டிகண்டால் அதைஅறுத்தெ றிந்துசொஸ்தபடுத்திக்கொள்ளாமலிருக்கிறார்களோமனுஷர்கள்.( ௬ )

பித்தனுனதோர்தலைபிடுங்கியெறிபோதி
லத்தலைமகவெனவமைக்கவிதியில்லா
எத்தலைவனென்பதுனையித்தகைமைகொண்டோ
பைத்தலையராமுடிகொள் பாரிடம்விதித்தாய்,

(இ-ள்.)வாராய் பிரமாவே பயித்தியக்காரனுகிய சிவன்உன்னு டைய தலைகளிலொன்றைப்பிடுங்கி எறிந்தகாலத்தில் அந்தத்தலையை மறுபடியுண்டாக்கிக்கொள்ள வகையில்லை உன்னைஎப்படித்தலைவனெ ன்றுசொல்லுகிறது இந்தத்தலையைக்கொண்டுதானே படத்தையுடை ய ஆதிசேடன் முடியிலிருக்கிறபூமியைப்படைத்தாயென்றார்விஷ்ணு

மச்சவுருவங்கொடு மறைதகொகுதிதந்தேன்
விச்சைபுனதானவரை வென்றுயிர்குடித்தே
னச்சமரமாமெனினும் வைத்தமரமென்றே
யச்சமுறுகின்றனை னழிக்கவறிதன்றே,

(இ-ள்.)வாராய்பிர்மாவே சோமுகாசூரன் உன்னிடத்தில்வேத ங்களைப் பிடுங்கிக்கொண்டுபோனபோது நான்மச்சாவதாரங்கொண்டு அந்த அசுரனைக்கொன்று வேதங்களைவாங்கித்தந்தேன் அதுவல்லாம ல சாமர்த்தியமுள்ள அநேக அசுரர்களைக்கொன்றுதேவர்களோடு உ ன்னையுங்காப்பாற்றினேன் எட்டிமரமானாலும் தான்வைத்தமரமாக விருந்தால்வெட்டார்கள் அப்படிப்போல் பிள்ளையான உன்னைக்கொல் லக்கூடாதென்றுபயப்படுகிறேனென்றார்விஷ்ணு—௭-று,         (௨ ௫)

என்றொருவருக்கொருவ ரேத்தனையுரைத்தார்
கன்றினர்புயத்தின்மிசை கைத்தலமடித்தார்
நின்றுலகுதித்தனர் நெருக்கினர்ரிமிர்ந்தார்
துன்றியகனற்பொறிசுருக்கெழவிழித்தார்

(இ-ள்.)இந்தப்பிரகாரம் ஒருவருக்கொருவர் எத்தனைவார்த்தை களையோ சொல்லிக்கொண்டிருந்தார்கள் கோபித்துக்கொண்டுபுஜத்தி ன்மேல் கைகளாலே அடித்துக்கொண்டார்கள் நின்று பூலோகத்தில் குதித்தார்கள் நெருங்கினார்கள் நிமிர்ந்தார்கள் நெருப்புப்பொறிசுருக் கமாய்விழச்சுறுகசெக்கண்களைவிழித்தார்கள்—௭-று         ௨௬

வெற்புகள்பொடித்தன வெடித்ததுகடாகம்
பற்பலசுடர்க்கதிர் பணிக்கதிரொளித்த
சாப்பமுமொளித்தது தலைச்சுமைபொறாதே
கற்பமுடிவென்றமரர் கண்களையிமைத்தார்.

(இ-ள்.) பிரமதேவரும் மகாவிஷ்ணுவும் சண்டைசெய்கிறபோது மலைகளெல்லாம் பொடியாய்ப்போனதுகள் அண்டகடாகம் படீரென்று வெடித்தது பலபலகிரணங்களையுடைய சந்திரசூரியர்கள் ஒளித்தார்கள் ஆதிசேஷன் தலைச்சுமைபொறுக்கமாட்டாமல் உடம்பையொளித்துக்கொண்டான் கற்பகாலம்வந்து உலகமழியப்போகிறதென்று தேவர்கள் கண்களையிமைத்துக்கொண்டார்கள்—எ-று. (௫௰)

உடுக்கணமுகிற்கண முதிர்ந்தவுலகெல்லா
மிடுக்கணிலவிழுந்தன வெழுந்தனபராக
மடங்கினபகீரதி முன்னாகதியெல்லாந்
திடுக்கொடுமுழங்கின திசைக்கரிகளோடும்.

(இ-ள்.) நட்சத்திரக்கூட்டங்களும் மேகக்கூட்டங்களும் உதிர்ந்ததுகள் உலகமெல்லாந்துன்பங்களோடு அடுக்குக்குலைந்து விழுந்தது தூளெழும்பியதுகள் கங்கைமுதலான நதிகளெல்லாம் தண்ணீரில்லாமல் வறிப்போனதுகள் அட்டதிக்கிலுமிருக்கிற யானைகள் திடுக்கிட்டுப்பயந்தன—எ-று. (௫௧)

மேலினிதெடுத்தெறிவர் வீழுவர்கடிதோடிக்
கோலியெதிர்குத்துவெனவென்றிடுவர்குதிச்
சாலமடிதொட்டளவில சாரிகைதிரிந்தார்
மாலையுமிருட்டுமெவல மாயவரதன்மான.

(இ-ள்.) ஒருவரையொருவர்மேலே யெடுத்தெறிவார்கள் கீழேவிழுவார்கள் மறுபடிஎழுந்து விரைவிலோடி வளைந்து எதிர்நின்று குத்துவேனென்று சொல்லுவார்கள் அப்படிக்குதித்துக்கொண்டு மிகவும் மடியைப்பிடித்து சூறைபோல அனேகவிசை சுழன்று திரிந்தார்கள் அக்கிரேசரும் இருளும் வலம்பிடமாகவருகிற வெயிலையொத்திருக்கும்படி—எ-று. ()

ஊருவனதத்துவன செல்வனவிண்ணோடே
சேருவனநின்றன திரிந்தனதிரட்டார
தாருவகையிற்றன தழைந்ததிருளெங்கு
மேருவசையுற்றதெழு வேலையளறாக.

(இ-ள்.) அந்தவேளையில் உலகத்தில் ஊர்ந்துபோகின்ற சீவன்களும், தவழ்கின்றசீவன்களும் நடக்கின்றவைகளும் பறக்கின்ற சீவராசிகளைப்போல ஆகாசத்திலேபறந்ததுகள் நிலையாகநின்ற விருட்சமலைகள் திரிந்ததுகள் திரளாகநிறைந்த ஐந்துவகையாகிய தேவதருக்கள் பொட்டிப்பொடியாய்ப்போனதுகள், எவ்விடமும் அந்தகாரம் நிறைந்தது மகாமேரு அசைந்தது சத்தசமுத்திரங்களுஞ்சேறானதுகள்—எ-று. ()

அந்தமுடிவெல்லைதனி லஞ்சியிமையோர்தா
மிந்திரனையெய்தினர்க ளெய்திபதுமைக்கு

முந்தியவனுற்றதுயர் யாவையுமொழிந்து
வந்தவரவேதென வருதந்துரைசெய்கின்றார்.

(இ-ள்) சருவசங்காரகாலம்வந்ததென்று சொல்லும்படி இருவருஞ்சண்டைசெய்யும்போது அந்தவேளையில்தேவர்களெல்லாம் பயப்பட்டுத் தேவேந்திரனிடத்திற்போய்ச்சேர்ந்து தங்களுடைய துக்கத்தைச்சொல்லுகிறதற்குமுன்னே தேவேந்திரன் தானபட்ட துன்பங்களெல்லாஞ்சொல்லிப்பின்பு நீங்கள்வந்தகாரியம் ஏதென்றுகேட்கத் தேவர்கள்சொல்லுவார்கள்—எ-று. (கச)

ஆரணனுநாரணனு மானவிருவோருந்
தாரணியிலேமிகு சமர்தொழில்வினைத்தா
ரோணியவேறுகதி யில்லையெவருக்கும
காரணனையேதொழுதல் காரியமிதென்றார்.

(இ-ள்) பிரம்மா விஷ்ணுவுமாகிய இருவரும் பூமியில்மிகுந்தயுத்தத்தைச்செய்கிறார்கள் எங்களுக்குப் பிழைக்கத்தக்கதமாககம் வேறேயில்லை எல்லாருக்கும் காரணமாயிருக்கிற பரமசிவனைத்தொழுது இந்தச்செய்தியைச்சொல்வதேகாரியமென்றுசொன்னார்கள்தேவர்கள்

நாயகனிசைந்துபினர் நாகவுலகத்தோர்
ஆயமலர்போலடி துதித்தரிவைபாகா
மாயமுடன்மாலயன் வருந்தமதுதீராய்
தாயலதுமைந்தர்துணை தாரணியிலுண்டோ.

(இ-ள்) இப்படிச்சொல்லத்தேவேந்திரனும் சம்மதித்துப்பின்பு அவனோடு தேவர்களெல்லோருமே யச்சிவனுடைய பரிசுத்தமாகிய தாமரைமலர்போன்ற பாதத்தைத்தொழுது மங்கைபாகனே ஞெருக்கங்கொண்டு விஷ்ணுவும் பிரமாவும் சண்டைசெய்வதனால் வருந்துக்கத்தைத்தீர்க்கவேண்டும பிள்ளைகளுக்குத்தாயேதுணையல்லாமல் மற்றொருதுணை பூமியிலுண்டோவென்று சொன்னார்கள்தேவர்கள்-எ(

உருப்படுசகட்டைநிக ருற்றுலகின்மீதே
யிருட்படுபிறப்பினை யிறப்பினையுறாதே
பொருட்பெறவுனக்கடிமை புககளவிலாவுன்
னருட்கடல்குளித்திட வடைக்கலமதானோம்.

(இ-ள்) உருண்டுகொண்டுபோகாநின்றவண்டியினுடையசக்கரம்போல அஞ்ஞானம்பொருந்திய பிறப்பையுமிறப்பையு மாறிமாறி யடைந்து வருத்தத்தை யனுபவியாமல் மோட்சத்தைப்பெற உனக்கடிமையாகப்புகுந்து உன்னுடைய அளவில்லாத கிருபைக்கடலில் குளிக்க அடைக்கலமானோமென்றார்கள் தேவர்கள்—எ-று. (கஎ)

புழுக்குடையுடம்பை பொறுக்கமுடியாக
விழுக்குடையனிச்சைகெட விச்சையருள்வோனே

முழுக்கடலிடத்தின் முழுக்களுமேமமாறு
வழுக்கமலமற்றிட வமைடகலமதானோம்.

(இ-ள்) அநேகம்புழுக்கள் குடைந்துக்கொண்டிருக்கின்ற உடற் பாரத்தைதப்பொறுக்கமுடியாத இழுக்காகிய அஞ்ஞானங்கெடப்பிரிய த்தினாலே கிருபைசெய்கின்றசுவாமியே பெரியசமுத்திரத்தினிடத்தி ல் தினம்முழுகினாலும் போகாதமும்மலமாகிய அழுக்கற்றுபபோக அண்டக்கலமாயுமமைசேர்த்தோமென்றார்கள்தேவர்கள்-எ-று. (ந அ)

எண்ணமினிவேறிலை யெமக்கருள்செய்யென்றே
கண்ணுதலைவிண்ணவர்கள் கற்றுமொழிபோதி
லண்ணலுமுணர்ந்தனனைத்துயிரினுள்ளே
யெண்ணையெனநிற்குமவ னிதறிகிலானோ.

(இ-ள்.) இனிமேல்வேறேஆலோசனையில்லை எங்களுக்குக் கிருபைசெய்யுமென்று சிவனைதேவர்களபுகழ்ந்து ஸ்தோத்திரஞ்செய்யு மபோதில் சுவாமியும அவ்விருவருக்கும் வந்தசணடையின்மூலததை யறிந்தார எல்லாவுயிர்களிடத்திலும எள்ளினிடத்து எண்ணெயபோ ல்நிற்கும சுவாமி இது அறியமாட்டாரோ அறிவார—எ-று. (ந க)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நடுக்கமுறுமுனிவரெலா மமரெலாம்பயந்துவிர நாகமீது
படுக்கைபுரிந்திருமாலும் பங்கயததிநுறுமயனும பகைமைதீர
வடுக்கியிடுமபுவனமெலா மடுக்கழியாதிருக்கமனத் தருள்வதங்கி
தடுக்கரியதழலுருவத தொருவரையாயிருவரையுந் தடுப்பதானான்.

(இ-ள) நடுக்கமடைந்தமுனிவர்கள் தேவர்களெல்லாரும் பயத் தைநீங்கும்படி சர்ப்பசயனததில் நித்திரைசெய்கின்றவிஷ்ணுவும்தா மரைப்புஷ்பததில்வீற்றிருக்கின்றபிர்மாவும் ஒருவருக்கொருவர பகை லயநீங்கவும அடுக்கடுக்காயிருக்கு ம்அண்டங்களெல்லாம அழுக்குக லையாமலிருக்கும் கிருபைசெய்வத ய்த தடுததற்கரிய அக்கினிசொரு பததோடுகூடிய ஒருமலையாகி இத்தயிருவரையுந் தடுக்கும்படி எழுந்த ருளினா பரமசிவம்—எ-று. (சய)

பாதலத்திற்பணிகளெல்லா விழுந்தகலத்தன்கீழ்ற் பருவேரோடிப்
பூதலத்திற்கிளைததிமையோ ருலகெல்லாமலர்ந்துமலப் புண்டரீகன்
மீதலததுமுகடுடைத்துக் கடாகவெளிகடந்துபெரு வெளிக்குமேலா
மாதலத்துக்கிதுவுமொரு கனன்மேருவடுத்ததென வளர்ந்தமாதோ.

(இ-ள்.) பாதாளலோகத்திலிருக்கிறபாம்புகளெல்லாம்அந்தமலை க்குச்சலலிவேராகவும் அதன் கீழ்ப்பருத்தவேரோடி பூமியிற்பெரிதா ய் கிளைத்துக் தேவலோகங்களெல்லாந்தாண்டிப் பிர்ம்மலோகத்துமு கட்டைப்புடைதது அண்டகடாகவெளியைக்கடந்து அதற்குஅப்பாலி ருக்கிற பெரியவெளிக்கு மேலாயிருக்கிற இடத்துக்கும் அக்கினிசொ ரூபமாகிய மகாமேருஅடுத்ததென்றுசொல்லும்படிவளர்ந்தது—எ-று. (சக)

மூளைக்குநெடுஞ்சுடரிரவி புரவியுலவாவுலக முழுதுமோடிக், க ளைகுமணியிருளகற வேற்றிவைத்தவிளக்கெனவே கிளாகமாகபாலே யளக்கவெலாமளப்பரிய வளவையழல்பரந்ததென வரத்தமானங், தி னைக்குமெழுதிரிகளெல்லா மதுசொரிந்தசிறுபொறிபோற் சிவந்தமா தோ.

(இ-ள்.) உதயமாகி நெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனு டைய தேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சாரஞ்செய்யக்கூடாத உலகமெ ல்லாம் ஓடிக்கிளைத்தல் நீலமணிபோலுங்கரிய இருளையோட்டுகிறதற் கு ஏற்றிவைத்தவிளக்குப்போல பிரகாசிப்பதனாலே சமுத்திரமெல் லாம் சொல்லுதற்கரிய படவாமுகாக்கினிபரந்ததுபோலச் சிவப்புநி றத்தைப்பொருந்த சத்தகுலாசலங்களெல்லாம் அந்தப் பிரகாசத்தி னாலே அந்த அக்கினிமலைசொரிந்த அக்கினிப்பொறிகள்போலச் சிவந் தனகள்-என்றவாறு. மாது ஓ அசைகள். (சஉ)

கலிவிருத்தம்.

வானக்கண்ணழலாளது கண்டமலரோனுங்
கானக்கண்ணனு மஞ்சியகன்றார்கள்காணா
ஞானக்கண்ணினர் காணுமதல்லனவைசேரு
மீனக்கண்ணினருக்கெளியானேயெம்மானே.

(இ-ள்.) இப்படி ஆகாசபரியந்தம் அக்கினிசொரூபத்தைக்கண்ட பிரமாவும் வேணுநாதத்தைச்செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவு ம பயப்பட்டு ஓடுகின்றார்கள் ஞானக்கண்ணையுடையவர்கள் கா ணுவதல்லவ் குற்றம்பொருந்திய ஈனமாகியமுகற்றிற் கண்ணுடை யவர்காணுகிறதற்கு எளியனோ நமமுடையபரமசிவன்—எ-று. ( )

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கண்ணிலளவிடவரிய சுடரினைக்கண்டிருவருமாய்க் கவலையனு, றெண்ணிலெதனடிமுடியை யறியவரேபெரியவரென் றிசைந்தாரிசை,ம ண்ணினடியறிவனெனப் பணிவிடையிற ஙுக்கமிககோன்வராகமானு ன். டிண்ணின்முடியறிவனென வடிவெகினவெடுத்தயனும் விரைந்து போனான்.

(இ-ள்.) கண்களாலே இவ்வளவுதூரம் இந்த மலைபோலிருக்கிற தென்று அறியக்கூடாத மிக சமானமலையைப்பார்த்து இரண்டுபே ருந்துன்பத்தையுடையவராய் இந்தமலையினது அடியையாவது முடி யையாவது அறிகிறவரே பெரியவரென்று ஒருவருக்கொருவர் சொல் லிக்கொண்டார்கள் அப்பொழுது சாப்பத்தில் நித்திரைசெய்கிறவராகி ய விஷ்ணு இந்தமலையினடியை நானறிந்துவருகிறேனென்று வராகரூ பமானார் இந்தமலையின் சிகரத்தைக்காணுகிறேனென்று பிரமாவும் அன்னபட்சியாகி ஆகாயத்திற்பறந்தார்—எ-று. (சச)

மொய்த்துமரைக்கணத்தினுக்காயிரங்காதம்பறந்தயனார்விசாரத்துபோ னார், அத்திமாலெடுத்தபுவி கணத்தினுக்காயிரங்காதந் துளைத்துபோ னார்,மத்தகையோர்செயலுரைக்கிறகனகமணிகெடுமபூட்டுக்கருகிலே ழு, நித்திலமொற்குண்டிகையுநீலமணிக்குன்றகைய நிகாத்தமாதோ.

(இ-ள்.) சொல்லப்பட்ட அரைக்ஷணத்தில் பிரமா ஆயிரங்காதவழி பறந்துமேலாகப்போனார் படத்தையுடைய ஆதிசேஷன் சுமந்தபூமியை அரைநொடியிலே ஆயிரங்காததூரம் துளைத்துக்கொண்டு விஷ்ணுகீழாகப்போனார் அதுஎப்படியிருந்ததெனறால் அந்தமலைதங்கமயமாகியராட்டணப்பூட்டைப்போலவும் அதில்நிறைகிறதற்குக்கட்டிவிட்டிருக்கின்ற நீலரத்தினதோண்டிபோலவும் மூத்துகளிறைத்திருக்கிற அழகியதோண்டிபோலவுமிருந்தது—எ-று. (௬௫)

பூவுலகையரியகன்று கீழுலகின்முறைமுறையே புகுந்துபோந்து
காவலுறுமாவலிதன்போகவதி யெனுமபுரமுங் கடந்துமேவித்
தேவர்தொழும்பராஞ்சுடர்வளாடகேசுரசரணத்துஞ் சிரத்தும்போற்றி
மூவுலகமுதலளந்தோனேழுலகமளந்துமதனமுடிவுகாணான்.

(இ-ள்.) வராக அவதாரமெடுத்து விஷ்ணுவானவர்பூலோகத்தைக்கடந்து அதின்கீழிருக்கின்ற ஏழுலகங்களையும் முறையேதுளைத்துக்கடந்துபோய் மாவலிச்சக்கிரவர்த்திகாவலிலேயிருக்கிற போகவதிபட்டணத்தைத்தாண்டி அப்புறம்தேவர்களவணங்கும் பிரமசொரூபம்விளங்காநின்ற ஆடகேசுரத்தைக்கண்டு கைகளினாலும் சிரசினாலும்வணங்கி முன்னேமூன்றுலகத்தையுமளந்தவ இப்போதேழுலகங்களை அளந்தும் அந்தமலையினடியைக்காணமற்போனார்—எ-று. (௬௬)

வளர்ப்புடையபிறைபோல வளர்மருப்புந் தேய்பிறைபோல்மழுங்கிபோகக், குளப்படியுமுகநுனியும் பிணந்தேமொசைபைப்போய்க் குறைந்துபோக, வளப்பரியதுயரிலவிழுந் தொருநாளுண்டொழிந்த தமபினானைவாழத்தி, யிளைப்பதுவுஞ்சலிப்பதுமற் றெழுதலமுமிடர்க்கடலு மேறினானே.

இ-ள்.) அப்படிமகாவிஷ்ணுவாராகரூபங்கொண்டு தேடுகிறபோது வளர்பிறைபோல நாளுக்குநாள்வளர்ச்சியுற்ற இரண்டுகொம்புகளும் தேய்பிறைபோல்குறைந்து மழுங்கிப்போகவும், குளம்புகளும், முகத்தினுனியும்-தேய்மானமாகி எப்படிகுறைந்துபோயிற்றோ அப்படித்தேய்ந்துகுறைய எண்ணக்கூடாததுக்கசமுத்திரத்தில்விழுந்து நாலுவருஷகாலந்தேடியுங்காணமல் பின்பு தெளிவுவந்து இது சிவனுடைய செயலென்றறிந்து அவனாதரியானஞ்செய்து இளைப்புஞ்சலிப்புமநீங்கித் தன்னுடையதுக்கசமுத்திரத்தையும், ஏழுலகத்தையும் தாண்டிவந்தார்-எ-று. (௬௭)

தமபோரைமுதற்றநீக்கத் தழற்பிறப்பாதவந்தத்தலத்தைச் சார்ந்தார்,னமபோதனிதன்முடிபினளவறியா னெனமனத்திலையநீர்ந்தா னமபோருக்கரியானைச் சேடானைத்தனதுவிழிநயனத்தோடே, ஙபம்போதைப்புனைவானைப்பலகாலும்பணிந்துருகிப் பரவினின்றான்.

(இ-ள்.) தனக்கும்பிரமாவுக்கும் வந்தகலகத்தை நீக்கும்படிக்கு அக்கினிசொரூபமாகஎழுந்ததலத்தைச்சேர்ந்து அழகியதாமரைப்பூவிலிருக்கிறபிரமா இந்தமலையின்முடியை அறியமாட்டானென்றுநிச்சி

ஞ்செய்துக்கொண்டு நம்பரதமனுஷர்களுக்கு அரியவனாயப்படிப்பட்டவர்களுக்கு தூரமாகயிருக்கிறவனைத் தாமுடைய கண்ணுகிய புஷ்பத்தோடு அழகியபுஷ்பங்களைத் தரிக்கானின்றவனைப்பலதரமும் வந்தனஞ்செய்து உள்ளமுருகிப்பாவினு விஷ்ணு—எ-று. (௨௮)

கலிவிருத்தம்.

இன்னதாமியன்செய விருக்கவிங்ஙிதன்
முன்னமேயழற்கிரி முடியையதேடவே
யன்னமாய்ப்பறந்தவ னரைக்கணத்திலே
மன்னுமோராயிரக் காதம்வாவினுன்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் இந்தவிஷ்ணுயிருக்க இதற்குமுன்னே அக்கினிமலையின்முடியையதேட அன்னபட்சியாகிப் பறந்தபிரமா அரைக்ஷணத்திலே ஆயிரங்காதவழியாகத்தாண்டினு—எ-று. (௨௯)

கிறியேயண்ட கோளகையுங்கீழற
வேறிநூறுயிர மாண்டிமேவினு
னூறுநூறுயிரக காதநோக்கினு
மீறிலா திருந்ததவ் வெறியினுணமே.

(இ-ள்) அண்டகோளகையுங்கிழிப்பட கிழித்துப்பறந்து நூறுயிரம்வருஷந்தேடினுர் அப்படிஅனேகநூறுயிரங்க தந்தாண்டிப்போயப் பாரத்தலும்முதலபார்த்ததுபோலவேயிருந்தது அக்கினிரூபமாய் நின்றான்—எ-ஏ,)

சிறையெலாமுதிர்ந்தன விசையுந்தீர்ந்தன
நிறைவத மிகக்கணு முயிரபுநீணடன
குறையெலாம்வளாந்திட நனிமைகூர்தலான்
மறையினுனிவையிவை மனதிலெண்ணினுன்.

(இ-ள்.) அப்படிபிரமா அன்னமாய்ப்பறந்துபோகிறபோது சிறகெல்லாமுதிர்ந்துபோயின விசையும் அடங்கின குறைவில்லாத துக்கமும்பெருமூச்சும்அதிகப்பட்டன மனக்குறை வளர ஒருவருமில்லாமல்தான் ஒருவனானபடியினலே பிரமாசிலதை மனதிலெண்ணினர்—எ-று.

அரியமாலிதனடி யறிந்துமீளுமோ
தெரிவருதிடையிலே திரும்புமோவென
வரியதாகியதுய ருசலாடினு
னெரியுறுமெழுகுபோ லிளகுஞ்சிந்தையான்.

(இ-ள்) அரியமகாவிஷ்ணு இந்தஅக்கினிமலையினுடைய அடியை அறிந்துதிரும்புவானே கொஞ்சதூரந்தேடி இனிமேல் தேடக்கூடாதென்று திரும்பிவருவானே என்கிறதுக்கமாகிய ஊஞ்சலிலிருந்தாடினர், நெருப்பிலேயிட்டமெழுகுபோல யிளகிய மனதையுடையவராகிய பிரமதேவர்—எ-று. (௩௨)

மற்றிது சிவனென மனதி லெண்ணிலே
னுற்றரி தன்னையு முறவு கொண்டிலே
னிற்றைநா ளவனொடு மிவ்விடர்க் கடலுழ்கினேன்
சிற்றறி வுடைமையோ செய்ததீமையோ

(இ-ள்.) இந்தமலையைச் சிவனென்று அறியாமற்போனேன் பகைத்துக்கொள்ளப்பட்ட விஷ்ணுவையாவது உறவுகொள்ளாமற்போனேன் அன்றுமுதலின்றையவரைக்கும் வெகுகாலமாய்த் துக்கசமுத்திரத்தில் மூழ்கினேன் என்னுடைய சிறியபுத்தியினாலேயோ பூர்வகாலத்திலே நான் செய்தபாவத்தினாலேயோவென்று விசனத்தையடைந்தார் பிர்ம்மதேவர்—எ-று. (௫௩)

எய்தினேன் முடியறிந் தேகிலேனெனும்
பொய்யகலையுங்கிலும் பொருந்தவேயுரை
செய்துணை யிங்கிலை யென்று தேம்பினன்
கைதையின் மடல்வாய்ப் பின்புகண்டனன்

(இ-ள்.) இவ்வளவுதூரந் தேடிவந்து முடியையறியாமற்போனேன் ஆகிலுமினிமேற்போய் விஷ்ணுவினிடத்தில பார்த்தேனென்று பொய் சொன்னாலுங்கூட ஒத்தாசையாகப் பார்த்தேனென்று பொய்சாட்சி சொல்லுகிறதற்கு ஒருதுணையுமில்லையேயென்று விசனப்பட்டார் அந்தச்சமயத்தில் தாழம்பூ மடல்ஒன்று மேலேயிருந்திறங்கப் பார்த்தார் பிரமா-எ-

இம்மட லெங்குற்று வருவதென் னுமுன்
னம்மட லணைந்ததன் கைகளை யேற்றனன்
செம்மறன் முடியில்வீழ் செம்மலர்க் கையான
மெய்ம்மைசே ருயிர்ப்பதாய் விடுதியென்றதே

(இ-ள்.) இந்தத்தாழைமடல் எங்கேயிருந்து வருகிறதென்று ஆலோசிக்குமுன்னே தாழம்பூ பிரம்மாவுக்குச் சமீபத்தில்வர அதைக்கையினாலே பிடித்தான் அது பரமசிவனுடைய சிரசிலிருந்து தவறிவிழுந்த தாழம்பூவானபடியினாலே மெய்மையான பெருமூச்சோடு என்னைச் சீக்கிரத்திலே விட்டுவிடுவாயென்று சொல்லியது—எ-று. (௫௫)

ஏரணி கைதையே யிங்குநீ வருங்
காரண மேதெனக் கமலன் கூறினான்
ஆரண னாரண னளவிடா முத
லாரணி முடியினுந் தவறிவீழ்ந்தனன்

(இ-ள்.) அந்தத்தாழம்பூ சொல்லியதைக்கேட்டு அழகுபொருந்திய தாழம்பூவே எங்கேயிருந்து வருகிறாயென்று பிர்மா கேட்கப் பிரமாவினாலும் விஷ்ணுவினாலும் அறியக்கூடாத பரமசிவனுடைய சிரசிலேயிருந்து தவறிவிழுந்தேனென்று சொல்லியது—எ-று. (௫௬)

தார்ப்பொலி முடியினுந் தவறிவீழ்ந்தபின்
னாற்பதி னாயிர வருட மெண்ணினே

னேற்பதுவிடுசெவன் றிசைப்பவெங்கதையைப்
பாாப்பதுவிடுத்தயன் பகர்வத யினான்

(இ-ள்) கொன்றைமாலைப்பிரகாசியாநின்ற சுவாமியினது திருமுடி மேலநின்றுவிழுந்ததும நாற்பதினாயிரம் வருஷங்களாகவந்தேன இன்னமநான் பூமியிற்போகவில்லைவருந்தத்தேடுவருகிறேன என்னைப் பிடிக்கவேண்டாம்விடென்று தாழம்பூசொல்லப்பிரமா சுவாமியைத் தேடுகிறதைவெறுத்துச்சிலவார்த்தை சொல்லததொடங்கினான் -எ-று.

துன்னியகைதையே துணையுமாய்நமக்
கின்னமுமலைவுறு திடக்கணீக்கினு
யுன்னிலுமுயிர்த்துணை யுறவுவேறிலை
யன்னியனல்லனை னனமுமல்லவே.

(இ-ள்) என்சமீபத்திலடைந்த தாழம்பூவேநீயெனக்குத்துணையாயிருந்து நாளின்னமுந்தேடிப்பலையாமல் என்வருத்தத்தைநீக்கினையுன்னைப் பார்க்கிலுமுயிர்போன்றதுணையுமஉறவுமவேறில்லைநீ னும அன்னிய னல்ல அன்னபட்சியுமல்லவென்றுசொன்னான்பிரமதேவன-எ-று.

நாமமேநான்முகனுமாலுமா
யேமமாமிதற்களவிசைக்கவெண்ணினோன்
பூமிகீழிடந்தவன பொயினான்மனத
தீமையென்றிருமுடி தேடிக்காண்கிலேன்.

(இ-ள்) என்பெயரே பிரமா நானும விஷ்ணுவுங்கூடி அக்கினிசொரூபமாகிய இந்தமலையினளவைத் தெரிந்துகொள்ள வெண்ணினோம பூமியைக்கீழிடந்தைப்போய்த்துகொண்டு அடியையவன்தேடப்போனான் பாவியாகியநான்முடியைக்காண வெகுநாளாய்த்தேடியுங்காண்கிலேன் -எ-று

அந்சலைவாவிநு வதுகொடெண்பய
னெடியனின்வாவினு னினைத்ததெய்தினம்
படியளந்தவனுடன் பறவையாமிவன்
முடியறிந்தானென மொழிதல்வேண்டுமே.

(இ-ள்) ஆதியந்தமாக நடந்தசமாச்சாரமிது அதைக்குறித்துப்பேசுவதனாற்பயனென்னபெருமைபொருந்தியஉன்னுடையநலவாவினாலே நினைத்தகாரியமுடிக்கால்தான்பயன்பூமியையளந்தவிஷ்ணுவினுடன்பகைக்கொண்டு பட்சியாயுருவெடுத்த இந்தபிரமாசிவனுடைய முடியையறிந்தானென்றுநீசொல்லவேண்டுமென்றுபின்னுஞ் சொல்லுவான்பிரம்மதேவன் —எ-று. (௯௰)

வஞ்சமென்றிகந்திடேல் வருந்தினோர்க்குயிர்த்
தஞ்சமாமெனிற்பெரும் பொய்யுஞ்சாற்றலா
மஞ்சியேதொலைத்தகர் மொழிபுமனறிது
கஞ்சமுண்டமைவகே னன்புவேண்டினோர்.

(இ-ள்.) தாழம்பூவேகேள் இதுவஞ்சனைத்தொழிலென்று தன்னைத் தேயமெத்தானும் துன்பத்தையடைந்தவர்க்கு உயிர்ச்சேதமாவதாயின் அதுபிழைத்தற்குப்பெரிதாகிய பொய்யைக்கூடச்சொல்லலாம் இந்தப்பாவமாய்ச்சொல்லக்கூடாதவார்த்தையுமல்ல அன்பன்சொன்னதும் சினைத்ததைத்தவிர்ந்து நம்பினவா விஷ்ணுவைத்தையுந்தின்ற இசைவா-எ-று. (உசு)

உண்ணவாணுமசெயலைனச்சம் உண்டென்னச்சொன்னதென்னச்ச கத்திரித்தது இழிவு சிறப்பும்மைதொக்கிநின்றது- ஏகாரம்-தேற்றத்தின்கண்வந்தது

கண்ணுதனுமுடியில்வாழ் கைதையேபிறி
தென்னுவமித்தாழிகென விசைந்துபோந்தது
விண்ணினுமிர்ந்துசீழ விரைந்துவேதியன்
மண்ணுலகளந்தமான் மருமகனைக்கண்ணினான்.

(இ-ள்.) பரமசிவனுடையமுடியில்வாழுகின்றதாழம்பூவேவேறே ஒருஆலோசனையுஞ்செய்யவேண்டாம் இதமாகுடனே படியென்றுசொல்லத் தாழம்பூஅதற்கிசைந்துவந்தது ஆகாயத்திலிருந்து சீக்கிரத்தில்பிரமா பூமியையளந்த விஷ்ணுவினிடத்திலவந்துசேர்ந்தான்-எ-று. (உஎ)

சேராக்கட்டிபெயனை வரவின்செயலைக்கை
காதநூறாயிரங் கணத்திலேகடந்
தாதியானமுடியநு சனுக்கேனெனை
வேதிநானைகையுமுள்ளதென்றதே.

(இ-ள்.) அப்படிவந்தபிரமன் சீதனைப்பார்த்து விஷ்ணுவே என்னுடைய பால்வரலைகேளாய் நூறுகோடியிலே நூறாயிரங்காதம்பறந்து எல்லாருக்கும் ஆதியாகிய சிவனுடையசிரசைப்பார்த்து வந்தேனென்றுசொன்னான் தாழம்பூவும் அதுபோல்நிஜந்தான் பிரமா பார்த்தாரென்றுசொல்லியது-எ-று. (உஅ)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அக்கணமழற்கிரிவெடித்ததுவெடித்தவரவக்கினி லாக்கரிமை
யோருருட்கினார் திசைக்களிறுகளிரகைவருக்கமையருக்கியதெனக்குறு
திநீர், செககரோனிமடங்கிடமுறுக்கிதழாறுகளுகுமெய்சிலப்பொளிவெளு
ந்தவடிவாய, முகண்ணனதலிடை முளைத்தனன்முகத்திலவன்முப்பு
ரமெரித்தநகையே

(இ-ள்.) அப்படிபிரமாசொன்னதட்சணமே அக்கினிமலை படீரென்றுவெடித்தது, வெடித்தச்சத்தத்தினாலராட்சதர்கள் தேவர்கள்திடுக்கிட்டுஅயிர்த்தோர்கள் திக்கிலிருக்கிறயானைகள் சூரியர்களையொருகசிச்சாய்த்தாலெப்படியோ அப்படியாகஜலத்தைக்கக்கினதுகள் செக்கர்வானத்துப்பிரகாசமமழுங்கிப்போகும்படியாகவும் முருக்கம்பூவிதழ்கருகும்படியாகவும் சிவந்தமது திருவுருவின் ஒருருவுபொருந்திய திறமானதுவிபூதியினால் வெளுத்தவடிவாயத்தோன்ற அந்தவெடிப்பினின்று பரமசிவன் எழுந்தருளினார் முப்புரத்தையெரித்தநகைப்பு அவர்முகத்திலேவந்தது-எ-று. (உகூ)

மூண்டகனைசங்கைகளின்மொழிந்தவுரைமன்னே பொழிந்துரனை கொண்டவளவே, அண்டபகிரண்டமுகங்களெல்லா வொடுங்கினவடங்கி னவிடுங்கடலோலங், கொண்டலுமறைந்தனசிறந்தனவிறந்தனகுறை ந்தனநிறைந்தனகுலா, வெண்டிசைதிரிந்தனகரிந்தனபொரிந்தனவெ ரிந்தனவிரிந்ததருவே.

(இ-ள்.) பிரமாவே உன்னுடைய அகங்காரத்தினாலே சொன்ன சொல்நமக்குமுயிருந்ததென்றுசொல்லிநகைத்தபோது அண்டபகிரண் டங்களெல்லாம் இக்கிடென்றாடுங்கியொடுங்கிப்போயின சூரிய சந் திரருடைய பிரகாசமடங்கிப்போயின மேகங்கள் மறைந்ததுகள்சிறந் ததில்லையாயிருக்கிறதுகளெல்லாமஇறந்ததுகள்நிறைந்தவைகளெல்லா மகுறைந்துபோயின குறைந்தவைகளெல்லாமநிறைந்தன கூட்டமா யதிக்குகள் அலைந்ததுகள் மரங்களெல்லாம் கரிந்தும்பொரிந்துமவெ ரிந்தும்போனதுகள்-எ-று. (௬௫)

கலிவிருத்தம்.

அழிந்தனையயனென வமரரஞ்சினர்
குழிந்ததுநிலமெனக்கொள்ளையாயமலர்
பொழிந்தனாநெடியவர்க குவகைபூத்தது
கழிந்ததுமலரவற் கிம்மைபக்கங்குலே.

(இ-ள்.) தேவர்களெல்லாரும் பிரமா இன்றே அழிந்துபோனு னென்றுபயப்பட்டார்கள்பூமிபள்ளமாகும்படிகொள்ளைகொள்ளையா கப்புஷ்பமாரிபொழிந்தார்கள விஷ்ணுவுக்குச்சந்தோஷம்வந்து பிரமா வுக்குமுன்னேயஅகங்காரமென்கிற இருள்நீங்கிப்போயிற்று-எ-று. ()

பாடினன்பரவினன் பரவசத்தின
லாடினனோடின னளவிடாமுதற்
கூடினனெவ்வரங்கொள்ளுகேனெனத்
தேடினன்சிவனையத் தெளிந்தசெங்கண்மால்.

(இ-ள்.) அப்போதுதெளிவையடைந்த விஷ்ணுவானவர் அக்கி னிமலையினிடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப்பாடினா வந்தன ஞ்செய்தார்பரவசங்கொண்டு ஆனந்தக்கூத்தாடினான் குதிகளிலுமஓ டினார்யாவராலும்அளவிடக்கூடாதஇந்தசுவாமியைத தரிசித்துக்கூ டினன் இனிநானென்னவரம் கேட்பேனென்று ஆலோசனைசெய்தா ர்-எ-று. (௬௭)

ஆசையாலுருகுமல் வரிதனன்புகன்
றீசனும்பலவர மினிதுதலகினன்
வாசமாமலரவனுக்குமண்ணின்மேல்
பூசையுங்கோயிலும் போகவென்றனன்.

(இ-ள்.) இப்படியிருந்த பக்தியினாலேதேகம் உருகாநின்ற விஷ் ணுவினுடையஅடிமைத்திறத்தைபயாராதநக் கேட்டவரங்களெல்லா

ஞ் சிவன் அருளிச்செய்து பிரமாவைப்பார்த்து உனக்குப் பூமியிலே கோயிலும் பூசையுமில்லாமற்போகக்கடவதென்று திருவுளம்பற்றினார் சுவாமி-எ-று. [illegible]

கைதையேயிவனொடு காவுநீயுரை
செய்ததாற்றீண்டிலே மென்றுதீர்த்தனை
யெய்தியமுனிவர்கண் டேவகிரானமுகன்
மெய்தரையுறப்பதம வீழ்ந்துபோற்றினான்.

(இ-ள்) வாராய்தாழம்பூவே இந்தப்பிரமாவினொடுசேர்ந்து பொய்ச்சாட்சிசொன்னபடியினாலே உன்னை இதுமுதற்கொண்டு தீண்டேமென்று தள்ளினார் அதன்பின்பு சுவாமிக்கு இப்படிப்பட்டகோபம்வந்ததைப் பார்த்து ஏக்கமெய்தித் பிரமாவானவன் தன்னுடையதேகம் பூமியிலே தண்டம்போலப்படிய விழுந்து வந்தனஞ்செய்தான்-எ-று. (௬௯)

வேறு.

பொடிமூடியதழலேநிகர் புலையாணவமலமாஞ்
செடிமூழ்கையாலேபுழுவ சிறியேனொருபொருளோ
வடிவேபெருவெளியேசதுர் மறையேசதுர்மறையின்
முடிவேதனிமுதலேயெனை முனியேலெனைமுனியேல்.

(இ-ள்) நீறுமூடினநெருப்பையொத்தசுவாமியே சண்டாளத்துவமாகிய ஆணவமலமென்கிறசெடிமூடிக்கொண்டிருப்பதினாலே அவிவேகியாகத்திரிகின்ற சிறியனொருபொருளோ உருவானவரே அகண்டவெளியானவரே நான்குவேதமானவரே நான்குவேதத்தினுடைய அந்தமாகவிருக்கிறவரே ஒப்பற்றமுதலாகியவரே கோபித்துக்கொள்ளவேண்டாம் கோபித்துக்கொள்ளவேண்டாம்-எ-று. (௭௦)

எந்நதிகளுமொன்றாகிய வெழுவாரியுமறுகி
வெந்நீரதுவாறுடன் விளைவப்புனலுண்டே
நின்னீர்மையிதென்றாலுல குயிரெப்படிநிகழும
முன்னீவிடமுண்டோயெனை முனியேலெனைமுனியேல்.

(இ-ள்) எல்லாநதிகளிலிருந்தும்விழுந்து ஒன்றாகிய ஏழுசமுத்திரமுங்காய்ந்து வெந்நீராயச்சுட்டால அவைதயாறுகிறதற்கு வேறேசலமுண்டோ உமக்கேஇப்படிப்பட்டகோபம்வந்தால உலகத்திலிருக்கிற சீவாசிகள் எப்படிப்பிழைக்கும் முன்னேசமுத்திரத்திலேபிறந்த ஆலகாலவிஷத்தையுண்டமூர்த்தி கோபஞ்செய்யவேண்டாம் கோபஞ்செய்யவேண்டாம்-எ-று. (௭௧)

பிறைபோமுழுமதியேயுமை பெண்ணேபிறவாணே
நறையேநறுமலரேயென நானாவிதமானவை
பொறையேதிருவருளேபொழி புயலேயியலிசையே
முறையேபலமுறையேயெனை முனியேலெனைமுனியேல்.

(இ-ள்) மூன்றாம்பிறையாகியும் பூரணச்சந்திரனாகியும் பெண்ணாகியும் ஆணாகியும் தேனாகியும் புஷ்பமாகியும் மலைகளாகியும் இந்தபாவனைஷ்தைப்பொழிகின்றமேகமாகியும் சொல்லாகியும் நாதமாகியும்

ஸ்தாணுவிதரூபமாகிப் பூமியிருக்கின்ற மூர்த்தியே உமக்கு முன்னமேயோ மூவந்தேயனேனாகவே பிக்கவேண்டாம் கோபிக்கவேண்டாம்-எ-று. (௰)

வெம்மை சசாமலாகிய வில்லேட்டுவன்றே
கொழுமைத்தலைமாதவாதெழு கோபக்களிறன்றே
செம்மைக்கனலன்றேகெகசூ செயுமந்தகனன்றே
மும்மைப்புரமன்றேயொரு பொருளாயெனைமுனியேல்.

(இ-ள்.) மிகுந்தவெப்பத்தையுடைய காமாக்கினியாகிய புஷ்பபாணங்களையுடையமன்மதனன்றே மல்லவே தாருகாவனத்து ரிஷிகள்விட்ட எழும்பினதலையையுடைய ஆறுபோன்றாற்றத்தையுமுடைய கோபமாகிய யானையல்லவே அந்தரிஷிகள்பின்புவிட்ட சிவப்பாகிய அக்கினியல்லவே கொலைசெய்யுந்தொழிலையுடையயமனல்லவே திரிபுரமல்லவேநான் எவ்வளவு உமக்குஎன்னை ஒருபொருளாகக்கோபஞ்செய்யவேண்டாம் எ-று.

அரிதற்கரிதாமுனதுமுடியறிவேனெனுமாசை
பதவைப்படுவேனினிமேலோவிடாபவேன்
சிறுமைப்பிழையென்பாலதுசெய்யென்றுரைசெய்தான்
மறுகிக்குளிரானபோதிறைமகிழ்வாயினவமொழிவான்.

(இ-ள்.) யாவராலுமறியக்கூடாத உமமுடைய முடியையறிவேனென்றுநாசகிரசதிலேபட்டசியுறவுமானேன இனிமேலோதுக்கத்தை அடையேன் சிறுமையையடைந்தஎன்னிடத்தில் கிருபைசெய்யும் என்றுசொல்லிவிசனப்பட்டபோது மறுகிக்காய்ந்து குளிர்ந்தஜலம்போல சிவனைசந்தோஷமாயத்திருவாய்மலர்ந்து சிலமொழிகளை அருளிச் செய்வார்-எ-று (௭௬)

அம்போருகவஞ்சேசனிமாவனித்தலமறையோர்
தம்பூசனையுன்பூசனையாகித்தமனியாரந்
சம்பூதலவுலகைப்புயம்விதிகயனருள்செய்தான்
எம்பூரணலவிடமுண்டருள் காருணைக்கடலானே

(இ-ள்.) வாராய்பிரமாவே இனிமேல்நீபட்டபாதே பூமியில்பிராமணர்களுக்குச்செய்கிறபூசை உன்பூசையாகக்கொண்டுபொன்னுருவமாயுண்டாகிய மகாமேருமலைதாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும் போலப்படையென்று அருளிச்செய்தார்சத்தங்களைசசெய்கின்ற சமுத்திரத்தின்விஷத்தையுண்ட கிருபைக்கடலாகிய சிவபெருமான் எ-று.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இத்தலத்திலுமக்குவரம் கொடுத்தருளல்யே சனைமூன்றெல்லைதாம்
சுத்தபவித்திரஞானத் தலமாகப்பொலிந்திலகசோதிதானும
சிறுருவமெய்யசிவாரூதவர்கடவுளின் டஞ்சிறந்ததான
மூதறியனைத்தகையாமலுந்தவமிகக்கருணைபுரிமொழியுநாமம்.

(இ-ள்.) வாருங்கள்பிரமவிஷ்ணுக்களே உங்களுக்குஇந்தத்தலத்திலேஅனுக்கிரகஞ்செய்துவரங்கொடுத்தபடியினாலே இந்தத்தலத்தைச்சுற்றி மூன்றுயோசனைதூரமவரைக்கும் சுத்தபவித்திரமாக இருக்கக்கடவது இங்கேசெய்கிறதானமியாவது சிறியதாயிருந்தாலும் மகத்தாக மிகுந்த பேரின்பஞ்சித்திக்கும் நடக்கின்ற நடையிலெல்லாம் கொடுக்கும் இத்தலத்துக்கு அருணைபுரியென்று பெயராம்-எ-று.

வானதபதிமிந்திரனுமிமையவருமினைக்கவவர்வருத்தந்தீர்த்தோம்
ஆதலினிந்தலத்தை நினைபவர்க்குப்பிறப்பிடும்பையகற்றுமீவாமிப்
பூதலமுமித்தலமும்பிரளயத்தும் அழியாதபொற்பதாகி
மோதியகாற்றடையாததிசைச் சராசரங்களனைவையுமுயர்முத்திசேர்க்கும்

(இ-ள்.) துன்பத்தையடைந்த தேவேந்திரனும் மற்றவர்களும், நம்மை நினைக்க அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்தோம், ஆனபடியினாலிந்தஸ்தலத்தை நினைக்கிறவர்களுக்குப் பிறவித்துக்கத்தை நீக்குவோம் இந்தப்பர்வதமும் இந்தஸ்தலமும் பிரளயகாலத்திலும் நாசமடையாத இலக்ஷணத்தையுடையதாகி மோதுகின்ற வாயுசஞ்சாரஞ்செய்கின்ற திக்குகளிலிருக்கின்ற சராசரங்களெல்லாவற்றையும் முத்தியிலேசேர்க்கும் எ-று. (எஎ)

வையகத்திலரியதவம் புரிந்தவருக்கினியமுத்தி வழங்கவேண்டிச்
செய்யவிசுத்திரிங்கரிலவதரித்தவாறாருவோருஞ்செய்தத்தன
மெய்பெறவொன்றாயிரமாமவளருமித்திறகொடும்பவம விளையாதிந்த
வையமெனவுணர்வார்க்குப்பரகதிகிட்டாதுநாதானைதானே.

(இ-ள்.) பூமியில் அரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு இனிமையான மோட்சத்தைக் கொடுக்கவேண்டி ஜோதிசொரூபமாகிய இந்தஸ்தலத்தில் அவதரித்தவராதலாற்செய்த பாவம் இதிலொருகாலஞ்செய்தால் ஒன்று ஆயிரமாய் விருத்தியாகும் இந்தஸ்தலத்தில் பாவமே புண்ணியமாகாது இதைச் சந்தேகமாக நினைப்பவர்களுக்கு மோட்சங்கிடைக்கமாட்டாது முனையாணைப்படிக்கென்றார் சிவன் எ-று. (எஅ)

அன்னவெமொழியளவிலழலுருமதுகுறுகியசலமாகி வன்ன
வெழுஞ்சுடர்விளக்குக்கண்டயன்றிருமாலவனங்கிச்சொல்வார்
விண்ணவர்களுமெங்களுக்குமிந்தச் சோதிக்கெதிர்கண்டுவிழிகள்கூசுப்போ
கா- கண்ணரியசுடர்களெலாமொடுக்கத்தமலையாயிருக்கவென்றார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் சுவாமி சொன்னவளவில் அக்கினிமயமான துருபமே நிர்மலமாய் நிறம்பொருந்திய அக்கினியாகப் பிரகாசித்தலைப்பார்த்த பிரமாவும் விஷ்ணுவும் சுவாமியை வணங்கிச்சொல்லுவார்கள் தேவர்களுக்கும் எங்களுக்கும் இந்தஜோதியின் சோதிக்கெதிராகப்போய் கண்விழிக்கக்கூடவில்லை ஆனபடியினாலே கண்ணுக்கரிய கிரணங்களெல்லாமடங்கி ஒருமலையாயிருக்கவேண்டுமென்றார்கள் எ-று. (எகூ)

அன்னமிசைவரவானும் கருடன்மிசைவருவானு மமலனுரைப்ப
வன்னியொளிமறைந்துமறமைறைமலையாகவிருந்திடென மலையாச்செய்
தார் சென்னியிலேயொருசோதியனுதினம் தெரியவருள் செய்வாயென்
றொன்னுர் தவடியவர்காவிறையனுமிறங்கியினையியம்பலுற்றார்.

(இ-ள்.) அன்னவாகனத்திலேறுகின்ற பிரமவும் கருடவாகனத்திலேறுகின்ற விஷ்ணுவும் மலாகிதாகிய சுவாமி அக்கினிப்பிரகாசத்தை மறைத்து மற்றமலைகளைப்போலிருக்கவேணுமென்றுகேட்க அப்படியே மலையுருவாகச் செய்தார் திருமலையினுச்சியிலே ஒருபிரகாசம் அனுதினமும் தெரியும்படியாகக் கிருபைசெய்யவேண்டுமென்றார்கள் அப்படிக்

சொன்ன தொண்டர்களுக்காக இரங்கிச்சுவாமியுந்திருவாய்மலர்ந்தரு ளினார்-எ-று (௮௧)

கார்த்திகைக்குக்கார்த்திகைநா, ளொருஜோதிமலைநுனியிற் காட் டுகிற்போம்-வாய்த்தவந்தச்சுடர்காணிற்பசிபிணியில்லாதுலகின் மன் னிவாழ்வார்- சேர்ந்திவர்க்கு,மருந்தவர்க்குமிடையூறுதவறுமிதுபணிந் தோர்கண்டோர்- கோத்திரத்திலிருபத்தோர் தலைமுறைக்குமுத்திவா ழ்கொடுப்போமென்றார்

(இ-ள்.) வாருங்கள் விஷ்ணுபிர்மாக்களே கார்த்திகைமாதத்தில்கி ருத்திகைநட்சத்திரத்தில்மலையினுச்சியில் ஒருபிரகாசங்காண்பிப்போ மஅப்படிப்பொருந்திய சுடரைக்கண்டால் தரித்திரமும் வியாதியுமில் லாமல்உலகத்தில்நிலைபெற்றுவாழ்வார்கள் இந்தசோதியைக்கண்ட அ ரசர்களுக்கும்- அரியதவசிகளுக்கும்- இடையூறுநீங்கும் இதைப்பணி ந்தவர்கள் தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொருதலை முறைக்குமுத்திவரங் கொடுப்போமென்றார் அருணாசலேசுரர்-எ-று

மரணபவமறுக்கநல்லமருந்தாகுமதற்குமலைமருந்தென்றோபே ரருணைவடிவாதலினு லருணகிரியெனுமொருபே ரதனையோர்பால்- தர ணியிலேயுரைத்தவர்க் கமூன்றுகோடியுஞ்செழுத்துச் சரித்தாமென்-றி ருணிலவுமிடற்றிறை வனிசைக்கமகிழ்ந் திறைஞ்சியவரிலசப்பதானர்

(இ-ள்.) இறப்பினையும் பிறப்பினையுநீக்குவதற்குமருந்தானபடி யினாலிந்த மலைக்குமலைமருந்தென்றுபெயர் இந்தமலைசிவபுரியமான படியினா லருணகிரியென்று ஒருபெயர் அதைஒருதரம் பூமியிலேசொ ன்னவர்களுக்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம்உச்சரித்ததற் குச் சமானமாகுமென்று நீலகண்டத்தையுடையசிவன் அருளிச்செய்ய விஷ்ணுபிரமாக்கள் சந்தோஷத்தையடைந்து சுவாமியைவணங்கிச் சொல்லுவார்-எ-று (௮௨)

அந்தஅருணகிரியானையுனக்குவிண்ணீரலதுபுனலாட்டுவாரார் தொடுத்தவுடுத்திரளலது திருமுடிக்குமணிமாலைசூட்டுவாரார் கடுத்திகழுமிடத்திற்றோனைக்கதிரெனுந்திமணித்தீபங்காட்டுவாரார் (ருர் கடுத்திறைஞ்சிப்பூசை செயப்பதின்கீழோரிலிங்கவடிவெடுப்பாயென்

(இ-ள்.) அருணாசலேசுரரே மலையாகியவுமக்கு ஆகாயத்திலிருந்து பெய்யாநின்றமழையேயல்லாமல்சலங்கொண்டுவந்து அபிஷேகஞ்செ ய்கிறவர்களார்நக்ஷத்திரக்கூட்டங்களே முத்துமாலையாவதல்லது வே றேமுத்துமாலைசூட்டுகிறவர்களார் சூரியசந்திரர்களேதீபமாவதல்லாமற் தீபங்கொண்டுவந்துவேறேகாட்டுகிறவர்களார் ஆனபடியினாலே நாங் களபிஷேகமுதலானதுகள்செய்து பூசைசெய்வதற்கிந்த மலையின்கீழ் ஒரு இலிங்கரூபமாயெழுந்தருளவேணுமென்று கேட்டுக்கொண்டார் கள்-எ-று. (௮௩

அன்னதுவாயிருக்குதுநீர் சாமியத்திலருச்சியுமென் றசலம்புக்கா ரத்திலழகுபுகழவங்கோர்சிவனுருவமானதத்துகண் டிறைஞ்சிவத்தி முன்னியபூமழைபொழிந்துபரவசமாய் மகிழ்ந்துதாடிமபனைக்கூவித் துன்னிதரிலகோபுரமுமண்டபமுமணிமதிலுஞ்சமைப்பித்தார்கள்.

(இ-ள்.) அப்படியே இலிங்கமாகிய பதியுடன்பூசியுங்கணை
ன்றுந்தமலையினுள்ளே மறைவுகோலஞ்செய்தார் அந்தத்தேசமும் புக
ழும்படியவ்விடத்தில் ஒருஇலிங்கந்தோன்றிற்று அதைக்கண்டு வணங்
கித்தோத்திரஞ்செய்து புஷ்பவருஷம்பொழிந்து பரவசமாயச்சந்தோ
ஷத்தையடைந்து ஆனந்தக்கூத்தாடி மயனென்கிறதேவதச்சனைக் கூ
ப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்கள் மண்டபங்கள் அழகுபொருந்திய
மதிலுஞ்செய்வித்தார்கள்-எ-று. (அச)

அழியாதவளநகருந்தீர்த்தமுந்நூற்றறுபதுங்கண்டழகுசெய்தார
வழியாகீரச்சுரநதியுஞ்சுரதருவுங்கேணிகளுமாறுமான
மொழியாமவிமையவருமிருடியருமனிதரெனவுருவங்கொண்டார்
விழியாலவிடமனையகணிகையராயரம்பையருமேவினரே.

(இ-ள்.) எப்பொழுதும் அழியாதவளமுள்ளநகரமும்முந்நூற்ற
றுபதுவகையாகியதீர்த்தமும்உண்டானதுகண்டழகுசெய்தார் வழியா
தசலத்தையுடைய ஆகாயகங்கையும் கற்பகவிருட்சமும் கிணறுகளும்
மாறுமானதுகள் நீங்காமல் தேவர்களும்ரிஷிகளும் மனிதரூபங்கொ
ண்டுவந்துபிறந்தார்கள் விஷம்போன்றகண்களையுடைய தாசிகளாக அ
ரம்பாஸ்திரீகள்-எ-று. (அரு)

காலையிலேழுமூழ்கிமாவுரியுடுத்துச் சிவந்தசடைகட்டிநீறு (ண்
மேலணிந்துகண்டிகைபூண்டனமுதலாமஞ்சனத்தான் மிகுந்தசாந்த
மாலையினாற்சிவபூசைபுரிந்தண்ணாமலையனைவணங்கொண்டேத்தி
ஏலவொருபதினாயிரவாண்டுகழிந்தபின்னிறைவராணு.

(இ-ள்.) பிரமாவிஷ்ணுக்கள் இருவரும் காலமேமுழுகிமாவுரித
ரித்துக்கொண்டு சிவந்தசடைகட்டிவிபூதியையுடம்பெல்லாந் தரித்து
ருத்திராட்சமாலை பூண்டுகொண்டு அன்னமுதலாகிய திருமஞ்சனத்
திலும் மாலையினாலும் சிவபூசைசெய்து திருவண்ணாமலையை பிரத
ட்சிணஞ்செய்து வணங்கிப்பின்பு பதினாயிரவருஷம் ஆனபிறகு சு
வாமியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள்பதிக்குப் போகத்
தங்களதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள்-எ-று. (அசு)

ஆசைதருந்திருவருணைசமைந்தபின்கயிலைமலையாசைபோயிற
றீசனுக்குகனகமலையிதுவாயின்வெள்ளிமலையினிமேலென்னுகா
காசிமுதலெடுத்துரைக்குஞ்சிறப்புடையதலமெழுங்கனகாடு (ந்த
மாசகன்றகதிர்தோன்றவொளியிழந்தவுடுக்கணம்போலானவே.

(இ-ள்.) சுவாமிக்குஆசைகொள்ளும்படி திருவருணாசலஸ்தலஞ்
சமைந்தபிறகுகயிலைமலையிலிருக்கும் ஆசைவெறுத்தது இந்தமலையே
பொன்னுருவங்கொள்ளுமாயின் வெள்ளிமலையினிமே லாசையுடைய
குமா காசிமுதலாகச்சொல்லப்பட்ட ஏழுஸ்தலங்களுமந்தலோகமு
ம் குறைநீங்கிய சூரியனுதயமாகப் பிரகாசமிழந்த நட்சத்திரங்கள்
போல ஒளிமழுங்கிப்போனதுகள்-எ-று. (அஎ)

அரியயனுமனவிடுத்த கரியமாலை நிலையுரைக்கவரிதென்றுலக
தெரியவுமைகதிர்ந்தபடிசிறிதுரைத்தகேணியினி [illegible] திறமே [illegible]
[illegible] மணிமகிழ்ந்து [illegible]

ற்றென்றி-யுரியசிவனிடங்கலந்தகதையுமுரைத்தருளவேணுமென்றுரைப்பதானு.

(இ-ள்) நந்திகேசுரர் மார்க்கண்டேயரிஷியைப்பார்த்துவிஷ்ணுவும்பிரமாவும் அறிதற்கரிதாகிய திருமலையினது சிறப்பை ஏனையுலகோரறிதற்கரியதெனினும் எனக்குத்தெரிந்த அளவில்சிறிது உமக்குத்தெரியும்படிச்சொன்னேன் இனிச்சொல்லவேண்டியதென்னவென்றுவினவப்பெற்றமார்க்கண்டேயரிஷி சந்தோஷித்து ஏகம்பசிவபிரானைநோக்கித் தவஞ்செய்து அவரிடப்பாகம்பெற்றதுவுஞ்சொல்லவேண்டுமென்றுகேட்கச் சொல்லத்தொடங்கினார்-எ-று. (அஅ)

இரண்டாவதுதிருமலைச்சருக்கமுற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-கருசு.



உ

சிவமயம்.

மூன்றாவது

பார்வதியார்திருவவதாரச்சருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பண்ணருவர்பதினொருவரெழுவரெண்மர் திசைக்கிறைவர் பணிகாட்டுள்ளோர், இந்திரர்கிம்புருடர்சித்தர் ரியக்கர்விஞ்சையர்முனிவர்கிளையினுள்ளோர், வாணுமலரயன்றிருமால் கணமனைத்தை மலர் மடந்தைமகிழ்ந்துசூழ, மூவனையிகழ்ந்துதக்கன் முடியாத பெருவேள்விமுடிக்கலுற்றான்.

பூருவகதை.

கேளுமார்க்கண்டேயரே முன்னாளிலே பிரமாவினிடத்திற்பிறந்தக்கனென்பவன் அரியதவஞ்செய்து உயர்ந்தவரங்களைப்பெற்று ... பிள்ளையும்பிரசித்தனானவாறு இருகாலத்திலே பார்வதியான

ள் தன்னிடத்திலேபிறக்க அந்த அம்மனைச்சுவாமிக்கு கலியாணஞ்செய்துகொடுத்து மாமனாகும்படிவரம்பெற்று அந்தப்படிசெய்தபின்பு தருகாள் இவன் சுவாமியினுடையசபைக்குப்போனான் அவ்விடத்தில்சுவாமிதனக்குஎழுந்துமரியாதைசெய்யவில்லை என்கிறகோபங்கொண்டு தன்னுடையவீட்டுக்குவந்து சுவாமியைப்பார்க்கிலும் உயர்வை[illegible]யவேண்டுமென்று.

(இ-ள்.) பன்னிரண்டுசூரியர்கள் - பதினொருருத்திரர்கள்- சத்தரிஷிகள்-அஷ்டதிக்குப்பாலகர்-நாகலோகத்தார்- கின்னரர்-கிம்புருடர்-சித்தர்-யட்சகர்-தேவர்கள்-முனிவர்கள்-பிரமன்முதலிய மாவிஷ்ணு- சரஸ்வதி இலட்சுமிமிகவுஞ்சந்தோஷத்தையடைந்துசுற்றிக்கொள்ள எல்லோருக்கும்முதல்வராகிய பரமசிவனைநிந்தித்து முடியக்கூடாதபெரியயாகஞ்செய்யத்தொடங்கினான் -எ-று. (௧)

என்னைசெயுமசம்பார்க்க விடையருளென்றிறைக்கிறைவி விசைத்தாளுந்தை, புந்தியிலாதிகழ்ந்தனனென் றுரைத்தனனீதெனை வேண்டிப்பொருப்பாயென்று, வந்தனஞ்செய்தனளவளை நகைபுரிந்துகடிதுசென்றுவருவாயென்றான், கந்தமலர்குழலாளுந் தந்தைமகந்தொடங்குகள தலத்தைச்சார்ந்தாள்.

(இ-ள.) பார்வதிதேவியானவள் தகப்பனாகியதக்கன்யாகம்பண்ணுகிறதைக்கேட்டுசுவாமி என்னுடையதகப்பன்செய்கிறவேள்வியைப்பார்த்துவருகிறதற்கு உத்தரவுகொடுமென்றுகேட்க அதற்குசுவாமியானவர் உனனுடையதகப்பன் புத்தியில்லாமல் என்னைமிகவும் நிந்திக்கிறானே நீபோகலாமாவென்றுசொல்ல அதைக்கேட்டுசுவாமீ என்தகப்பன்செய்த இந்தக்குற்றத்தைஎன்னைவேண்டிப்பொறுக்கவேண்டுமென்று நமஸ்காரஞ்செய்தபோது அந்தஅம்மனைப்பார்த்துநகைத்து நல்லதுநீபோய்சீக்கிரத்தில்வந்து சேரென்றுசொல்லப்பார்வதியும் தகப்பன்யாகஞ்செய்கிற இடத்துக்குப்போனாள்-எ-று ( )

தாயரைக்கண்டடிதொழுதா ளவட்டமுவாதிருந்தனன்றந்தையானன், தீயவனைப்பணிந்தனளாகலனு மிகழ்ந்தானிகழ்ந்தசொல்லைநோக்கிப்,பேயிருக்குஞ்சுடலையெண்ணிப்பிழைபிறந்துவிடுகவுங்கள்பெருவாழ்வென்று, வாட்பிறைக்குங்கொடுமைசோலியடைந்தனளச் செயலறிந்தான் மங்கைபாகன்.

(இ-ள்.) பார்ப்பதியானவள் தக்கன்யாகசாலைக்குப்போய்தன்னுடையதாயைவணங்கினாள் அவள் இந்தஅம்மனைத்தழுவி உபசாரஞ்சொல்லாமலிருந்தாள் அதன்பின்பு தீமைபொருந்திய தகப்பனைவந்தனஞ்செய்ய அவனும்நிந்தித்தான் அதைப்பார்த்துக்கோபங்கொண்டுஉன்னுடையயாகசாலைவாழ்வுபேயிருந்து விளையாடுஞ்சுடலையாகிப்போகக்கடவதென்றுசபித்து இந்தப்பாவி வளர்த்ததேகம்இருக்கக்கூடாதென்றுயோகத்தினாலேதன்னுடைய தேகத்தைவிட்டாள் அந்தச்செய்கையையுணர்ந்தார்சாம்பமூர்த்தி-எ-று. (௩)

(கலிவிருத்தம்)உண்ணிலாவுவஞ்சிசெல்ல ,வொருவனைவியுய்யுமோ
தண்ணிலாமுடிக்குணின் றுதழலையொண்டிறைக்கையது

லண்ணல்வெம்பிமுனிவுகொள்ளு மளவினெற்றிவிழிதனில்
விண்ணடுங்கமண்ணடுங்க வீரன்வந்துதோன்றினான்.

(இ-ள்.) எப்பொழுதுமகூடயிருந்த பார்ப்பதிதேகத்தைவிட்டவுடனே ஒன்றியாகியிருந்த பரமசிவனுடையவுயிர்சவுக்கியத்தையடைமோ குளிர்ச்சிபொருந்தியசந்திரன் தன்முடையசிரசிலேதானேயிருந்து நெருப்பைவாரிச்சொரிகிறபடியினாலே அதிகதாபத்தையடைந்தது தக்கனாகிய பாவியினாலல்லவோ இந்தவருத்தம் உண்டாச்சுதென்றுகோபித்துக்கொள்ளுமபோது அவருடையநெற்றிக்கண்ணிலிருந்துவீரபத்திரரானவர் ஆகாயவுலகமும பூமியும் நடுங்கும்படியாகத்தோன்றினார்-எ-று. (௬)

மஞ்சுபற்றியுடல்கறுத்து மணிமயூரமுடியுடன்
சஞ்சரிக்குமேருவென்ன விடிமுழங்குதழலின்வாய்
நஞ்சுகொப்பளிக்கவெற்றி நயனமுமகொதிக்கமே
லஞ்சலித்தகையோடெங்க ளையன்வந்துதோன்றினான்.

(இ-ள்.) மேகத்தைப்பார்க்கிலும்உடம்புகறுத்துமயிலினதுநிறம்போன்ற மரகதரத்தினமிழைத்த கிரீடத்துடனே சஞ்சரிக்கின்றமேருவுக்குச்சமானமாகி இடிபோல்முழங்குகின்றநெருப்பாகியசொற்களையுடையவாயானது நஞ்சைக்கொப்பளிக்க நெற்றிக்கண்கொதிக்கச்சிரசின்மேல்வைத்துக் கூப்பியகைகளோடு எமதுஐயராகிய வீரபத்திரர்வந்துதோன்றினார்-எ-று. (௭)

ஒழித்தசிங்கவுரிபுயத்தி னுத்தரீயமாகவே
கழித்தெறிந்தவல்லியத்தி னதளிசைத்தகச்சையாய்
விழித்திமைக்குமுன்னம்விண்ணின் வெளியடைத்தமேனியா
னழைத்ததென்னவென்றனையன்வந்து தோன்றினான்.

(இ-ள்) இரணியனைக்கொன்ற நரசிங்கத்தினுடையதோல்உத்தரீயமாகவும்தாருகாவனத்துரிஷிகளால்விடப்பட்டுசுவாமியினால் மரணத்தையடைந்த புலியினதுசர்மம் இடுப்புக்கச்சையாகவும்விழித்து இமைக்கிறதற்குமுன்னே ஆகாயமெல்லாமறைந்ததேகத்துடனே என்னையழைத்தது என்னகாரணம் என்னகாரணமென்றுவீரபத்திரர்வந்தார்-எ-று. (௮)

முக்கணத்தனீர்கொடாது கனல்கெடுக்குமழிவென
தக்கன்வேள்வியைத்தகர்த்து மீள்கியென்றுசாற்றினா
னக்கணத்திலுவகைபொங்கி யடிவணங்கியேகினான்
பக்கநின்றபூதநாதர் பாரிடங்கள்சூழவே.

(இ-ள்.) என்னையழைத்தகாரியமென்னவென்றுகேட்டவீரபத்திரரைப்பார்த்து மூன்றுகண்களையுடைய பரமசிவன் சலத்தைப்பொழியாமல்நெருப்புகளைக்கக்கும மேகம்போற்போயதக்கனுடையயாகத்தையழித்துவாவென்று அருளிச்செய்யஅந்தட்சணமேவீரபத்திரர் அதிகசந்தோஷத்தையடைந்து சுவாமியினது திருவடியைத்தொழுதுபக்கத்தினின்றபூதக்கூட்டங்களும் பேய்களுஞ்சூழப்போனார்-எ-று. ()

நஞ்சுகொப்பளிக்குநாக நாணிரண்டுமாலையா
மஞ்சாட்டிபூதலே வாலவட்டம்வீசவே

குஞ்சரங்களொட்டையுங் குதம்பையாகவிட்டவென்
கஞ்சகத்தநால்வர்தூய கவரிநின்றுவீசவே.

(இ-ள்.) விஷத்தைக்கக்குகின்ற அஷ்டமாநாகங்களை மலையாகத் தரித்துககொண்டு பத்துபூதங்கள் நீலவானமான ஆலவட்டம் வீசிக் கொண்டுவரத்திக்கிலிருக்கின்றயானைகளொட்டையுங்காதிலேகுண்டலமாகத்தரித்துககொண்ட வெள்ளைச்சட்டையணிந்த நாலுபேர்கள் சுத்தமாகிய சாமரம்வீசவும் புறப்பட்டார் வீரபத்திரர்-எ-று.

தீயிருந்தவுதரவெம்மை விண்பிழிந்துதீர்த்திடும்
பேயிரண்டுநூறுநூறு காகளம்பிடிக்கவே
வாயிரண்டுபோலுமாலை மதியிடைந்தபூதமோ
ராயிரங்கவிக்கமுத்தி னாதபத்திரங்களே.

(இ-ள்.) வடவாமுகநெருப்புக்குடிகொண்டிருந்தவயிற்றினுடைய பசிமயக்கங்களைப்பிழிந்துகுடித்து ஆற்றிக்கொள்ளுகின்ற இரண்டாயிரம்பேய்கள் எக்காளம்பிடிக்கவும் சந்திரனை இரண்டாகப்பிளந்து இரண்டுபக்கவாயிலும் வைத்ததுபோலுமிருக்கின்ற ஆயிரம்பூதங்கள் முத்துக்குடைகள்பிடிக்கவும் புறப்பட்டார்-எ-று. (௬)

மாயுமாயாதந்தசங்கு கோடிகோடிமருகவே
தீயின்வாயினூர்தித்த சிங்காரசமூதவே
சாயுமெண்ணில்காலமேதி தந்தகொம்பிசைக்கவே
யாயிரங்களிறுநெருங்க தன்னதேரிலேறினன்.

(இ-ள்.) இறந்திறந்துபிறக்கிற அனேககோடி விஷ்ணுக்களுடையகையிலிருந்தசங்குகளை அனேகபூதங்கள்வாயில்வைத்தூதவும் இறந்தஅக்கினிபகவான் வாயுபகவானேறுகின்ற ஆட்டுக்கிடாக்களுடையகொம்புகளை வாயில்வைத்து அனேக பூதங்களூதவும் இறந்துபோன யமராசாக்களேறிய எருமைக்கிடாக்களுடைய கொம்புகளை வாயில்வைத்து அனேகபூதங்களூதவும் ஆயிரம் யானைகள்கட்டியிழுக்கிற தேரிலேறினார் வீரபத்திரர்-எ-று. (௰)

சிலகணங்களானையான சிலகணங்கடோதரா
யுலவுகின்றசிலகணங்க ளோடுகின்றவாசியாய்
மலைவுகொண்டசிலகணங்கள் மனிதர்தேவராயின
வலகைதானுமளவிலா தனந்தவேடமானதே.

(இ-ள்.) அப்படிவீரபத்திரர் தேரிலேறினபோது சிலபூதங்கள் யானைரூபங்கொண்டதுகள், சிலபூதங்கள் தேரினுருவங்கொண்டதுகள் சிலபூதங்கள்குதிரையானதுகள், சிலபூதங்கள் மனிதரூபமும் தேவரூபமானதுகள், அளவிலாதபேய்கள் அனந்தரூபங்கொண்டு புறப்பட்டதுகள்-எ-று. (௰௧)

வீரையேழடங்கவுண்டும் விடாய்கெடாதுமீளுமே
பாரவேழுபாருமுண்டு பசிகெடாதுபடருமே
கூரவேலெறிந்துகால னூடுகொன்னைகொள்ளுமே
போரையேவிரும்பிமுன் னடந்துசென்றபூதமே.

(இ-ள்.) வீரபத்திரர்புறப்பட்டவுடனே யுத்தஞ்செயவிரும்பிஅவருக்குமுன்னேநடந்தபூதங்கள் ஏழுசமுத்திரத்துநீரடங்கலும்குடி

தாலும் விடாய்தீராமல் திரும்பும்பாரமாகிய ஏழுலகத்தையும் சாப்பிட்டுப் பசிபோகாமல் அலைந்துக்கொண்டிருக்கும கூர்மைபொருந்திய வேலாயுதத்தையெறிந்து யமனுடையகோட்டையைக்கொள்ளைகொள்ளுமஇப்படிப்பட்ட வலிமையுடையனுகள்-எ-று. (௰௨)

கொண்டலேழையுஞ்சிவந்த குஞ்சிமீதுசுற்றுமே
புண்டரீகாண்டமும் புகைகொளுத்திமீளுமே
யெண்டிசாமுகத்தைநாடி யாகசாலைதேடுமே
சண்டவாயுவென்னவகை தட்டியோடுபூதமே.

(இ-ள்.) ஏழுமேகங்களையும்பிடித்துச் சிவந்ததலைமயிரிலேசுற்றிக்கட்டிக்கொள்ளும் அனேகபிரமாண்டங்களையும புகையுண்டாகநெருப்பினாலேகொளுத்தும எட்டுத்திக்குந்தேடி யாகசாலையெங்கேயென்றுதேடும் பிரசண்டவாயுபோலக் கைகளைக்கொட்டிக்கொண்டு வீரபத்திரர்பின்னேயோடுகின்றபூதங்கள்-எ-று. (௰௩)

வெள்ளவாழிமதுநுகர்ந்து வீறுகின்றசிலசணந்
துள்ளவந்துபுவனமுற்றுஞ் சுற்றுகின்றசிலகணந்
தள்ளுகின்றபேர்களென்று சாய்கநின்றுநகைசெயும்
பள்ளிகொள்ளுமுடனெழுந்து பரிவுகொண்டுபாடுமே.

(இ-ள்.) வெள்ளமாகியசமுத்திரமயோன்ற மிகுந்த மதுவைப்பானஞ்செய்து அதனால்வீறுப்புக்கொண்டு சண்டைக்குஎழுந்துதுகள் சிலபூதங்கள் நம்முடையகலமிவைத்தள்ளுகிறவர்கள்-யாரென்றுகேட்க அவர்களைச்சொல்லுகிறதற்காக நின்றுவீரநகைகொள்ளும் சிலபூதங்கள் நித்திரைசெய்யும சிலபூதங்கள் உடனேஎழுந்து அன்புகொண்டுசிவனைக்குறித்துப்பாடும்-எ-று. (௰௪)

வெதிர்சிலம்புமுரசுசங்கம விருதுபம்பையதிரவே
புதியகண்டைமணிதவண்டை புரிமதங்கமழுங்கவே
கதிகடந்துயாகசாலை கண்டுபூதகணமெலா
மதிதிமைந்தானவேசகளையுமவாரிவீசினர்.

(இ-ள்.) வீரபத்திரசுவாமிபுறப்பட்டவுடனே புள்ளாங்குழல் சிலம்பு முரசு-சங்கங்கள்விருதாகியபறைகளைமுதலான வாத்தியமுழங்கவும், பெரியமணிதவண்டை மிருதங்கம சத்திக்கவும்வழிமுழுதுமபோயதக்ஷனுடையயாகசாலையைக்கண்டு எல்லாப்பூதகூட்டங்களும அதிதியினுடைய பிள்ளைகளாகிய சகலதேவர்களையும வாரிவீசினதுகள்-எ-று. (௰௫)

காரிலேறிமையிலேறி கடாவிலேறியலகைமே
லேறிலேறிமகரமேறி யிரலையேறியலகையாம
பாரிலேறிமானமேறி பசுவிலேறியெண்மருந
தேரிலேறிவந்தவீரர் சேனைமாளமோதினர்.

(இ-ள்) மேகவாகனனாகியதேவேந்திரனுமஆட்டுக்கடாவின்மேலேறுகின்றஅக்கினியும் எருமைக்கடாவாகனனாகிய யமனும பேய்வாகனனாகிய நிருதியும் மகரவாகனனாகிய வருணனும் மான்வாகனனாகியவாயுபகவானும் அளகாபுரியையாண்டு விமானத்திலேறுகின்ற குபேரனும் எருதுவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுபேர்களுந்தேரி

லேறி எதிர்த்துக்கொண்டுவந்த வீரபத்திருடைய பூதகணங்களை யெதிர்த்தார்கள்-எ-று. (௰௬)

வளிகுலப வேலுலக்கை வச்சிரங்கணிச்சிவாள்
மீளிசேனைகாவலாளர் வீழுமாறுவீசினார்
கூளியொவிரண்டுசென்று கொடியவெண்மர்பரியெலா
மாளியோடெடுத்தெறிந்த வம்மனைக்குநிகரவே.

(இ-ள்.) திக்குப்பாலகர் எட்டுப்பேரும் பாணம்-சூலாயுதம்-வேல்-உலக்கை-வச்சிராயுதம்-பழுக்கத்தி - இதுகளை வீரபத்திருடையசேனைத்தலைவர்கள்விழும்படி பிரயோகஞ்செய்தார்கள். அப்போது எட்டுப்பூதங்கள்புறப்படுத் திக்குப்பாலகர் எட்டுப்பேரையும் அவர்களேறிய வாகனங்களெட்டையும் * அம்மனைக்குச்சமானமாக எடுத்தெறிந்ததுகள எ-று. (௰௭)

அலகைநாலிரண்டுவீழ வமர்செயபூதமோடவே
மலைவுகண்டுதிக்குப்பாலர் வெற்றிமாலைசூடினார்
நலிதல்கண்டுவீரன்வாளி நாலிரண்டையேவினு
னுலகபாலருடல்புகுந்து மாமுதமுண்டுலாயதே.

(இ-ள்.) முன்னேஎட்டுப்பூதங்களாலேஎறிபட்டுவிழுந்ததிக்குப்பாலகரெட்டுப்பேரும் அந்தஎட்டுப்பூதங்களுங்கீழேவிழவும்,மற்றைப்பூதங்களெல்லாம் ஓடிப்போகவுமயுதஞ்செய்து வெற்றிமாலைசூடிக்கொண்டார்கள் அதுகண்டவீரபத்திரசுவாமியானவர் எட்டுப்பாணத்தைவிட்டார் அதுகள்போய் எட்டுப்பேர்களுடலைத்துளைத்து அவ்வுடல்களுள்இருக்கிற அமுர்தத்தைப்புசித்துச்சஞ்சரித்ததுகள-எ-று. ()

மருங்கிழிசுதுகுயிலதாகி வசிரத்தனோடினு
னெருங்கியீசனளகையாளி நிருதிவாயுவருணனுஞ்
சுருங்கினர்கூடாவிலேரி துஞ்சினுனழற்பிரான்
பெருநகையேழுமீசனன்பர் பிறவிபோலறுத்தனன்.

(இ-ள்-) தேவேந்திரனுனவன் தன்வாகனத்தைவிட்டுக் குயில்ரூபங்கொண்டுஓடினுன் ஈசானன்-குபேரன்-நிருதி-வாயுவருணன்- இவர்கள்தோறறு வெட்கத்தையடைந்தார்கள் யமனுனவன் இறந்தான் அக்கினிபகவானுடைய ஏழுகையையும் சுவாமிஅன்பருடையபாவங்களை அறுப்பதுபோல அறுத்துத்தள்ளினுர் வீரபத்திரர்-எ-று; (௰௯)

கச்சமற்றவச்சமோடு கலையதாவெச்சன
ரெச்சனுவையுயிரைவாரி யுடலுரிந்தெறித்தனன்
பசையைவல்லியன்னையான பன்னிகர்தாவடையும்
வசிரத்திலுலறிந்து மாமன்முன்புசென்றனன்.

(இ-ள்.) அளவில்லாத பயங்கொண்டயாகர்த்தாவாகியகலைக்கோட்டு மானருஷிபிராணனுடதேகமும் வேறாக்கொன்று உடலைவுரித்துவெறிந்தார் பார்வதியின்தாயாகிய தக்கனுடையபெண்சாதியின் இரண்டுகாதையும் அறுத்துத்தள்ளிமாமனுகிய தக்கனிடத்திற்குப் போனுர் வீரபத்திரர்-எ-று. (௨௰)

---

* அம்மனை மகளிர் ஆடுமோர்விளையாட்டு.

யிக்சருந்துசோமபானம் வீரபானமாகவே
யொக்கநின்றயாகதண்ட மொன்றுகொண்டிருன்றுபோத்
தக்கனொடிராக்கபோது தலையரிந்துதள்ளினு
னகக்கணத்திலொன்றுசென் றனைக்கணத்தயின்றதே.

(இ-ள்.) தேவர்கள்கூடிச் சோமபானஞ்செய்கிறதைநீக்கித்தன னுயிரேபானமாகும்படி யாகசாலையிற்புகுந்து யாகஸ்தம்பத்தைப்பி டுங்கிக்கொண்டு எதிர்த்ததக்கனுடையதலையைமலைபோல்கீழேஅறுந்து விழும்படிஅறுத்துத்தள்ளினார் அப்போதப் பூதகணங்களிலொன் று அந்நொடியிலேதானே அந்தத்தலையைத்தின்றுவிட்டது-எ-று. ()

பசுக்களேறுருத்திரப் பசுக்களாவிதன்னையும்
வசுக்களாவிதன்னையு மறுத்ததேவராவியும்
முசுக்களபோலொளித்திருந்த முனிவராவிதன்னையு
மசிக்கவீரன்விட்டசூல மள்ளியள்ளியுண்டதே.

(இ-ள்.) மாடுகளிலேறுகின்ற பசுப்போன்ற உருத்திரக் கூட்டங் கள்பிராணனையும்-அஷ்டவசுக்களுயிரையும் மற்றதேவர்கள்உயிரையும் குரங்குகள் போலொளித்துப் பதுங்கியிருந்தமுனியீசுரர்களுடைய பி ராணனையும், பரியாசம்பண்ண வீரபத்திரர்விட்ட சூலாயுதம் எடுத்து எடுத்துத்தின்றுவிட்டது-எ-று. (௨௨)

வழியினோடுருக்கர்பல்லை வேரறுத்துவாரணிமா
வெழில்படைத்தனுண்டகர் இரண்டதுண்டமாச்சினன்
கழலமைத்தகண்குதிக்க வயிரதமுண்டகலைநிலா
வழலவிககுமாறுதாளி லப்புவெண்ணையொத்ததே.

(இ-ள்.) சூரியனுடைய பல்லும்கண்ணும்தெறித்துகீழேவிழும்ப டியடித்துசசரஸ்வதியைப்பிடித்து இரண்டாகக்கறுத்தார் இலட்சுமி யைமூக்கறுத்தார் வீரகண்டாமணியைத் தரித்த காலினாலே சந்திரனை மிதிக்க அவன்நசுங்கித்தன்னுடையயாகசாலைநெருப்பையமுத்தபடியி னாலே அந்தவெப்பத்தால் அப்பியவெண்ணெயைப்போலானான்-எ-று.

காயமண்ணில்விட்டதேவர் கரியமேனியலகையாய்
மாயமாகிமுன்னையாகம் வந்துதோன்றியமாசெயத்
தூயசேனையாயபேர் தொடர்ந்துசாகவாசெயதார்
பேயதாயிருக்கவும் பிணக்ககன்றதில்லையே.

(இ-ள்) பூதகணங்களாலே இறந்துபோனதேவர்கள் கரிய உடம்பி னையுடைய பசாசுகளுமறுபடியும் முன்யாகத்திலே மாயமாயத்தோன் றியெழுந்து சண்டைபண்ண அவர்களை வீரபத்திரர்சேனை அடித்துக்கொ ன்றார்கள் ஆனபடியினாலே பேயாய்ப்போயுந்துக்காரிகைவிலலை-எ-று

விதிபுனைந்தவோமகுண்டம் வேறுபட்டதென்னினும்
புதியசோறுமெள்ளினோடு பொரியும்வாய்புகட்டிமுன்
குதிகொள்ளையக்கனமெடுத் தொழுகுபூதகூளிதன
னுதரகுண்டமானதெழுந்த வோமகுண்டமானதே.

---

தின்றுவிட்டதென்றது-இராசசம்பிளந்துகொன்றது என்றுகொள்

(இ-ள்.) பிரம்மாவினாலே விதிக்கப்பட்ட யாகசாலாசத்தையடைந்தாலும் அதற்குபயோகமாகவைத்திருந்த சோறுமுதலானவும் பொரியும் ஒருபூதம் வாயிற்கொட்டிக்கொண்டு நெய்க்குடங்களையெடுத்து மடமடவென்று விட்டுக்கொள்ளும்போது அதனுடையவாய் ஓமகுண்டமாகவும் உதிராக்கினியே நெருப்பாகவுமிருந்தது—எ-று. (உரு)

அட்டதிக்குப்பாலரும் வசுக்களுங்குருக்களும்
முட்டானமுப்பதிறது மூன்றுகோடி தேவரும்
பட்டபோதுவாதமெய்களைப்பழுதுறுதுதன்னுளே
இட்டபூதவுதரமுன்னையாகசாலையொத்ததே

(இ-ள்) அஷ்டதிக்குபாலகரும் அஷ்டவசுக்களுமதலைவராகவந்தகுருக்களும் முட்டுப்பட்டவாகியமுப்பத்துமுக்கோடிதேவர்களும் இறந்தபோது அவர்கள் தேகமவீணாகப்போகாமல் வீரபத்திரருக்கு முன்னே அவருடைய சேனைகள் சாப்பிட்டபடியினாலே அந்தப்பூதகணங்களுடைய வயிறு யாகசாலையையொத்தது—எ-று. (உசு)

கறபகாலமுங்கெடாத கணமிதிக்கவமரர்தம்
மறபமாமுடம்பிரத்தமாவிகாரமொத்ததால
பற்பலவியக்கர்சித்தர்பண்டிசிந்துடர்களாம்
சர்ப்பயாகமொத்ததன்றுதக்கன்செய்தயாகமே

(இ-ள்.) கற்பகாலத்திலும் அழிவில்லாத பூதகணங்கள் மிதித்தபடியினாலே தேவர்கள் அற்பமாகியஉடம்பில்நின்று பீரிட்டரத்தமானது யாகத்துக்குநெய்யெடுத்துச்சொரிதல்போலிருந்தது பலபல யட்சசித்தர்களுடையவயிறு பிதுங்கப்பட்டு அவர்களுடைய குடல் கொடியாகச்சிந்திக்கிடக்கிறது சர்ப்பயாகம் செய்ததையொத்தது அன்று தக்கன் வேள்வி—எ-று. (உஎ)

சிறந்ததிக்குபாலராதிதேவ சித்தர்முதலினோன்
றிறந்திறந்துபோகவேதனின்மையிலேயமரின்
பிறந்துவந்துவந்துபோர்பெருக்கினார்பிறந்தபேர்
மறந்துவிழவீரன்மோதிமாரினானைமண்டினான்

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய திக்குப்பாலகர்முதலாகியதேவர்கள் சிதறிகள இறக்கப்பிரம்மாவானவர் நொடிப்பொழுதிலே யவரைப்படைத்துக்கொண்டுவந்தார் அவர்களமறுபடியும் யுத்தஞ்செய்தார்கள் அவர்கள்பின்னும்பிறவாமலிருக்கும்படி பிரம்மாவையடுத்து யுத்தம்செய்யத்தொடங்கினார் வீரபத்திரர்—எ-று. (உஅ)

செத்ததேவர்மீளவுஞ்செருச்செயப்படைத்திடும்
கைத்தலங்களவிழுமாறுகமலனானைமோதினான்
*முத்தலைக்கொள்படையெடுத்துமுண்டகத்தர்சிந்தைசேர்
பத்துமைந்தர்சென்னியும்படிக்குளோபரப்பினான்

(இ-ள்.) இறந்துபோன தேவர்கள்மறுபடியும் சண்டைசெய்யப்படைக்கும் பிரம்மாவினுடையகைகளை அறுத்துத்தள்ளினார்முன்றுக

---

*முத்தலைக்கொள்படை-சூலாயுதம்

லையையுடையஆயுதத்தினாலே அவர்மனதிலுண்டாகிய பத்துபிரமாக்களுடையதலைகளையும் குததி பூமியில்விழததள்ளினா வீரபத்திரா.எ-று

அண்டகூடமுண்டுமிழ்ந்தவாதிமாயனயர்செயத்
துண்டமேருவெனவிளங்குகருடன்மீதுதோன்றியே
விண்டவாளிவருடமாக்வீரன்மார்பில்வீசினான்
கண்டதுண்டமாகவீரன்கையிலவாளியேவினான்

(இ-ள்.) அண்டங்களைவிழுங்கிஉமிழ்ந்தமுதல்வராகியவிஷ்ணுசண்டைசெயயமுகககையுடைய மேருபோலாக விளங்கிய கருடன்மேலேறிக்கொண்டுஅனேகபாணவருஷங்களவீரபத்திர மார்பில்படும்படியாகப்பொழிந்தார் அப்படிவிட்ட பாணங்களையெல்லாம் துண்டமாகததன்கைப்பாணத்தினாலே அறுத்தெறிந்தார்வீரபததிரா ௫௰

வையமுண்டமால்வெகுண்டுவாள்விதிர்த்துவீசினா
னையனங்கொரவாளியாலறுத்தெறிந்தோம்பினாற்
பையராவருந்தியாவிபருகினான்மெயகருகினான்
கையிலாழியேவினான்கனிநதண்ணல்காலிலே

(இ-ள்.)விஷ்ணுவானவர் வில்யுத்தம்பண்ணுகிறதற்குச்சக்தியில்லாமல்கோபங்கொண்டு ஒருகத்தியையெடுத்துசசுற்றி வீசினார் வீரபத்திரர் அந்தகததியை ஒருபாணத்தைவிட்டு அறுத்தெறிந்து ஒருபாணத்தினாலேபாம்பைககொல்லுகின்றகருடனைககொன்றுவிட்டார அதுகண்டுதுக்கத்தினாலேவுடமபுகறுப்பாயக் கையிலேயிருக்கிறசக்கரததை வீரபத்திரர்மேல் பிரயோகஞ்செயதார அதுஓடிவந்து சுவாமிகாலிலேவிழுந்துபணிநதது—எ-று. (௫௧)

எந்தைமுன்னளித்தவாழிபெந்தைதாளில்வீழவே
யந்தமெய்யொழிநதுபன்றியரியினைவேடமாகியே
வந்தவர்துபோர்தொடங்கிவாளின்வேலின்வல்வினா
னுந்திவேறோர்சேலதாகிவாரிமீதொளிததனன்

(இ-ள்.)முற்காலத்திலேவிஷ்ணு ஆயிரம்தாமரை மலரைக்கொண்டுபரமசிவனைப்பூசித்து வருகிறபோது இவர்பத்தியைபரிசோதிககவேண்டிஆயிரம்பூவிலேஒருபூவைச் சுவாமிமறைததுவைத்தார் விஷ்ணுபூசைசெய்துஅருச்சனைபண்ணிகொண்டு வரும்போது ஒருபுட்பங்குறைய அதற்குப்பதிலாகத்தம்முடைய தாமரைப்பூ ஒநதகண்ணைப்பிடுங்கி அருச்சிக்கச்சுவாமிக்குமனம் சந்தோஷம்வந்து சக்கராயுதங்கொடுத்தார அந்தசக்கரத்தைத்தானே சுவாமிமேலேவிட அதுபயந்துகாலில்விழவேஇனிமேல்இந்தரூபத்தோடேநின்றால் பிழைக்கமாட்டோமென்று அந்தஉருவததைஒழிததுப் பன்றியாகவும் சிங்கமாகவுமுருபமெடுத்துவந்துயுத்தஞ்செயய அந்தவுருவங்களை வாளாயுதத்தாலும் வேலாயுதத்தாலும் வீரபத்திரர்வென்றார் அதனபின்பு மிகவும்பயந்து மீனுருவமெடுத்துச்சமுத்திரத்திலேவிழுந்துஒளித்தார்—எ-று. (௫௨)

புவியுண் நெடுமாலுமபழையபடி புவியுண்டுபோனான்வேதன்
தவியுண்டுதலைநாலுக தீனையுண்டாரிமையவாதங் குடியூனுண்டார்
அவியுண்ட கணகுண்டம்பேயிறைச்சியருந்தசனகலமேயான
தவியுண்டுமனமகிழ்ந்தங் கெய்ததவமுனிவரெல்லா மவியுண்டாரே.

(இ-ள்) மண்ணையுண்டவிஷ்ணுவுந்தோற்று மண்ணைவாயிற்
ட்டுக்கொண்டுஒளிந்துக்கொண்டார் பிரமாதவிதது நான்குதலை
றுபட்டுஇறந்தார் தேவாகளுந்கண்டத்தால் அடியுண்டு இறந்தார்கள்
பூதகணங்கள் இறைச்சிசாப்பிடுகிறதற்குஓமகுண்டமபாததிரமானது
அவிர்ப்பாகம்சாபபிட்டுவந்த முனிசிரேஷ்டாகள் எல்லாரும்வீரபத்தி
ரசுவாமியினால் இறந்தார்கள்-எ-று. (௧௩)

இங்கிதுவாய்முடிந்ததற்பின் வீரனிறைபதம்பரவியிசைர்தானெ
ல்லா, மங்கணனுமுனிமாறியருள்சுரந்து மகததிறந்தாரக்காவியீடந்து,
மங்கரியபதங்களெல்லாமபழையபடியுதவுதலுமவணங்கிப்போனார், சு
ங்கரியைமுன்பெற்றானென்பெற்றானறனக்காட்டுததலைப் பெற்றானே

(இ-ள்.) இவவிடத்தில்இவ்விதமாகயாகசாலையோடு சருவததிரபே
ரும் நாசதலைதயடைந்தபிறபாடு வீரபத்திரர் கைலாயத்துக்குப்போய்
சசுவாமியினுடைய பாததிலேவணங்கி அஙகேநடந்தசமாச்சாரமெ
லலாஞ்சென்னா அதுகேட்டருளிப்பரமசிவனுங்கோபமாறிகிருபை
பிறந்து யாகத்திலிறநதவர்க ளனைவரையும் பிழைப்பிததுக் கேடிலலா
த அவவிடங்களையவாவர்க்குப்பழையபடியே அருளிசசெய்தலும் அ
வாகளசுவாமி நாஙகளவிவேகமிலலாமையினாலே செய்த குறறத்தைப்
பொறுககவேண்டியதென்று நமஸ்கரிநது விடைபெற்றுககொண்டா
ாகள் பாாவதியைப்பெற்றதககனுக்குமாததிரம் நிரைசெய்ததற்கு அ
டயாத அடையாளமாக ஆட்டுததலையை அவனுடலில் வைத்துப பெ
ருசதி எழுநதிருக்கும்படிசெயதார-எ-று. (௧௪)

எந்ாதன்றனையிகழ்ந்தோன் செல்வியெனவுலகுரைக்குமிடுக்கண்டீா
தன்னைகந்தன் யோக சாதனத்தால்விடுததிடபன றவததினாலு (த்
மன்னைகமைநாகன் றனைப்பயந்த மேனியது முயற்சியாலு
மின்னாகவவதரிததா ளமரரெல்லாங் கற்பகப்பூவீசினாரே.

(இ-ள்.) எனக்குநாதராக இருக்கின்ற பரமசிவனைநிந்தித்ததக்க
னுடையகுமாரியென்றுபழிபபாகவுலகஞ்சொல்லுமேசும்மையென்று
பார்வதி அந்ததுக்கந்தீரத தன்னுடையதேகததை யோகாக்கினியி
னாலே நிவாத்திசெய்து இமவற்பருவதராசன் தபோமகிமையினாலும்
மூன்னைமைநாகனென்கிற பிள்ளையைப்பெற்றமேனாதேவியினதுதவ
முயற்சியினாலும் அவர்களுக்குககுமாரியாக அவதாரஞ்செய்தாள் தே
வாகறபகப்புஷ்பங்களைவருஷிம கபொழிந்தாாகள்-எ-று. (௧௫)

சிந்தாநதத்தொன்றுசத்தி சிவத்திரண்டாய்ஞானமிச்சைசெயலின்
மூன்று, சொத்தாகிக்குடிலைதரு நாதவிந்துவிரண்டினுக்குஞ் சொழு

கொம்பாகி, மூத்தாகிச்சிவனிடத்தே யுருத்திரன் மாலயன் முதலாடு ளோத்தமூல, வித்தாகிநிறைவாளைப் பயந்தவறக்குமுடிந்ததவம விளம்பலாமோ.

(இ-ள்.) சித்தாந்தமாகச்சொல்லப்பட்ட சிவனிடத்திலேதான்றுப்பட்ட ஆதிஞானசத்தியாய்ப்பின்பு அச்சிவத்தில்நின்றும் பிறஞானசத்தியென்று வேறுபட்டுப்பின்புஞானசத்திஇச்சாசததி கிரியாசததியென மூன்றுவகையாகிக் குடிலையினாலுண்டாகிய நாதவிந்துகளுக்குக் கொழுகொம்பாகியுமசுவாமிக்குமுத்தாகியும பரமசிவனிடத்தில் உருத்திரன் விஷ்ணுபிரமாமுதலானவர்களஉண்டாகிறதற்குமூலமாகிய வித்தாகியும எங்குநிறைந்தபார்வதியைப் பெற்றவாக்குமுடிந்த தவப்பெருமையைச சொல்லக்கூடுமோ—எ-று. (௩௬)

கலைவளருமதிபோன்று சிவனைவெல்லாதன்வளர்க்குங் கரும்புபோன்றும, பலகலையுந்தெளிந்துயர்ந்து பந்துகழலூசல்பறறியயிலுநாளில், மலைபாசனிடத்தின்மறை நாரதனொருநாளில் மகிழவாயெய்தி, யுலகமெல்லாங்குடியிருக்குந் திருவயிற்றுளிலக்கணம்பார்த்துரைக்கலுற்றார்.

(இ-ள்.) பார்வதியானவள்இமாசலராசனுக்கும்மேனதேவிக்கும் குழந்தையாகி வளர்பிறைபோல நாளுக்குநாள்வளர்ந்து மன்மதனானவன் சிவனைவெல்லவில்வேணடி அதற்குவளர்நதகரும்பைப்போலத்தும் பலசாஸ்திரங்களையுங்கற்றுப் பந்துகழங்கு ஊசல்விளையாட்டு முதலானதுசெய்துகொண்டு வருகிறகாலத்தில் மலைபாசனிடத்தில் வேதமுணர்ந்தநாரதர் ஒருநாள்வந்து உலகங்களெல்லாம் வயிற்றிலேவைததிருந்த அம்மனுடைய இலட்சணம்பார்த்துச்சொல்வார்-எ-று. ()

நெற்றியிலோர்புறத்திலரை கேத்திரமுண்டாமொருகைநெடியசூலமமற்றுமொருதனமறையு மொருபாகமரகதம்போய்ப் பவளமாகும்கற்றைநெடுங்குழற்பாதி சடையாகுமொருகைவளை கழன்றுபோகுமுற்றுவருமிவ்வகையெனன மலையாசன்பனமுருகி யுவகையானான்.

(இ-ள்) வாரும்பருவதராசனே உம்முடைய குமாரத்திக்குச்சிலபொழுதிலேநெற்றியில் ஒருபக்கத்தில் அரைக்கண்தோன்றும ஒருகையிலேசூலமுண்டாகும ஒருபக்கத்துஸ்தனம் மறைந்துபோகும்பாதிசரீரம் பச்சைநிறம்போய்ப்பவளநிறமாகுமகூந்தலிற்பாதிசடையாகும்ஒருகையிலேவளையல்களில்லாமற்போகும் இதுகள்சம்பவிக்குமென்று நாரதர்சொல்ல பருவதராசன் உள்ளமுருகிச சந்தோஷத்தையடைந்தான்-எ-று. (௩௮)

வேறு-அறுசீரடியாசிரியவிருத்தம்.

வையநீர்க்கங்கைபாயும் பணிவரைமருங்கினங்காள்
துய்யநீர்ச்சடையான்வந்தங் கோர்தவந்தொடங்கக்கேட்டு
வையகமளித்தாடசிதை வள்ளலைப்பணிந்துமானை
யையநின்றவத்துக்கேவல் கோடியென்றளித்துப்போனான்.

(இ-ள்) இந்தப்பிரகாரம் நாரதர்சொன்னதைக்கேட்டுப்பார்வதி யே நமக்குப்பெண்ணாகவந்தபடியினாலே பரமசிவன்மருமகனாகி வர வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறானாயில் பூமியிலே கங்கையைச்செலுத்திக்கொண்டிருக்கிற அந்த இமவற்பர்வதத்திலொ ருபக்கத்தில் பரமசிவன்யாதோவொரு நினைவினாலேயோகத்தி லிருக் கிறாரென்கிறவார்த்தைகேள்வியாகித் தன்மகளாகிய பார்வதியையு சில தோழிப்பெண்களையும் அழைத்துக்கொண்டுபோய் நமஸ்கா செய்து என்னுடையபெண்ணை உமமுடையதவசுக்காக ஏவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்று அவரிடத்தில் அம்மனைவிட்டுப்போனான் ப ருவதராசன-எ-று. (௫௯)

ஓங்குமாலயன்மற்றுள்ளோ ரொழிவிலாத்தவப்புரிந்தால்
தாங்குபேரளிப்பான்றானோர் கருத்தினாற்றவஞ்செய்யோதிற்
பூங்குழல்கனியுப்போது முஞ்சியும்புனலுங்கொண்டு
பாங்கியர்பலருஞ்சூழப் பணிவிடைபலவுஞ்செய்தாள்.

(இ-ள.) எல்லாததேவரிலு மூபார்தவிஷ்ணு- பிரமா-மற்றவர்கள் பெருமையாயொழிவில்லாத தவசுசெயதால் அவர்களுக்கு வேண்டி யவரததைககொடுககிற சுவாமியானவா யாதோ ஒருகருததினாலே த வஞ்செயகிறபோது பார்வதி-பழம்-புஷ்பம-தருப்பை- திருமஞ்சன முதலானதுகளைக்கொடுததுந் தனனுடையபாங்கிமார்களுடனே பல பணிவிடையுஞ் செயதுகொண்டிருநதாள்-எ-று. (௬௰)

இங்கிவையிருககததேவ ரியாவருமிமையோர்கோவும்
பங்கயததவனையெய்திப் பணிந்தனர்பதுமத்தோனு
மங்கவாககிருககையிடந்தா னவரவர்முகத்திற்சோர்வுங்
குங்குமக்குழம்புநீதத புயங்களிற்குழைவுகணடான்.

(இ-ள.) இவ்விடததில் இநதபபிரகாரமாகவிருக்க எல்லாத்தேவ ர்களுமதேவேநதிரனுங்கூடிப் பிரமாவைச்சேர்ந்து தொழுதாாகள் அ ந்தப்பிரமாவும அவாகளுக்குஇருக்க ஆசனங்கொடுத்துப்பிற்பாடு அ வர்களுடைய முகஞ்சோர்ந்து இருப்பதையுங்குங்குமம்பூசி யிருக்கிற தோளகள் இளைத்திருப்பதையும பார்த்தாா-எ-று. (௬௧)

வச்சிரமொடிந்தீசானன் கணிச்சுவாய்மடிந்துகாலன்
முச்சிரம்வளைந்துமற்றோர் படைபெலாமுறிந்துதேவர்
மெச்சிரமகுடநீத்து மெலிந்தமைவிளம்புமென்று
னச்சுரர்தமக்குக்கோமான் றாகனழித்தானென்றான்.

(இ-ள்.) வச்சிராயுதம்ஒடிந்துபோயும் ஈசானன் மழுவாயுதத்தி ன் வாயமழுங்கியும் யமனுடையசூலாயுதம்வளைந்தும் மற்றவர்கள ஆ யுதமுறிந்தும தேவர்கள்சிரசிலேயிருக்கிற மகுடம்பிடுங்கப்பட்டும் வ ருந்தத்தையடைந்தீர்கள் அவ்வருத்தத்தைச்சொல்லுங்களென்று கே ட்கத் தேவேநதிரனானவன் தாருகாசுரன்இப்படிஅவமானஞ்செய்தா னென்றுசொன்னான்-எ-று. (௬௨)

காலைபாம்புயர்தோன்சொல்வான் கர்லனாற்கனலாற்காற்றுன்
மாலினாலென்னானு லவன்வலிதொலைக்கலாமோ

வாலமாமிடற்றன்சேயா யசலமாதிடத்தேதோன்றும்
வேலனார்வெல்வாருக்கள் சிறையெலாமவிடுப்பாரென்றான்.

(இ-ள்.) அப்படிதேவேந்திரன் சொல்லக்கேட்ட பிரமாவானவ ன்சொல்வான்-யமன்-அக்கினி வாயு-விஷ்ணு-இவர்களாலுமன்றனறு உன்றாலும், அந்தத்தாருகாசூரனைக் கொல்லக்கூடுமோ, சிவனுடைய ன்னேயாய இமாசலபுத்திரியான பார்வதியினிடமாக சுப்பிரமணிய ர் அவதரிப்பார் அவனைக்கொன்றுஉங்கள் சிறையைமீட்பாரென்று சொ ன்னான்-எ-று. (சஉ)

யோகத்திலிருக்கவீச னுமைமக்குநாணளிக்குமாறு
வேகத்திலியற்றுமெஃறே யபணவிடைகொடுத்தான்மீண்டு
மாகத்திலனுகித்தேவர் மதனனைநினைத்தார்மாரன்
சோகத்தையொழிசருகதென்றறரேருடன்றோன்றிசொல்வான்

(இ-ள்.) யோகத்திலிருக்குஞ்சிவனனவர்பார்வதிக்குமங்கலியதா ரணஞ்செய்யும்படிச்சீக்கிரத்தில் முயற்சிசெய்யுங்களென்று பிரமா ர்வத்திரபேருகத்தம உத்தரவுகொடுக்கத் தேவர்களெல்லாரும அமரா பதிக்குவந்து மன்மதனைநினைத்தார்கள் அவன விடாயதீர்க்கத் தருந்த தென்றலாகிய தேரின்மேலுவந்துசொல்வான்-எ-று. (சச)

எனறவமழிக்கமாத ரெவர்களைமயக்கநீவிர்
கவலுறதெத்துயாரலெம்மை யழைத்ததென்கருமமென்று
னவனறனையிறுகபபுல்வி யமரர்கோனருளினோக்கிச்
சிவன்றவமழிக்கவேண்டி யழைத்தமைதெரியச்சொன்னான்

(இ-ள்.) மன்மதன்தேவர்களைப்பார்த்து எவனுடையதவத்தை அ ழிக்கட்டும் எந்தப்பெண்களைமயக்கட்டும் நீங்கள் எந்தத்துக்கநிமித்த மாக என்னையழைத்தீர்களென்று கேட்கத் தேவேந்திரன அந்தமன்ம தனை இரண்டுகைகளினாலும் இறுகக்கட்டித்தழுவி உபசாரத்துடனே பார்த்துச் சிவனுடைய தவத்தையழிக்கும்படி உன்னைவேண்டியழைத் ததென்று தெரியசசொன்னான்-எ-று. (சரு)

விண்ணிலாமகவான்சொல்ல வெகுண்டுவேள்பயந்துகூறும
பெண்ணலாரலியாணல்லா பிறப்பிலாரிறப்புமில்லார்
கண்ணினாலளவைநூலாற் கருத்தினாலளவாவந்த
தண்ணிலாமுடியார்செய்யுந்தவத்தையார்தவிர்க்கவல்லார்

(இ-ள்.) தேவலோகத்திலிருக்கும் இந்திரன் சொல்லக்கோபித்துச் சுவாமிக்குபயப்பட்டுச்சொல்லுவான் வாருமையாதேவேந்திரனே சி வன் பெண்ணுமல்லர், ஆணுமல்லர் அலியுமல்லர் பிறப்பும் இறப்புமி ல்லாதவர் காட்சிப்பிரமாணத்தினாலும் ஆகமப்பிரமாணத்தினாலுமக ருத்தினாலும் இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத குளிர்சசி பொருந்திய சந்திரனைத்தரிக்குமுடியையுடைய அந்தச்சுவாமியினது தவத்தையழிக்கின்றதற்கு ஆர்வல்லவர்-எ-று. (சசு)

கன்னிக்கௌரியீசன் கதுமிலாப்பிரமசாரி
சந்நிதியிலையாலே யுயிரெலாந்தழைய ரிற்கு

முன்னியவுயிர்கள்போல வொடுங்கிடுமவன்பாற்செல்லு
பன்னியபொருளுந்தோன்றி மனதிலேயொடுங்குமாபோல்.

(இ-ள்.) அம்மனோகன்னிகை சிவனோ குற்றமில்லாதபிரமசாரி யிவாகளிரண்டுபேர்களுடையசன்னிதிமகிமையினாலேசகலஉயிர்களும் உண்டாகிவிாதகியாகுமமுன் எப்படிசுவாமியினிடத்திலிருந்துசீவ ளஉண்டாச்சுதுகளோ அப்படியே அவரிடத்திலே ஒடுங்கும் ம லேதோன்றியஅனேகவஸ்துகளாடுங்குவதுபோல-எ-று. (௪௭)

தாமதகுணத்தரென்பர் சங்காரித்திடலாலீசன்
வமமாமுயிர்கட்கெல்லா மிணைப்பொழித்தருள்வதாக்கும்
மாமலகுணமூன்றில்லை வடிவமிக்கனலாமென்கைப
பூவலாசொரிந்தககாலும் புகையெழப்பொரிந்துபோமே.

(இ-ள்.) உலகத்திலேசங்காரகதொழில்செய்வதனாலே சிவன் த மோகுணத்தையுடையவரென்று சொலவாாகள் அப்படி அன்றுஉயிர் களுடையவிணைப்பையொழிப்பதாகும மற்றத்தேவர்களுக்குஉண்டாயி ருக்கின்றமும்மலசம்பந்தமில்லை இவருடையசொருபம மிகவும்நெருப் பாகும அவர்மேல்நான்புஷ்பபாணத்தைவிட்டால அதுகள்புகையாகக் கரிந்துபோகும-எ-று. (௪௮)

உருவெனத்தெரியாதானை யுருவிேனாடருவாவானை
யருவெனத்தெரியாதானை யமாசெயலரிதென்றஞ்சி
வெருவரப்புகுந்தானத வேளையிலவேளைநோக்கித்
தருவனத்திடையில்வாழும் சதமகனுரைப்பதானான்.

(இ-ள்.) உருவென்று யாவரும் தெரியக்கூடாதவரையுருவமாகி யும்அருவமாகியும இருக்கின்றசிவனை அருவமென்றுமதெரியாதவரை மிகவும்யுத்தம்செய்துசயிக்கப்படாதென்று மன்மதன்பயப்பட்டுத் த னுடையஸ்தானத்திற்குப்போகப்புறப்பட்டான் அந்தக்காலத்தில் மன்மதனைப்பார்த்துககற்பகத்தருவினிழலில்வாசஞ்செய்யாநின்றதே வேந்திரன் சொல்லததொடங்கினான்-எ-று. (௪௯)

மாயவனாகத்தின்மீது மலாவனாவின்மீது
நாயகன்சிரத்தின்மீதும் பொருந்தனலமேயன்றோ
காயுநற்கதிரினமேனிக கடைந்ததுமெனக்குமிந்த
வாயிரநயனந்தந்த செயலுமுன்னுடைமையன்றோ.

(இ-ள்.) விஷ்ணுதமமுடையமார்பிலே இலட்சுமியை வைத்துக் கொண்டதுபிரமாசரஸ்வதியைநாவில்வைத்துக்கொண்டதும், மகாத் மாவானவா தலையிலேகங்கையென்கின்ற பெண்ணை வைத்துக்கொண் டதும் உன்னுடையசாமர்த்தியமல்லவோ சூரியனைச்சாணையில்கடை யச்செய்ததும் எனக்கு ஆயிரங்கணைவைத்ததும், உன்னுடையஆண்மை யல்லவோவென்றான் தேவேந்திரன்-எ-று. (௫௰)

செல்வதின்றெமக்காயங்கே தருவதுதேவர்க்காவி
வெல்வதுசிவனைவென்று கொடுப்பதுகாமவேட்கை

சொல்வதுமறுக்கவேண்டாமெனச்சொலித்துணைக்கைப்பற்றி
நல்வரமிதுதாவென்மன்மதனவேணயர்ந்துகூறும்.

(இ-ள்.) பிரமனுந்தேவேந்திரன்சொல்வான் வாராய்மன்மதா எ ணைக்காக அங்கேசென்று சிவனைசயித்து அவருக்குக்காமலாகிரி யுண்டாகும்படிசெய்தால் அவருக்குப்புத்திர னுண்டாகும் அந்தப்புத்திர சூரசனைகொன்று தேவர்களைப்பிழைக்கும்படிசெய்வார் அதற்கு நீயேகாரணமாயிருக்கிறாய் நான்சொன்னவார்த்தையைமறுக்கவேண்டாமென்றுகையைப்பிடித்துக்கொண்டு எனக்குஇந்தநல்லவார்த்தைதக் கொடுவென்றுகேட்க மன்மதன் சந்தோஷித்துச்சொல்வான்-எ-று. ()

அரன்சிலைமலையென்றாலு மடுங்கணையரியென்றாலும்
வரம்பறவிசைந்தநாணும் வாசுகியாவென்றாலுங்
கருமமெனுஞ்சிலைபார்த்து சணையெறுபலராங்கலச் (போனான்
சுரும்படுனைகுணத்தால்வெல்வே னெனசசொலித் தொழுது

(இ-ள்) வாருந்தேவேந்திராசனே சிவனுக்குவில்லானது மலையாகியிருந்தாலும விஷ்ணுவே பாணமாகியிருந்தாலும வாசுகியே நான்றாக ஏறுகின்றநாணியானாலும என்னுடையகரும்பாகிய வில்லினாலும் ஐந்துபுட்பங்களாகியபாணங்களாலும நீலநிறம்பொருந்திய வண்டின்திரள் நாணியினாலும அந்தச்சிவனைச் செயித்துப்போகிறேனென்றுவந்தனஞ்செய்துசுவாமியிடத்துக்குப்போனான் மன்மதன்-எ-று.

சந்தனமணமூர்ந்தெட்வக தமிழப்புதுமணமுங்கொண்டு
வந்தமலையதென்றல் வசந்தமந்திரியுஞ்சார்ந்த
இந்துவுநிலவாபவெண்ணிலை வலையினையெதததெங்கும
கொந்தலரிளமாவெல்லாங் கோகிலமுழங்கிற்றே.

(இ-ள்.) மன்மதன் சிவனைசெயிக்கும்படிபுறப்படும்போதுபொதியமலையிருந்து அவ்விடத்தில்தங்கிய சந்தனவாசனையும திவ்வியமான தமிழ்வாசனையுங்கொண்டுதென்றல்காற்றுவந்தது வசந்தனாகிய மந்திரியுமவந்துசேர்ந்தான் சந்திரன்கிரணமாகிய வெண்ணிலவலையினைநாலுபக்கமும்வீசினான் புட்பக்கொத்துகளையுடைய இளமையுற்றமாமரத்திலெல்லாங்குயில்முழங்கியது-எ-று. (௩௰)

மல்லிகைமுகையாஞ்சங்க மதுகரமுழங்கசசெய்ய
முல்லைசண்பகமசோகு முளரியேமுதலாயுள்ள
வெல்லைபின்மலருந்தேனு மிசைத்தனவிரும்பைச்செம்பைக்
கல்லினையுநக்கும்சொல்லார் குறிஞ்சியாழகாதிற்சொண்டார்.

(இ-ள்.) மல்லிகையரும்போசங்கமாகவும அவ்வரும்பில்சப்திக்கின்ற வண்டுகள்அச்சங்கத்தைவாயில்வைத்துஊதுகிறவிருதாகவும விளங்கின முல்லை சண்பகம் அசோகு-தாமரைமுதலாகியகணக்கில்லாத புஷ்பங்களையும்தேனையுமுண்டு பக்கமுமிறைத்துக்கொண்டு கடினமாகியிரும்புகல்செம்பு இதுகள கூடவுருகும்படி சொல்லுகிறவார்த்தையையுடையபெண்கள்குறிஞ்சியாழென்னும்வாத்தியத்தைக்கையிலேகொ
(௩௧)

பொங்கியவுடுக்களான புகாணிமுகத்துச்செக்கர்
தங்குசிந்தூரமாகுந் தனியிருட்கரியுங்கிளளேப்
பைங்குரகதமுஞ்செல்லப் பணைமுலைப்பவளச்செவ்வாய்
மங்கையரெனுமபோர்வீரா வடிக்கண்வாள்விதிர்த்துச்சென்றார்.

(இ-ள்.) மிகுந்தநக்ஷத்திரங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாக செவ்வானமானது ஒருதிலகப்பொட்டாகவுமவிளங்குகின்ற ஒ— விருட்டாகியயானையும பசுமைபொருந்திய கிளியாகியகுதிரையும் நடக்கப்பருத்தமுலையையும் பவளம்போன்றவாயையுமுடைய ஸ்திரீகளாகிய சுத்தவீரர்கள் தங்களது தங்கள் கண்களாகிய சத்திகளை அசைத்துக கொண்டு புறப்பட்டார்கள்-எ-று, (ருரு)

கோணியகருப்புமைந்து குலமலர்க்கணேயுங்கொண்டு
வாணுதலோதிசெல்ல மகரகேதனசதிரேறு
தாறுமாவனத்தைச்சோந்தான் றவஞ்செய்வான் றனைக்கண்டஞ்சி
நாணினுணுகால்வண்டு நாணினுணேங்கினனே.

(இ-ள்.) வளைவாகியகரும்புவில்லையும் புஷ்பங்களாகியஐந்துபாணங்களையும் எடுத்துக்கொண்டு ஒளிபொருந்திய நெற்றியையுடைய இரதிதேவியானவள் கூடவரமீனக்கொடியுடனே பரமசிவன்யோகத்திருக்கிறவனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில்தவஞ்செய்கிற அந்தச்சுவாமியைப்பார்த்து இவரையெவ்வாறுசெயிப்போமென்றுபயந்துவெட்கத்தையடைந்துநடுங்கினன் வண்டுநாணையுடைய மன்மதன்-எ-று.

வெளிநிற்கலத்தெதிர்த்தாலென்னவிளையுமோதனச்சென்றெண்ணி
யொளிந்தனன்முன்னேபின்னேயுமையவள்வரவுகண்டு
களித்தனமயக்கமாமோகனத்துகளிறைத்துவில்லை
வளைத்தனனிநாண்பூட்டிவடிக்கணைதொடுத்தான்மாரன்.

(இ-ள். நேரேவெளியாகவந்துயுத்தஞ்செய்தால்என்னசேதமக்கு உண்டாகுமோவென்றுநினைத்துச் சுவாமியின்பின்தெரியாமல் ஒளித்திருந்து சமயம்பார்த்துக்கொண்டிருந்தபோதுபார்வதிஅக்கடவுள் முன்னே பணிவிடைசெய்யவருதலைக்கண்டு பெண்துணைநமக்கிருக்கிறபடியினாலே வெல்லக்கூடுமென்று சந்தோஷித்து மோகனத்தையுண்டாக்கும் புஷ்பராகத்தைஇறைத்து வில்லைவளைத்து நாணேற்றிப்பாணங்களைத்தொடுத்தான்மன்மதன்-எ-று. (ருஎ)

ஒருகரும்புருவச்சாபமொடியினுமுலகமீன்ற
விருகரும்புருவச்சாபமுளவெனுமெழுச்சியாலே
*பொருகணைதொடுத்தானென்று புராணசுடுகணையினாலு
மொருகணைவிடுத்தான்மாரனுடலெலாங்கொளுத்திற்றன்றே.

(இ-ள்.) மன்மதனானவன்தானதிகசண்டைசெய்தால்ஒருகரும்புருவமாகியவில்லானது ஒடிந்தாலும் உலகத்தைப்பெற்ற பார்வதியின்

---

*ஒருகணையென்றமையால் வெற்றியென்றுவருவிக்கப்பட்டது கண்ணையென்றசொல்மெய்கேட்டு கணையென்று சொல்லணியேற்ற—.

இரண்டெரும்புருவமாகிய வில் உண்டாயிருக்கின்ற நமக்கியாதொரு குறைவுமில்லையென்கிறசெருக்கினாலேபோய் அனேகபாணங்களை விட்டபோது மூன்றுபுரத்தையும் எரித்தநகையாகிய அம்பையுடைய சிவன் அம்மன்மதன்மேல் தன்னெற்றிக்கண்ணைச்செலுத்தினார் அக்கண் மன்மதனுடைய உடம்பையெல்லாங்கொளுத்திவிட்டது-எ-று. (௫௮)

எருக்கவெண்பஞ்சுபோலே யழற்கண்ணாலனங்கனான
திருக்குலைக்கண்டு தேவருந்திசையினோரும
வெருக்கொளவொளித்தார்பூத கணத்துடன் விடையினானும்
பொருக்கெனமறைந்துவெள்ளிப் பொருப்பிடை புகுந்தானன்றே.

(இ-ள்.) நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல் மன்மதனாகிய ஒப்பாருபாடுபொருந்திய மனத்தையுடையவன் எரிந்துபோகக்கண்டு தேவர்களும் அஷ்டதிக்குப்பாலகரும் பயப்பட்டொளித்துக்கொண்டார்கள் அதன்பின்பு சுவாமிபூதகணங்களுடன் சீக்கிரமாக அந்த விடம்விட்டுக் கைலாசத்துக்குளெழுந்தருளினார்-எ-று. (௫௯)

சங்கரன்மணத்தைவேண்டியுமையுநற்றவமேசெய்தா
ளங்கதுபுணருமாறேழ் முனிவருக்கமலனசொன்னான்
மங்கலமேழுஞ்செய்த முனிவருமகிழ்வாயெய்தி
துங்கவெற்பிறைபாற்கிதனைச் சோபனஞ்சொல்லினார்கள்

(இ-ள்.) பரமசிவனானவர் தன்னைக்கல்யாணஞ்செய்துகொள்ளப்பார்வதி தவஞ்செய்கிறாள் அவள்வந்துசேரச்சப்தரிஷிகளையழைத்து பருவதராஜனிடத்திற்போய் சுவாமிக்கு உன்பெண்ணை கலியாணஞ்செய்துகொடுவென்று கேளுங்களென்று அனுப்பினார் அந்தப்படியே அந்த வெழுபேரும் பருவதராசனிடத்திற்குப்போய் இந்தச் சோபனச்செய்தி சொன்னார்கள்-எ-று. (௬௰)

மலையிறைமகிழ்ந்தானந்த மலையிறைபுதல்வன்வள்ளல்
குலமதுயாதோர்நாமங் குடிப்பெயரேதுவாழூர்
தலமதுபுகலுமென்றான் தவத்தவர்நகைத்துச்சொல்வா
ரலகிலான்பிறப்புசலல கிலையெனவறிவித்தார்கள்.

(இ-ள்.) ரிஷிகள்போய்ச்சொன்னவுடனே பருவதராஜன் சந்தோஷித்தான் அவன் பிள்ளைபாக்கியமைநாகன் ரிஷிகளைப்பார்த்து சிவனென்ன சாதி அவருக்குத்தாய்தகப்பன் பெயரென்னகுடிப்பெயரென்ன அவரிருக்கும்ஊரேது சொல்லுங்களென்றுகேட்டான் அதைமுனிவர்கேட்டுநகைத்துச் சிவனோ அளவிடக்கூடாதவர் அவர் பிறந்தவிடம் மூன்றில் அவர்கல்லசாதியென்றுதெரிவித்தார்கள்-எ-று. (௬௧)

பொருந்ததோருவலையெடுக்கிப் பிறைமுடியவன்பேர்சாலிற்
பொருந்தபூணாருந்தேர்ந்து புனிதனைப்புகழ்ந்துபோமறி
விருத்தியார்வாவுராளுக்குறிதகிறைவிடுத்தானன்னோர்
பருத்தசங்கையினாற்கிந்தப்படியெல்லாம்பணிந்துசென்று

(இ-ள்.) அப்படிச் சத்தரிஷிகள் சொன்னபிறகு பருவதராசன் முதலா னவர்களெல்லாம் மகாசந்தோஷத்தையடைந்து சந்திரனைத்தரித்த முடியையுடைய சிவன் பிறந்த நட்சத்திரத்திற்கும் அம்மன் பிறந்த நட்சத்திரத்திற்குந் தகுந்த பொருத்தமுங் கலியாணஞ்செய்கிற காலமுமறிந்து நிச்சயம்பண்ணி ரிஷிகளினுடைய பாதத்தைப் புகழ்ந்துவணங்கி விருத்திபொருந்திய கலியாண முகூர்த்தவோலையும் எழுதிக் கொடுத்து அனுப்பினான் அந்த ஏழுரிஷிகளும் கங்கையைத்தரித்தசுவாமிக்கு நடந்த சங்கதிகளெல்லாம் வணங்கிச்சொன்னார்கள் -எ-று. (௬௨)

இமையவெற்பிறைவனோலை யுகத்திலேயெழுகிரிக்குமேருச்
சிமையமாலவரைக்குஞ்செம்பொற் றிகிரிமாவரைகளுமேழு
தமரவான்கடற்குஞ்சித்த சாரணர்முனிவோருக்கும்
அமரரானவர்க்குமவஞ்சிமணத்தினையறிவித்தார்கள்.

(இ-ள்.) இமைய்பருவதராசன் பார்வதியம்மன் கலியாணமுகூர்த்த வோலையை அனேகதூதர்கள்கையிற்கொடுத்தனுப்பிக அவர்கள் சத்த குலபருவதங்களுக்கும், கொடிமுடிபொருந்திய மேருவுக்கும், சக்கிர வாளகிரிக்கும், ஒலியையுடைய சத்தசமுத்திரத்திற்கும், சித்தர் - சார ணர்-முனிவர்-தேவர் முதலானவர்களுக்கும், அம்மன் கலியாணத்தைத் தெரிவித்தார்கள் -எ-று. (௬௩)

ஓலைகண்டவேசேர்ந்த வுததிகளேழும்பூமி
மாலையாய்ச்செல்லுகின்ற மகிமைசேர்நதிகளேழும்
நீலமேமுதலாயுள்ள கிரிபெலாநெருங்கிச்சென்ற
கோலமாமுனிவோர்சித்த ரிமையவரீண்டாங்கொண்டார்கள்.

(இ-ள்.) ஓலையைக்கண்டவுடனே ஏழுசமுத்திரத்திற்கும்பூமிதேவிக்கும், மாலைபோலப்பிரகாசிக்கின்ற மகிமைபொருந்திய ஏழுநதிகளுக்கும், நீலகிரிமுதலாகிய சப்தகுல பருவதங்களுக்கும், அதிஷ்டான மாகியதேவதைகளொருங்கிச்சேர்ந்தார்கள்-முனிவர்களும், சித்தர் களும் தேவர்களுங் கூட்டங்கூட்டமாகச்சேர்ந்துவந்தார்கள்-எ-று. ()

அட்டதிக்கனைத்துந்தேரூ கொடிகளாலடைத்தார்விண்ணை
மட்டறுவிமானந்தன்னுன் மாலையான்மறைத்தார்வீதி
நெட்டிலைபாமனைபூக நிரைகளாய்நிறைத்தார்வெற்பிற
றட்டியபுழுகினாலே மெழுகினார்தரைகளெல்லாம்.

(இ-ள்) எட்டுதிக்கையும் தேரினாலும்கொடிகளாலும் இடமில்லாமல்நிறைத்துவிட்டார்கள், ஆகாயத்தைஇடமில்லாமல் விமானத்தினாலும், மாலைகளினாலும் மறைத்துவிட்டார்கள் வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழைகளையும்-கமுகுகளையும் நிரைநிரையாகக்கட்டி அலங்காரஞ்செய்தார்கள்-மலையிலிருக்கிற புழுகைக் கரைத்துத்தரைகளெல்லா மெழுகினார்கள்-எ-று. (௬௫)

தோரணஞ்சமைத்தார்முத்தின் றொடையெலாந்தொடுத்தார் வி
பூரணகும்பம்வைத்தார் புதுமணிவிளக்குமிட்டார் (ண்ணில்

ஆரணனுலகுமற்றை யனைத்துமமராநாடு
காரணனுலகுமவந்து காணவேநாணுமாறே.

(இ-ள்) தோரணங்கட்டினார்கள், அகில முத்துமாலைகளைத்தொங்க விட்டார்கள் ஆகாயகங்கைகொண்டுவந்து பூரணகும்பம் வைத்தார்கள். மேன்மை தங்கிய இரத்தினவிளக்குகள் ஏற்றினார்கள், பிரமலோகமும் அளகாபுரியும் தேவலோகமும் வைகுந்தமும் இதைப்பார்த்து நாணும்படி சிங்காரித்தார்கள்-எ-று. (௬௬)

மணிவிளக்கனையவிமவான் மகளையாமகளிர்கூடிக்
கணிமலர்க்கங்கையாட்டிக் கலையிணுண்மருங்கைக்கூட்டிப்
பணிமணியாரம்பூட்டிப் பரிமளத்தாமஞ்சூட்டி
யணிநுதற்றிலகந்தீட்டி யருமறைச்சடங்குசெய்தார்.

(இ-ள்) இரத்தினதீபம்போன்ற பார்வதியைமலையிலிருக்கிறபெண்கள்கூடிக் கற்பகமலர்வாசனைசேர்ந்த கங்காசலத்திலே ஸ்நானஞ்செய்வித்து இடுப்புத்துவளும்படி சேலைகட்டி ஆபரணங்களுடன், முத்துமாலையும்பூட்டிப் பரிமளம்பொருந்திய நறுமலர் மாலைசூட்டி அழகிய நெற்றியிலே திலகம்பொட்டிட்டு வேதவிதிப்படிச் சடங்குசெய்தார்கள்-எ-று. (௬௭)

பூட்டணக்கோலஞ்செய்த பொடியணிபுனிதனாரைத்
தாமணக்கோலஞ்செய்யச் சதுர்முகன்முதலோரெண்ணித்
தூமணித்துகிலசைச்சாற்றிச் சுராதருமாலைசாற்றி
மாமணிப்பணியைநீக்கி மாமணிப்பணிகள்பூட்டி.

(இ-ள்) வாசனைபொருந்திய புஷ்பபாணங்களை எய்தமாரனை நெற்றிக்கண்ணாலெரித்து அப்பஸ்மத்தைப்பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ்செய்யும்படியாகப் பிரமா முதலானவர்கள்கூடிப் பரிசுத்தமாகிய இரத்தினமயமாகிய வஸ்திரஞ்சாத்திக் கற்பகப்பூமாலைதரித்து முன்னேயிருந்த சர்ப்பாபரணத்தைக்கழற்றிப்போட்டு மாணிக்கரத்தினங்களாகிய ஆபரணங்களைத்தரித்தார்கள்-எ-று. (௬௮)

சடையிளம்பிறையைத்தங்க ளிறையெனத்தகைத்துசூழ்ந்த
உடுகுலமெனமுத்தா லொளிவிடுமகுடஞ்சூட்டி
அடைவுடன்விழியாந்திங்க ளாதவர்காதின்மீது
குடியிருந்தனபோற்செய்ய குண்டலமிரண்டுஞ்சாத்தி.

(இ-ள்) சுவாமியினது சடையிலேதரித்த பிறையைப்பார்த்துத் தம்முடைய புருஷனென்று சுற்றிக்கொண்ட நட்சத்திரக்கூட்டங்களைப்போல முத்துக்கள்பிரகாசியாநின்ற கிரீடஞ்சூட்டிப்பொருந்திய கண்களாயிருக்கிற சந்திரசூரியரிருவருங் காதினிடத்தில் குடியிருந்தாற்போல அழகாகிய இரண்டுகுண்டலங்களைச் சாத்தினார்கள்-எ-று. (௬௯)

வரம்பெற்றதிருமால்சாத்து மலர்விழிக்கதிர்ப்பசோதி
பரம்பியதனையசீலப் பருமணிச்சிலம்புசாத்தி
விருப்பியகோலஞ்செய்தா ரிறைபுமால்விடைமேற்கொண்டார்
நம்மலையரசர்மருகிதந்தண்ணீ ராருசலுந்தாட்டினார்கள்.

(இ-ள்) விஷ்ணுவானவர் வரம்பெற்றுக் கொள்வதற்காகத் தம்முடைய கண்ணிலொன்றைப் பாதத்திற் சாத்தினார் அந்தக் கண்ணினது கறுப்புச்சோதி காலைச்சுற்றிப்பரவினதுபோலே நீலமணிகளாலிழைத்த சிலம்பைத்தரித்தது சர்வதகிராளும் விரும்பத்தகுந்த அலங்காரஞ்செய்தார்கள்-பரமசிவன் விஷ்ணுவே யுருவமாகிய ரிஷபத்திலேறினார் -அப்பொழுது அரம்பாஸ்திரீகள் மஞ்சளாலத்தி யெடுத்தார்கள்-எ-று.

குலவுமாலனுகிப்போற்றக் குமுதவாய்மலர்ந்தான்கஞ்ச
மலரினான் வணங்கச்சற்றே மணிமுடியசைத்தான்விண்ணோர்
தலைவனெதிர்நின்றேத்தத் தனிநகைபுரிந்தான்றேவர்
பலருமங்கிறைஞ்சியேத்த வவர்க்கெலாமபார்வையீந்தான்.

(இ-ள்) விஷ்ணுவானவர் சுவாமியின்முன்னேவந்து வணங்கச் செவ்வாம்பற்பூப்போலுந் திருவாய்மலர்ந்து வாருமென்றார் - தாமரைப்பூவிலிருக்கிற பிரமாவந்து நமஸ்கரிக்கச்சற்றே இரத்தின கிரீடமிழைத்த திருமுடியையசைத்தார் - தேவேந்திரன் வந்தனஞ்செய்யப் புன்சிரிப்புக்கொண்டார்-மற்றுந் தேவர்களெல்லாரும் வந்துவணங்கக்கிருபைக்கண்ணினாலே பார்த்தருளினார்-எ-று. (௭௧)

கலித்துறை.

முடித்தகங்கையாம்பிறைங்கொழுந்தெழுந்துமேன்முளைத்து
வெடித்ததாமெனத் தவளவெண்ணிலாவிலைகபோல்விளங்க
வடித்தசங்கையி னருவியுமப்புலிகொழுந்துந்
தொடுத்துவீழுமா றெனவிருசவரிகடுலங்க.

(இ-ள்) சடாமுடியிலேயிருக்கிற கங்காசலத்திலுள்ள பிறையானது கொழுந்துவிட்டு அநேகமாகிப்புத்தியுதயமென்றுசொல்லும்படியாக வெள்ளைவட்டக்குடைபிடிக்கவும், அலையடிக்கிற கங்கையினருவியும், சந்திரனுஞ்சேர்ந்துவிழுந்ததுபோலும் இரண்டுசாமரம்வீசவும்-எ-று. (௭௨)

திருவினாயகனடப்பைகொண்டொருபுறஞ்சேரத்
தருவினாயகன்களாஞ்சிகொண்டொருபுறஞ்சார
விரவிநான்முக னலவட்டங்கொடுவீசப்
பாவிநாரதர் தும்புருவிருபுறம்பாட.

(இ-ள்) இலட்சுமிகாந்தராகிய விஷ்ணு வெற்றிலை முதலானவைவைத்திருக்கிற அடப்பையெடுத்துக்கொண்டு ஒருபக்கம்வரவும், கற்பகதருவிற்கு நாதனாகிய தேவேந்திரன் படிக்கமெடுத்துக்கொண்டுவரவும், பிரமாசமீபத்திலிருந்து ஆலவட்டம்வீசவும், தும்புரு நாரதரிரண்டுபேரும் வந்தனஞ்செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம்பாடவும்-எ-று. (௭௩)

கூற்றுதைவன்கணைப்பதுகைகொடுத்துறுகக்
காற்றுவேந்தனுந் திசையெலாநறும்புகைகாட்ட
வேற்றுவாகனக்கடவுளுஞ்சிறியவாளெடுப்பத்
தோற்றுநாதவர்கலைமதிவிளக்கொடுந்தொழ.

(இ-ள்) யமராசனானவன் தன்னத்தினாற்செய்திருக்கிற பாதக்குறடுகளைக் கையாலெடுத்துக்கொண்டு வரவும், வாயுபகவான் திசைகளெட்டிலும் அகிற்புகை, சாம்பிராணிப்புகை; காண்பிக்கவும், ரிஷபத்திலேறுகிற ஈசானன் உடைவாளெடுத்துக்கொண்டுவரவும், சூரியர்களநேகரும் சந்திரரநேகரும் விளக்கெடுத்துக்கொண்டுவரவும்-எ-று.

சுரமடந்தையர் துகிலின்மஞ்சிகைபலசுமப்ப
வரவமங்கையர் நவமணிப் பணிசுமந்தணுகப்
பரவுகின்னரர் முதலினோர் வீணைபார்ப்பரிக்கப்
பொருவினான்மறை நடநிறைதலைமையைப்புகழ.

(இ-ள்) தேவகன்னியர் அநேகாவஸ்திரம்வைத்திருக்கிற பெட்டிகளைத்தூக்கிக்கொண்டுவரவும், நாகலோகப்பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச்சுமந்துகொண்டுவரவும், கின்னரகிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும், நான்குவேதங்களுஞ்சமீபித்துச்சுவாமியெல்லாருக்கும் பெரியவரென்று புகழ்ந்துமுறையிடவும்-எ-று. ()

கிரகமேழுமெண்வசுக்களுமுனிவருங்கிளா
வுரகாவிஞ்சையரிமையவர்மகிழ்ந்துகண்டுருக
விருகாங்களாலுருத்திரர்மலர்மழையிறைப்பத்
திருவும்வெண்கலைமடந்தையுமிமசலந்தெளிப்ப.

(இ-ள்) சந்திரசூரியரிருவருந்தவிர மற்றவேழுகிரகங்களும், அஷ்டவசுக்களும், முனியீசுரர்களும் களிகூர்ந்துவர நாகலோகத்தார் வித்தியாதரர்கள் தேவர்கள்பார்த்துச்சந்தோஷத்தையடைந்து உருக ஏகாதசருத்திரர்களும் இரண்டுகைகளாலும் புஷ்பங்களைவருஷமாகவிறைக்க-இலட்சுமியும், சரஸ்வதியும், பனிநீர்தெளிக்கவும்-எ-று. (௭௬)

திக்குப்பாலகர் தெரிவையர்திசைதொறுந்திகழ
மிக்கமாதர்களெழுவருஞ்சோபனமிளம்ப
விக்குநேர்மொழிநாமகளிர்வாழ்த்தெடுப்பத்
தக்கவிஞ்சையாமகளிர்பல்லாண்டிசைவழங்க.

(இ-ள்) திக்குப்பாலகருடைய தேவிகள் அவரவர்கள் திசைகளினின்றுசேவிக்கவும் சத்தமாதர்கள் சோபனம் பாடவும் கருப்பஞ்சாறுபோல்மாதுரியம்பொருந்தியவார்த்தைகளுடைய நாமகளிர்வாழ்த்துச்சொல்லவும், தகுந்தவித்தியாதரமாதர்கள் பல்லாண்டுகூறவும்-எ-று.

கண்டைபேரிகை குடமுழகாகளந்துவைப்ப
வுண்டமல்லரி சல்லரிவலம்புரியொலிப்ப
வண்டகோளகை மடந்தையர்சிலம்பொலியதிர்ப்ப
வெண்டிசாமுகந் தனிலுமெண்பிரம்பொலியிசைப்ப;

(இ-ள்) பெரியமணியினோசையும், பேரிகை-குடவாத்தியம் -மத்தளவாத்தியம்-காகளம்-சப்திக்கவும், மல்லரி-சல்லரி-சங்கங்கள்கோஷிக்கவும், தேவப்பெண்கள் காலின்சிலம்புகலீரென்று சப்திக்கவும் எட்டுத்திக்கிலும் நந்திகேசுரரானவர்வருகிறகூட்டங்களைவிலக்க அடிக்கிற பிரம்பினதுசப்தம பிரகாசிக்கவும்-எ-று. (௭௮

எண்ணும்வெள்ளியாம் வரையடியிறங்கியதிடப
மண்ணல்சேனையின் கொழுங்கிரிதலமடைந்த
விண்ணுமண்ணுமெள்ளிடமறநெருங்கியவிமானம்
மண்ணுமால்விடைநெறிகடந்தடைந்ததப்பதியே.

(இ-ள்) யாவராலுந்தோத்திரஞ்செய்யப்பட்ட கைலாயகிரியடிவாரத்தில் ரிஷபவாகனமிறங்கியதுசுவாமியினுடைய சேனையின் முன்னணி இமையபர்வதத்தை யடைந்தது-ஆகாயமும்பூமியும் எள்ளிருக்க விடமில்லாமல் விமானங்கள்நெருங்கியதுகள் அலங்கரித்திருக்கின்ற விஷ்ணுவாகிய ரிஷபம்சுவாமியைத் தாங்கிக்கொண்டு வழிமுழுதுங்கடந்து இமயபர்வதராசன் பட்டணத்தில்வந்துசேர்ந்தது-எ-று. ()

இமயகிரிப்பதியடைந்ததுமிமகிரிமடவார்
நிமலனார்திருவழகெலாம்விழிகளானிறைத்தா
ருமைதவத்தினுக்கழிவிலையெனப்புகழ்ந்துரைத்தா
ரமர்செய்காமனையழித்தகண்ணெதுவெனவுரைத்தார்.

(இ-ள்) அப்படியேசிவன் இமயபர்வதத்திலே எழுந்தருளினபோது அந்தமலையிலிருக்கின்றபெண்கள் சுவாமியின் அழகைப் பார்த்துப் பார்வதிசெய்ததவசுக்கு ஒருகுறைவுமில்லாமல்பலன்சித்தியாச்சுது என்றார்கள்- அவர்களில்சிலர்யுத்தத்துக்குவந்தமன்மதனையெரித்தகண்ணெதுவோ அந்தக்குரூரமானகண்ணைப் பார்ப்போமென்றார்கள்-எ-று.

ஆகமாரணிந்திருக்கவுமுலகெலாமயர்ந்த
போகமீதிவரிரக்கையான் மாரனுடலொழித்துப்
போகமீதிவர்விரும்புறவுமாசகலவபுணர்ந்த
மோகமாக்கிமுசலவரெனசிலர்மொழிந்தார்.

(இ-ள்) மன்மதன்தேகத்தையுடையவனுயிருந்தபோது இவர்யோகத்திலேயிருந்ததினாலே உலகத்திலுள்ள சனங்களெல்லாம் விசாரமில்லாமல் அசந்துகிடந்ததுகள் மன்மதன் தேகம்போயும்இவர்போகத்திலேவிருப்பம உண்டானபடியினாலே சகலருக்கும்போகத்தினாசையுண்டாச்சுது-ஆனபடியினாலே மோகத்தையுண்டாக்குகிறவர் இந்தசிவனேயன்றி வேறொருவருமில்லை யென்று ஸ்திரீசனங்கள் சிலர்சொன்னார்கள்-எ-று (அக)

மாயவிற்கைவேளழகிலவெழின்மிகுவடிவி
லாயிரத்திலொன்றிலையெனத்தனைமதித்தவனைத்
தீயிடத்துடல்கொளுத்திய தவத்தினற்றிறமே
யாயுமுத்தமராழிப்பரோவெனச்சிலரறைந்தார்.

(இ-ள்) மாயஞ்செய்கின்றகரும்புவில்லைகையிற் றரித்திருக்கின்ற மன்மதன் அழகு இந்தசுவாமியினுடையவடிவமாகிய அழகில் ஆயிரத்திலொருபங்குகாணாது-அதனாலே அவனையிகழ்ந்து தன்னைமதித்துத்தீயினாலேஅவனைக்கொளுத்திப்போட்டது-தபோமகிமையினாலேயே ஆராய்ந்தெடுக்கத்தகுந்த உத்தமர்கள்- ஆனால்அப்படிச்செய்வார்களோவென்றுசிலமாதர்கள்சொன்னார்கள் எ-று. (அஉ)

மாதுலன்பெருங்கிளைஞருங்கனாதிரளும்
காதலன்பினனெதிரெதிர்தழுவினாகலந்தா

ராதியங்கழுமதனிலை யளவிடவரியோன்
வேதியன்கரம்பிடித்தினி திழிந்தனன்விடைமுன்

(இ-ள்) யாமனுகிய இமவற்பர்வதராஜன் சுற்றத்தார்முதலிய சேனைகளுடையருமாகிய பரமசிவனுடைய சேனைசமூகமுமிகுந்த ஆசையோடுகூடினவர்களாய் எதிரெதிராவந்து ஒருவர்க்கொருவர் கைதழுவிக்கொண்டார்கள் முதலுமீறுமில்லாத அளவிடப்படாதசிவனானவர் பிரமாவின் கையைப் பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்தில் நின்று இறங்கினார்-எ-று. (௮௩)

இலகுமங்கையர்மனைசர் நீராஞ்சனமெடுப்ப
வுலகபாலகரிருமருங்கினுநடந்தெய்துறகத்
திலகமாதவனிருகைமேலொருகரஞ்சேர்த்திட்
டலகிலாமணி யிழைத்ததோர்மண்டபத்தணைந்தார்

(இ-ள்) இப்படி சுவாமியானவர் ரிஷபவாகனம் விட்டு இறங்கினவுடனே அழகுபொருந்திய அநேகம் பெண்கள் ஆலாத்தியெடுக்கவும் அஷ்டதிக்குபாலக ரெட்டுப்பேரும் சுவாமியினிருபுறத்திலும் நடந்தொழுங்கிவரவும் எல்லாருக்குந் திலகமாகிய விஷ்ணுவினுடைய இரண்டுகைமேலும் தம்முடைய ஒருகையைச்சேர்த்துக் கணக்கில்லாத ரத்தினங்களாலிழைக்கப்பட்டிருக்கிற மண்டபத்தில் வந்துசேர்ந்தார்கள்-எ-று. (௮௪)

அரியமண்டபத்தமைத்த பீடிகையின்மீதமைந்தார்
வரையிடைப்பிறந்தமைவளர்முலைசொலவருவார்
குருமலர்க்கையி லேந்திவந்தருள்குடியிருக்கும்
திருமுகத்தினை யிறையவன்வலப்புறஞ்சேர்த்தார்.

(இ-ள்) சுவாமி அருமையாகிய அந்தமண்டபத்தில் இட்டிருக்கிற ஆசனத்திலெழுந்தருளினார்-ஸ்தனங்கள்மலைபோலே யிருப்பதினாலே அந்தஸ்தனங்களோ இவர்கள்மலையிலே பிறந்தார்களென்று காணயிக்குரபடியாக வருகிற மாதர்களுடைய நிறம்பொருந்திய புஷ்பம்போலும் கைகளிலேந்திக்கொண்டு கிருபையே குடியாகவிருக்கின்ற அழகியமுகத்தையுடையபார்வதியைச்சிவனுடையவலப்புறத்திலேகூட்டி காரவைத்தார்கள்-எ-று. (௮௫)

முன்னையாரணன் வதுவையின்சடங்கெலாமுடித்து
வன்னிமேற்பொரி யிறைத்தநெய்சொரிந்துமந்திரத்தா
லென்னையாளுடை யிறைவனுமேழுலகீன்ற
கன்னிசெங்கரம்பிடித்துமுவலஞ்செய்தான்கனலை.

(இ-ள்) இந்தப்பிரகாரம் சுவாமியும் அம்மனும் கலியாணமண்டபத்திலெழுந்தருளியிருக்க அந்தவேளையில் பிரமாவானவர் கலியாணச்சடங்கை விதிப்படிமுடிக்க என்னையாட்கொண்ட பரமசிவனானவர் அக்கினியிற்பொரியிறைத்து செய்யாகுதிபண்ணி முன்னமே ஏழுலகத்தையும்பெற்ற அம்மன் கையைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம்வலமாகச்சுற்றிவந்தார்-எ-று. (௮௬)

ஒற்றைவால்வளையொலித்தது சுருதியுமொலித்த
சுற்றும்வானவ ரிருடியர்மலர்மழைசொரிந்தார்

பற்றியாசனத்திருந்தன னனைவரும்பணிந்தார்
பெற்றதாயையோடன்னையைப் பணிந்தனள்பெதும்பை.

(இ-ள்)வெண்மைபொருந்தியசூப்பற்சங்குமுழங்கவும், நான்குவேதங்களும் சப்திக்கவும், நான்குபுறமும் சுற்றிக்கொண்டு தேவர்களும் ரிஷிகளும் புஷ்பமாரியைப் பொழியவும், சுவாமி ஒரு ஆசனத்தில் எழுந்தருளினர்- அப்போது சர்வத்திரபேரும் வந்தனஞ்செய்தார் பாரவதியானவள் அவள் தாயையுந் தகப்பனையும்வணங்கினள்-எ-று.

எரித்தகாமனைத் தருதியென்றிமையவரயன்மா
லொருத்தரின்றியே யிறையவன்மகிழ்ச்சிகண்டுரைத்தார்
மரித்தகாமனையழைத்தருள் புரிந்தனன்வள்ளல்
பெருத்தவன்பினுலனைவரும விடைகொடுபெயர்ந்தார்.

(இ-ள்)தேவர்களும் பிரமாவும் விஷ்ணுவும் மற்றசர்வத்திரபேருஞ்சுவாமி எல்லாரிடத்திலும் வைத்தபிரியத்தைப்பார்த்துச் சுவாமிநீர்முன்னே எரித்த மன்மதனைஎழுப்பித் தரவேண்டுமென்று கேட்டார்கள். அப்படியே இறந்துபோன மன்மதனை வரவழைத்துக்கொடுத்துக் கிருபைசெய்தார்- பரமசிவன்-பின்பு யாவரும் விடைபெற்றுக்கொண்டு போனார்கள்-எ-று. (அஅ)

அதற்பின்னன்றுலுக கவுரியுருகியொன்றாகி
மதத்தவானனையககுமரனைபபயந்தனாமகிழ்வாய்
விதித்தவேலினைக்குமரனுக்களித்திறையடுத்தான்
கொதித்ததாருகனுயிர்குடித்துவந்தனன்குமரன்.

(இ-ள்)அப்படியேதிருக்கலியாணம் நடந்தபின்புசுவாமியும் அம்மனுமிருந்த அன்புகொண்டு ஒருருவமாகிச்சேர்ந்து வலிமைபொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேஸ்வரரையும் சுப்பிரமணியரையும் பெற்றார்கள்-அதன்பின்புசுவாமியானவர் சுப்பிரமணியருக்கு ஒருவேலாயுதத்தை அருளிச்செய்தனுப்பினர்கள் அவர்போய் அந்தத் தாருகாசூரனை வேலாயுதத்தால் விட்டெறிந்து கொன்று சந்தோஷத்தையடைந்தார்குமாரசுவாமி-எ-று. (அகூ)

மயிலெனத்திகழ் மலைமகள்பொருகரிவதன
னயிலெடுத்தசெவ்வகொனுடனிமையவெற்பகன்று
கயிலைவெற்பில்வந்திமையவர் முனிவர்கண்களிக்க
வெயிலுடைப்புரமெரித்தவனிருந்தனனப்பால்.

(இ-ள்)மயில்போல்விளங்குகின்ற பருவதராஜன்மகளாகிய பார்வதியானைமுகத்தையுடைய பிள்ளையார், வேலாயுதத்தைத்தரித்த சுப்பிரமணியருடன் இமயகிரியைவிட்டு நீங்கி, தேவர்கள் முனிவர்களுடைய கண்களிக்குங்கைலாயத்தில் எழுந்தருளியிருந்தார்-முப்புரத்தைஎரித்தவராகிய பரமசிவன்- அதன்பின்பு-எ-று. (கூ0)

மூன்றாவது- திருவவதாரச்சருக்கம்- முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உ௬௪



உ

சிவமயம்.

நான்காவது

# திருக்கண்புதைத்தசருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னனையமுகிறவழு மிமகிரியின் றவோபலத்தான் மேனீட
ண, வன்னையிடத்தென்னன்னையவதரித்தகதை சிறிதேயறைந்தேனிப்
பால், பொன்னனைய சடையிறைவன திருநயனமிருகரத்தாற் புதை
த்தவாறுந, தென்னருணைமாநகரி லன்னவினை தீர்த்ததுவுஞ் செப்ப
லுறறேன்.

(இ-ள்) மின்னல்பொருந்திய மேகங்கள்தவழ்ந்து போகாநின்ற இம
வறபருவதத்தின் தவோபலத்தினாலே மேனாதேவியிடமாக என்தாயா
கியபார்வதி அவதரித்த கதையில் கொஞ்சந்தான் சொன்னேன் அந்
தப் பார்வதி பொன்போலும் சடையுடையசிவனது அழகியகண்களை
இரண்டுகைகளினாற் பொத்தியதும அதனால் வரும்வினையைத தெற
கின்கண்ணிருககிற அருணாசலத்தில் அம்மைபூசைசெய்துதீர்த்ததும
சொல்லததொடங்கினேன்-எ-று. (க)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

ஊடுவர்புலவிதீர்ப்ப ரொருவருக்கொருவர்மாலை
சூடுவார்மறைநூல்கேட்பர்சொல்லுவார்வீணைநாதம்

பாடிவர்பலவிநோதம் பயிற்றுவர்பலகாறகூத
மாடுவர்வெல்வார் தாற்ப ணிகலம்புனைவரன்பால்.

(இ-ள்) சிவனும்பார்வதியும் பிணங்கிக்கொள்வார்கள் அதை மறுபடியும தீர்ந்துக்கொள்வார்கள் ஒருவருக்கொருவர் மாலைகளைச்சூடிக்கொண்டு வேதசாஸ்திரங்களைத் தேவர்கள் முனிவர்கள் சொல்லக்கேட்டு, அதன்பொருளைச்சிலருக்குச்சொல்லியும், விளையாட்டிய ஸைவாசிதமும் மற்றும் பலவிளையாட்டுகள் செய்தும், பலதாம் கூத்தாடியும், அதனால் வெற்றியையும் தோற்றமையு மடைந்தும் அழகிய ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு மிருந்தார்கள்-எ-று. (உ)

இதுவுமது.

அந்தவேளையிலென் னன்னை யையனையிறைஞ்சியையா
விந்துவுமிரவிதானும் யாவரென்றிசைத்தாளெந்தை
சுந்தரக்கனிவாய்மின்னே சுடர்களெம்மிருகணென்றூர்
கந்தனைப்பயந்தாளீசன் விழிகளைப்புதைத்தாள்கையால்.

(இ-ள்) அந்தச்சமயத்தில் என்தாயாகியபார்வதி சுவாமியை வணங்கிப் சந்திரசூரியர்கள்யாவரென்றுகேட்க அதற்குச்சுவாமி அழகிய கனிபோலும வாயையுடையபெண்ணே அந்த இருவரும் நம்முடைய கண்களென்றுசொன்னார்-சுப்பிரமணியரைப்பெற்ற தாயானவள் கேட்டு வேடிக்கையாகச் சுவாமியினுடைய கண்களை இரண்டுகைகளால் மூடினள்-எ-று. (௩)

கலிவிருத்தம்.

ஈசனார்விழிபுதைத்தலு மிருட்பிழம்புருக்கிப்
பூசினுலெனவிருண்டன திசைகளும்புவியு
மாசினீலமால்வரைபோலக் கருகியமலைகள்
காசலாவிய நதியெலாம்யமுனைபோறகறுத்த.

(இ-ள்) பரமசிவனுடையகண்களைப் பார்வதி புதைத்தலும் இருட்கூட்டத்தை யுருக்கசெய்து பூசினதுபோல் திக்குகளும பூமியுமிருண்டதுகள்-மலைகளெல்லாங்குற்றமற்ற நீலகிரியைப்போல் கறுத்ததுகள் - மணிகள்பொருந்திய நதிகளெல்லாம யமுனாநதிபோல் கறுத்ததுகள்-எ-று. (௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

மறையவனுநாரணனு முனிவர்களும் வசுக்களுநான் மறையும்வானோ, ரிறையவனும்விழியொளிபோய்ப் பிறவிநெடுங் குருடரெனவிருந்தார்மறறைக, றவைகிரைமுதல்விலங்கு பறவைகளு மொளியிழந்த கண்ணதான, துறவறமும்பிறவறமுந் தொலைந்தனமற் றுளதொழிலுந்தொலைந்ததன்றே.

(இ-ள்) பிரமாவும், விஷ்ணுவும், முனிவர்களும், அஷ்டவசுக்களும், நாலுவேதங்களும், தேவர்களும்; இந்திரனும், கண்ணினது பிரகாசமறறுப்பிறவிக்குருடர்போலிருந்தார்கள், பசு-காளைமுதலிய மிருகங்

ளும், பட்சிகளும் கண்ணொளியற்றதுகள்-துறவறமில்லறமிரண்டும் ஒழிந்ததுகள்-மற்றவெல்லாத்தொழில்களும் கெட்டதுகள்-எ-று. (௫)

கலிநிலைத்துறை.

தேவர்மானிடரிராக்கதர் நிறமெனத்திரிந்தார்,
கோவலிந்திரன் வெண்கரிகருநிறங்கொண்ட
தாவிலம்புயன் கொடிகொடியானதவ்வளவின்
மூவாதேவனுக் களவறுமுறைசெப்புகின்றார்.

(இ-ள்) தேவர்களும் மனிதர்களும் இராட்சதர் நிறம்போலக் கறுத்தார் ஆகாயத்தில் இந்திரன்வாகனமாகிய வெள்ளையானை கரிபோலக் கறுத்தது, கெடுதலில்லாதபிரமாவின் கொடியாகிய அன்னம் காகம்போலக் கருகியது, அப்படி எல்லாப்பொருளுங் கறுத்து மயங்குகிறகாலத்தில் முழுமூர்த்திகட்கு முதலாகிய சிவனிடத்தில் எல்லோரும் போய் முறையிட்டுத் தங்கள்குறையைச் சொல்லிக்கொண்டார்கள்-எ-று. (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அஞ்சலெனவமைத்தகரத் திறைவனுதல் விழிதிறந்தா னவனியேழுந், துஞ்சமிருளகன்றது பன்னிருகோடி சூரியர்தந் தோற்றம்போல, வஞ்சியுமையிறைவன்விழிபுதைத்ததிருக்கரமலரைவாங்கிநின்றாள், விஞ்சுமறையவர்வளர்க்குங் கனல்போல விழிமூன்றும் விளங்கின்றே.

(இ-ள்) சிவன் பயம்வேண்டாமென்று கையமர்த்திப் பன்னிரண்டு கோடி சூரியருதயம்போலத் தமதுடைய நெற்றிக்கண்ணைத்திறக்க-ஏழுலகமும் அந்தகாரத்தைநீக்கியது, பார்வதியானவள் பொத்திய கையை வாங்கிநின்றாள், பிராமணர்கள் வளர்க்கும் யாகாக்கினிபோல மூன்றுகண்களும் விளங்கியதுகள்-எ-று. (௭)

பார்புதைத்த திருவயிற்றாள் பணிந்துரைப்பாளெஞ்சூலப் படையாய்காவலன், மார்புதைத்தமலர்ப்பதத்தா யார்புதைத்த சடாடவியாயவையமேழும், கார்புதைத்தவிருளாக விழிபுதைத்தகொடும்பாவஞ் சூழுமாறு, நீர்புதைத்த பாரிடத்திற்றவம்புரிதற்கானவிட நிகழ்த்துமென்றாள்.

(இ-ள்) எல்லாச்சீவராசிகளையும் கருவாகவைத்துக்கொண்ட வயிற்றையுடையபார்வதி சுவாமியைப்பார்த்து நெடிய சூலத்தை யுடையவரே, இயமனைமார்பிலேயுதைத்த மலர்போன்ற பாதத்தை யுடையவரே, ஆத்திமாலையையணிந்த சடைக்காட்டினையுடையவரே, ஏழுலகமும் மேகநிறத்திலும் அதிகநிறமான இருட்டுண்டாக உமது கண்களை மூடிய கொடியபாவம் நீங்கும்படியாகச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியினிடத்தில் தவஞ்செய்வதற்கு நல்ல இடஞ்சொல்லுமென்றுகேட்டாள்-எ-று. (அ

ஈசனுமங்குரைத்தருள்வா னுனைவினைவந்தணுகாதே யெவரினும் யார்க்கும், மாசகலும்படிக்கரியதவம்புரிய விரும்பினையேன் மதுரை மாயை, காசியவந்தி துவாரகை யயோத்தியினுஞ் சிறப்புடைய காஞ்சி மேவிப், பூசைபுரிந்தரியதவம் புரியென்றான் விடைகொண்டாள் புகழ்ந்துபோற்றி.

(இ-ள்) அப்படிபார்வதிகேட்கச் சுவாமிபெண்ணே உன்னைப்பாவந்து சேராதாயினும் மற்றவர்களுக்குப்பாவம நீக்கும் பொருட்டு தவஞ்செய்யஇச்சித்தாயாகில்மதுராபுரி- மாயாபுரி-காசி-அவந்தி-துவாரகாபுரி-அயோத்தி, இவைகளுள் சிறந்தகாஞ்சீபுரத்திற்போய்ப் பூசையுடன் அரியதவஞ் செய்யென்றுசொல்லச் சுவாமியைவணங்கித் திருவிடைபெற்றுக்கொண்டாள்-எ-று. (௯

விசையமகள்குடையெடுப்பசயமகள் பொன்னடப்பைகொடுவிரைந்துமேவ, வசையுமணிக்கவரியிரண்டருந்ததியுங் கமலினியு மருகில்வீசத், திசையிலிளங்கில வெறிக்குந் தாளமணிச் சிவிகையின்மேற் சென்றபோது, இசைபெருகுமறமபெருகப் புனல்பெருகும புகழ்க்கங்காநதியைச்சேர்ந்தாள்.

(இ-ள்) பார்வதியானவள் வீரலட்சுமி குடைபிடிக்க, செயலட்சுமி பொன்னடப்பந்தாங்கிச சீக்கிரதகில்வா, இரத்தினங்களிழைத்தசாமரைகளால் அருந்ததியும் இலட்சுமியும் இரண்டுபாகங்களில் நின்றும் காற்றுகளைவீசஙாலுதிக்குஞ்சந்திரனைப்போலப் பிரகாசத்தைவீசும்முத்துப்பல்லாக்கின்மேலேறியாவரும் விரும்புகின்றஈரும் பெருகச்சலம்பெருகுகின்ற கீர்த்தியினையுடையகங்காதீரத்திற்கில்வாது சேர்ந்தாளென்றவாறு. (௰)

இறந்தவுயிரினிமீளப்பிறவாமலிறவாமலிறைவனூர்தன்,சிறந்ததிருவுருவாகுந்திருககாசித்தலமடைந்து சிவன்றாள்போற்றி, வறந்தமழைகருகுழுந்தத் தலத்தவர்கள் பிழைக்கவறம் வளர்த்துப்பன்னாள், நறுந்தாரடையினாசன்விடை கொண்டுசிறபத் தொண்டைவளநாட்டைச்சேர்ந்தாள்.

(இ-ள்) இறந்துபோனஉயிரானது இனிதிரும்பப்பிறக்காமலும் இறக்காமலும், பரமசிவனுடைய திவ்வியசொரூபமாகின்ற காசிப்பதியைச்சேர்ந்து விஸ்வேசருடைய பாதம்போற்றி மழையிலலாமல் வருந்தாநின்ற சீவராசிகள் பிழைக்கும்பொருட்டு அத்தலத்தில் தருமத்தைப் பலநாள்வளர்த்துத் தேன்பொருந்திய மாலையைத் தரித்த அத்தேசத்திராசன்விடைபெற்றுச்சிறந்த தொண்டைமண்டலத்தைச் சேர்ந்தாள் பார்வதி-எ-று. (௰௧)

மறைதவழுந்தலைப்பலவின்பழமதுவாய்விரிந்தாலுமகரவாழைப், பழமதுவாய்விரிந்தாலும்புதுமதுவாய்விரிந்தொழுகும் பழனநீங்கி,குழையாவுடமாடும் விழிமாதர்நடமாடுங் குறிப்புநோக்கிப்,பொழிலணியின் மடமயில்கணடமாடுந்திருக்காஞ்சிப்புரத்தைச்சேர்ந்தாள்.

(இ-ள்) மேகங்கள்தவழாநின்றதலையையுடைய பலாவினது பழங்கள் வெடித்தாலும், மகரவாழையினுடைய பழங்கள் அவிந்தாலும், புதிய

தேன்பெருக்கெடுத்துவாய்க்கால்வழியாகஓடிவிழாநின்றகழனிகளைக்கடந்து குண்டலம்வரைக்குந்தாவுகின்றகண்களையுடையபெண்கள் நாட்டியஞ்செய்கின்ற குறிப்பைப்பார்த்துச்சோலைகளில் இளமையாகிய மயில்களாடனஞ்செய்கின்றகாஞ்சிபுரத்தலத்தைச்சேர்ந்தாள் பார்வதி என்றவாறு. (௰௨)

தாவாத்தையழிவாக்கிமணிநரையுள்ளறிவழிக்குந்தடங்கண்மாதர், நூபுரத்தம்புயசரணஞ் சிவப்பேறவிழைமருங்குனுடைகைவேறு, மாபுரத்தின்மணிமேடையாமனைபயாக்குவிளையாட மலைகளாகும், கோபுரத்தி னெடுங்கொடிகள்காமவல்லியெனுங்கொடிக்குக் கொழுகொம்பாகும்.

(இ-ள்) கல்லுகளையும்மரங்களையுமுருகச்செய்து மனிதர்களுடையவுள்ளறிவைக்கெடுக்கிற விசாலமாகியகண்களையுடைய பெண்கள் சிலம்பணிந்ததாமரைமலர்போலுமபாதஞ்சிவக்க நூல்போலு மிடையசைய வருகின்ற அப்பட்டணத்திலிருக்கின்றஇரத்தினமிழைத்த உப்பரிகைகளரம்பைமுதலாகியபெண்களுக்குவிளையாடுகிறதற்குமலைகளாக விருக்கும், சிவாலயத்தின்கோபுரத்திற்கட்டியிருக்கிற கொடிகள்கற்பக விருக்ஷத்திற்படர்ந்த காமவல்லியென்னுங் கொடிக்குப் படருகிறதற்குக் கொழுகொம்பாயிருக்கும்-எ-று. (௰௩)

பாதநாடகமாடு மயில்போலுங்கயிற்று வழிப்பாவைபோலும், சுரதநாடகமாடுந்துடியிடையார்கணவருடன்றுவளும்போது, மரகதாதிகளறுத்த விழ்ந்துமணிமேடையினும்வாரிவீச, வாதனுக்காமானதனுமுதலின்றளவுமாழிகானே

(இ-ள்) பரதநாட்டியமாடுகின்றமயிலுக்குச்சமானமாகவும் கயிற்றுவழியாகஆடுகிறசிங்காரமபொருந்தியபிரதமைபோலவுமசுரதவிளையாட்டைச்செய்கின்றஉடுக்கைபோன்றஇடையினையுடையபெண்கள புருஷாகளோடுபடுத்துப்புரளுமபோதுமரகதமுதலிய இரத்தினாபரணங்களறுத்தகோபித்து அவ்வுப்பரிகையில்நின்றுமடுத்ததுவீசியெறிய அவ்வாபரணங்கள் சமுத்திரத்திலேவிழுந்ததினாலேதான் அதுரத்நாகாமென்கிறபெயர்பெற்றது-எ-று. (௰௪)

அனையமருங்ககன்றுவஞ்சியொருமாவின்கீழிருக்கு மானைப்போற்றிக், கலைவனையவினைகளையுநடுக்குவிக்க நடந்ததிருக்கம்பைபேவிப், புனையமணல்குவித்திலிங்கவடிவாகியுமைபூசைபுரிந்தாளப்போ, தெனையுடையானவடவத்திநுருதிரினைந்தரியக்கைகையேவினனே.

(இ-ள்) அத்தன்மையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்றமாவிருட்சத்தின்கீழ் எழுந்தருளியிருக்குமேகாமபரநாதரைவணங்கி நெருப்பொத்தபாவங்களைக்கெடுக்கஓடிப்போகவருகின்றகம்பாநதியருகேபோய் அலங்காரமாய் மணலைக்குவித்துஇலிங்கரூபமாகப்பார்வதி பூசைசெய்யும்போது எம்முடையசுவாமி அவள்தனத்தினுடைய உறுதியையறியககங்கையைப்பிரவாகமாகவரச்செய்தார்-எ-று. (௰௫)

பூதலமேற்குறுமுனிவன் குண்டிகையிற்கவிழ்ந்துவரும்பொன்னி தானோ, ஆதியிலேயந்தமுனியாசமிதசேயுமிழ்ந்தவலையாழிதானோ, வத மறத்தவம்புரியுமபகிரதற்காச்சன் னுமுனி யிரக்கததாலே, காதின்வழி யொழுகவிடப்பாவியகங்காநதியோகமபையாறு.

(இ-ள்) பூமியில்அகஸ்தியமுனிவர்கமண்டலங்கவிழ்ந்ததினாலே வரு.. ன்றகாவேரியோ அந்தமுனிவரானவா ஆதியிலேயில் ஆசமனஞ்செய்.. மிழ்ந்தசமுத்திரததின்பெருக்கோகுறைமற்றதவஞ்செய்யும் பகீரதனுக் காகச்சனனுமுனியானவர் இரக்கததினாலே காதின வழியாகவிட்ப் பெருகவிடுத்துவந்தகங்காநதியோ வென்றுசந்தேகப்ப விருந்ததுகம்பை

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவணணம் (௩௫-௭-ஐ

மங்காநதியின் மணிவிலிங்கமழியா திருக்கும்வகையுமையாள்
வெங்காதனினாலணைபவள்போல்வெற்பாரிமையவெற்பாடன்
சங்கார்கரததாலிருதனததாலிறுகவிறுகததழுவுதலுஞ்
கொங்கார்களபத்திருமார்புமுருகியுருகிக்குழைந்ததாளே.

(இ-ள்) பார்வதியானவள் கெடாத கம்பையாறு பெருக்கெடுக்கும் போதுமணலாலேசெய்தலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்று பயத் துக்காமங்கொண்ட ஆசையினாலே அணைகிறவள்போல் இமவற்பர்வதராசகுமாரிவளையணிந்தகைகளாலும், இரண்டுகொங்கைகளாலும், இறுக வியுந்ததழுவுதலும், வாசனைபொருந்தியசந்தனத்தையணிந்ததிருமாா்பு உருகிக்குழைந்தாள்-எ-று. (௫௯

மனத்தானினைந்தபெருந்துயருமணக்கப்பிரிவுமுடன்றீரந் தனததாலொருக்கிமுகப ழுதந்தத்தலைப்போலததழுவுதலு மனத்தால்விளங்குகம்பைநதிருணசலதைதயொருபொழுது நினைததவினைகளிரண்டுபோலிரண்டாயப்பகுத்துக்கவியதே!

(இ-ள்) தன்னுடையதவத்துக்குப்பங்கம்வாராமல் நினைதிருந்ததுன் பமும், சுவாமிகூடாமல் பிரிததுன்பமும, திரும்படி ஸதனங்களிலேநெருக்கி முகமழுந்தியமுனைனுளபோல அணைந்தவுடனே அன்னங்கள் சூழ்ந்தகம்பைநதியானது அருணசலஸதலத்தை ஒருவேளை நினைத்தவாகளுடையநல்வினை தீவினைபோலிரண்டாகப்பிரிந்துவிங்கததைச்சுற்றிப்போனது-எ-று. (௬௦)

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

விடுத்தனள்கரத்தைப்பாங்கர் விளக்கிழையவர்கள்சூழத்
தொடுத்தபூந்தொடையுஞ்சாந்து மணிந்தவள தொழுதாளந்த
வடுக்கணாளதனதுகேள்வன்மாபினைத்தொடாதகாணிந
தடுததிடுகுறிகளபோலவிளங்கியதழும்பாயமமா

(இ-ள்) பார்வதிசுவாமியைத்தழுவியகைகளைவிட்டாள் அருகில்பிரகாசிக்கின்ற ஆபரணத்தையுடைய அனேகம்பெண்கள் சூழபுஷ்ப மாலையுஞ் சந்தனமுந்தரித்து வந்தனஞ்செய்தாள பாவடபைபோன்ற கணக

லையுடைய அந்தஅம்மைதன்னுடையசுவாமிமார்பைமற்றப்பெண்கள் வெட்கத்தையடைந்து தொடாமலிருக்கும்படிதடுக்க வைத்த குறிகள் போல் தழும்புகள்விளங்கியதுகள்-எ-று. (௰௯)

அப்பொழுதானுமாற வடித்தழும்பிருக்குந்தோளு
மூப்பொழுதிறைஞ்சுந்தேவர் முடித்தழும்பிருக்குந் தாளு
மைப்பொலிகுழலாள்கொங்கை வளைத்தழும்பிருக்குமார்பு
மெய்ப்பொலிநீறுமாகத் தேனேறினார்விடையின்மீது.

(இ-ள்) அந்தக்காலத்தில்பரமசிவனும்பாண்டியராசன் அடித்தழும்பிருந்ததிருத்தோள்களும், மூன்றுகாலத்திலும்வணங்குகின்ற தேவர்களுடையகிரீடங்களின் தழும்பிருந்ததிருவடிகளும் மேகம்போல்விளங்குங் கூந்தலையுடையபார்வதி முலைத்தழும்பும்,வளைத்தழும்பு மிருக்கின்றமார்பும், தேகத்திற்பொலிந்த திருநீறுமாய் ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளினா-எ-று. (௨௰)

அந்தரத்தமரரெல்லா மலர்மழைசொரியவானிற்
றுந்துபிமுழக்கத்தோடே சுருதிகண்முழங்காநின்ற
விந்திரன்றிருமாறேவ ரிறைவியைத்தொழுதுநின்றார்
சுந்தரக்கனிவாய்மின்னு மீசனைத்தொழுதுநின்றாள்.

(இ-ள்) ஆகாயத்தில் தேவர்களியாவரும் புஷ்பவருஷம் பொழிய தேவதுந்துபி முழக்கத்தோடு வேதங்கள் முழங்காநின்றன தேவேந்திரனும், விஷ்ணுவும் தேவர்களும், பார்வதியைத் தொழுதார்கள்-அழகுபொருந்திய கனிபோலும் வாயையுடைய அம்மனும் பரமசிவனை வணங்கினாள்-எ-று. (௨௧)

ஒண்ணுதல்விடைமுன்சென்று பணிந்துளமுருகிப்பூசை
பண்ணுதல்புகழ்தலாகிப் பணிந்தனளவளைநோக்கிக்
கண்ணுதலுனக்குவேண்டும் வரமெதுகழறென்றா
ளெண்ணுதல்பிறிதொன்றில்லை யிடப்புறந்தருதியென்றாள்.

(இ-ள்) விளங்குகின்ற நெற்றியையுடைய அம்மன் ரிஷபவாகனத்தின் முன்பாகச்சென்று நமஸ்கரித்து மனமுருகிப் பூசை செய்தலை மேல் புகழ்ந்து வணங்கினாள் சுவாமி அப்படிப்பட்ட பார்வதியைப் பார்த்து உனக்குவேண்டியவரம் எதுசொல்லென்றா-அதற்குஅம்மனும் வேறேயொன்றும் வேண்டியதில்லை உமதுஇடப்பாகத்தை அருளுமென்றுகேட்டாள்-எ-று. (௨௨)

அத்தனுமொழிவானென்கண் புதைத்ததாலடைந்ததீமை
இத்தலத்தினியபூசை யியற்றலாலகன்றதிந்த
மெய்த்தலந்தனக்குத்தென்பா லொருநகர்விளங்கித்தோன்று
முத்திமாநகர்தன்னை விளைத்தபேர்க்களிக்குமூதூர்.

(இ-ள்) அதற்குப்பரமசிவனருளிச்செய்வார், கண்களை மூடியதனாலே அடைந்த பாவம் இந்தஸ்தலத்தில் இனிமையானபூசை செய்தலி

னுலேநீங்கியது- இந்தமெய்மையானஸ்தலத்துக்குத்தென்பாரிசத்திலொருநகரம்பிரகாசிக்கும் அதைநினைத்தால் முத்தியுண்டாகும்-எ-று.

ஆரணன்றிருமாலோடவடிமுடியொளித்துஞானப்
பூரணவொளியாய்மேல்கீழுலகெலாம்பொருந்திநிற்போம்
தாரணியவர்க்குமற்றைச் சயிலமாயிருப்போமங்கே
வாரணிமுலையாய்பாகந் தருகுவோம்வருதியென்றார்.

(இ-ள்.) பிரமாவும், விஷ்ணுவும்தேடப்பாதமும், சிரசும், அவர்களுக்குத் தெரியாமலொளித்துப் பூரணமாகிய ஞானவொளியாகிய மேல்கீழுலகங்களெல்லாம் ஒன்றாயநிறபோம்-பூமிகளிலிருப்போர்க்கு மலையுருவமாயிருப்போம்-அவவிடத்தில்வந்தால் கச்சணிந்த தனத்தையுடையபெண்ணே இடப்பாகத்தைத்தருமோம் வாவென்றார் பரமசிவன்-எ-று. (௨௪)

என்னலுமிறைவிசொல்வா ளினிமைசேர்கயிலைகாசி
தன்னிலுமினிதுகாஞ்சித் தலமெனவுரைத்தீரிந்த
நன்னிலந்தனக்குச்சோணை நகரமேயதிகமென்றீர்
பின்னையுமுளதோவந்தத் தலத்தினுக்கிணையாம்பேரூர்.

(இ-ள்.) பரமசிவன் அப்படிதிருவுளம்பற்றிய அளவில் பார்வதியம்மை சொல்லுவாள்-இனிமைசேர்ந்த கைலாயம்காசி இவ்விரண்டுதலங்களிலும் இந்தக்காஞ்சீபுரம் அதிகமென்று அருள்செய்தீர் அந்தலத்துக்குச்சமானமாகிய பெருமைபொருந்திஸ்தலம்வேறுளதுண்டோவென்றாள் பார்வதியம்மை-எ-று. (௨௫)

அவ்வுரைமறுத்தெங்கோமானருள்வானமக்கொப்பான
தெய்வமைந்தெழுத்துமானத் திருந்துமந்திரமுமில்லை
சைவமேயனையதான சமயமுமருணைபோல
வெவ்வினைதவிர்க்குமூருமில்லையெனவிளம்பிப்போனார்.

(இ-ள்.) அப்படிபார்வதிசொன்னவார்த்தையைச்சுவாமியானவர்மறுத்து நமக்குச்சமானமாகியதெய்வமும் பஞ்சாக்ஷரத்திற்கொப்பான மந்திரமும், சைவத்திற்குச்சரியானசமயமும், பொல்லாதபாவங்களைத்தீர்க்கும் அருணாசல ஸ்தலத்திற்குச்சரியானஸ்தலமும், உலகத்திலில்லையென்றுதிருவாய்மலர்ந்துகைலாயத்திற்கெழுந்தருளினார்-எ-று. (௨௬)

கொம்பனாள்பொறுப்பாயென்றிறைவனைக்குவித்துப்போற்றிக்
கம்பையாறகன்றுகாஞ்சித் தலத்தையுங்கடந்துவேலன்
தும்பிமாமுகத்தோன்கன்னி வயிரவர்கணங்களசூழச்
செம்பொனாள்கவரிவீசச் சிவிகைமேற்சிறந்துசென்றாள்.

(இ-ள்.) புஷ்பக்கொம்பையொத்த பார்வதியானவள் சுவாமிநான்தெரியாமல்சொன்னவார்த்தையைப் பொறுத்துக்கொள்ளுமென்று இரண்டுகைகளையுங்குவித்து வணங்கிக் கம்பையாற்றைவிட்டுக் காஞ்சீபுரத்தையுங்கடந்து சுப்பிரமணியர்-கணபதி- சப்தகன்னிகள்- வயிரவர்-சிவகணங்களசூழவும், இலட்சுமிகவரிவீசவும், பல்லக்கிலெழுந்தருளினள்-எ-று. (௨௭)

மண்மகண்மகிழப்பட்ட மரங்களுந்தழைத்துவீறிக்
கண்மலர்சொரியக்கல்லு மலைகளுங்கரைந்துசோர
வெண்மலாமடவாள்போற்றக் காவதமிரண்டுநீங்கி
விண்மதிமுகத்தாண்மறமேருர் வெள்ளிடையருகிறசேர்ந்தாள்

(இ-ள்.)பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகப் பட்டுப்போன மரங்களைத் தளிருண்டாகிதழைத்துத் தேனோடும் புஷ்பங்களைச் சொரியப் பாராகல்லுகளும பெரியமலைகளுங் கரைந்துருக வெள்ளைத்தாமரைப்பூவில்வாசஞ்செய்யும சரஸ்வதிதோத்திரஞ்செய்ய இரண்டுகாததூரம்போயச் சந்திரனையொத்த முகத்தையுடைய பார்வதிஒருவெளிப்பட்டதிலிறங்கினாள்-எ-று. (௨௮)

வெய்யவனுமையாரென்று வினவுகாரணத்தானீலக்
கையவன்மரகததநிற் கரியவள்காமுங்காலுஞ்
செய்யவள்வருந்தினாளென்றறிந்துயிர்சிதைப்பான்போலப்
பையமேறகடலிற்பாய்ந்தான்குமரவேள்பந்தல்செய்தான்.

(இ-ள்.)சூரியனானவன் தன்னையாரென்று பரமசிவனைக்கேட்டதனாலே நீலம்போன்றகையும, மரகதம்போன்றவடிவமும், தாமரைப்பூப்போன்ற உள்ளங்கையும், உள்ளங்காலும்பொருந்திய அம்மன்சாபத்தினால் வருந்தினாளென்றறிந்து தன்னுயிரைவிட்டுவிடுகிறவன்போல மெள்ளமெள்ளமேற்குச்சமுத்திரத்தில் விழுந்துஅஸ்தமித்தான்-சுப்பிரமணியர்அம்மனிருக்கிறதற்காக ஒருபந்தல்போட்டுவைத்தார்-எ-று.

அந்தஸ்தலத்திற்கு வாழைப்பந்தலென்று இக்காலத்தில் வழங்கிவருகின்றது

அன்னையுங்குகனைநோக்கி யரம்பையாற்பந்தல்செய்து
பன்னிருகாமுஞ்சால வருந்தினையெனப்பாராட்டிப்
பின்னுமோர்கருமஞ்சந்தி முடிப்பதற்கினியநன்னீர்
கைந்நிறைவேலைவேவி யழைத்திடுகணத்திலென்றாள்

(இ-ள்.)அதன்பின்பு பார்வதியானவள் சுப்பிரமணியரைப்பார்த்து வாழைமரத்திலே பந்தல்போட்டுப் பன்னிரண்டுகைகளும் சிவக்கவருத்தத்தையடைந்தாயென்று பிரியவசனஞ்சொல்லி இன்னுமோர் வேலையிருக்கின்றது அதென்னவென்றால் சந்தியாவந்தனஞ்செய்கிறதற்கு நல்லபரிசுத்தமான ஜலம்வேண்டும் உன்கையிற்பிடித்திருக்கிற வேலாயுதத்தைவேவிஅழைப்பியென்றுசொன்னாள்-எ-று. (௩௰)

காதலாவிறைஞ்சிக்கந்த னேவினன்கைவேலவ்வேல்
போதவான் புத்திராண்டன்புகழ்புருகூதன்போதன்
வாதிபாண்டரங்கன்சோமன் வாமனென்பவரைவாட்டி
மீதிலேழ்கிரியைவீட்டிக்கொணர்ந்ததுவேலைநீத்தம்.

(இ-ள்.) அப்படிசொன்ன அளவில் அதிகபத்தியோடு சுப்பிரமணியர் வேலாயுதத்தையேவினர், அதுபோதவான் - புத்திரான்டன் - புருகூதன் - சுப்பாதன் - பாண்டரங்கன் - சோமன் - வாமன் என்றுசொல்லப்பட்ட ஏழுபேரையும், அவர்களிருந்த ஏழுமலையையும், உருவிச்சென்று தண்ணீர்க்கடலுக்குப்போய் ஜலங்கொண்டுவந்தது-எ-று. (௫௧)

அந்தநதிக்குச் சேயாறென்றுபெயர்.

கந்தவேலனுழந்தவாறதிற் கடனெலாங்கழித்துவாழைப்
பந்தலிலிருந்தாளப்போ துமைபதம்பணிந்தாற்றின்
சிந்துநீர்சிவப்பதேதென் றுரைத்தலுஞ்சிறப்பதாக
வந்தவாறதனையாறுதிருமுகற்குரைப்பாள்வஞ்சி.

(இ-ள்.) சிவசுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே நீர்க்கடனெல்லாமுடித்துக்கொண்டுவாழைப்பந்தலிலிருந்தாள்-அப்போது அம்மனை வணங்கி இந்தஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டிய தென்னவென்றுகேட்க, அந்தவிவரத்தைச்சிவசுப்பிரமணியருக்குச்சொல்லுகிறாள்பார்வதியானவள்-எ-று. (௫௨)

அனந்தமாபுரத்திலேழு மறையவரறியாக்காலத்
தனந்தமாவினைகள்செய்தாரதன்பினல்லறிவுதோன்றி
யனந்தமாமனைவேயேறு மயன்பதங்கருதிப்பன்னா
ளனந்தமாலமதாயுட்கொண் டருந்தவம்புரிந்தாரந்நாள்

(இ-ள்.) அனந்தமாபுரமென்கிறபட்டணத்திலேழுபிராமணர்கள் அறியாதகாலத்தில் அனந்தவினைகளைச்செய்து அதன்பின்புநல்லவிவேகந்தோன்றி அன்னத்தைத்தனக்குவாகனமாகக்கொண்ட பிர்மாவைக்குறித்து இலைகளையே சோறாகஉண்டுபலநாள்தவஞ்செய்தார்கள், அக்காலத்தில்-எ-று. (௫௩)

பதுமனுமவர்முன்சென்று பாவிகாள்வனங்களேழில்
விதிமுறைதவஞ்செய்வீரேற் குமரவேள்விடுக்கும்வேலாற்
பொதிசடைமுடியுமுங்கள் வினைகளும்பொடியாமென்று
சதுர்முகனுரைத்துப்போன னவருமத்தவமேசெய்தார்.

(இ-ள்.) பிர்மா அவ்வேழுபேர் முன்னேபோய்பாவிகளே நீங்களேழுபேரும்ஏழுமலைகளிலே விதிமுறையாகத் தவஞ்செய்வீர்களானால் அப்போது அம்மனுக்கு ஜலம்வேண்டிய நிமித்தியத்தால் சிவசுப்பிரமணியர்வேல்விடுவார் அதனாலே உங்கள்சடையோடு கூடிய சிரசுகளும்பாவங்களும் பொடியாகப்போமென்று சொல்லிவிட்டுப்போனார் அவர்களும் அப்பிரகாரம்தவஞ்செய்தார்கள். (௫௪)

[வேறு.] எழுவரையுமதிலிருக்கு மெழுவரையும் பிளக்குநீயெறிந்தகூர்வேல், வழியுறவருதிரமுடன் புனல்கலந்துசிவந்ததுகாணென்னையாளே, வழுவிலையிங்குனக்கென்ன வடிபணிந்து மகிழ்ந்திருந்தான் மலைமேற்பட்டாசெழுமுனிவர்குருதியினாற்சிவந்ததுசேயாற்சிவந்ததுவேசெக்காவானம.

(இ-ள்.) அவ்வேழுபேரையும் அவர்களிருக்குமலையேழையும் பிளந்து உன்னுடையகூர்மைபொருந்திய வேலாயுதமானது அதனால்வழிந்

தொழுகுகிற அவர்களுடைய இரத்தத்தோடு ஜலங்கலந்து சிவந்துபோய் விட்டது-உனக்கொரு குற்றமுமில்லையென்று செல்ல அம்மன் பாதத்தில் சுப்பிரமணியர்வணங்கிச சந்தோஷமாயிருந்த அளவில் மலையிலே தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்களுடைய இரத்தத்தினால் சிவப்புநிறத்தையடைந்ததுபோலச்சிவந்ததுசெவ்வானம்-எ-று. (௬௫)

வித்தகர்கண் புதைக்குமுனம் பரந்தவிருண்மறுவையிற சூழ்வினை போல, வத்தலத்திலுமையவளைப் பின்பிடித்தாலெனப்பரந்த தன்றா, முத்தமியோரிருகதவிப்பந்தலின்கீழிருப்பவளென்றும்பரிட்ட, மித்திலப்பந்தனிகராயவிளங்கியது தாரகையானெருங்குமகானம்.

(இ-ள்.) சுவாமியினுடைய கண்களை முன்னேமூடின திருமேலவுலகமெல்லாம் பரவியவிருளானது ஒருவனுக்கு மறுமையிலவந்து பிடித்துக்கொள்ளுகிற பாவகத்தைப்போல அந்தஸ்தலத்தில் மிறகுவந்து அம்மனைப்பிடித்ததுபோலிருந்தது பார்வதியோ ஒருவாழைப்பந்தலின்கீழிருப்பாளென்று தேவர்கள்போட்டுவைத்தமுத்துப்பந்தலையொத்திருந்தது நட்சத்திரங்களால்நெருக்கப்பட்ட ஆகாயம்-எ-று. (௬௬)

மாலையெனுங் குமரியிருண் மகிடமுகமசற்றியந்தி வானச்சோரி, கோலமுடன்படிகலியகங் கொண்டதுபோன்மதிசெழுந்துகுடபாற்சென்று, தாலமணி மிடற்றிறைதன் விழிபுதைக்கவளைந்தவிருளனைத்தும் நீங்கப், பாலமிசைவெடித்தெழுந்த விழியெனவேயெழுந்ததுசெம்பரிதிதானே.

(இ-ள்.)மாலைக்காலமென்கிற துர்க்கையானவள்இருட்டாகிய மகிடாசுரன்தலையையறுத்து அதனால்செவ்வானமென்றுசொல்லப்பட்ட இரத்தகோலத்தோடுபொருந்தியஸ்படிகலிங்கத்தைக்கைகொண்டதுபோலச் சந்திரனுதயமாகிமேற்குத்திக்கிலஸ்தமித்தது நீலகண்டராகிய பரமசிவனது இரண்டுநேத்திரங்களையும் அம்மன்புதைத்த அளவில் நான்குதிக்கும்பரவியஎல்லாவிருளும்போகும்படியாயவிழித்தஅச்சுவாமியினதுநெற்றிக்கண்போலச் செம்மைநிறமபொருந்திய சூரியனகிழக்குத்திக்கில்உதயமானன்-எ-று. (௬௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிகைகராஞ்சேயாற்றிற்காலைசந்திகடன்கழித்து, மன்னைகனகச்சிவிகையின்மேன்மறையோலமிடவழிகொண்டாள், பங்கமலர்த்திருவடியடியார் கொடியவினையாம்பஞ்சமலைக், கனிமலையாயவிளங்குசோணமலைகண்டடிதொழுதாள்.

(இ-ள்.) பார்வதி கங்கைக்குச் சமானமாகிய சேயாறென்கிறநதியில் காலைக்கடனை முடித்துக்கொண்டு பொன்மயமாகிய பல்லக்கிலேறி வேதகோஷமுழங்கநடந்து பங்கப்படுத்து மும்மலங்களைத் தீர்க்கிற அடியார்களுடைய பாவமாகியபஞ்சமலைக்குநெருப்புமலையாய விளங்கிய திருவண்ணாமலையைப்பார்த்துச்சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டாள்-எ-று. (௬௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்- வேற்றுவண்ணம்.

வென்றிபிறைக்கவர்ந்தபொருள்புகிர்த்திறைவியசியாடும்வேனிற்பர்

லைக் குன்றமெல்லாம் வெறியாடல் முல்லையெலாம் பொதுவர் மின்னார் குரவையாடல், மன்றல்கம ழிந்திரற்கு விழாவெடுத்துக்கொண்டாடல் மருதவேலி, முன்றிலெலாஞ் சினச்சுறவு நன் னுணக்கிபணைகளாடு நெய்தல் நகராளல்.

(இ-ள்.) கல்லுமயினுலேபாலைநிலத்தார் வழிசெல்வோரை அடித்துப்பறித்த பொருளைப்பங்கிட்டு அந்தநிலத்திலிருக்கிற துர்க்கைக்குப் பலிபோடுவார்கள்; மலைகளையுடைய குறிஞ்சிநிலத்தில் இருப்பவ... ஆடி வெறிகொடுக்கிற பூசைபோடுவார்கள், முல்லைநிலத்தில இடைச்சிகள் குரவைக்கூத்தாடுவார்கள், கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உச்சவஞ்செய்வார்கள், முற்றங்களில் சுறாமீன்களை காயப்போடாநின்ற கடலருகாகிய நெய்தநிலத்திலிருக்கிறவர்கள் வருணனுக்குத் திருவிழாச்செய்வார்கள்—எ-று. (௫௯)

சோதிபெறுகரகமறையவைப்புசொரிகையினற் றூய்மையாய
மாதவாவெலாங்கலந்தமகிழ்ச்சியினற் பொன்கலந்துமருவுதலால்
போதகவிசனங்களைடைப்பெருகுதலான் மதுவுடையபொருநலவே
சீதரனிலயமாகத்திருநதிநாறுமிலைச்சவெலாஞ்சிறந்ததன்றே.

(இ-ள்.) திருநதியானது ஒளிபொருந்திய துதிக்கையையுடைய யானைகள் மலையசலத்தைப்பெருக்கி வருதலாலும், பரிசுத்தமாகிய பெரிய பூமியெல்லாம்பரவிய சகதோஷத்தினாலும், பொன்பொடிகளையுந் திரட்டிக்கொண்டு வருதலாலும், மஞ்சள்பொடிகளைப் பெருக்கினபடியாலும், தேனைத்துகூடுடைந்துமோதுதலினாலும், என்றுசந்திகருப்பொருள்கொண்டு சிலேடைவகையால்கானுடையச்சுகமறையப்பாணங்களை சசெரிதலாலும், தூய்மைபொருந்தியகோபிகாஸ்திரீகளைச் சேர்ந்திருக்கிறதினாலும், வைஷ்ணவ உருகந்தனைசெய்கிறபடியினாலும், பதுவெல விற அசுரன்சாயுச்சியஞ்செய்தலாலும் விஷ்ணுவுக்குச்சமானமாகநாலு குணங்களிலுஞ்சிறந்தது-எ-று. (௬௰)

இதுமுதலாறுபாடல் வயற்சிறப்புக்கூறுதும்.

மேவுபுனல்பாய்தொழுகக் குளிர்நறுமயிர்பொடித்தனபோல்விதைந்திறச்சேற்றில், காவிலுறைபசுங்கிளியின் சிறகெனவேபசந்து தோன்றுட்க்கிராயமுற்றிக், கூவுகின்றவாரணத்தினிதம்போலவிரிந்தெழுந்து குறைவிலசாலி, பாவையுமைச்சுவமபுரியுத்தலமிதெனப்பணிந்தனபோற படிந்தனவே.

(இ-ள்.) அந்தத்திருநதியின்கண்ணீர்பாய்ந்தொழுகுகிறபடியினாலே குளிர்ந்தபூமிதேவியினுடைய தேகத்தின்மயிர்க்குச்செறிந்ததுபோல குறைவில்லாத நெற்பயிர்களுண்டாகத் தோப்புகளின்வாசஞ்செய்கிறபச்சைக்கிளிகளினதுசிறகுபோல பச்சைநிறத்தையடைந்து தோன்றுகதிராய் முற்றிக்கூவுகின்ற கோழிக்கழுத்துப்போலவிரிந்து பார்வதியானவள் தவசுபண்ணுகிறதலம் இதுவென்று வணங்கினதுபோல வளைந்துகிடக்கின்றன-எ-று. (௬௧)

சந்தகமுமேருமுவர்பதம் பார்த்தன் கரிந்தவரிசமித்துவாரி, இந்திரனுருலகிலெனுடிபோர்செய்வானெழுமலையாமென்னப்போச்ச, தந்த

மேசுற்றிரவிபுரவிகள்போற் கடாவிடுகதேயாற்றித்தூற்றி, மந்தரமாமே
னகருவித்து வழங்குகினும் தொலையாதென மருதவேலி.

(இ-ள்.) எப்பொழுதும் உழுவோர்கள பதம்பார்த்து அறுத்து அரிக
ளைச்சுமையாகவாரித தேவேந்திரனுலகத்தோடுசண்டைசெய்ய எழுந்த
மலையென்று சொல்லும்படியாகப்போர்போட்டு ஆகாயவழியாகவருகிற
சூரியனுடைய குதிரைகள்போலும், கடாக்களைவிட்டு அடித்து வைக்கோ
லைநீக்கித்தூற்றி மந்தரகிரிபோலக்குவியல்செய்து சருவமனிதர்களுக்கு
ங் கொடுத்தாலும் நெல்குறையாது மருதநிலத்தில்-எ-று. (௪௨)

கயலினமென்றுழத்தியர்தங் கண்ணிழலைக்கண்டுகருங்கயல்வந்தே
றும், அயலிலவர்கொடும்புருவநிழலினைக்கண்டேசிலையெனறஞ்சிமீளும,
யலுநவுமாவதனந்தாமரைப்போதெனமருவி வண்டுசேரும், இயலும
வார்நாசிநிழல் சண்பகப்போதெனவெருவியிரியல்போகும.

(இ-ள்.) வயலிற்களையெடுக்கிற பள்ளத்திகளுடைய கண்ணிழலைக்க
ண்டு சேற்கெண்டைகள் நமயினமென்றுவந்துசேரும், பின்பு அருகில
அவர்களுடைய புருவநிழலைப்பார்த்து வில்லென்று பயப்பட்டோடும் ஆ
சையைக்கொடுக்கிற அவர்களுடையமுகத்தைத்தாமரைப்பூவென்று நி
னைத்து வண்டுகள்வந்துசேரும்-அதன்பின்பு அவர்களுடைய நாசியினி
ழலைப்பார்த்துச் சண்பகப்பூவென்று ஓடிப்போகும்-எ-று. (௪௩)

[illegible] பெரும்பழனத்துழத்தியர்தங்கணைக்காலை வராலெனப்போய்ப் பி
டித்துப்பள்ளர், திருமபவுமங்கவர்புறங்கால் கமடமெனப்பிடி மருகத
திணைகடோறும், குரும்பையெனுமுலைச்சியர்கண்முகத்தினுக்கும் விழி
யினுக்குந்தோமென்றா சுரும்பினுடன்கலுழ்வன போற்றாமரை
யுங் குவளையுந்தேன் சொரியுமாதோ.

(இ-ள்.) பெரியவயல்களிற களையெடுக்கிற பள்ளத்திகளுடையகணை
க்காலை வரால்மீனென்று பள்ளர்பிடித்து வெட்கத்தையடைந்து மறுபடி
யும அந்தப்பெண்களுடைய புறங்காலை ஆமையென்றுபிடிக்கு மருதநி
லந்தோறும தென்னங்குரும்பைபோன்ற முலைகளையுடைய பெண்களது
முகத்திற்கும், கண்ணுக்குந்தோற்றுப்போனோமென்று வண்டுடனே
சொல்லியழுகிறதுபோல்தாமரைப்பூவும, நீலோற்பலமும்,தேனைச்சொ
ரியும்-எ-று. (௪௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நிழலையுஞ்சுளிக்குமேதி நெடும்புனல்குடையவன்ன
மழலைவண்டானத்தோடு மருதவண்டானத்தோடு
மழலவிரமணிப்பூண்பள்ள ரரிகிணைக்கியையவூதுங்
குழலிசையறுகாண்மாதர் குழலிசையறுகாற்கூட்டம்.

(இ-ள்.) எருமைநீரிலேபோய் விழுந்துகலக்க அன்னம் இளமையா
கிய நாரையுடனே மருதநிலத்தில் வரம்பொருந்திய தானத்தையுடைய
சோலையில்ஒடும் பிரகாசம்பொருந்திய இரத்னாபரணங்களையுடைய பள்
ளர்கள் அடிக்கின்ற அரிகிணையென்னும்வாத்தியத்திற்கு இசையும்படி
யாகஊதுகின்ற புல்லாங்குழலிசை இல்லாதபோது பெண்களுடைய
கூந்தலிற்பொருந்தியவண்டுகள் இசையும்படியாகவூதும்-எ-று. (௪௫)

முசுவண்டினங்களெல்லா மூடிந்தசங்கிலிகளாகக்
காசுநெற்கதிர்களெல்லாங் கன்னசாமரைகளாட்டத்
தேசுவாய்க்கவளம்பெற்றுச் சேறுகப்பாகைச்சிந்தி
வாசவன்களிறுபோலீமருதம்வீற்றிருந்தமாதோ.

(இ-ள்.) ஒழுங்காய்மொய்த்துக்கொண்டிருக்கிற வண்டுக்கூட்டங்கள் சங்கிலியாகவும், இரதம்போலு நெற்கதிர்கள்சாமரைபோன்றசை— பிரகாசம்பொருந்த வளப்பம்பெற்றென்கிறபொருளைச்சிலேடை— கொடுக்கும்-அழகியவாயினாலே கவளம்பெறுதலாலும், பருவங்கொண்டதேனாகிய அமிர்தத்தைச்சிந்தியென்னும் பொருளைக்கொடுக்கும் தேறித தன்கண்ணிருக்கின்றபாகனைத் தள்ளிக்கொள்ளுதலாலும், தேவேந்திரனேறுகின்ற ஆயிராவதமென்னும் யானைபோல மருதநிலம் வீற்றிருந்தது-எ-று. (௪௬)

தேசுவாய்க்கவளம்பெற்று என்றதைப் பிரகாசம்பொருந்தல் வளப்பங்களைப்பெற்று என்றுமயானைக்குப்பிரகாசத்தையுடைய கவளம் பெற்று எனப்பொருள்கொள்க-தேறுகட்பாகைசிந்தி என்றதை சிறந்தேனாகிய அமிர்தத்தைச்சிந்தியென்றுகொண்டு யானைக்கு தேறிதன், கண்ணிருக்கின்ற பாகனைத்தள்ளியென்றுகொள்க.

தரவு- கொச்சகக்கலிப்பா.

பண்ணார்கமலப் பழனப்பதிநீங்கி
மண்ணோடாபோற்றும வடவீதியிற்குறுகி
யண்ணாமலையா னடிக்கமலஞ்சென்றுதொழ
விண்ணார்கொடிநெடுந்தேர் வீதிகளினமேவினாள்.

(இ-ள்.) வண்டுகளிசைபாடாநின்ற தாமரைப்பூக்களையுடையமருதநிலத்தாலாவி டுநீங்கிப் பூலோகத்தாரவணங்குகின்ற வடக்குவீதியிலெழுந்தருளி அருணாசலேசருடைய பாதாரவிந்தங்களைத்தொழுபவளாக ஆகாயத்தையளாவியகொடிகளையுடைய தேரோடுகின்றதெருக்களுக்கு வீதியிலவந்தாள் பார்வதி-எ-று. (௪௭)

கலி விருத்தம்.

உச்சகோபுரத் துச்சிமேவிலோர்
வச்சிரதிதினன் மதியின்மாசுபோம்
வச்சிரமணிச் செம்மையால்தினன்
பச்சைமாவெலாம் பவளமாகுமே.

இ-ள். யாவரும்விரும்பப்பட்டகோபுரத்தினதுசிகரத்தினருகில்சந்திரன்வரும்போது அக்கோபுரத்தி லிழைக்கப்பட்டிருக்கிறவுப்பற்ற வசிரங்களினாலே தனதுகளங்கத்தை நீங்குவான் இன்னும அக்கோபுரத்தி லிழைத்திராநின்றமாணிக்கங்களுடையசிவந்தவொளியினால் அதனருகில்வரும்போது சூரியன் இரதத்திற்கட்டியபச்சைக்குதிரைகளெல்லாம் பவளக்குதிரைகளாகத்தோன்றும்-எ-று. (௪௮)

வேற்றுமேறுசேர் மேடைமீதிலும்
போற்றுகார்மதிற் புரிசைமீதிலும்

தோற்றுநீலமா மணியின்சோதியா
லேற்றவானமே யழுனையானதே.

(இ-ள்.) வேறுவேறுமுகில் மேருவையொத்தமேடைகள்மேலும், மேகங்கள்சஞ்சரிக்கின்ற மதில்கள்மேலும், இழைத்திருக்கின்ற நீலரத்தினத்தினுடைய பிரகாசத்தினாலே ஆகாயத்திலிருக்கின்ற கங்கையானது யமுனைபோல் கறுப்புநிறத்தையடைந்தது-எ-று. (௪௯)

பரவையாமெனப் பணைமுழங்கவேயரிவைமாதரா
டரங்கின்மேல், விரவுபச்சையின் கதிர்வெய்யவன்
புரவிகொள்ளுமே புலலென்றுண்ணியே.

(இ-ள்) சமுத்திரம்போல வாத்தியங்கள்முழங்கப்பெண்கள்நாட்டியஞ்செய்கின்ற மேலுப்பரிகையிலிழைத்திராநின்றபச்சைரத்தினங்களுடையகிரணங்களைப் புல்லென்றுநினைத்துச்சூரியன் இரதத்திற்கட்டிய பச்சைக்குதிரைகளேமுகக்கொளவும்-எ-று. (௫௰)

தரவு- கொச்சககலிப்பா.

அத்தகையவீதி கடந்துமணியாலஞ்சேர்ந்
துத்தமனையென்னை யாளுடையானைச்சோணகிரி
வித்தகனைக்கண்டு பணிந்துருகிமீண்டுபல
சத்திகளுடனேமோடு தலைச்சாலைமேவினாள்.

(இ-ள்.) அப்படிப்பட்டதன்மையையுடையவீதியைத்தாண்டி அழகுபொருந்தியகோயிலுக்குள்போய் உத்தமனை என்னை யாட்கொண்டவனை அருணாசலத்திலிருக்கின்ற ஞானசொரூபனைத் தரிசித்துநமஸ்கரித்து உருக்கத்தையடைந்துதிரும்பிப்பலசத்திகளுடனே தலைச்சாலையென்கிற மலைச்சாலையடைந்தாள் அம்மன்-எ-று. (௫௧)

ஊசியிலோர்கால்விரலையூன்றியொருதாண்மடித்து
நாசியிசைவிழிகளையு நாட்டியழன்மூட்டித
தேசினதுருகுகதெள்ளமுதையுண்டுதவ
கோசிகனைப்போலழுயல்வார் *நேசாடாணகோடியே.

(இ-ள்.) ஊசியிலேஒருகாலினுடைய விரலையூன்றிமற்றொருகாலைமடித்துமூக்குநுனியிலே கண்களைச்சேர்த்துப் பஞ்சாக்கினியைவளர்த்திப்பிரகாசமான அமிர்தகாரணைசெய்துபிரமரந்திரத்தினவழியாய்வழிகின்ற அமிர்தத்தைச்சாப்பிட்டு விஸ்வாமித்திரன்போலத் தவஞ்செய்வார் அனேகங்கோடிபேர்—எ-று. (௫௨)

நாடுமலமூன்றகற்றி நல்வினையுந்தீவினையுஞ்
சாடிமனமிறந்து தானிறந்துதன்மயமாம
வீடுபெறவிரும்பி வேட்கைபிறிதில்லாமற
கூடுமெய்ஞ்ஞானியர்கள் கோடானுகோடியே

(இ-ள்.) ஆணவமாகிய மாயையென்கிறமூன்றுமலங்களையும் நீக்கிநல்வினைதீவினையென்ற புண்ணியபாவமென்பது இறந்துஅற்றுப்போதலைக்கெட்டுஉலகம்சிவசொரூபமாயமோட்சம்பெறும்படியாக ஆசைகொண்டு மற்றொன்றையுமின்றிச்சிவஞானம்பெற்றஞானிகள்கோடிகோடிபோகள் அந்தமலைச்சாலில் இருப்பார்கள்—எ-று. (௫௩)

---

* கோடானுகோடி-பெபலெண்பது - இராமியலுங்கச்சொல்லா

தொண்டருடனாகமங்கள் சொன்னவிதிமுறைமையைத்
தனைடி முடிவுசவுராதியாய்ப்பூசித்
தண்டர்பிரானாஞ்செழுத்தையோதியகமகிழ்ந்து
கொண்டகிரியையினா கோடானகோடியே.

(இ-ள்.) அடியார்களோடு ஆகமங்கள் சொன்னவிதிமுறைப்படி சூரியன்முதல்சண்டேசுரா அந்தரயாகப்பூசைசெய்து தேவர்களெல்லா வாமியாகிய சிவனுடைய பஞ்சாக்ஷரமந்திரத்தையோதிமனது மகிழ்ந்து கிரியைகளை நடத்துகிறவர்கள் கோடானகோடி-எ-று. (௫௪)

நேருமியம நியமாதனவகையும்
போபிராணாயாமம் பிரத்தியாகாரமொடு
தாரணையமன சமாதிவகைதன்னிலுமெய்
கூருமுயலியோகியாகள் கோடானகோடியே.

(இ-ள்.) இயமம்-நியமம்-ஆதனம்-பிராணாயாமம் பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதியென்று சொல்லப்பட்ட அஷ்டாங்க யோகங்களின் வகைகளையறிந்து அவைகளைத்தேகசிரமமபட்டுமுயல்கின்றயோகியர்கள் அநேககோடிப்பேர்கள்—எ-று. (௫௫)

மாதவர்களினைசெயல் செய்யும்வகைபார்த்துச்
சூதவனஞ்சூழ்ந்த சுனையுஞ்சுனைசூழ்ந்த
சீதவருவிகளும் பார்த்துச்சிறப்புறுக
கோதமனாச்சிரமந் தனைநிறகுறுகினன்

(இ-ள்) மகத்தாகிய தவத்தினையுடையோர்கள் செய்யும் செய்கையைப்பார்த்து மாமரத்தோப்புசூழ்ந்த சுனையுஞ் சுனைசூழ்ந்த சீதளமான அருவிகளையும் பார்த்துசிறப்படைந்து அவ்விடத்தில இராநின்றகௌதமருடைய ஆசிரமத்தில அமமன்சேர்ந்தான்-எ-று. (௫௬)

அந்தவிடத்துமையாள செலவகலிகையு
மைந்தனுமவாதேதகினார் வாழ்த்திமறைகோதமனார்
மூந்திமுனிவெவ்விடத்தே யென்றான்முனிபுதல்வன்
தந்தைமலர்தருபவைக் கொய்கிய துஞ்சாறறினன்.

(இ-ள்.) அக்கௌதமருடைய இடத்திறகுஅமமன்போனவுடனே அவருடைய பெண்சாதிஅகலிகையும்புத்திரராகிய சதானந்தரும்வந்துபணிந்தார்கள் அம்மன்ஆசீர்வதித்துவேதங்களையுணர்ந்தமுதன்மையாகிய முனிவரெங்கேயிருக்கிறாரென்றுகேட்கச் சதானந்தரானவர் தருப்பையைகொண்டுவருகிறதற்குப்போனாரென்றுசொன்னார்-எ-று. (௫௭)

பின்னுமவனுளாபபாள் பேதைமையேன்புன்குடிசில்
கன்னலமுமக்கணைப்போதிருக்கருளி
லன்னாவனைக்கொணாவே னென்றேயடிதொழுது
தன்னையளித்தவனைப்பாற சென்றான்சதானந்தன.

(இ-ள்.) மறுபடியும்பார்வதியைப் பார்த்துகருப்பஞ்சாறுபோன்ற பார்வதியம்மையே அறியாமையுடைய என்குடிசைவீட்டில்கொஞ்சப்போது இருந்தால் என்தகப்பனாரைக் கொண்டுவருகிறேனென்று பாதங்களைவணங்கி தன்னைப்பெற்றவிடத்திற்குப் போனார்சதானந்தர்-எ-று. (௫௮)

இங்கிவன்செல்போதி விளக்தருப்பைகொய்துமுனி
புஙகவாகள்சூழாது வருமுனிவன்பூத்தலர்ந்து
துஙகலனக்கறபகம்போ ரேன்றுதலவிதவனங்
கங்களவனமல்லவென்றுசஙைகயுற்றுநோக்கினன்.

(இ-ள்) இந்தப்பிரகாரம்சதானந்தாபோகிறபோதுஇளமையாகிய த வசுசெய்து அனேகமுனிவர்கள்சூழக்கௌதமர் வருகிறதற்குமுன்பேயே இவ்விடத்தில எல்லாவிருக்ஷங்களும் புஷ்பித்துக் கற்பகவிருட்சம்போலக்காணுகிறபடியினாலே நம்முடையவனமல்லவே இது - அருணாசலமென்றுசந்தேகப்பட்டுப்பார்த்தார்-எ-று. (௫௩)

இத்தலததில்வந்தவா ரென்றுணாத்துமாதவற்குப்
பதத்ருவந்தந்த முனியும்பாராசரனு
மத்திரியமப்புதனைம யாராயுமெலவேயிற்றன்
புதல்வனைக்கண்டுவோ வென்னபுகலென்றான்.

(இ-ள்) இந்த இடத்தில்வந்த பெரியோர்கள்யாரென்றுவிஷ்ணுவுக்கு பதத்ராமமிருகசாபங்கொடுத்தபிருகுரிஷியும்,பாராசருமு, அத்திரியென்பவரும், அப்புதனை விசாரிக்குமிடத்தில் தம்முடையபிள்ளை சதானந்தனைக்கண்டு இவ்விடததிலுண்டாகியவிசேஷமென்னவென்று கேட்டார்கௌதமர்-எ-று. கலிவிருத்தம். ௫௪

தாதையிவைகேளிலறவர்தங்களையளிக்குஞ்
சோதியிவணையுதினை னைத்தொழுதுசொன்ன
னுதமறைதேடுமவணங்குடிசைமேவற்
கேதுதவமேதுதவ மேதுதவமென்றான்.

(இ-ள்.) சதானந்தானவர் தன்தகப்பனாகியகௌதமனைப்பார்த்து ஐ பாபிரம்மாமுதலாகிய ஐவரையுந்தன்னிடத்திலுண்டாகிய தேஜோமயமாகியபராசத்தி இவ்விடத்தில்வந்திருக்கிறாளென்று வணங்கிச்சொல்ல நாதசொரூபமாகிய வேதங்கள்தேடுதற்கரிய அம்மைநமமுடையகுடிசையில்வர என்னதவம்செய்தோமென்றார்கௌதமர்-எ-று, ௫௫

ஓடினனிணைத்துமக னுச்சியைமுகந்தா
னடினன்மகிழ்ச்சியெனு மாழ்கடல்புகுந்தான்
பாடினனெடுததகுசை பாரிசையெறிந்தான்
வீடினனுதந்தம்வினை வேரினுடனென்றான்,

(இ-ள்) கௌதமர்இந்தவார்த்தையைச்சொன்ன சதானந்தனைக் கட்டியணைத்துச்சிமுகந்து ஓடினார்திருக்கூத்தாடினார்சந்தோஷமென்கிறசமுத்திரத்திலாழ்ந்தார் பாடினார்தருப்பையைப் பூமியிலேயெறிந்துவிட்டார் என்னுடையபாவம்வேருடனேகெட்டுப்போயிற்றென்றுசொன்னார்-

அத்திரிமுதற்றலைமை யந்தணர்களெல்லாங்
கைத்தலமெடுத்தனர் நடித்தனர்களிப்பால்
வித்தகியிருக்குமிட மேவியெதிர்கண்டார்
பத்திவலையிற்படு பதங்களில்விழுந்தார்

(இ-ள்) அத்திரிரிஷிமுதலாகத் தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம் இரண்டுகைகளையுந் தலைமேல்வைத்துக்கூத்தாடினார்கள் சந்தோஷத்துட

னே பார்வதியிருக்கிற இடத்தையடைந்து எதிரேகண்டு பத்தியாகிய வலையிலே அகப்பட்டுக்கொள்ளுகிற பார்வதியினுடைய பாதத்தில்வி ழுந்து நமஸ்கரித்தார்கள்-எ-று ௬௩

நின்னிலைமைகன்னியிறை நீள்பிரமசாரி
என்னுமுறையன்றுமுத லின்றுவரையெல்லா
முன்னிடையுதித்துல குயிர்த்தொகைக்கெல்லா
மன்னையெனுமுன்பெருமை யாரறியவல்லார்

(இ-ள்) தாயேநீயோகன்னிகைசுவ மியோநித்தியபிரமசாரியென்று சிருஷ்டிதொடங்கி இதுவரைக்கும்வேதங்களெல்லாஞ் சொல்லிக்கொ ண்டிருக்கின்றதுகள் அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களிலிரு க்கின்ற எல்லாவுயிர்களுந்தோன்றித்தாயென்றுசொல்லும் அப்படிப் உன்பெருமையை ஆரறியப்போகிறார்கள் எ-று ௬௪

நித்தனைமுதற்றருவை நித்தனிடத்தே
சத்தியெனநீவருவை சத்திசிவமென்றே
இத்தகைமைகொண்டுயிர்கள் யாவையுமளிப்பா
யத்துவிதமாகுமுனை யாரறியவல்லார்

(இ-ள்) நித்தியமாகவிருக்கிற சிவனை முதலில் உண்டாக்குவாய் அந் தசிவனிடத்திலே சத்தியாகவருவாய் சத்திசிவமென்கிற தன்மை யைக்கொண்டு உயிர்களையெல்லாம்பெறுவாய் அத்துவித சொரூபமா கிய உன்னையாரறியப்போகிறார்கள்-எ-று ௬௫

மெய்ப்பபொருண்மகேசனரன் வேதனரியாலல்
மைப்பருமகேசியுமை வாணிதிருவாலை
இப்படியுமன்றியவ னெப்படியெடுத்தா
னப்படியுமாவையுனை யாரறியவல்லார்

(இ-ள்) பரமசிவனானவர் மகேஸ்வரா உருத்திரர் - பிரமா-விஷ்ணு ஆனால் நீ மகேஸ்வரி-உருத்திரி-சரஸ்வதி-லட்சுமியாகிய சத்திகளாய் இப்படியுமல்லாமல் அந்தச்சிவன் எப்படிப்பட்ட உருவங்கொண்டா ரோ அதற்குத்தகுந்த உருவங்கொளவாய் உன்பெருமையை ஆரறியவ ல்லவர்கள்-எ-று ௬௬

நெஞ்சுருகிமாதவர்க ணின்றிவைபுகழ்ந்தார்
வஞ்சியிடைகோதமனும் வந்தனன்வரும்போ
தஞ்சலிபுரிந்தன னதற்குமுனமேமின்
கஞ்சமலரென்னவிரு கால்களில்விழுந்தான்

(இ-ள்)மகாதவத்தையுடையரிஷிகளெல்லாம் நெஞ்சமுருகி நின்று இப்படிதோத்திரஞ்செய்தார்கள் அந்தச்சமயத்தில் பார்வதி சமீபத்தி ல் கௌதமர்வரும்போதே இரண்டுகைகளையுந் தலையிலேவைத்துச்கூ ப்பித்தாமரைமலரையொத்த அம்மனது இரண்டு பாதத்திலும் நமஸ்க ரித்தான்-எ-று

அன்பிலுயர்கோதமனு மன்னையையிறைஞ்சி
பின்புறவரைப்பனைய னெண்மடசைபாப்போர்

தன்சிரமிதிக்கரிய தாளிணைகளின்றென்
புன்றுடில்மிதிக்கவென புண்ணியமுடித்தேன்

(இ-ள்) பகதியினாலேஉயர்ந்த கௌதமரிஷியும்பார்வதியம்மனைவணங்கிச்சொல்வான் பிரமாஅஷ்டதிக்குப்பாலகா சிரசிலேவைத்தற்கு அருமையான பாதமிரண்டு மடியேனுடைய புன்மைபொருந்திய சிறுவீடு மிதிக்க என்னபுண்ணியம் செய்தேனை-எ-று ௬அ

இந்தமொழிசொற்றது மிளங்கொடியுமவேலன்
றந்தியினடசென்றிடுவணங்கதுதவிர்ந்தால்
சிந்தையமுன்னிடையில் வருதுகுறைதீரவேன்
மைந்தவெனவோதினன் மறுத்துமிவைசொல்வாள்

(இ-ள்) இந்தவார்த்தையைச்சொன்ன அளவில் இளமையாகியகொடிபோன்ற அம்மையும், பிள்ளையாகிய கௌதமனே எனக்கோர் குறைவந்தால் சுப்பிரமணியனிடத்திலும் கணபதியிடத்திலுஞ் சென்று தீர்த்துக்கொள்வேன் அவ்விடம்விட்டால் என்பேரில் அன்பு வைத்த உன்னிடத்தில்வந்து தீர்த்துக்கொள்வேனென்று சொல்லி மறுபடியுஞ்சொல்வாள்-எ-று ௬௯

நாயகன்மொழிந்திட நடந்தபடியெல்லாம்
பாயிரமெனும்படி பகர்ந்தனளவர்க்குத்
தாயிவைமொழிந்தளவினிற்சதமகற்கன்
றாயிரம்விழிதந்த ளித்தமுனிசொல்வான்

(இ-ள்) பரமசிவனானவர் சொன்னபடி பூமியில்வந்து தானடந்தசமாசாரமெல்லாம பாயிரத்தோடுகூடிய நூல்போல முறையாகவிரித்து உலகுக்குத்தாயாகிய பார்வதிசொன்னபோது முன்காலத்தில் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்ணுண்டாகச் செய்த கௌதமர்சொல்வார் என்றவாறு ௭0

இத்தலமுதற்றலமிதன்பெயர்தலேச்ச
முத்தமமிதிற்றரு மொன்றுபலவாகும்
மெய்த்தவமியற்றியிடில் வெள்விடையின்மேல்வந்
தித்தனுமிடப்புற மளித்தருளுமென்றார்

(இ-ள்) இத்தஸ்தலம் முதன்மையானஸ்தலம் இதனுடையபேர் தலேச்சரம் இதுமிகவு முத்தமமானது இதில் ஒருபுண்ணியத்தைச்செய்தால் ஒன்றுபலவாய் விருத்தியாகும் இதிலிருந்து கொண்டு நீமெய்மையாகிய தவஞ்செய்தால் வெண்மைபொருந்திய ரிஷப வாகனத்தின் மேலெழுந்தருளிப்பரமசிவன் உனக்குஇடப்பாகங்கொடுப்ப·ரென்றார் கௌதமர்-எ-று ௭௧

மாலயன்வசுக்கண் மகவான்முனிக்ணத்தோர்
சாலைகள்சமைத்ததில் தனித்தவமுடித்தார்
காலமிடகன்றுசெயல் கைப்பலமிதென்றான்
மூலமுதல்வல்லியு முடிப்பணிதுவென்றாள்

(இ-ள்) வாராய்அம்மையே விஷ்ணுபிரமா அஷ்டவசுக்கள் தேவேந்திரன் அனேகமுனிவர்கள் அவரவர்கள் இடஞ்செய்துகொண்டு ஒப்பற்றதவஞ்செய்து நினைத்தகாரிய முடித்துக் கொண்டார்கள் நீவந்த

காலமு மிடமுநன்மையாகும் இவ்விடத்தில் நீதவஞ்செய்தால்கைப்ப லமாகி முடியுமென்று கௌதமர்சொல்ல எல்லாப்பொருளுக்கு மூல மாகிய அம்மனும்தவஞ்செய்து என்கருத்தைமுடித்துக்கொள்ளுகிறே னென்றாள்-எ-று ௬௪

எண்சீரடிஆசிரியவிருத்தம்

கோதமனேமுதலாய முனிவர்களெல்லாங் குளிர்ந்தமொழி பு ந்துவிடை கொடுத்துச்சோண பூதராமமதன் குணபாற்பன்னசாலை நிதமைப்பித்தகமகிழ்ந்து புறம்புகாக்க, மாதரொழு வயிரவரெழுத்து நா லுபாலின் வாயிலையெண் வயிரவர்கண் மகிழ்ந்துகாக்க, வாதாவினிரு த்திமைந்தர் மருங்குகாக்க வந்தரியுட்புறங்காக்க வமைத்தாள்மன்னோ

(இ-ள்) கௌதமாமுதலான முனிவர்க்கெல்லாம் பிரியவசனஞ்சொ ல்லி உத்தரவுகொடுத்து அருணாசலத்துக்குக் கிழக்குப்பக்கத்தில்பன் னசாலை புதிதாகச்செய்வித்து சத்தமாதர்களைப் புறக் காவலாகவைத் து நான்குவாசலையும் எட்டுவயிரவர்களகாக்கவும் விநாயகர் சுப்பிரம ணியா தன் இரண்டுபக்கமுங்காக்கவும் துர்க்கை உட்பக்கங் காக்கவுஞ் செய்தாள் பார்வதி-எ-று ௬௫

கொந்தளகஞ்சடைபிடித்துவிரித்துப்பொற்றோட் குழைகழுததி த்கண்டிகையின் குப்பைபூட்டி, யுந்துமாவுரிசிகர்பட்டாடைநீக்கியுரித் தமாவுரிசாத்தியுத்தாளத்தால், விந்தைதிருநீறணிந்து கனற்குட்காய்ந் து விளங்குமூசியிலொருகால்விரலையூன்றி, அந்திபகலிறைபதத்தின் ம னத்தையூன்றியரியபெருந்தவம்புரிந்தாளகிலமீன்றாள்

(இ-ள) புஷ்பங்களைத்தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்துத் தோளக்ழுத்து காதுகளில் ருத்திராட்ச மாலைகளைத்தரித்து ஆடுகின்ற பாம்புரிபோலிருக்கிற பட்டாடை யுடுத்துகிறதுவிட்டு மாவுரிதரித்து செயத்தைக்கொடுக்கின்ற விபூதியைச் சருவாங்கமுந்தரித்து நெருப்பி ல்காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும் ஊசியில் ஒருகாற்பெருவிர லையூன்றிக்கொண்டு இராப்பகலாக மனதிலே பரமசிவனைத் தியானமா கவியுத்தி அரிதாகிய பெரியதவத்தைச்செய்தாள் உலகத்தைப்பெற்ற பார்வதியம்மன்-எ-று ௬௬

இளைத்தகொடி மருங்குவளைந் தெரியினுப்ப ணினியதவ மியற்று தலகண்டிளைத்துவாடிக் களைத்துமனந்துடித்துவிழி புதைத்துவாணி கண்ணீரின் மூழ்கினின்றாள் கமலத்தாளு, முளைத்துமனந் தளர்ந்த ழுதுவிழுந்தாண்மற்றை யுயிர்களெல்லாங்கரைந்துகரைந்துருகாநின்ற, விளைத்துவளைத்துரைப்பதென்றாய் வருந்துமானால் வயிற்றினுள்ள க ருப்பமெல்லாம் வருந்திடாதோ

(இ-ள்) மிகவுஞ்சிறிதாகிய கொடிபோன்ற இடையானது வளைந்து அக்கினிமத்தியிலே இனிமையான தவத்தைச்செய்கிறதைப் பார்த்துப் பார்த்து இளைத்துவாட்டத்தையடைந்து களைத்துமனதுதுடித்து இர ண்டுகண்களையுமூடிக்கொண்டு சரஸ்வதியானவள் கண்ணீரால்முழு கினாள் இலட்சுமியானவள் மனதுவருந்திச் சஞ்சலப்பட்டு அழுது விழுந்தாள் மற்றசீவராசிகளெல்லாம் மனங்கரைந்து உருகியதுகள் நா விலைதப்பிரித்துச் சொல்வதினால் என்னபயன் தாயானவள் வருந்து

வாளாயின் வயிற்றிலுள்ளகருவாகிய சீவனெல்லாம் வருத்தத்தை யடையாதோ-எ-று ௭௫

முன்பனியிற்கருகுபடாக்கமலம்போல முகநதோன்றப் பனிகய த்துண் மூழ்கிநிற்கும், பின்பனியிலதிசீதவிடத்திற்சேரும்பெருமலழ க்குணமீனெனனப் பேணிநிற்கும், அன்பனிடம் பெறுமளவு மிது ரால் வேண்டு மரியதவமபுரிந்தனளவவிடத்துவேந்தன், வன்பனி ற்றுயிவிமோன்முதலாந் தேவர்மறைபுகுந்ததவச சாலை மருங்கிற் சார்ந்தார்

(இ-ள்) முன்பனிக்காலத்திலே கருகிப்போகாத தாமரைப்பூப்போ லமுகமாத்திரந்தெரியக்குளிரசியபொருந்திய தடாகங்களிலே நின்றும் பின்பனிககாலததிலே அதிகசீதளம்பொருந்திய இடத்திலேயிருந்தும மழைபெயகிறபோது அதில் ஒருமீன்போலச்சஞ்சலப்படாது நின்றும் பரமசிவன் இடப்பாகததைப் பெறுகிறவரைக்கு மிதுபோலவேண்டி யதவததைசசெய்தாள் அததவிடத்தில் பிரமதேவனும வலிய சர்ப்பத தில நித்திரைசெய்கின்ற விஷ்ணுமுதலாகிய தேவர்களும் தேவகோ ஷ்டம்பொருந்திய தவச்சாலையைவந்து அடைந்தார்கள்-எ-று ௭௬

அந்தரியுமாயவனா முதலாந்தேவ ரனைவருக்கு முபசார மளித் துநீங்கள், வந்தவாவியம்புமென மகிடனாலேவருந்தியதுந் தளர்ந்ததுவும் வகுத்துச்செ ன்னா, சுந்தரியுங்குமரியுடன் சுடரும்வாளாற்றொ டுகளததின் மகிடனாசதொலைப்பாயென்றாள், .விாதையதுபுரிவனெ னப் பணிந்தாளன்னை விளம்புதல்கண் டகமகிழ்ந்து விடைகொண் டாரே

(இ-ள்) பார்வதியானவள் விஷ்ணுமுதலான தேவர்களெல்லாருக்கு முபசாரஞ்சொல்லி நீங்களிவ்விடததிறகுவந்தவகைசொல்லுங்களென றுகேட்க அவர்கள் மகிடாசுரனாலே தாங்கள்துன்பப்பட்டுத் தளாசசி யடைந்தவகை விபரமாசச்சொன்னார்கள் அதற்குப்பார்வதியானவள் துர்க்கையைக்கூப்பிட்டு நீகததியினாலே யுததகளததிலே மகிடாசுர ன்வல்லமைகெடக் கொன்றுவிடென்றுசொன்னாள் அதற்குத் துாக்கை அப்படியே செய்வேனென்றுபணிந்தாள்தாயாகியபாாவதி இந்த வார்ததையைசசொன்னஅளவில் விஷ்ணுமுதலானவர்கள் சநதோஷ த்தையடைந்து வணஙகி விடைபெற்றுகொண்டாாகள் எ-று ௭௭

கலிவிருத்தம

கோதமாச்சிரமந் தனிற்கோல்வலை
தீதிலாததவஞ் செயததுசெப்பினேன்
மேதிமாமுகற் காய்நததும்வெள்விடைச்
சோதிபாகமடைநததுஞ்சொல்லுவேன்

(இ-ள்) சத்திதேவியானவள் கௌதமருடைய ஆசிரமத்தில் குறை வில்லாத தவததைசசெய்ததுசொன்னேன் பிறயாடு மகிடாசுரனைக் கொன்றதும், ரிஷபவாகனத்தையுடைய சிவனுடையஇடப்பாகததை ப்பார்வதியார் அடைந்ததுஞ்சொலவேன்-எ-று ௭௮

நான்காவது-திருககண்புதைத்தசருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௩௨.






சிவமயம்.

ஐந்தாவது

பார்வதியார்

# இடப்பாகம்பெற்றசருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அஞ்சனக்கிரியில்வாழு மசுரன்றனைர்க்குந்தீர
னஞ்சமேயனையானந்த நமனுக்குமனையவந்தோன்
செஞ்சிகையெரியைதகிக்கும் தீமையானளகைநாட்டின்
விஞ்சையான்வருந்தவுள்ள வளமெலாங்கவர்ந்தவீரன்

(இ-ள்) நீலகிரியில் வாசஞ்செய்துகொண்டிருக்கிற அசுரனானவன் எல்லாரிலும அதிகபராக்கிரமத்தையுடையவன் விஷத்தினுக்குச்சமானமானவன் அந்தயமனுக்கும யமனானவன்சிவப்பாகிமேலேயெழுகின்ற கொழுந்தையுடைய நெருப்பைச்சுடத்தக்கத தீமையையுடையவன் அளகாபுரியில குபேரன் தரித்திரத்தையடைய அங்கேயிருக்கிறவளங்களெல்லாங் கொள்ளையிட்டவன்-எ-று

தாமரைக்கண்ணன்றாங்கு மாவினைத்தலைவால்கூட்டி
மாமணிக்கவண்போற்கொள்வன் வானிவர்களைத்தைவாங்கி
வேமழற்குஞ்சிமைந்தாக் குதவுமன்விமானத்தோடே
சோமனைப்பிடித்துக்கையாற் பிழிந்துமூசருந்துஞ்சூரன்

(இ-ள்) விஷ்ணுவின்த்திரைசெய்கிற ஆதிசேடனைத்தலையையும், வாலையும் ஒருகையினாலே சேர்த்துப்பிடித்து அதன் சிரமணியைக் கவணையிலேவைத்தெறிந்து விளையாடுவான் அக்கினியைத்தன்னொளிவிட்டு அவனேறுகின்ற ஆட்டை நெருப்பைப்போலச் சிவப்புமயிரையுடைய தன்பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப்பான் சந்திரனை அவனேறுகிறவிமானத்தோடே கையினாலே பிடித்துப்பிழிந்து அவனுடம்பிலிருந்துவருகிற தேவாமிர்தத்தைப்பானம்பண்ணுகிறசூரன்-எ-று உ

கருதியமகவான்வெள்ளைக் களிற்றின்மேற்றிரிவன்பின்னைப்
பரிதிதேர்த்தனிப்பசுமைப் பரிசெலப்பவனிபோவா
னிருதியைச்சுமக்குமாளி யேறுவனிணங்கொன்மூழ்கிக் (வான்
குருதிகொப்பளிக்கும் வாளொன் றெடுத்துயிரனைத்துங்கொல்

(இ-ள்) உயர்வாக நினைக்கப்பட்ட தேவேந்திரனுடைய வெள்ளையானைமேல் திருவோலக்கம்வருவான் சூரியனுடைய தேரிலேறிக்கொண்டு பச்சைக்குதிரைகளேழும் நடக்கப் பவனியாகப்போவான் நிருதியைச் சுமக்கின்ற ஆளியின்மேலேறிக்கொள்வான் நிணங்களாலே மூழ்கப்பட்டு இரத்தங்களைக்கொப்பளிக்கும் ஒருவாளாயுதமெடுத்து சருவத்திரசீவன்களையும் கொல்வான்-எ-று ௩

அன்னவன்மகிடமான வாரதிறலஞ்சிக்காலத்
தென்னவன்மகிடமேறான் காலினானடந்தானென்று
லென்னவன்கொடுமைநம்மா லியம்பலாமிலங்குஞ்சோதி
மன்னவன்கிரியைச்சாய்த்தான் மீனுக்காவாரிதூர்த்தான்

(இ-ள்) அப்படிப்பட்ட அசுரன் எருமைமாட்டு முகத்தையுடையவனானபடியினாலே தெற்குத்திக்கிலிருக்கின்ற யமனானவன் எருமைக்கடாவின்மேலேறுமற் காலினாலேநடந்து திரிந்தானென்றால் அந்த மகிடாசுரனுடைய கொடுமை நம்மாலேயப்படிச்சொல்லக்கூடும் சோதிசொரூபமாகிய சிவனிருக்கிறகைலாயத்தையுஞ் சாயச்செய்தான் மீன வேண்டியதற்காகச் சமுத்திரத்தையுந் தூர்த்தான்-எ-று ௪

மயனெனுந்தச்சன்செய்த மகிடமாபுரத்திலன்னோ
னயனருள்சிறந்திருக்குநாளவனுக்காய
பயனுறுநுகர்ச்சிவேண்டி யாயிரம்படைக்கையாளர்
கயமுதல்விலங்கைநாடி வேட்டையாகத்திரிசென்றார்

(இ-ள்) மயனென்கிற தேவதச்சனால் இரத்னகசிதமாகச் செய்யப்பட்ட மகிடபுரத்தில் அந்தஅசுரன் பிரமாவானவர் நித்தியம் அறுகும் அட்சதையுங்கொடுக்க வாழ்ந்துகொண்டிருக்கிறநாளில் அந்த அசுரன்தின்னுகிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம் பேர்கள் யானைமுதலாகிய மிருகங்களைத்தேடி வேட்டைமார்க்கமாகக் காட்டுக்குப்போனார்கள்-எ-று ரு

தானவர்சென்றுவஞ்சிதவஞ்செய்கானகத்தைச்சூழ
வாணவர்பணியுபட்டவயிரவாதொலைந்தாரா
போனவாறிந்தவாறும்புரிசூழ்ற்றவமுநதூத
ரானவரவுணாகோவுக்கடிபணிந்தறிவித்தார்கள்.

(இ-ள்.) அப்படி வேட்டையாட வெளிப்பட்ட ஆயிரமசுரர்களும் வந்து பார்வதி தவஞ்செய்துகொண்டிருக்கிற வனத்தைச்சுற்றிக்கொண்டிருக்க ளஅதைக்கண்டு தேவர்கள் பணியினாற்காவலாகவிருந்து அஷ்டவயிரவர்களும் அந்தஆயிரம்பேரையுங்கொன்றார்கள் அவர்கள் இறந்துபோனதும் அம்மன் தவசுபண்ணுகிறதும் பாதத்தைவணங்கிததூதர்கள் மகிடாசூரனுக்குத்தெரிவித்தார்கள்-எ-று. ௬

போற்றிபங்கவர்கள்சொல்லப் புகைாகைபிறந்ததங்கி
தூற்றியவிநகண்ட கோளமுஞ்சுழன்றதங்கே
நாற்றிசையுள்ளவேழ நடுங்கியதிமையோர்கூட்டங்
கூற்றமுங்கரந்தால காலமுங்குளிர்ந்ததன்றே

(இ-ள்) தூதர்கள்வணங்கித்தெரிவித்தஅளவில் புகையும் சிரிப்புமுண்டானது இரண்டுகண்களும் நெருப்புகளைப் பறக்கவீசியதுகள் அண்டகோளமுமகிழுகிறெறாமசுழன்றது அஷ்டதிக்கிலிருக்கிறயானைகளும் தலையைத்தொங்கப் போட்டதுகள் தேவர்கூட்டம நடுக்கத்தையடைந்தது யமனும்ஒளிந்துக்கொண்டான் ஆலகாலவிஷமும் குளிர்ச்சியடைந்தது-எ-று ௭

அப்படிமகிடன்சீறு மளவிலனிகும்பனென்போன்
செப்பினமுனதுகோபம்பொறுப்பரோசிறியரென்றே
முப்புடையிளநீரென்னு முலைச்சிவாழ்வனத்துளாரைக்
கைப்படையதனாற்கொல்வேனெனச்சொலிக்கடிதுபோனான்.

(இ-ள்) அந்தப்பிரகாரம் மகிடாசூரன் கோபிக்குமளவில் நிகும்பனென்கிற படைத்தலைவனவாருமையாராசனே உமமுடையகோபத்தை அற்பமானவர்களார பொறுப்பார்கள் என்றுசொல்லித் தென்னிளநீர் போன்றதனத்தையுடைய பார்வதிதவஞ்செய்கிற வனத்திலிருப்போரைக் கையிலிருக்கின்றவாளால் கொன்றுவருகிறேனென்று சீக்கிரத்தில் புறப்பட்டுப்போனான் எ-று ௮

குடதிசைக்கடலைசசீறிக் குணதிசைக்கடல்சென்றன்ன
நெடியதேர்கரிமாசேனை யெழுந்தனனிகும்பனென்போன்
வடகிரிதனக்குங்கும்ப மாமுனிமலைக்குநேரே
இடைபெருகரியமேரு வெழுந்ததாமெனச்சென்றான்.

(இ-ள்)மேற்குச்சமுத்திரத்தின் மேற்கோபித்துக் கிழக்குக்கடல்சண்டைசெய்யப் புறப்பட்டதுபோல் பெரியதேர்களும் யானைகளுங்குதிரைகளும காலாள்களும் புறப்பட்டதுகள் நிகும்பாசூரனானவன் மகாமேருவுக்கும் அகஸ்தியரிருக்கின்ற பொதியமாமலைக்கு மத்தியிலே கறுத்த ஒருபெரியமேரு எழுந்ததென்று சொல்லும்படியாகப் போனான-எ-று

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேறுவண்ணம்

எழுந்தவனுமாகதரேர் துரககமாயிரம்பூண்டவிரதமேறி,வழிந்த கரிமதக்கடலை யெழுந்ததுகளடக்கவுமை வனத்திற்சென்றான், கொழுந்துவிடுகனலனையாரவரவுகண்டுபலகோடி குன்றம்வீசி,தழைந்த நடுத் தாக்கணங்குநோக்கணங்கும் பொருதெதிரே தடுத்தாரன்றே.

(இ-ள்) இந்தப்பிரகாரம நிதம்பாசுரன் பச்சைக்குதிரை ஆயிரங்கட்டியதேரின்மேலேறிக்கொண்டு அப்பொழுது எழும்பிய சிறுஅணுக்கள்,முன்போகாநின்ற யானைகளின்மதஜலம் சமுத்திரமாகத் தேங்கியிருப்பதைவறச்செய்ய பார்வதிதவஞ்செய்யும் வனத்திற்குப்போனான் கொழுந்துவிட்டெரியும் நெருப்பொத்த அசுரப்படைகள்அநேகமலைகள்விட்டெறிய இவர்கள்வருகிறதுகண்டு அம்மனிடத்திலிருக்கிற தாக்கணங்கு நோக்கணங்கு என்னுமிருவரும் ஆயுதபாணிகளாகப்போய எதிரேதடுத்தார்கள்-எ-று ௰

சண்டனுருத்திரன்சோமன் கபாலிசிகர்சங்கரன் கோதண்டன் வீத, னெண்டரியசித்திராங் கதனென்னும்வயிரவர்களிருநால்வோரு, மண்டமுகடுடையாகத் தானைகளைத்தொலைத்திட்டவரிகளபோலக், கண்டகனுஞ்சாரதியுந் தேருமன்றிச சேனையெல்லாங் கணத்திற்சாய்த்தார்.

(இ-ள்)சண்டன்ருத்திரன்சோமன் கபாலிதனக்குத்தானே ஒத்தசங்கரன கோதண்டன் வீதன் சித்திராங்கதன்இவ்வெட்டுவயிரவர்களும் அண்டகோளமுடைபட யானைகளைக்கொல்லுகிற சிங்கள்போலககர்சசித்துநிதம்பாசுரனும் அவன்சாரதியும்தேருந்தவிரமற்றச்சேனைகளையெல்லாம நொடிப்பொழுதிலே கொன்றார்கள். ௧௧

அட்டவயிரவர்படையா லணங்குகளாற்றனது படையழிந்தனுக்கி,வட்டநெடுந்தேர் முடுக்கித் தாக்கணங்கின் முகத்திலெண்ணிலவாளிகோத்தான், விட்டகணைகளைவிலக்கித தேரோட்டுஞ்சாரதியை வீழ்த்திவாளி, தொட்டகாங்களைப்பிடுங்கி யவனுயிரைக்குடித்தந்தச்சூரமாது.

(இ-ள்)எட்டுவயிரவர்களுடைய ஆயுதங்களினாலும் இரண்டுபெண்களாலும் தன்னுடையபடைமுழுவதும் இறந்துபோகின்றதைப்பார்த்து நிதும்பாசுரன் வட்டமாகிய நெடியதேரைவிட்டுக் கொண்டு தாக்கணங்கென்பவளுடைய முகத்திலேகணக்கில்லாத பாணங்களைவிட்டான் அந்தபாணங்களைவிலக்கித்தேர்நடததுகிறசாரதியைககொன்று அம்புதொடுத்தகைகளையறுத்து அவனுடையதலையையும் அறுத்துக்கொன்றான் தாக்கணங்கு-எ-று ௧௨

ஓடினசெங்குருதிநதியுடலிழந்துவிழுமவுணருயிர்கள் போல,வாடினவெண்குறைத்தலைக ளனுதினமுமருந்துகின்ற வலகைபோலச்·குடினர்கள்வயிரவரும் தாக்கணங்கு நோக்கணங்கும் அம்பைவாகை,வீடினர்க ளவுணரென மகிடமுகற் குரைத்தனர்போயவிரைந்துதூதர்.

(இ-ள்.) வயிரவர்களாலும் இந்த இரண்டுபெண்களாலும் தேகமறு
பட்டுச்சிகிரீதத்திறபோகுமசுரருயிர்போல் இரத்தநதியானது ஓடியதுசி
தறியம்மாமிசத்தைத்தின்று கூத்தாடுகின்றபேய்போல்கவந்தங்கள் கூத்
தாடியதுகளவயிரவர்முதலாகியவர்கள் தும்பைவாகைமாலை சூடிக்கொ
ண்டார்கள் அசுரர்களிறந்துபோனார்களென்றுமகிடாசுரனுக்குதூதர்கள்
சீக்கிரத்தில்போய்ச்சொன்னார்கள்—எ-று. (ய-)

கேட்டனனிவை மகிடமுகன் கயிடவன்றன்முகநோக்கி இளந
வானோர்,காட்டிலுறைசிறுபேயுஞ் சணவரூநமபெரும்படையைக் கடி
ந்ததுவென்றால்,நாட்டநுதலயனரியுமனைக இனிமேற்றிறைகொடுக்க லா
னுவாரோ, நீட்டினகைபுரிந்தெழுந்தா னேறினனாயிரங்கரிசூழ்ரத
மீதில்.

(இ-ள்.) மகிடாசுரன் இந்தவார்த்தையைக்கேட்டஅளவில் தன்னரு
கில்நிற்குங்கயிடவன்முகத்தைப்பார்த்துச்சொல்வான் ஒருகாட்டிறசஞ்
சரிக்கின்றசிறியபேய்களுஞ்சணங்களுநம்முடைய பெரியசேனைகளைக்
கொன்றதுகளென்றால் சிவன்பிர்மாவிஷ்ணுமுதலானவர்கள் சொன்ன
படிகேட்பார்களோவென்று அதிகமாகியநகைகொண்டு எழுந்திருந்தாயி
ரம்யானைகளைக்கட்டியதேரிலேறிக்கொண்டான்—எ-று. (ய௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பதினொருகோடியானைப் பலத்தராய்க்காந்தனீலன்
முதுகான்குருதியண்ட னீசகன்சண்டன்முண்டன்
மதுகயிடவன்றீக்கண்ணன் புகைக்கண்ணன்மாலியென்றும்
தகுகொளாறிரண்டுபேருந் தேர்களைத்தூண்டிச்சென்றார்.

(இ-ள்.) மகிடாசுரன்தேரின்மேலேறினவுடனே பதினொருகோடியானைப்
பலத்தையுடையவர்களாகியகாந்தன்-நீலன்-முதுகான்-குருதி-அண்டன்-
நீசன்-சண்டன்-முண்டன்-மதுகயிடவன்-தீக்கண்ணன்-புகைக்கண்
ணன்-மாலியென்று-சொல்லப்பட்டபன்னிருவரும்தங்கள்தங்களிரதங்
களைநடத்திக்கொண்டுபோனார்—எ-று. (ய௫)

கரிமுகத்தவர்நிவாதகவசர்கள்காலகேயர்
பரிமுகத்தவுணர்மேதிப் பணைமுகத்தவர்கள்பற்றி
எரிமுகத்தவுணர்சீறி யெழுமபுலிமுகத்துக்களவ
ரரிமுகத்தவுணர்வெள்ள மாயிரஞ்சென்றவன்றே.

(இ-ள்.) யானைமுகத்தையுடையவர்கள்-நிவாதகவசர்கள் காலகேயர்
கள்-குதிரைமுகத்தையுடையவர்கள் எருமைமாட்டின்முகத்தையுடைய
வர்கள்நெருப்பெரிந்துகொண்டிருக்கிறமுகத்தையுடையவர்கள் புலிமுகத்
தையுடையவர்கள்சிங்கமுகத்தையுடையவர்களாகிய அசுரர்கூடிய ஆயிர
ம்வெள்ளம்நடந்ததுகள்—எ-று. (ய௬)

பாய்பரியதனிற்பாதி பரிகளிற்கரிகள்பாதி
காய்கரியதனிற்பாதி கடும்பரிக்கொடுந்தேர்செல்லப்
பேய்கருங்கொடிகளாடப் பிணங்கிவெண்கொடிகளாட
வேயகனப்பறைகளார்ப்பக் குறுகினன்விகதைகானில்;

(இ-ள்.) இப்படி ஆயிரம்வெள்ளங்காலாட்கள் புறப்பட்டவுடனேஐந் நூறுவெள்ளங்குதிரையும்இருநூற்றைம்பதுவெள்ளம்யானையும் நூற்றிருபத்தைந்துவெள்ளம்தேர்களுடகப்பேய்களும்காக்கைக்கூட்டமும்விருந்துகம்படுமென்றுகளித்துக்கூத்தாட வெள்ளைக்கொடிகளாடப்புள்ளாங்குழல்பேரிகைமுதலானதுகளமுழங்கமகிடாசுரன்அம்மனிருக்கிறகாடல்வந்துசேர்ந்தான்—எ-று. (௰௭)

அடலவன்வரக்கண்டஞ்சி யடைந்துமைக்கபயமென்று
மடருறுமுனிவர்கூற வுமையவள்பயங்கெடுத்து
விடலுடனருகுநின்ற விந்தையைவிரும்பிநோக்கி
கடகமொண்டமடிவாயென்றாள்விடைகொடுபெயர்ந்தாள்கன்னி

(இ-ள்.) வல்லமைபொருந்தியமகிடாசுரன் வருகிறதைப்பார்த்துப்பயப்பட்டுஓடிவந்துபார்வதிக்கு அபயமென்றுமுனிவர்கள் முறையிட்டுச் சொல்லஅம்மனானவள் அவர்களுடையபயங்களைத்தீர்த்துத் தன்சமீபத்தில்நின்றபெருமைபொருந்தியதுர்க்கையைப்பார்த்து உன்னுடையகத்தியினாலேஅந்தஅசுரனைக்கொன்றுவிடென்றுசொல்ல உத்தரவுபெற்றுப்புறப்பட்டாள்துர்க்கை—எ-று. (௰௮)

ஆளிமேற்கன்னிசெல்ல வருணாயகிமுன்செல்லக்
காளிதுந்துமிபின்செல்லச் சுந்தரிகணங்கள்செல்ல
ஞாளிமேல்வடுகர்செல்ல நான்முகிமுதலாமாதர்
தாளிமேற்செல்லத்தங்கள் விடையின்மேற்றாசிசென்றார்.

(இ-ள்.) துர்க்கையானவள் ஆளிவாகனத்திலேறிக்கொண்டுபோகஅருணாயகியென்பவள்முன்னேபோகவும்காளிதுந்துமிஎன்கிற இருவரும்பின்னேபோகவும் பார்வதியினதுகணங்களும் சுவானவாகனத்தில்வயிரவர்போகவும்அபிராமிமுதலாகியமாதரெழுவரும்தங்கள் தங்கள்வாகனங்களேறிக்கொண்டு தாசிப்படையாகத் துகளெழும்பப் போனார்கள்—எ-று. (௰௯)

சென்றிதோமரத்திற்குன்றிற் சிலைகளிற்படையிற்கையிற்
கன்றிடமகிடன்சேனைப் பாதியைக்கணத்திற்சாய்த்தார்
வன்றிறன்மகிடன்சேனைத் தலைவருமகிடன்றானுங்
குன்றெனவெதிர்த்துகன்னி படையெலாந்துரத்திக்கொன்றார்.

(இ-ள்.) இப்படிதுர்க்கைசேனைகள்போனவுடனே உலக்கையினாலும்மலைகளாலும்வில்முதலாகியஆயுதங்களாலும் கைகளினாலும் கோபத்துடனேபோர்செய்துமகிடாசுரனுடையபாதிசேனையை ஒருநொடிப்பொழுதிலேகொன்றுவிட்டார்கள்மகிடாசுரனும் அவனுடையசேனைத்தலைவர்களும்மலைபோல்எதிர்த்துதுர்க்கையின்சேனைகளையெல்லாந் துரத்திக்கொன்றார்கள்—எ-று. (௨௰)

துக்கமிமுதலானவ ரிடைத்தனர்குலியான
சுந்தரிவாராகியாறு முகத்தவடிகிரிக்கையா
ளிகிரியமறைபாளென்னு மெழுவருமறைந்தார்ஞானி
யுதிரமுரிமைந்தார்கன்னி நாத்தளர்ந்துமையேயென்றாள்.

(இ-ள்.) அசுரனதுபடைகளை யெதிர்த்துயுத்தஞ்செய்த அளவில்துந்துமி-காளிமதங்கி-சண்டி-என்கிறநான்குசத்திகளுமதோற்றார்கள்-சூலி-நீலகண்டி-வாராகி-சண்முகி-திரிசூலக்கையாள்-இந்திராமகாயாளென்கிற ஏழுமாதரும்யுத்தஞ்செய்யமாட்டாமற்காட்டிலொளித்தார்கள் சுவாணவாகனத்தையுடையவயிரவர்களுந்தோற்றார்கள் அர்க்கையானவள் மாதுக்களாற் றுமையோதேவியேயென் றுஇபாளித்துநின்றாள்—எ-று.

உறுதுணையுமையேயென்னும் பொழுதில்யோகினிகள்வானி
லறுபத்துநாலுகோடி யதிர்த்தெழுந்தழலின்மாரி
இறுதியாயருளசசேனை யிடிமழைசொரிகையாலே
குறுகியமகிடன்சேனைத் தலைவருங்கோதித்துச்சென்றார்.

(இ-ள்.) அர்க்கையானவள் அம்மனே துணையென்றபோது அறுபத்துநான்குகோடியோகினிகள் ஆகாசத்திலார்ப்பரித்தெழுந்து நெருப்புமழையையும்இடிமழையையும் சொரிந்தபடியினாலே மகிடாசுரனுடைய சேனைகளெரிந்துபோனதுகள் அப்பொழுதுசேனைத்தலைவர்கள்கோபித்துசசண்டைசெய்தார்கள்—எ-று. (௨௨)

கலிவிருத்தம்.

அருசிகன்றனைச் சென்றனளாரணி
மருவுகாந்தனை மாய்த்தனள்வாரணி
காளனைவென்றனள் வேலுடைக்காரணி
காகனுருயி ருண்டனளாரணி.

(இ-ள்.) அப்படிமகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் எதிர்த்தவுடனே அபிராமியென்பவள் அருசிகனென்பவனைக்கொன்றாள்வாரணியென்பவள்காந்தனென்பவனைக்கொன்றாள்சண்முகியென்பவள்காளனென்னும் அசுரனைக்கொன்றாள் காரணிகாகனென்னும் அசுரனைக்கொன்றாள்—எ-று. (௨௩)

சூலபாணி தொலைத்தனள்மிண்டனைக்
கோலமாமுகி சண்டனைக்கொன்றன
ளாலவூணி மதுவையழித்தன
ணீலனுருயி ரிந்திரைநீங்கினாள்.

(இ-ள்.) சூலக்கையாளென்பவள் மிண்டனென்பவனையும் வராகி சண்டனென்பவனையுந்நீலகண்டிமதுவென்னுமசுரனையும் இந்திரை நீலனென்பவனையுங்கொன்றார்கள்—எ-று. (௨௪)

துந்துமிக்கொடி சோணிதனூணனை
தந்துமிக்கும் படிக்கதைசாட்டினாள்
நந்துமிக்க நிகர்க்கருணாசலை
வந்துமிக்கெரிக் கண்ணனைவாட்டினாள்.

(இ-ள்.) துந்துமிக்கொடியை யுடையவள்சோணிதவூணனென்பவனைத்தலையறும்படி தண்டாயுதத்தாலடித்தாள்சக்கரத்தை கையிலேதரித்த அருணாசலையென்கிறசத்தி அக்கினிக்கண்ணனைக்கொன்றாள்—எ-று.

கயிடவன்புதைக் கண்ணனிருவருஞ்
செயிரின்மாளாச் சிந்தினன்சுந்தரி

செப்பமிக்க கிணைமிடுலேவின்
பயிட்டவன் முகங் கண்டெதிர் வந்தனள்.

(இ-ள்.) சுந்தரியென்கிற சத்தி மயிடனென்னுமசுரனைக்கண்ணுணையுக யுத்தத்திலே கொன்றாள், செய்யப்பட்ட பொழிகின்ற மிணைங்களைபொருந்திய வேலாயுதத்தையேந்திய துர்க்கையானவள் மகிடாசுரனைக்கண்டு எதிரே வந்தாள்—எ-று. (உசு)

வெங்கடாமுகன் மேவலு மாதர்க
டங்களாயுதங் கொண்டெடுத்தனர்
சிங்கவூர்தி யவனைத்திறசென்றுமைச்
சங்கையூதினள் மேருசலிக்கவே.

(இ-ள்.) வெப்பமபொருந்திய கருணைமதக்கடாமுகத்தையுடைய அசுரன் யுத்தத்துக்குச்சேர்ந்த அளவில் சத்தமாதர்களும் தங்களாயுதங்களினாலே அவன் விட்ட ஆயுதங்களைவிலக்கினார்கள் அவர்களையிலே சிங்கவாகனத்திலேறிவந்த துர்க்கையானவள் அவனுக்கெதிரே போய் தன் கையிலிருக்கிற சங்கத்தை மகாமேரு அசையும்படி வாயில்வைத்தூதினாள்—எ-று ()

செருவிலங்கவள் சங்கொலிசெய்திட
ஒருவரின்றி யவுணருறங்கினார்
பெருவரங்களிற பெற்றசரங்களை
இருவருஞ்சொரிந்தார் மழையென்னவே.

(இ-ள்.) வல்லமைபொருந்திய சிங்கவாகனத்தையுடைய துர்க்கை சங்கத்தொனிசெய்ய அசுரர்களொருவராவது இல்லாமல் மயக்கத்தையடைந்தார்கள் அருமையாகிய வரத்தினாலே பெறுங்கொண்ட பாணங்களை யிரண்டுபேரும் மழைபோலச்சொரிந்தார்—எ-று. (உஎ)

எந்தவெந்தக் கணையிவளேயினும
அந்தவந்தக் கணையாலறுத்தனன்
விந்தைமீண்டொரு வெம்பிறைவாளிக்கணை
சிந்தினாளவன் சென்னியழுகவே.

(இ-ள்) எந்தெந்தப் பாணங்களை துர்க்கையானவள் விட்டாளோ அந்தப் பாணங்களை அந்தந்தப் பாணங்களினாலே மகிடாசுரன் அறுத்துத்தள்ளினான் அதன்பிறகு இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடைய சிரசிலே அழுந்தும்படியாகவிட்டாள்—எ-று. (உஅ)

வெம்புசெயபுனல் வெள்ளமுறுக்கிய
செம்புபோலச் சிதறவிடுங்கணை
யம்புபோல ருககினுமங்கவன்
கொம்புபோல விளங்கினகோடியே.

(இ-ள்.) இரத்தவெள்ளமானது உருகின செம்புபோல் சிதறிவிழவிட்ட அர்த்தசந்திரபாணங்கள் அம்பாகஇருந்தாலும அசுரன் தலையிலே பு[illegible]த்திருந்தகொம்பிரண்டுபோல் தலையிலேவைத்து அழுந்தியவிளங்குதே[illegible]ன்றினதுகள்—எ-று. (௨௯)

வெற்றிகொண்டவன் வில்லைமுறித்தன
னுற்றவமயிற் சிலைநுதன்போதினன்
கொற்றவன்மின் குலங்கள்விடுத்தவ
வெற்றிநெற்கண் ணழலினிமிர்த்ததே.

(இ-ள்) ஜயங்கொண்டவளாகிய துர்க்கையிலிருந்தவில்லையி ணைடக்கமுறித்தான் அந்தவில்லினாலே அசுரனுடையநெற்றியிலே தான் அநேகபலமபொருந்திய அம்புகளைவிட்டவனாகி அந்த ன் நெற்றியிலேசுவாமியினுடையகண்ணைக்கினிபோலச்சுடுகென்று தாக்கியது—எ-று. (௩௧)

சாபவெழுநிலை போகத்தரிப்பனோ
கோபமிஞ்சிக கொதித்தெழுகூற்றகதிற்
றீபமெனவுத திகிரியொன்றேவிய
பாபகாரி தலையிழுபடண்ணினான.

(இ-ள்.) துர்க்கையானவள்வில்லொடிந்ததும்பொறுக்காமல் அதிககோபங்கொண்டுகொதித்தெழும்பாசிறையபோல பிரகாசிக்கின்றதொருசக்கராயுதத்தைவிட்டுப்பாவியாகியமகிஷாசுரனுடையதலையறுபடச்செய்தாள்—எ-று. (௩௨)

கன்னியாழி யெரிடக்கட முகம்
சின்னபின்னமாக ளாயுஞ்சிதைந்திலன்
முன்னையாதவத் தன்மையின முமதம்
அன்னுமால்தரியாயெதிர்தோன்றினன.

(இ-ள்.) துர்க்கையானவள்சக்கராயுதத்தைவிட்டெறிய மகிஷாசுரன்தேகஞ்சின்னபின்னமாகியுஞ்சாகாதவனாகிப் பூர்வகாலத்திலேசெய்ததபோபலத்தினாலேமும்மதங்களைப்பொழியாநின்றபெரியயானையுருவங்கொண்டெதிராகவந்தெதிர்த்தான்—எ-று. (௩௩)

ஆளியேறுசென் றங்கனுசசியின்
மூளைவாரி நுகர்ந்ததுபெயர்பிறுனை
மீளவுங்கைதை கொண்டெதிராவீர ஞன்
சூளிராயகி கூர்மைவேலைவிடுனாள்.

(இ-ள்.) அப்படியானையுருவங்கொண்டெதிர்த்தஅளவில் துர்க்கையேறுகின்ற ஆளியானதுபோய அந்தயானையுச்சியிலிருக்கின்ற மூளையைக்கையினாலேஅளைந்துதோண்டியெடுத்துத்தின்றது அதனாலேயுஞ்சாகாமற் கையினாலேதிருப்பியுந் தண்டாயுதங்கொண்டெதிர்ந்தான் பேய்களுக்கதிகாரியாயிருக்கின்றதுர்க்கைகூர்மைபொருந்திய வேலாயுதத்தைவிட்டாள—எ-று. (௩௪)

விடந்ததும்பிய வேல்படவெஞ்சமர்க்
கிடந்ததுமபி முகனுமிறந்தனனன
னடந்ததும்பிக ளாயிரமாயிரங்
குடைந்ததும் பிரபமெனக்குன்றியே.

(இ-ள்.) விஷத்தைக்கக்கிக்கொண்டிருக்கிறவேலாயுதம் பாய்ந்தவுடனேயுத்தத்தில்நின்றயானைமுகன் அதைசகிக்கமாட்டாமல் இறந்துவிட்டான் அநேகமாயிரம்வண்டுகள்குடையவுள்ளேயென்று மிலங்

மத்துலேயோடுகூடியஅதிமாம்போல்—எ-று. (௫௫)

வீழ்ந்தபின்பரி வேடமதாயெதிர்ப்
போந்தவன்கதை கொண்டுபுடைந்தனன்
சோந்தவன்கதை யுமவன்சென்னியு
நாந்தகங்கொண் டறுததனரணி.

(இ-ள்.) அப்படிவிழுந்துஇறந்துபோனவுடனேகுதிரைமுகஅசு ரனெதிரேவந்துதண்டாயுதத்தினாலேஅடித்தான் அடித்ததண்டாயு தத்தையும்அந்தஅசுரனுடையதலையையுமகத்தியினாலேஅறுத்தாள்தன் வினைதுர்க்கையும—எ-று. (௫௬)

அக்கதன்பி னழலுருவாயினன்
கங்கையாயினன் கஞ்சனாயினன்
பங்கையாசனனாயினன பங்கய
மங்கைநாயக னாயினன்மாயையாய்.

(இ-ள்.) அதன்பின்பு அசுரன் நெருப்புருபங்கொண்டுவந்தான் அதன்பின்புசலப்பிரளயரூபங்கொண்டும் அகதகாரமாகியும்தாமரைப் புஷ்பத்திலிருக்கிறபிர்ம்மாவாயும் இலட்சுமிபுருஷராகியவிஷ்ணுவாகியும் எதிர்த்தான்மாயையினாலே—எ-று. (௫௭)

ஈதுகண்டவ ளென்செய்வன்மாயையால்
வாதுசெயதன னென்றுதளர்ந்துமை
பாதநெஞ்சினிற் பற்றினள்பற்றிய
போதிலோர்மொழி விண்ணிறபுகன்றதே.

(இ-ள்.) அப்படிஅசுரன பலபலரூபங்கொண்டவுடனே பார்த்து மாயையினாலேறன்பப்படுத்துகிறான்என்னவுபாயஞ்செய்தாலும்சாகி றதில்லைஇதற்கென்னசெய்வேனென்றுதுர்க்கையானவள் பார்வதிதே வியினுடையஇரண்டுபாதத்தையும்மனதிலேதியானித்தாள் அப்படிதி யானித்தவுடனேஆகாயத்திலின்றும் அசரீரிஒருவாக்கியஞ் சொல்லிய து—எ-று. (௫௮)

மாயவேடங்க ளன்றிமகிடமே
மாயபோதி லவன்றலைந்தள்ளியே
தூயதாளின் மிதிக்கற்றொலைந்திடுந்
தீயமாயையெனச்சொலத் தேறினாள்.

(இ-ள்.) அநேகவிதமானமாயவேஷங்களல்லாமல்சுபாவமான எருமைமுகரூபங்கொண்டபோதுஅவன்தலையையறுத்துதகீழேதள்ளி உனனுடையபரிசுத்தமாகிய காலினாலேமிதித்தால் தீமைபொருந்திய மாயைதொலைந்துபோமென்றுசொல்லத்துர்க்கையம்மன்தேறினாள்-எ-று

மட்டின்மாயை வடிவின்மலைந்துபின்
னெட்டிலைத்தலைச் சூலத்தினீக்கினாள்
தட்டன்மேதிய தாய்ப்படைதொட்டனன்
வெட்டிவீழ்ததி யடியின்மிதித்தனள்.

(இ-ள்.) அளவில்லாத மாயரூபங்கொண்டுவா நெடுமைபொருந் திய அவனுடைய சூலத்தினாலேகுத்திக்கொன்றான் பின்பு அந்தத்த ட்டன் பழைய எருமைக்கடாமுகத்தை யுடையனாகிஆயுதங்களைப்பி

ரயோகஞ்செய்த அளவில் அதுகளைவிலக்கி வாளாயுதத்தால் தலையை வெட்டிததள்ளிக் காலினாலேமிதித்துக்கொன்றாள் துர்க்காதேவி எ-று.

ஒப்பிலாபபத மூன்றுமிதித்திடில்
தபபிமாயை தவிரப்பதுபாரமோ
வட்பதத்தை நினைக்கினுமாணவஞ்
செப்புகாமிய மாயையுந்தீர்க்குமே.

(இ-ள்.) துர்க்கையம்மன்பாதத்தைநினைத்தாலும் அதைநினைத்தவருடைய ஆணவமாயை காமியமென்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும் அப்படிப்பட்ட ஒப்பில்லாதபாதம் பரிசமாகும்படி ஊன்றி மிதித்தால் பொய்யாகிய மாயைமாத்திரந் தவிர்ப்பதுபெரிதோ—எ-று. (௫௧)

போதவாணவர் பூமழைபெயதனர்
மேதிமாமுகன் மெய்க்கதியுற்றனன்
தீதிலாவவன் செங்களந்தன்னிலோர்
சோதிலிங்கமிருந்ததுதோன்றவே.

(இ-ள்.) தேவர்கள்மிகவும் புஷ்பவருஷம்பொழிந்தார்கள் மகிடாசுரனும் அம்மன்கையினாலிறந்ததினாலே மெய்ம்மையானமோட்சத்தைச் சேர்ந்தான் யாதொருகுற்றமுமிலலாதஅவனதுசிவப்பாகிய கண்டத்திலே ஒருபடிகலிங்கமிருந்தது—எ-று. (௫௨)

கண்டமட்டிலக் காக்கொளக்கார்கவ
கண்டமட்டிற் புறந்தகடாமகன்
கண்டமட்டி லிருந்தகடவுளைத்
கண்டமட்டி லெடுத்தனள்கன்னியே

(இ-ள்) நவகண்டமட்டும் ஆண்டமகிடாசுரனுடையகழுத்தைச்சேக்காகவைத்துத் துர்க்காதேவி அறுக்கஅந்தக்கழுத்தி லிருந்தபடிகலிங்கத்தை கண்டபோதே கையினாலெடுத்தாள்—எ-று. (௫௩)

கொண்டுசென்றுமை கோகநகப்பதங்
கண்டுபோற்றிகடவுளையீயந்தனள்
வண்டுலார்குழல் வாங்கினள்செங்கையை
அண்டர்நாயகன் விண்டலனகையால்.

(இ-ள்) அப்படிப்பட்டபடிகலிங்கத்தையெடுத்துக்கொண்டுபோய் உமாதேவியினதுபாதங்களைத்தொழுதுநடந்தகாரியமெல்லாம்சொல்லிச்சுவாமியைக்கொடுத்தாள வண்டுகளசூழ்ந்திருக்கின்ற கூந்தலையுடையபார்வதியம்மன் கையினாலேவாங்கினாள்தேவர்களுக்கெல்லாம்நாதராகவிருக்கின்றசுவாமியும் அம்மன்கைமேல் வைத்திருக்கிற ஆசையினாலே கையைவிடாமற செட்டியாகஇருந்தார்—எ-று. (௫௪)

தாயுமந்தது கண்டுமகிழ்ந்திறை
ஞயவென்காம பற்றியசதனை
வாயையக்கை புதைத்துமகபதிக்
காயிரக்கண் ணளித்தவன்கூறுவான்.

(இ-ள்) பார்வதியாளவள் அந்த ஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியுடைத்துசுவாமிபுணர்ந்தன்கையைவிடாமலிருந்தது ஏதனாலேயென்

றகேட்கத் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்கொடுத்த கௌதமரானவர் வாலையகங்கையிலே போந்துகொண்டு அம்மனுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௬௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

முன்னகத்தியனமுதலாமுனிவர்களைம்பதின்மர்வரமுனிபாற்செ ன்னவனறன்னைமதிப்பாலவமதிப்பாயிருந்திடவுமவனைநோக்கி யென்னரியதவமுனிவர்வெகுண்டுரைப்பாரெமையிகழ்ந்தபுன்மையாலே, இன்னரியகருங்கடாவாயினிப்பிறக்கக்கடவாயென்றுரைக்கச் சொன்னார்.

(இ-ள்) முற்காலத்திலே அகஸ்தியர்முதலான ஐம்பதுரிஷிகள் கூடிவரமுனியென்பவருடைய ஆசிரமத்திற்குப் போனார்கள் அந்தவரமுனியானவர் தம்முடைய தபோபலத்தினாலே மரியாதையாக உபசாரஞ்செய்யாதிருந்தார் அப்போது அதைப்பார்த்து பொன்போலும் அரியதவத்தையுடைய எல்லாமுனிவர்களும் கோபித்து எங்களுக்கு அவமரியாதை செய்தபடியினாலே யாவராலும் குறைவுசொல்லப்பட்டார் எருமைக்கடாவாகப்பிறப்பாயென்று அவர்களெல்லாருஞ்சபித்தார்கள்.

அந்தவைம்பதின்மருமன்றுரைத்தமொழிக் கொடுமையைக்கண்டச்சமாகியிருந்தவனுமெழுந்துபணிந்தென்துபிழைபொறுத்தருளவீரென்றுரைத்தப், பெருந்தவர்கள்புடனுரைப்பாரகிடமுகத்தவுணனெனவேபிறந்துபின்னர், திருந்தவாணிடமவேண்டித்தவம்புரியுமுமைகணைதிர்த்தீர்ப்பாளென்றார்.

(இ-ள்) அரியதவத்தினையுடைய ஐம்பதுமுனிவர்களும் அன்றுசொல்லியசாபத்தின் குரூரத்தைக்கேட்டுப் பயப்பட்டுப் பெருமையைப்பொருந்திய தவஞ்செய்த வரமுனியும் எழுந்து வணக்கஞ்செய்து முனிவர்களை அறியாமல்நான்செய்தபிழையைப்பொறுத்துக்கொள்ளுங்களென்றார் அந்தமுனிவர்கள் நீர் எருமைமுகம்பொருந்திய அசுரனாகி அருணாசலத்தில் சுவாமியினது இடப்பாகத்தைப்பெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்கிற அம்மனுமையவள் உமதுடையசாபத்தைநொடிப்பொழுதிலே தீர்ப்பாளென்றுசொன்னார்கள்—எ-று. (௬௭)

ஆங்கவர்சொற்படியிலவணசுரர்பெருங்குலத்திலுதித் தரசனாகி யோங்கியபேர்மகிடனெனக்கொடுங்கோன்மைபுரிகுதலுமொருநாள்வேட்டைத், தீங்குதெரிவனத்திலடைந்தழூபசியாலிளைத்தோடித்திரிந்தானாக, கைசரியவருச்சனைசெயமன்னதனென் றொருமுனிவனேர்ப்பட்டானே.

(இ-ள்) அந்தமுனிவர்கள் சொன்னபிரகாரம் வரமுனி அசுரர்குலத்திற்பிறந்து இராஜாவாகிமகிடாசுரனென்கிறபெயரையடைந்துகொடுங்கோலரசுசெய்துக்கொண்டுவருகையில் ஒருநாள்வேட்டையாடும்படியாகவனத்தில்வந்து மிகுந்தபசியினாலே இரையொன்றும் அகப்படாமல் ஓடித்திரிந்துகொண்டிருந்தான் அவ்விடத்தில் நீகைகுத்தமகரியதவஞ்செய்கின்றமன்னதரிஷியங்கிறவன் எதிர்ப்பட்டான்—எ-று. (௬௮)

மன்னதனுமவனையிவன்காத்தி லிங்கத்துடன்விழுங்கி மகிழ்ந்துபோ
னன்,பின்னதனுலவனிடற்றிறசிவனுருவமிந்ததந்தப்பெருமையாலே,
யுன்னதமாயினஞ்சிவனுரூறுததறித்தவுடனுமிறைபருவமென்றே,வன்
னதனுல்வினையடைந்ததுதவுருநவதீர்த்தமாடிலென்ருன்.

(இ-ள்) எதிர்ப்பட்டஅந்தமன்னதனென்கிறரிஷியைக் கையிலிரு
ம்இலிங்கத்தோடேஇந்தமகிடாசூரன்எடுத்துவிழுங்கிவிட்டுப்போனு
பின்புஅவனைகண்டத்திற்சிக்கிக்கொண்டு படிகலிங்கமிருந்தபடியினுலே
மிருந்தபெருமையடைந்தான் அந்தஇலிங்கமிருந்தகண்டத்தையுடைய
னும் சிவசொரூபமன்றே அவனைகொன்றபடியினுலே பாவமசம்ப
வித்தது நவதீர்த்தங்களாடினுல அந்தபாவமபோகுமென்றாகௌதமர்

அன்புமுனியுரைத்தளவிலொருமொழியங்காத்திலெழுந்தரியதீர்த்த
மொனபதுமவவிடகநலவருமவை வருமாறியற்று மெனவுமையும்வி
னை,தன்பதும முகநோக்கி யுனதுகைவாளிநதுகங்கைதருவாயென்று
ள, வன்பணிலமெடுத்தாளூ தொழுதுகைவாணிலத்தெறிந்துவாங்கும்
போதில்.

(இ-ள) மிகவும்பத்தியையுடையகௌதமர்இந்தப்பிரகாரஞ்சொன்
னஅளவில் பாவந்தீர ஆடுதற்கு ஒன்பதுதீர்த்தமும்இவ்விடத்தில் வரு
மபடிச்செயயென்று ஆகாயத்திலிருநது ஒருவார்த்தைபிறந்தது அதை
கேட்டுபார்வதியும தாமரையினதுமலர்போன்ற முகத்தைப் பார்த்து
உன்னுடையகையிலிருக்கிறவாளினுலே பூமியைபிளந்துகங்கைவரும்ப
டிசெயயென்று சொல்ல ஜயசங்கையிற்றரித்த துர்க்கையும்வணங்கிவா
ளாயுதத்தால்பூமியிலேவீசியெடுத்தபோது-எ-று. (௬௰)

நவநதியுமபிறவுளநனைதிகளுமச சொகந்தீரநல்லதான
சுவையதிகமுதவுபலதடாகளுமத கெழுந்தவந்தசசுனையினூடே
பவமகலவொருமாதமுழுகியிருந்தாள் கரதைப்பறறிநீஙகாச் [று
சிவவடிவுமகன்றதுதன்னுளமகிழநது கரையில்வந்தாடேவர்போற்

(இ-ள) ஒன்பதுதீர்த்தங்களும்மற்றுமுள்ளநதிகளும் விடாயாறும்
படிஉதவிசெய்யும நலருசியைக்கொடுக்கின்ற அனேகம்தடாகம்உண்
டானதுகள் அந்தநதிகளில் ஒருமாதவரைக்கும் அம்மன்குற்றம் நீஙகு
ம்படி ஸ்நானஞ்செய்துக்கொண்டிருநதாள கையைபற்றிக்கொண்டு வி
டாமலிருந்த லிங்கமுமநீங்கியது அப்போதுதேவர்களபோற்றும்படிம
னதுசந்தேகித்துஅம்மனகரையில்வாதுசேர்ந்தாள்-எ-று. (௬௧)

அருவருவாமொருசிவனையதன்கரைமேறபுறத்திருத்தியருச்சித்தாணம்
இருவினையுந்தவிர்ப்பானுக்கென்பாவநீரத்தானென்றியற்பேரிட்டாள்
திருமருவும்பெருஞ்சுனைக்கு மிளியகட்கதீர்த்தமெனத்திரிப்பேரிட்டா
ள், குருமணியைப்பருணகிரிப்பெருமானைத்தொழக்கனகக்கோயில் சார்ந்
தாள்.

(இ-ள்) அருவமாகியும்உருவமாகியும்விளங்குகின்றஐப்பற்றசிவனை
அந்தநதிக்கரையிலேஎழுந்தருளச்செய்துஅர்ச்சனைசெய்தாள்நம்முடைய

யகல்வினை தீர்வினை இரண்டையுமடைந்தனையடைய எனபாவந்தீர்த்
தாளென்றுபேரைத்தரித்து அழகுபொருந்திய அந்தச்சோலைக்குக் கட்க
தீர்த்தமென்றுபெயரிட்டாள் நிறம்பொருந்தியமணியொத்தவரை அரு
ணைநகரத்திலெழுந்தளியிருக்கின்றபரமசிவனை வணங்கும்படியாகபொன்
னாகியகோவிலுக்குப்போனாள்-எ-று. (ருஉ)

மூருகுமலரயன்றடத்திற்படிந்துவெண்ணீரணிந்துசெங்கைமுடியிற்
கூப்பி, யருகுவருங்கோதமன்சொற்படிதொழுதுட்புகுந்துகணநாதமு
னைதககண்ணுற், றுருகிநிலமுறவிழுந்துபணிந்தெழுந்துபரவசமாயப்பா
டியாடி, பருகியுவந்தழுதுயர்த்து வலம்புரிந்து தனதுகுறையுரைத்துப்
போற்றி.

(இ-ள்) வாசனைபொருந்தியதாமரைமலரிலிருக்கிறபிர்மாவினுடைய
தீர்த்தத்தில்முழுகிவிபூதிதரித்துச்சிவந்தகைகளைசிரசில்வைத்துகரும்
பிட்டுத்தன்னருகேவருகிறகௌதமர்சொன்னபிரகாரம உள்ளேபோய்க்
குளிர்ச்சிபொருந்தநமஸ்காரஞ்செய்து எழுந்திருந்துபரவசமாகிப்பாடி
யாடிஉருக்கமடைந்துகளித்துஆனந்தக்கண்ணீர்பெருகிப்பெருமூசசெ
றிந்துவலமாகவந்துதன்னுடையகுறையைசசொல்லிவணங்கினாள்-எ-று

கார்த்திகைத்திங்களிற்றிருநாளாக மற்றின்படிநடத்திக்கனற்கண்ணனை
தோத்திரம்பண்ணுதலுமொருசுடர்மலைமே லெழுந்தச்சுடரினூடே [த
னதரியபலகோடியிரவியெனவொருசோதி யெழுந்துமின்னே
வாய்த்தமலைவலமாகநடத்தியெனவுரைத்துடனே மறைந்ததன்றே.

(இ-ள்) கார்த்திகைமாசத்தில் ஆகமப்பிரகாரந்திருநாள்செய்துநெ
ருப்புக்கண்களையுடைய சிவனைப்பணிந்தவளவில் மலைமேலொருபிரகா
சமுண்டாகி அதிலேசொல்லுதற்கரிய பலகோடி சூரியப்பிரகாசமாயசு
வாமியெழுந்துபெண்ணேஇந்தமலையைவலமாகநடந்துவாவெனறுசொ
ல்லிமறைந்துவிட்டார்-எ-று. (ருச)

காரிதனைச்சிலையாக்குமுனிவனுமப் படிவலமாநடத்தியென்றுன்
வாரியெனமறைபுகழ்க் காரிகையுநடந்தண்டன்மலர்க்கைகூப்பி
பேரிகையுங்காகளமுஞ் சல்லரியும்மல்லரியும்பெரியவாணி
றாயமுகந்துந்துமியுமத்தளமுங் குடமுழவுநதுவைத்தவன்றே.

இ-ள்) அகலிகையாகியபெண்ணைக்கல்லாக்கியகௌதமரிஷியும்அம்
மாஅப்படியே வலமாகப்போவென்றுசொல்லச் சமுத்திரம்போல்வேத
கோஷ்டமுழங்கவும் ஆகாயத்தில்பேரிகை காகளம் சல்லரி மல்லரி முரு
சு துந்துமி மத்தளம் குடமுழா முதலானவாத்தியங்கள் முழங்கவும்பா
ர்வதிஇரண்டுகையுங்கூப்பிக்கொண்டுநடந்தாள்-எ-று. (ருரு)

அரம்பையுருப்பசிமுதலாமகபதிநாட்டரிவையர்க ளாடல்காட்டக்
குரும்பையெனநெருங்குமுலை வரையரமங்கையர்மலரின்குப்பைகொட்
டகுரும்புகளிக்கின்மொழுப்புனலரமங்கையரிருட்டுங்கவரியாட்ட[டக்
கிரும்புருககைபுரிய பரவகிநர்மணிவிளக்க மெடுத்துநீட்ட.

(இ-ள்) இந்தப்பிரகாரம்பார்வதியம்மைவரும்போது இரம்பையூர்வசி முதலாகிய தெய்வலோகத்துப் பெண்கள் நாட்டியமாடத் தென்னங் குலையை யொத்த தனத்தையுடைய மலையரமகளிர் அம்மன்கூடவந்து வருகிறபோது பாதம்பூமியிலேபட்டு உறுத்தாமலிருக்கப் புஷ்பங்களைக் குப்பைகளாகக் கொட்டக் குறைபடாத சாருபோலும் வார்த்தையையுடைய கீராமத்தார் சாமரம் எடுத்துவீச இரும்புகூட உருகும்படி கைசெய்கிற நாகலோகத்துப் பெண்கள் இரத்தின தீபங் கையிலே யெடுத்துக் கொண்டுவர-எ-று.

இதுமுதலிரண்டுபாடல் குளகம்

முண்டகமண்டபமயிலும்புலோமிசையுமுறைத்துவளமுளரிமானும்
கண்டகமும்வழிபாலுமொழித்துவரநிலநடன்கைகணீட்ட
அண்டர்குலமடந்தையருமுனிவர்குலமடந்தையருமருவிப்பூந்தேன்
வண்டவிழுஞ்சேரகமுமலரினறுந்துகள்சொரிந்துவழிகளாக்க

(இ-ள்) தாமரைப்புஷ்பமாகியமண்டபத்திலிருக்கிற லட்சுமியும் இந்திராணியும் வெண்டாமரைப்பூவிலிருக்கிற சரஸ்வதியும் போகிறவழியிலிருக்கிற முள்ளுகளையும் கல்லுகளையும் தள்ளிக்கொண்டுவரப் பூமிதேவி கைகளைநீட்டிச் சாக்கிரதையாகத்தாங்க தேவஸ்திரீகளும் முனிவர்களுடைய ஸ்திரீகளும் புஷ்பத்திலிருக்கிற தேனருவியினாலே வழிசேற்றை நீக்கிப் புஷ்பத்துக்குள்ளேயிருக்கிற பராகப்பொடிகளைக் கொட்டி நல்லவழியாகச் செய்ய-எ-று. (ருஎ)

கன்றினைத்துன்னிருசரணம்பொருக்கருள்வாயெனவங்கைகங்கைகூப்ப
மன்றனதிசையணுகிப்பழங்கிரியையெதிர்முகமாவணங்கிப்போற்றி [ன்
தென்றிசையுநிருதிபெறுந்திசையினையுங்கடந்துகுடதிசைக்குச்சென்று
குன்றவிலாப்புகழாளுமழவிடைமீதினிற்காட்சிகொடுத்துப்போனான்.

(இ-ள்) கன்னிகையானவள் அம்மாபார்வதி உன்பாதமிரண்டு பூமியிலே படுக்கன்றிப்போய்விட்டது பொறுக்கவேணுமென்று இரண்டுகைகளையுங்கூப்ப அழகிய அக்கினிதிசையிலேவந்து அக்கினிமலைஎதிர்முகமாகத் தொழுது தெற்குதிக்கும் நிருதிமூலையுந்தாண்டி மேற்குதிக்கிற்போனான் குறைவில்லாத கீர்த்தியையுடைய சுவாமியும் இளமையான இரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்து தரிசனங்கொடுத்து நடந்தார்-எ-று. (ருஅ)

நாற்றிசையுட்போற்றிசெயும்புகழணியுண்ணுமலையானடங்கால்போற்றி
மேற்றிசையுங்காறிசையுங்கடந்துவடதிசையணுகிவிரும்பியேத்தி [ற
ஏற்றிசையுமுறைதிசையுமகிழ்ந்துகுணதிசையடைந்தாளிளமைவெற்றி
சேற்றிசையுபணவழலைவலம்புரிந்தசெயல்போலநெறிந்ததன்றே.

(இ-ள்) நாலுதிக்கும்வணங்குகின்றகீர்த்தியையுடைய அருணாசலேசுரருடைய பாதத்தைவணங்கி மேற்குதிக்கும் வாயுதிக்குந் தாண்டிவடதிசையில்மறுபடியுந்தொழுது ஈசானதிக்கிலே நின்றாசானனுடைய திக்கைக் கடந்துகிழக்குதிசைக்குவந்தாள் அப்படிவந்தது இமவற்பர்வதத்தில் ராமிகலியாணஞ்செய்தபோது அம்மைக்கினியவலம்வந்ததுபோலிருக்

கலித்துறை.

பானுகம்பன்கனைச் சங்கொலிநெடியமால்பணிலத்
தானகம்பலை நாரதர்வீணையினரவம்
வானதுந்துமி கம்மலேதிசையெலாமறைத்த
. தேனிறைந்திழி மலர்மழையிமையவர்சிதற.

(இ-ள்) பானுகம்பனென்பவன் தன்னுடைய ஆயிரங்கைகளிலுஞ் சங்கத்தைவைத்தூதுகிறவொலியும் விஷ்ணுவானவர் தமது சங்கத்தை வாயில்வைத்தூதுகிற சத்தமும்நாரதர் வீணையைவாசிக்கிறசத்தமும் ஆகாயதுந்துமியினுடைய சத்தமும் திக்குகளெல்லாஞ் செவிடுபடச்செய்தது கள் தேனிறைந்தபலநஷ்பங்களைதேவர்களசொரிய.-எ-று (கூ0)

இது முதல்மூன்று பாடல்களுக்குளகம்.

கற்றைவார்சடை யிளம்பிறைநெடுநிலாக்கமழப்
பற்றராமணி யிளவெயில்விரித்திடப்புலியைப்
பெற்றமாதினுக் கொருபுறமளித்திடப்பிடித்த
வெற்றநூலெனப் புரிபூணூன்மார்பகத்திலங்க.

(இ-ள்) கற்றையாகியநீண்டசடையில்தரிக்கப்பட்ட இளமையாகியபிறையினதுநெடுமைபொருந்தியசந்திரிகைபிரகாசிக்கவும் ஆபரணமாகிய புற்றிலிருக்கின்றசர்ப்பத்தின்தலையிலிருக்கிறமணிகாந்தியை விரிக்கவும உலகமாதாவாகியபார்வதிக்குப்பாதிசரீரத்தைக் கொடுக்கிறதற்காகப் பிடித்தவெறுநூல்போலபுரியாகியபூணூலானது மார்பிற்பிரகாசிக்கவும.

பிறப்பிலாமதன்மறைசியலாலளவிடாப்பெரியோ
னிறப்பிலாவிடையிறையினமேலினிதெழுந்தருள
வறத்தினுபகியடிபணிந்திறைஞ்சினளனைத்துக்
துறைக்குமன்னனுமவளுடனிவையிவைசொலலும்.

(இ-ள்) பிறப்பில்லாதமூர்த்தி அநேகவேதங்களாலும அறியப்படாதவர் இறப்பில்லாதபரமசிவன் ரிஷபவாகனத்திலெழுந்தருளத் தருமபலவளர்க்கின்றபார்வதி அந்தச்சுவாமியாதத்தைத்தொழுதுவணங்கினளெல்லாவற்றையும்நீக்கியகடவுளானவர் ஆநதஅமமேனும் சொலவா.-எ-று.

பெண்ணுமாணுமா யுலகுயிர்பபொருளெலாமபிரிந்தோ
மண்ணுதாகிய பீடமுமிலிங்கமுமானோ
மெண்ணுநீயென நாமெனவிரண்டிலேமரும
முண்ணலாவிய வயிரமுங்கர்த்துடனுறைவோம்.

(இ-ள்)வாராயுமையேநீயும்நானும்பெண்ணுமாணுமாகிஉலகத்தில் அநேகம்சீவராசிகளைவேறுவேறுஉண்டாக்கினோம் சமீபமாய் ஆவிடையாரும்லிங்கமானோம்நீயென்றும்நாமென்றும்வேறுபேதமில்லைமரமும அதற்குளளேயிருக்கிறவயிரமும்போல்நுங்குவய சேர்ந்திருப்போம். (கக)

அங்கம்பாவும்பொருட்டுவிட்டிமயவெற்படைந்தா
யிங்குநாமுனக்கொருபுறமளிப்பதேயியற்கை
மங்கையேமெனவிடப்புறத்துறையெனமகிழ்வுற்
றங்கையாலணைத்தருளினனுருகியொன்றானார்.

(இ-ள்) தேகத்தைவிட்டுநம்பொருட்டாக இமயபர்வதத்திலேவந்து பிறந்தாய் அவ்விடத்தில்நாம்உமக்கொருபாகங்கொடுப்பதுசுபாவமே பெண்ணே நம்முடையஇடப்பாகத்திலேசேர்ந்திருவென்று சந்தோஷத்தை யடைந்துகையினாலேஅணைத்துக்கொண்டார் இரண்டுதேகமும் உருகி ஒருதேகமானார்கள் அம்மனுஞ்சுவாமியும்-எ-று. (௬௪)

அடுத்தசெஞ்சடையொருபுறமொருபுறமளக
தொடுத்தகொன்றையோர்புறமொருபுறமலர்குவளை
வடித்தசூலமோர்புறமொருபுறமலர்க்குவளை
திடத்தவீரகழலொருபுறமொருபுறஞ்சிலம்பு.

(இ-ம்) அப்படியிருவரும்உருகிச்சுவாமியினுடையபாதியும் அம்மனுடையபாதியும் ஒருதேகமானபோது ஒருபக்கத்திற்சிவந்தசடையும்ஒருபக்கம்கூந்தலும்ஒருபக்கம்கொன்றைமாலையும்ஒருபக்கம் புஷ்பமாலையும்ஒருபக்கம்சூலமும் ஒருபக்கம்நீலோற்பலபுஷ்பமும் ஒருபக்கம்வீர கண்டாமணியும்ஒருபக்கம்சிலம்பும்தோன்றியதுகள-எ-று. (௬௫)

பச்சைவண்ணமற்றொருபுறமொருபுறப்பவளங்
கச்சுலாமுலையொருபுறமொருபுறமகவின்மா
ரச்சநீக்கியவரமுமொன்றபயமொன்றங்கை
இச்சையாமிவ்வுருவதுகண்டிறைஞ்சினரிமையோர்.

(இ-ள்) ஒருபுறம்பச்சைநிறமும்ஒருபுறம்பவளநிறமும்ஒருபுறம்இரவிக்கையணிந்தஸ்தனமும்ஒருபுறம்அழகுபொருந்தியமார்பும் ஒருபுறம் அபயமும் ஒருபுறம்வரமுமாகியஆசையோடுஇருவரும்பொருந்தியதைப் பார்த்துதேவர்கள்வணங்கினார்கள்-எ-று. (௬௬)

இந்தமாக்கதைபடித்தவர்செவிகளிற்கேட்டோர்
சந்தனாசலமுனியியற்றமிழ்க்கடல்கடப்பா
ரைந்தரோமுதற்கிளையுடனுலகினில்வாழ்வார்
பந்தபாசமற்றழிவிலாப்பரகதிபெறுவார்.


(இ-ள்) இந்தக்கதையைப்படித்தவர்களும் காதிலேகேட்டவர்களும் சந்தனவிருக்ஷங்கள்சூழ்ந்தபொதியமலையிலிருக்கிற அகஸ்தியரைப்போல தமிழ்க்கடல்கடப்பார்கள் சந்தானபாக்கியத்தோடுஞ்சுற்றத்தாரோடும் உலகத்தில்வாழ்வார்கள் தங்களைபந்தமாகச்சூழ்ந்துகொண்டிருக்கிறதீவினையைத்தள்ளிமோட்சம்பெறுவார்கள்-எ-று.

முனிவனேயெனப்பயந்தவனுரைத்தவிம்முறையென்
றனையமாமுனிக்குரைத்தலுமவனெழுந்திறைஞ்சிக்
கலாகலைச்சிராங்கதனுயர்கதிபெறுங்கதையை
வினவினன்முனிவனுமகிழ்ந்திவைவிளம்பும்.

(இ-ள்) இந்திரேசுராமர்க்கண்டேயன்பார்த்துக்களைப்பெற்றப ரமசிவன்சொன்னசரிதத்தின்முறையிதுவென்று அருணகுச்சொல்ல அக்குமரக்கடவுள்டேவரிவிழுமுகுந்தசடமசெய்து பிணபுசுவாமி வச்சிரா ங்கதபாண்டியன்உயர்வாகியமோட்சம அடைந்த கதையைச் சொல்லத் தொடங்கினார்-று. (கூஅ)

ஐந்தாவது இடப்பாகம் பெற்றசருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் சஎ.



உ

சிவமயம்.

ஆறாவது.

## வச்சிராங்கதபாண்டியன்சருக்கம்.

(*)

கலி-விருத்தம்.

தோடுகமழ்சந்தனவனத்திடைதிரிந்தே
நீடுதமிழினசுவை யளைந்துமெதோளா
யாடுமடவன்னவரசு ளன்னநடைபோலே
வாடமிசைதென்றல்புகும் வையைவளநாடு.

(இ-ள்) புஷ்பவிதழமணகமுசந்தனவனத்தின்மத்தியிலேசஞ்சரித் தலெட்சியாகிய தமிழினதாமாதுரியத்தைஅலைந்துதேர்ந்தாக ஆடாநின் றமயில்போன்றபெண்களுடையநடைபோலவாடைக்காற்றில்சமயாதமா யதென்காற்றுவாராநின்றவையையாறுபொருந்தியபாண்டியவளநாடு.

வெவ்விருகனிரிடையமின்னெனமருங்குட
னொவ்விபெறுதேந்தகைசெறிந்துவருநாடு
[illegible]

(இ-ம்) வெப்பத்தைச்செய்யும் கண்களையுடையபெண்களினடையைப் பார்த்துமின்னலென்றுமயங்கி அழகுபொருந்தியதாழைகள்புஷ்பிக்கும் காடுமானபோன்றமாதர்கள் கூந்தலைப்பார்த்து இருளென்றுமயங்கிமுல்லைச்செடிகள்மாலையிலேபுஷ்பிக்கும்வையைவளமபொருந்தியநாடு-எ-று.

அந்தவளநாடர்பெரு மானரசர்கோமா
னிந்திரன்முடிக்கிடையெறிந்தவளைவீர
னினைதயன்றுதென்கயிலைநெற்றிவிழிபோலே
முந்தியதிசைக்கரிமுகத்தெழுதிவைத்தோன்.

(இ-ள்) அத்தன்மையாகியபாண்டிவளநாட்டாருக்கு இராசன் அரசர்க்கரசனானவன்தேவேந்திரன்முடிசிதறும்படியாகவளையென்னும் ஆயுதத்தைபிரயோகித்தவன்குற்றமற்றதென்கைலாசத்துக்குநெற்றிக்கண் போல்அஷ்டதிக்கிலுமிருக்கிறயானைகள்முகத்திலே தன்னுடைய மீனக் கொடியையெழுதிவைத்தவன்-எ-று. (௩)

கலி-விருத்தம்.

ஆகமாதி மதனினழகினா
னாகமாதி தெளிந்தவறிவினான்
பாகநாரியி பத்தியினான்மொழிப்
பாகநாரியர் பற்றியதோளினான்.

(இ-ள்) பெருமைபொருந்திய குருவாரத்திலே அந்தமலையைவலமாய்வந்தவர்கள் திருமூர்த்திகளும் புகழும்படியாகத் தேவர்கள் முனிவர்களுக்குச்சமானராவார்கள் குறைவிலாத சுக்கிரவாரத்தில்வலஞ்செய்தவர்கள் தாமரைமலரிலிருக்கின்ற இலட்சுமியைச்சேரும் காயாமலரைபொருந்த விஷ்ணுபதத்தைச்சேர்வார்கள்-எ-று. (௨௨

உதயமேசனிநாட்சூழ்வோர்க் கொன்பதுகிரகநன்றாய்
பதினோராமிடத்திற்றாய பலன்களைப்பலியாநிற்கும்
மதியுனிசிவனிராவும் முடம்வந்துதிக்குநாளும்
அதிகமாமதுமமாகு மைப்பசிமுதலாமூன்றும்

(இ-ள்) சனிவாரஉதயத்தில்பிரதட்சணஞ்செய்வோர்களுக்குநவக்கிரகங்களும்பதினோராமிடத்திலிருந்தபலனைக்கொடுப்பார்களசிவராத்திரியிலுமவருஷப்பிறப்பினென்றும்ஐப்பசிமுதலாகியமூன்றுமாதமும் வலஞ்செய்தவர்களுக்குமேற்சொன்னபலன்களிலும்அதிகபலன்சித்திக்கும்

அயனசங்கிராமமாசிமகத்திலர்த்தோதயத்தில்
வெயிலுறுங்கதிரைப்பாம்பு விழுங்குநாளவிதிபாதத்திற்
பயனுறவலஞ்செயவோர்க்கும் பலன்களிற்கோடியாகும்
அயர்வறத்தினமுஞ்சூழ்வார் பேறறையாரறிபவல்லார்.

(இ-ள்) உத்தராயணத்திலும் தட்சணாயணத்திலும் மாசிமகத்திலும் அர்த்தோதயத்திலும் சூரியகிரண காலத்திலும் விதி பாதத்திலும் இஷ்ட சித்தியைஅடையவிரும்பி வலஞ்செய்தவர்களுக்குககோடிபங்குஅதிகமாகப் பலன்கிடைக்கும் தளர்ச்சியடையாமல் தினந்தோறுமவலஞ்செய்தவர்களுக்குஉண்டாகும்பலனையார் அறிந்துசொல்லுவதற்குவல்லவர்-எ-று. (௨௪)

காரிகையவரையற்றைக் கனவிலும்புணர்ந்திடாம
ணீரினின்மூழ்கிந்தூய துடுத்தவெண்ணீறுசாத்தி
யாரிடைமுறையேதான மளித்துநாமவைகொள்ளாமப்
பாரிடைநடந்துசூழ்ந்த தேவரைப்பணிந்துபோற்றி.

(இ-ள்) அப்படிப்பட்ட அதிகபலனைத் தாப்படாயின் அருணாசலத்தைவலஞ்செய்யும்விதமெப்படியெனில்பிரதக்ஷணஞ்செய்யும் அன்றைக்குப்பெண்களைச்சொற்பனத்திலும்நினையாமல்ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகியவஸ்திரத்தையுடுத்திக்கொண்டு விபூதிதரித்து அந்தவிடத்திலே தானங்கிரமமாகக்கொடுத்து தாம் ஒருவரிடத்தில்தானம்வாங்காமல் பூமியிலேகாலினாலேநடந்து கிரியைச்சுற்றியிருக்கிற தேவர்களைப்பணிந்துவணங்கி-எ-று. (௨௫)

கஞ்சுகம்போர்வைநீத்துக் கவிகையுஞ்செருப்புநீத்தே
யஞ்சுதல்வெகுளிசோக மக்கணத்தகற்றிவாசி
குஞ்சரமுதலாயுள்ள வாகனங்குறுகிடாமல்
விஞ்சியவடைக்காயுண்டி வழியிடைவெறுப்பதாக்கி.

(இ-ள்) அங்கத்தில் தரிக்குஞ்சட்டையும் போர்வையையும் நீக்கிக்குடைபிடித்துக்கொள்ளாமல் கால்களுக்குச் செருப்புப்போட்டுக்கொள்ளாமல் பயமும் கோபமும் சோபமும் நீக்கிக் குதிரை யானை முதலாகிய வாகனங்களிலேறாமல் தாம்பூலம் தரிக்காமல் போசனத்தையும வெறுத்து-எ-று. (௨௬)

செங்கைவீசாமற்சோரா துவகையாற்சிரத்திற்கூப்பி
மங்கையர்பதிதர்நீச ருருப்பிலாவழிவுநோக்கா
தங்குறுமடியினோசை செவிப்புமாதரசர்மாதர்
திங்களையிரண்டுசென்று நடந்திடுஞ்செயல்போற்சென்று.

(இ-ள்) கைகளை வீசிக்கொண்டு போகாமல் சோர்வில்லாமல்சந்தோஷத்தொடு சிரசிற்கைகளைவைத்து கூப்பிக்கொண்டு,ஸ்திரீகளையும்பாவிகளையும நீசரையும் அவயவ ஈனரையும் பாராமல்நடக்கிறபோது அடியினுடையசத்தம் காதிற்கேட்காமல் மெள்ள இராஜஸ்திரீகள பத்துமாதத்துக் கருப்பத்தோடு நடக்கிறதுபோலநடந்து-எ-று. (௨௭)

இருவினையகற்றுமந்த மலையையெண் டிசையுமவீழ்ந்து
பரவியங்கதனைச்சூழ்ந்த கடவுளர்பணிந்துபோற்றி
யருவமாய்வலமாஞ்சித்த ரமரரைமனத்தாற்போற்று
யுருகியங்கவற்மேற்கையாற் படுமெனவொடுங்கிச்சென்று

(இ-ள்) நலவினை தீவினை இரண்டையுமநீக்கும் அக்கிரியை எட்டுத்திக்கும்வணங்கி அந்தத்திக்கிலிருக்கின்ற சுவாமிகளையும்வணங்கிஉருவந்தெரியாமல்வலஞ்செய்துகொண்டு வருகிறசித்தர்களையும்தேவர்களையும் மனதினால் வந்தனஞ்செய்து அவர்கள்மேல்தங்கள் கைகால்கள் படுமென்றுபயந்து வழியினின்றும் ஒதுங்கிச்சென்று-எ-று. (௨௮)

வானமார்மலையைப்பொன்னிற் படிகமென்மணியாயெண்ணி
மோனமாய்நடக்கவல்ல திறைபுகழ்மொழியைக்கேட்க
வானவிச்செயலினாலே வலஞ்செய்தாலபத்தினண்ணி
யேனமுன்னறியான்றளைப் பணிந்துதன்னிருக்கையெய்தி.

(இ-ள்) ஆகாயமட்டுமௌாவிய அந்தமலையைப் பொன்போலவும் படிகம்போலவும், இரத்தினம்போலவும் நினைந்து மவுனமாய்நடக்கவேண்டியது அல்லது சுவாமியின் ஸ்துதிகளைக்கேட்கவேண்டியது இப்படிப்

பட்ட தன்மையாகவலம்வந்து கோயிலுட்சென்று இலிங்கமூர்த்தியாகிய பன்னியறியாத சுவாமியினைவைபாதங்களை வணங்கித் தங்களிருக்குமிடத்துக்குவந்தனர்-எ-று. (உகூ)

குன்றெனுக்குணத்தவர்குழ விருந்துநின் கனிபரல்கொள்க
வன்றியேபுலவுசேர்த்த வடிசிலேயுண்கவேதி
நின்றவைகதலத்தோர் செய்யு நிலைமையீதத்துராத்திம்
சென்றவர்வருத்தமாயெவ் வகைவலஞ்செயினுஞ்சீராம்.

(இ-ள்) மலைபோலுயர்ந்தகுணத்தையுடையவராகிய சிவபத்தர்கள்குழுமிருந்து மதுரமாகியபழங்களும் பாலுஞ்சாப்பிடக்கடவர் அப்படியில்லாவிட்டால் மாமிசபதார்த்த மில்லாமல் அன்னத்தைப்புசிக்கக்கடவர் இப்படிப்பட்ட செய்கைகளே நீதிபொருந்திய அந்த ஸ்தலத்திலிருக்கிறவர்கள் செய்யவேண்டியது அதிகதூரத்திலிருந்தும வந்தவர்கள் தங்களுடையவருத்தத்தினாலேஎவ்விதமாகவலஞ்செய்தாலும்நன்மையாகும

தணிவிலாதஞானச் சனகவிச்சயிலஞ்சூழ
வெண்டிசைபுரப்போர்தமபே ரின்றசிவவுருவங்கண்டார்
வண்டிசைபெருகுமோதி மலைமகண்மலையின்கீழ்பால
கண்டனள்பவளவெறபிற கயிலைவெற்பிறைவன்காட்சி

(இ-ள்) கெடுதலில்லாத ஞானத்தையுடைய சனகரிஷியே இம்மலையினெட்டுதிக்கிலும் திக்குப்பாலகர் எட்டுபேரும தங்களபேரினாலே இலிங்கங்களை ஸ்தாபித்துப் பூசித்திருக்கிறார்கள் வண்டுகளினது ஒலிபொருந்திய கூந்தலையுடைய பார்வதியானவள் கிரியின் கிழக்குத்திக்கில் பவளமலைபோல் ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப்பூசித்தாள்-எ-று.

மணிவரைபரியிற்சூழ்ந்து வச்சிராங்கதனப்போது
புணர்பவந்தவிர்க்கத்தென்பாய புழுகணியிறையைக்கண்டான்
தணிவிலாவினைகணீக்கத் தமியனேன்மலையின்மேற்பால்
அணியண்ணாமலையானென்னு மருவுருவிறையைக்கண்டேன்

(இ-ள்) அருணாசலத்தினிடத்தில் குதிரையி லேறிக்கொண்டு வந்த வச்சிராங்கதபாண்டியன் அக்காலத்தில் தன்னையடைந்த பாவத்தைத்தீர்க்கத் தென்திக்கில புழுகணியிறைவரென்று ஒருலிங்கத்தைஸ்தாபித்துப பூசித்தான் தணியாதபாவங்களை நீக்கிக்கொள்ள நானும அந்தமலையின் மேற்குத்திக்கில் அணியண்ணாமலையானென்கிற பேரிட்டு ஒருலிங்கத்தைஸ்தாபித்துப் பூசைசெய்தேன்-எ-று. (கூஉ)

வாலவெங்கதிர்மேற்சோண வளாகடந்தொருநாட்பாய்ந்து
சாலுமத்துயரந்தீரத் தனதுபேரிறையைக்கண்டா
னலயமுழுதும்தேவர் நாகர்நாட்டுறைவோர்சித்தர்
சீலமாமுனிவர்கண்ட சிவனுருத்தெரிக்கொணாதே

(இ-ள்) சூரியனானவன் அருணாசலத்தைத் தாண்டிப்போனதினால் வந்தபாவந்தீரத் தன்பேரிட்டு ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசைசெய்தான் அதுவல்லாமல் அந்த மலையிலிருக்கிற கோயில்கள் முழுதும் தேவர்கள் நாகலோகத்தார்கள் முனிவர்கள் இவர்களாலே ஸ்தாபித்துப் பூசையண்ணப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது.

ஈசனார்வடிவமான லிங்கமவ்வெவலைசூழ
யோசனைமூன்றுஞ்சேர நெருங்கும்வானுடுக்கள்போலப்
பேசுவதெவனோவந்தத் தலத்தினிற்பெருமைவேலன்
நேசுறுங்கவுரியானை முகத்தனுந் தெரிக்கொணாதே.

(இ-ள்) பரமசிவரூபமான அனேக லிங்கங்கள் அவ்வெல்லையைச்சுற்றி மூன்றுகாதவழிமட்டும் ஆகாயத்து நக்ஷத்திரங்களபோல நெருங்கியிருக்கும் அப்படியிருக்கிறபோது அந்தஸ்தலத்தினது பெருமையை சிவசுப்பிரமணியர் பார்வதி விநாயகர் இவர்களாலேயே சொல்லக்கூடாமலிருக்கிறபோது என்னால் சொல்லப்படுமோ-எ-று. (௩௪)

தாதவிழ்மலரோனிவ்வா றுரைத்தலுஞ்சனகன்போற்றி
வேதனேபிறவிதீர்க்கும் விமலனேவிமலனான
வாதியைப்பழித்தோனசெம்பொன் கவர்ந்தபேரடையுந்தீங்கும்
பாதகந்தவிருமாறும் பகரெனப்பதுமன்கூறும.

(இ-ள்) தாதுவிரிந்த தாமரைமலரிலிருக்கின்ற பிரமமா இந்தப்பிகாரஞ்சொன்னதும், ஜனகரிஷியானவர்வணங்கி வேதமுழுதுங்கற்றுணர்ந்தவரே, பிறப்பைநீக்குமபரிசுத்தரே மலரகிதரான சிவனைப்பழித்தவர்களுக்கு வந்தபாவமும் அவர்தனத்தை அபகரித்தவர்களையும் பாவமும அவைகள்நீங்கும் வகையும் சொல்லுமென்றுகேட்கப் பிரமாசொல்லுகிறார்-எ-று. (௩௫)

ஒன்பதாவது திருமலை வலம்புரிச்சருக்க முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் ௩௰௪

உ

பத்தாவது

# ஆதித்தச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

அற்றமற்றமுனிவாசூழ மருணபூதசத்தடன்
மற்றவெறபுமொக்குயென் றிகழுந்துலாத்தமனிதர்வாய்

புற்றெழுந்து புகையெழுந்து புழுநெளிந்துபுலவுநீர்
சுற்றெழுந்துபெருகுமண்டு சோரிமாரிசொரியுமே

(இ-ள்) குற்றம்நீங்கிய முனிவர்கள் சூழ்ந்துவருகின்ற அருணாசலமென்னு மலையோடு மற்ற மலைகளையு மொக்குமென்று நிந்தை சொன்ன மனிதருடைய வாயிலே புற்றுஉண்டாகிப் புகைபுகைந்து புழுக்களநெளிந்து புலால்நாற்றம் நாறுகின்ற நீர்சுற்றிலெழுந்து மிகவும இரத்தமாரி சொரியும்-எ-று (க)

அந்தமாந்தர் தம்மையேற்றி யந்தகன்றனேவலாய்
வந்ததூதர்செக்கிலிட் டரைத்தரைத்தெடுப்பர்வாய்
வெந்தவாளிநூறுறுப்ப ரெந்தைசோணவெற்பையே
நிந்தைசெய்வையென்றடித்து நெய்யில்வேகவைப்பரே.

(இ-ள்) அருணாசலத்தை நிந்தித்த அந்தமனிதர்களைப் பின்புயமனுடைய ஏவலாய வந்த தூதர்கள செக்கில் அநேகதரமபோட்டு அரைத்து எடுப்பார்கள் அவர்களுடைய வாய்களை நெருப்பிற் போட்டுக் காய்ச்சியகத்தியினாலறுப்பார்களஎங்களாண்டவன்மலையையோநிந்தைசெய்வாயென்று அடித்துநெய்யிலேவேகப்போடுவார்கள்.-எ-று.

பஞ்செழுத்துவைத்தரக் குருக்கிவாய்பரப்பியே
நஞ்சினைப்புகட்டிவெய்ய நரகிலேயிடத்துவார்
அஞ்சியந்தநரகுதானுமருவருத்தலேறிடும்
நெஞ்சகத்திலெண்ணினார் தமக்குமீதுநிகழுமே.

(இ-ள்) பின்னும்அந்தஅருணாசலத்தை நிந்தித்தவர்களையமதூதர்கள்பஞ்சாகத்துவைத்து அரக்கையுருக்கி வாயிலேவிட்டு நஞ்சைக்குடிப்பித்துத்தீமையாகியநரகிலே தள்ளுவார்கள் அந்நரகமோவென்றால் பயப்பட்டுஇவர்களைத்தாங்குகிறதற்குசகிக்காமல மிகவும்வருந்தும இப்படிப்பட்டதுன்பம்மனதிலேஇந்தமலையைக் குறைவாக வெண்ணினவர்களுக்குமஉண்டாம்-எ-று. (கூ)

குருக்கடைந்தைதாயராவி கொன்றதீயர்முதலினோ
ரிருக்கும்வெய்யநரகின்மீதி லிட்டபோதிலவர்களும
பெருக்கநொந்துபாவியென்று பேசுவார்கடம்முடன்
சரிக்கொணாதுதள்ளுமென்று தங்கள்கண்புதைப்பரே.

(இ-ள்) ஆசாரிகளையும் தாய்தகப்பன்மாரையும் பிராணன்வாங்கிய தீயபாவிகள்முதலானவர்கள்வாசஞ்செய்யுங்கொடிதாகியநரகத்திலே இந்த அருணாசலத்தைநிந்தித்தவர்களைப் போட்டபோதுஇவர்களைமுன்னமேயிருக்கும் பாவிகள்மிகவும்வருத்தப்பட்டு சுவாமியைநிதநித்தபடியினாலேநமமிலுமபாவிகளென்று சொல்லிநமமோடேயிவாகளசரியாயிரு

க்கக்கூடாது தள்ளிவிடுமென்று தங்கள்கண்களைப் பொத்திக் கொள்ளு வார்கள்-எ-று. (௪)

என்றுரைத்துகானும்மையமேழுமுண்டமாலுமா
யன்றுமின்றுமளவிடாதவருணபூதரத்தையோர்
குன்றமென்றிகழ்ந்துசென்று குன்றிமெய்குறைந்துமுன்
கன்றினுனொருதக்னென்று கதைவிளம்பலாயினுன்.

(இ-ள்) பிர்மமாவானவர் இப்படியென்றுசனகரிஷிக்குச்சொல்லிப்பி ன்னுஞ்சொல்லுவார் நானும் ஏழுலகத்தையுஞ் சாப்பிட்ட விஷ்ணுவுஞ் சோதது அன்றுமுதலின்றையவரைக்கு மளவிடப்படாத மகிமையுள்ள அருணுசலத்தைஒருவன்ஒருமலையென்றிகழ்ச்சிசெய்துபோய்க் குன்று தலடைந்து தேகங்குறைந்து துக்கப்பட்டான் முன்காலத்திலேயென்று அக்கதையைசசொல்லத்தொடங்கினுர்-எ-று.

உலவுகின்றசோதியாவு முளளின்வைத்திவ்வுலகிலோர்
மலையதாகிநின்றதெய்வமலையைமறறமலைகளபோல
அலகுபெற்றவிரவியெண்ணி யாழியொன்றுவாசியே
ழிடந்தேரம்மலையினுச்சி யெல்லையாய்நடத்தினுன்

(இ-ள) நான்குதிக்கிலுஞ்சென்று விளங்குகின்றபிரகாசங்களையெல் லாம தனதுளளத்திலவைத்துக்கொண்டு இத்தப்பூலோகத்தில் ஒப்பற் றமலையுருவங்கொண்ட தெயவீகமாகிய அருணுசலத்தை மறறமலைகள போல்நினைத்த ஒருசக்கரமும ஏழுகுதிரையும்பூண்ட தேரை அந்தஅரு ணுசலமலையினுச்சிவழியின் எல்லையாகநடததினுன்சூரியன்-எ-று. (௬)

முகுந்தர்தேடுமந்தவெறபின்முடியின்மேவுமுன்னமே
மிகுந்திசோதியுள்ளினும வெடித்தெழுந்துவெம்மையாய்
புகைந்துசொல்லவிரகறவர்புரமெனப்பொரிந்ததே
யுகைத்துபச்சைவாசியோ வுலர்ந்தவாசியானதே,

(இ-ள்) சூரியன் விஷ்ணுவால்தேடப்படஅந்தமலையினது உச்சியி லே போகிறதற்குமுன்னே மிகுந்தபிரகாசமான மலைவெடித்து அந்தவு ள்ளிடத்தில்நினறுஎழுந்துவெப்பங்கொண்டுபுகைந்துவாத் தேரானது திரிபுரமெரித்த பரவசிவனது நகையாகிய நெருப்பிலேபொரிந்ததுபோ லப் பொரிந்துபோய்விட்டது நடத்தப்பட்டகுதிரைகளோ சீவனில்லாத குதிரைகளானதுகள்-எ-று. (எ)

அறுசீரடி-யாசிரிய-விருத்தம்.

குதிரையுங்கரிகளாகிக் கொடியதேரலகைத்தேராய்க்
கதிரையுந்தனதுபாகன் காலெனவிழுந்தடானு
மதியழிந்திருந்தானந்த மலைவலஞ்செய்தானைக்
கதிபெறசசெல்வேன்கண்டு கதிரவறகிவையுரைத்தேன்.

(இ-ள்) அந்தமலையினிடத்திலின்னெழுந்தவாரணமயப்பத்தினாலே குதிரைகளேழுங் கரிகளாகப்போய்க் கொடியையுடைய தோ காணல் போலந்தேரன்றியு முருகில்லாத தாழ்த்தன்னுடைய பாகனுமவன் காலையிழந்ததுபோலக் கிரணங்களெல்லாவற்றையுந் தானிழந்து சூரியனானதிகெட்டிருந்தான் அந்தமலையைவலஞ்செய்துகொண்டு மேலாகியகதியை அடையும்படியாகப்போகாநின்றநாள்பார்த்து அந்தச்சூரியனுக்கு இந்தவார்த்தைகளைச்சொன்னேன்-எ-று. (அ)

ஐயனைமலையென்றெண்ணி யகந்தையாலிகழ்ந்தவிழ்ந்த
கையனேயொருகாலத்துங் கதியிலையுனக்கென்றாலுஞ்
செய்யுமோர்தொழிலினாலே நீக்காலந்தெளிவுளார்க்கு
மெய்யனையருணையானை வலஞ்செயென்றுரைத்துமீண்டேன்.

(இ-ள்) அருணாசலேசுரரை ஒருமலையென்றெண்ணித்து அகங்காரத்தினால் இகழ்ந்து இழ்ந்திழிந்து வி-கின்ற ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனே உனக்குளதவகையிலும் ஒருகாலத்துங் கதிகிடைக்காது அப்படியிருக்கினும் ஒருதொழிலினாலே கிடைக்கலாம் அது யாதென்றால் தெளிவுள்ளவர்களுக்கு மெய்மையாகிய அருணாசலத்தை வலஞ்செய்து கொள்வாயென்று சொல்லித் திரும்பினேனென்றார் பிரமா-எ-று. (௯)

போதித்தபடியேசென்று பொன்மலைவலமாய்முன்னஞ்
சாதித்தவருக்கனசோணாசலத்தினைவலமாய்வந்தான
வாதிக்குமழுவினானு மழவிடைமீதிற்கோடி
யாதித்தரெனவேதோன்றி யாதித்தற்கருளிப்போனான்.

(இ-ள்) பிரமாவானவர் அனுக்கிரகஞ் செய்தபடியே மகாமேருகிரியை முன்னேவலமாகவருகின்ற சூரியன் அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டேந்தான் அந்தச்சூரியனுக்கெதிரே வாதித்துச்சத்துருக்களைக் கொல்லுகின்ற மழுவையேந்திய பரமசிவன் இளமையாகிய ரிஷபத்திலே கோடிசூரியர்போலத்தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்கு எழுந்தருளினார்-எ-று. (௰)


பன்னிருமாதந்தோறும் பரிதிமுற்பயத்தினாலே
மன்னரியின்வழிவதான மலையினைவலமாய்ச்செல்வான்
சென்னியினெல்லைசெல்லா னிடப்புறஞ்செல்வானன்றேர்
அங்கிலைவரும்போதேதனி யலாசொரிந்தனுமென்றான.

(இ-ள்) சித்திரைமுதல்பங்குனியீறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டுமாதமுமசூரியன் முன்னேதனக்குண்டானபயத்தினாலே அக்கினிசொ

ரூபமாகியமலைபுவலஞ்செய்துகொண்டுபோவான அம்மலையினுடைய உச்சியின்மேலும்போகான் இடப்புறமாகவும்போகான் அந்தமலைக்குச் சமீபத்தில்வரும்போது ஸ்தோத்திரஞ் செய்துபுஷ்பமாரியொழிந்து செலவானென்றுசொன்னார்பிர்ம்மா-எ-று.

பத்தாவது-ஆதித்தச்-சருக்கம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம-ருசு௫



உ

பதினோராவது.

# பிரதத்தச்சருக்கம்.

எழுசீக்கழிநெடில்விருத்தம்.

அருணைவாழிறைவன்றிரவியமணுமட்டாயினுங்கரந்தபேருடனே மரணமாயமடைடழலிலேகுளிப்பர் வசிரவுலக்கையான்மறிவ, ரிரு ணிறைநரகமிருபத்தெண்கோடியிடத்திலுமடையிலேயிருப்பார,தரணி யிற்புழுவாயபிறபபர்களளவுதனக்கியைக்தலருமத்தகைபர்.

(இ-ள்) அருணசலேசுரரது திரவியத்தில் அணுவளவாவது திருடி னவர்கள உடனேமரணமடைந்து யமலோகத்திறகுப் போய்அக்கினிக் குழியிலேவிழுந்து அவஸ்தைதப்படுவார்கள் வசிரத்திறைசெய்த உல க்கையால் அடிபடுவாாகள் இருள்நிறைந்த இருபத்தெட்டுகோடிநரகங் களிலும் அடைவாகவிருந்து கிடப்பார்கள் மறுபடியும பூமியிலேவந்து புழுவாய்ப்பிறப்பார்கள் அந்தத்திருட்டுக்குடன்பட்டிருந்தவர்களும் அ ப்படிப்பட்டதுன்பத்தை அடைவார்கள்-எ-று. (௧)

ஓங்கியதரையுளிசைத்தபொன்னெதிரே யுற்றபேருடலையு மொறுக்குந், தேங்கியகருணையருணைநாயகர்பொற்செய்கையைப்படியினிற்கரந்து,வாங்கியபெயரைக்கிளையுடன்சிதைக்குமலையினுங்கடலினுமொளித்து, நீங்கியபொழுதுந்தொடர்ந்திடும் விடுமோநிழலெனத்தொடருமெந்நிலத்தும்,

(இ-ள்) திருடிபூமியினுள்ளொளித்துவைக்கப்பட்டபொன்னுனது அந்தவிடத்தின்மேல் தந்தவருடையதேகத்தையும் கண்டிக்கும அப்படிசெய்வது மிகுந்தகிருபையை யுடைய அருணாசலேசுரருடையதிரவியத்தினது செய்தியாம் அந்தப்பூமியில்லொளித்துவைத்துஎடுத்துக்கொண்டவனையோவென்றால் அவர்களுறவோடுகெடுக்கும் மலையிலும கடலிலுமொளித்துக்கொண்டபொழுதுந் தொடர்ந்தவருத்தும் விடமாட்டாது எவ்விடத்திற்போனாலும் நிழலைப்போலதொடரும-எ-று, (௨)

கடிக்கலாஞ் சிலையைவிழுங்கலாநெருப்பைக் கடுவிடங்குழைத்திழைத்தெடுத்துக், குடிக்கலாமிரும்பை யருந்தலாங்கடுமபாறகொள்ளலாமருந்தினற்குணத்தால். முடிக்கலாம்பகையை யருணைநாயகர்பொன்விழுங்கினல்மிடற்றிலேபிடிக்கும், உடற்குளேகனலும்புகையுமவ்வளவோ வுயிரையுமுளத்தையுமொறுக்கும்.

(இ-ள்) பின்னுஞ்சொல்லுவார் பிர்மா கல்லைக்கடிக்கலாம்நெருப்பையெடுத்துவிழுங்கிவிடலாம விஷத்தோடேகொல்லும்படியான வஸ்துக்களைச்சேர்த்துக் குழைத்தெடுத்துச்சாப்பிடலாம் இரும்பைப் புசிக்கலாம் கள்ளிப்பால்முதலியவற்றையுங் குடிக்கலாம் இவைகள்உபத்திரவஞ்செய்யவொட்டாமல்நல்லமருந்துகளாலே நிவர்த்திபண்ணிக்கொள்ளலாம் அருணாசலேசுரர் திரவியத்தைச்சாப்பிட்டவுடனேதொண்டையைப்பிடித்துக்கொள்ளும்தேகத்துக்குள்ளேநெருப்பாகக்கனற்றும்புகையுண்டாக்குமவ்வளவுதான் செய்யுமோவென்றால அவர்களுயிரையுங்கொன்று உள்ளத்தையுங்கெடுக்கும்-எ-று. (௩)

முக்கணன்பொருளைக்கவர்ந்தபேரிருக்க முயன்றபேர்நினைத்தபேர்முதலா, யக்கணத்தழிவரவர்களுமிருக்கவடியவர்பொருட்கவர்ந்தலைக்கத்தக்கதுநினைத்தார்கெடுவரொன்றுரைத்துச் சத்தியம்பலபலசாற்றிச்,செக்கருங்கருகவொளிவிடுமணிப்பூண்திசைமுகனொருகதைசெப்பும்.

(இ-ள்) மூன்று கண்களை யுடைய அருணாசலேசுரரது திரவியத்தைத் திருடின வர்கள் படுகின்றதுன்ப மிப்படிப்பட்டது அது இருக்கட்டும் அந்தப்பொருளைத் திருடுகிற தற்கு முயற்சி செய்தவர்கள் திருடநினைத்தவர்கள் இவர்க ளந்தக் கணத்திலே மழிவார்கள்

அவர்களுக்கிருக்கட்டும் சிவபத்தர்களுடையபொருளைத் திருடியவர்களை
த் துன்பப்படுத்த நினைத்தபேர்களும் கெடுவார்களென்று பலபலசத்தி
யத்தோடேசொல்லிச் செல்வானமுன் கருகும்படி ஒளிவிடுகின்ற இட
த்திருபாணங்களைத்தரித்த பிர்மாவானவர் ஒருகதைசொல்லத்தொடங்
கினார்-எ-று. (௪)

முன்னையேயொருநாள் வடதிசைக்கிறைவன் முழுமணிக்கங்கைநீர்த்
துறைவன், இக்கிலத்திழிந்தவிந்திரனனையானாண்மையில் முருகவேணி
கர்வான், மன்னவர்நிறைந்த மகுடகோடிகளின் வயிரநாயகங்களாற்றே
ய்ந்த,பொன்னவிர்கழலான் றருமமுங்கழலான்புகழ்பெயர் பிரதத்தனென்
பான்.

(இ-ள்) பிர்மாசொல்லுகிறார் முன்காலத்திலே ஒருநாள் வடதேசத்
துக்கு இராஜாவாயிருக்கிறவன் விலையுயர்ந்தமுத்துக்களுக்கிருப்பிடமா
கியகங்காநதித்துறையையுடையவன் தெய்வலோகத்தினின்று பூமியிலி
றங்கிய தேவேந்திரன்போன்றவன் ஆண்மைக்குணத்தில் சிவசுப்பிரம
ணியருக்குச் சமானமானவன் இராஜாக்கள்பணியும்போது அவர்களா
லே நிரைநிரையாகத்தாழ்த்தப்பட்ட கிரீடகோடிகளில்இழைக்கப்பட்ட
வீரகண்டையைத்தரித்தவன் தருமமென்பதை இடைவிடாதுசெய்கிற
வன் கீர்த்திபொருந்தியபிரதத்தனென்னும் பெயரையுடையவன்-எ-று.

காலனோர்விழியார்முகமெனவிளங்கிக் களங்குடைத் தொழுக்கியமதி
போல், நீலமாமணிக்காம்பிணைப்பத்தவெண்கவிகைநெடுநிலப்பரப்பெலாநி
ழற்றச், சாலவேபணிகாவலரசர்களிவன்பொற்சரணமே படிந்துயிர்பெ
றுமென், றோலமேயழைக்குந்தருமதேவதைபோலிரண்டு சாமரைகளா
ர்த்திடவே.

(இ-ள்) யமன்போலக்கொடுமையைச் செய்கின்றகண்களை யுடைய
பெண்களதுமுகம்போல விளங்கிக்களங்கத்தையுடைத்து ஒழுகவிட்ட
சந்திரன்போல நீலரத்தினமிழைத்திருக்கிற காம்பையுடைய வெள்ளை
க்குடையானது நீண்டசக்கிரிகையைப் பூமியினபரப்பெல்லாம் நிழற்
றவும் மிகுந்தமரியாதையோடு பணியாத சத்துரு ராஜாக்களைப்பார்த்
து இந்திரனுடைய அழகியபாதங்களை வணங்கி உங்களுயிரை இறக்
காமல் பெற்றுக்கொள்ளுங்களென்று பொருந்த அழைக்குந்தருமதேவ
தையைப்போல இரண்டுசாமரங்கள்வீசவும்-எ-று, (௫)

வருணமண்டலத்திற் புரவிபோந்திடத்தமரகதக்குரகதம்வயங்க, அ
ருணமண்டலத்தை யனவிடுங்கொடித்தே ரடவிகள்புடவியையடைப்ப
க், கிரணசிந்துரத்துப்புகர்முகங்குப்பிற்கிம்புரிக்கிரிகைகிளரத், தரணி
யாதரிக்க மந்திரிகணத்தோ டெழுந்தனன்றண்டயாத்திரையே,

(இ-ள்) வருணமண்டலத்தில் விளங்கும் குதிரைகள்போல் உயர்வாகிய மரகதநிறத்தையுடைய குதிரைகள் பிரகாசிக்கவும் சூரிய மண்டலத்தையளாவிய கொடிகள்கட்டிய தேர்க்காடுகள் பூமியைப்புடைக்கவும் இரணம்பொருந்திய சிந்தூரந்தீட்டிய புள்ளிகளையுடைய முகத்தையும் பூண்கட்டிய தந்தங்களையுடைய யானைகள் திசைகள்தோறும் பிரகாசிக்கவும் சத்துருமன்னர் பயப்பட மந்திரி கூட்டத்தோடுஞ் சேனைகளோடும் பிரயாணப்பட்டான் யாத்திரையாகப் பிரதத்தராஜன்-எ-று. (எ)

அஞ்சர்புற்றேற யவனர்வெற்படைய வலத்தியர்வில்லிருண்கௌவச்
சஞ்சலித்தொடக்காய மற்றமண்டலீகர் தம்மிறைதாங்களேசுமக்க
சிங்கவேறெனவே சோழநாடணைவான் றிருநதிகடந்துதென்னருணைக்
கங்கைவார்சடையான்கோயிலிற்புகுந்தான் கங்கையுங்காசியும்புரப்பான்

(இ-ள்) இந்தப்பிரதத்தராசன்பிரயாணப்பட்டபோது அந்தந்தேசத்தரசர் பயந்து புற்றிலேறிக்கொள்ளவும் யவனதேசத்து இராசர்கள் மலையிலொளித்துக்கொள்ளவும் அவந்திதேசத்தரசர் வில்லிருக்கிற காணியைக்கௌவிக்கொள்ளவும் மற்றதேசத்துஇராசக்கள் சஞ்சலிபோலத் தொடர்ந்து நின்று தாங்கள் கட்டவேண்டிய கப்பணங்களைத்தாங்களே சுமந்துவரவும் ஆண்சிங்கம்போலச் சோழநாட்டுக்கு போகும்படியாக புறப்பட்டுத் திருநதியைக்காண்டி அழகிய அருணாசலஸ்தலத்துக்குவந்து கங்கையைத்தரித்த சடையையுடைய பரமசிவனது கோயிலிற்புகுந்தான் கங்காநதியையும் காசிதேசத்தையும் ஆளுகிற பிரதத்தராசன்.

அரும்பவிழ்மலர்கொண்டருச்சனைபுரியவருணைநாயகர்திருக்கோயில்
விரும்பியுட்புகுந்த பணியுமவ்விடத்தில்விடத்தினுங் கொடியகூர்விழியாள், இரும்பையு முருக்கையு மிசையினொளிருத்தியிலங்கிழையாருடனிறையால், கரும்பெனுமொழியார்பாடுதல்கேட்டான் கண்டனன்வளைத்தவேள்கரும்பை.

(இ-ள்) காசிதேசத்து ராஜாவாகிய பிரதத்தன் அரும்புகள் மலர்ந்த புஷ்பங்களைக்கொண்டு அருச்சனைபண்ணுகிறதற்காக அருணாசலேசுரர் வீற்றிருக்கும் திருக்கோயிலுள் பத்தியோடுபோய் வந்தனஞ்செய்யும்போது அவ்விடத்தில் விஷத்திலுங்கொடுமைசெய்கின்ற கூர்மையாகிய கண்களையுடையவள் இரும்புகூட உருகும்படிச்செய்யும் சங்கீதவித்தையையுடையவளாகி ஒருதாசிப்பெண்பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத்தரித்த சிலபெண்களோடு நின்று சுவைநிறைந்தபாலும் கரும்பின்ரசம்போன்ற மொழியினாலே பாடுகிறதைக்கேட்டான் அக்ஷணத்தில்தானேமன்மதன் வளைத்தகரும்புவில்லையுங்கண்டான் காமவிகாரங்கொண்டு பிரதத்தராஜன்-எ-று. (௮)

அன்னமோகினியோ வமிர்தமோ திருவே வமிர்தமோவசுரருக்களித்த
வன்னமோகினியோயிரதியோபிரமன்மனத்திலுல்வகுத்தமேனகையோ
என்னமோகமதாய்தனதுநாட்டினிற்கொண்டேகுவனினைத்தனனதற்கு
முன்னமேகுரங்குமுகமதாயிருந்தான் மூவுலாயினதேவர்மகிழும்.

(இ-ள்) காசிதேசத்துப் பிரதத்தராஜனானவன் அந்தத்தாசிப்பெண்ணைப்பார்த்துச்சொல்லுவான் இவள் அன்னமோ கினியோ தேவாமிர்தமோ இலட்சுமியோ அசுரரைக்கொன்று அமிர்ததத்தை முன்காலத்தில் தேவருக்குக்கொடுத்த அழகாகிய மோகினியோ இரதிதேவியோ பிரமதேவன்மனத்தினால் சிருஷ்டித்தமேனகையோ என்றுநினைந்து மோகத்தோடே தன்னுடையதேசத்துக்கு அந்தப்பெண்ணைக் கொண்டுபோகிறதற்கு நினைந்தான் அந்நினைப்பு உண்டாகுமுன்னமேதானே குரங்குமுகத்தையுடையவனாயிருந்தான் அதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள் எ-று. (௰)

மந்திரிக்கிழவராசனை வினவி மன்னவனினைத்தவராதனால்
வந்தவிந்துயர்ந்தவிரைநிடமலைமேனமருந்தினைப்பணியெனவவனுஞ்
சிந்துரகதுலவெங்கனவாமபரியுஞ்செழுமணிசிவிகையுந்தேருமு
சந்தனமணியுந்தனதிறைர்பலரும் தமனியக்கோயின்முன்விடுத்தான்,

(இ-ள்) மந்திரிமார்கள பிரதத்தராசனைப் பார்த்து குரங்குமுகம் வந்ததற்கு காரணங் கேட்டறிந்து கொண்டு அரசனே நிமையாகிய உமது நினைப்பினால் அடைந்த இத்துன்பம் நீங்கும்படி மலைமேல்மருந்தாகிய அருணாசலேசுரரைவணங்கென்றுசொல்ல அந்தஇராஜனும்மலையையொத்தயானைகளும்வேகமாய்தாவுகின்றகுதிரைகளையும் நல்இரத்தினங்களாவிழைக்கப்பட்டிருக்கிற குதிரைகளையும் தேவர்களையும சந்தனக்குழம்பைப்பூசுகின்றஸ்தனங்களையுடையபெண்களையும் பொற்பிரகாசமபொருந்திய அந்தக்கோயிலுக்கு முன் காணிக்கையாகக் கொடுத்துவிட்டான் எ-று. (௰௧)

பன்னருமக்கபூசனைபுரிந்தான்பரமனுமவற்கருள்புரிந்தான், கின்னரமொழியாள் விருப்பினுலடைந்த கிலேசவானரமுகமொழித்தான், நன்னரமுகம்பெற்றிறையுநாடணைத்தானுதலாலான்பொருட்கலர, உன்னியபாவம்பதின்மடங்கரும்பொன்னுதவினுறநவிருமென்றுரைத்தான்.

(இ-ள்) பிரததராஜன்சுவாமிக்குச்சொல்லுதற்கரியஅகந்தமருமையான பூசைகள்செய்தான் அப்பொழுதுசுவாமியும் அந்தஇராஜனுக்குக் கிருபைசெய்தார் வீணையினிசைபோலும் வார்த்தையையுடைய பெண்மேற்கொண்ட ஆசையினாலடைந்த துன்பம்பொருந்தியகுரங்கு முகத்தையொழித்தான் நல்லமானிடமுகத்தையடைந்து அந்தஇராஜன தன்


னுடைய நாட்டிற்குப்போய்ச்சேர்ந்தான் ஆனபடியினாலே அருணாசலே சருடைய பொருளைத்திருடினைத்தனாலுண்டாகிய பாவம் அப்பொரு ளுக்கும் பதின்மடங்குதிரவியங்கொடுத்ததால்நீங்கிற்றென்று சொன்னர் பிர் ம்மா. அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம். (௱௨)

மூர்த்திவளையருணகிரிவளமிதுதானெனத்திருவாய்மலர்ந்தானந்தப போதனையங்கடிபணிந்துன்போதனையானமகிழ்ந்தனமிப்புவியின்மீதே, கோதமுடனறிந்துசெய்தபவந்தவிருங்கதையினையுங்கூறுகென்றான்,மூ தறிவாயினனுமூகத்தினுமாயிரமுகமாய்மொழியலுற்றான்.

(இ-ள்) மகத்தாகிய தவத்தையுடையசனகரிஷியே அருணாசலத்தி னதுவளம் இதுதானென்றுசொன்னர் அந்தப பிர்ம்மாவை அவ்விடத் திலசனகரிஷியானவர் வந்தனஞ்செய்து உம்முடைய போதனையினாலே ஆநந்ததனையடைந்தேன் இந்தலோகத்தில்குற்றமாக அறிந்துசெய்தபா வநீங்கும்படியானகதையையும்அருள்செய்யவேண்டுமென்றார் பேரறி வுகொண்ட பிரம்மாவானவர்தம்முடையவாய்நான்கும் ஆயிரம்வாயாக ச்சொல்லத்தொடங்கினன்-எ-று. (௱௩)

பதினோராவதுபிரதத்தச்சருக்கம்முற்றிற்று

ஆ திருவிருக்கம்-கூ௱அ.



௨

பன்னிரண்டாவது,

# பாவந்தீர்த்தச்சருக்கம்.

கலிவிருத்தம்.

வாக்கினால்வடிவினால் மனத்தினாலபலவ்
ஞாகினைரருணைமா சயிலனேச்கினு

னீக்கினுமொன்பது நிகழ்த்தினுன்மறை
தேகிஞன்சிலகதை செப்பலாயினன்.

(இ-ள்) வாக்கினாலும் தேகத்தினாலும்மனத்தினாலும் நூாலிஷேடங்க ளைச்சொல்லியும் செய்தும்நினைந்தும் பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணாமலையைத் தரிசனஞ்செய்தால் அப்பொழுதே தங்கள் பாவத்தை நீக்குவார்கள் என்றுசொல்லிநான்குவேதங்களையுந் தன்னிடத்திலுடையபிரம்மாவானவர்சிலகதைகளைச்சொல்லத்தொடங்கினார்-எ-று, (௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எம்பெரியசபையிடத்தி லிருநான்குவசுக்களுமன் னிருந்தார்முன்னே,தமபெரியதவத்தினையும் புகழினையும்வியந்துரைத்தனகையையுமநாக்கிக், கும்பமுநிமுதலவர்களிடையிலுமை வியந்துரைத்த கொம்மைமேலே,அம்புவியிலிழைத்ததவமனைத்தினையுமவமாகவிருகென்றேன்

(இ-ள்) எனதுடையபெரியசபையினிடத்தில அஷ்டவசுக்களுமமுன்னொருகாலத்திலவந்திருந்தார்கள் அப்பொழுது அவர்களுடையதபசின்பெருமையையும் அதனாலவந்தகீர்த்தியையும கொண்டாடிச்சந்தோஷித்தார்கள அதைப்பார்த்து அகஸ்தியா முதலானரிஷிகளுக்குள்ளே உங்களைநீங்களே புகழ்ந்துசொல்லிய கர்வத்தினாலே நீங்கள் பூமியில்செய்ததவமெல்லாம் அவமாகச்செய்துவிட்டேனென்றுசொன்னேன்,

உற்றபெருந்தவத்தினையுந்தமதறத்தினலத்தினையு முரைத்தபேருமற்றொருவர்தமையிகழ்ந்தவருந்துயரக்கடன்மூழ்கிய மிகுமென்றேன்,மற்றறிவாகியவசுக்களிவர்களுக்கியிதுதீருமகாலஞ்சொற்றருளுகெனவுரைத்தாரினருளாறதீருமுங்கடியோதானென்றேன்

(இ-ள்) பெருமைபொருந்திய தமமுடையதவத்தையும் செய்தசருமத்தையும் சொன்னவர்களும்மற்றொருவரை யிகழ்ந்து பேசினவர்களும் துக்கசமுத்திரத்தில்மூழ்கி மறிபட்டுக்கிடப்பார்களென்றேனை அப்பொழுதுடைய அஷ்டவசுக்களும அந்தவார்த்தையைக்கேட்டு நடுங்கி இந்தச்சாபம் எந்தக்காலத்தில்தீரும் அருள்செய்யவேண்டுமென்றுகேட்டார்கள் பரமசிவனதிருவையுங்களுக்கு என்றைக்குக்கிடைக்கின்றதோ அன்றைக்குத்தீருமென்றேன்-எ-று

சொல்லுதலுமவசுக்களெலா மெனையகன்றுநெடிய கங்கைக்கரையிலேகி,எல்லையிலாநெடுங்காலமிறையையினைத்தரியதவமியற்றுநாளவல்லியங்கனொருநாளின்மழவிடைமேலடைந்து தவமவாமேதெய்வன் அல்லிமலரவன்கொடுத்த கொடுஞ்சாபக்கடலிலெடுத்தருளுகென்றார்.

(இ-ள்) அப்படிச்சொன்னவுடனே வசுக்களெல்லாரும் என்னுடையசபையைவிட்டு நெடுந்தூரஞ்செல்லுகின்ற கங்காநதியினது தீரத்தி

ற்போய அளவில்லாதகாலம் பரமசிவனைநினைத்து அரிதாகியதவத்தை
ச்செய்தார்கள் பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொண்ட அந்தச்
சுவாமியானவர் ஒருநாள் இளமையும்ரிஷபவாகனத்திலெழுந்தருளிவந்
து நாம்உங்களுக்குக்கொடுக்கவேண்டிய வரமென்னவென்றுகேட்டு அ
ருள்செய்தார் அந்தவசுக்கள் இதழினையுடையதாமரைமலரிலிருக்கின்றபி
ரம்மாவால் கொடுத்தகொடியசாபமாகியகடலிலநின்றும் எங்களைஎடு
த்தருளவேண்டுமென்றார் எ-று. (௪)

கருணைபூங்கின்முகமலர்ந்தவசுக்களுடை னுமதுபவங்கடக்கவேண்டில,
தரணியிலேபொருநகரத்தலேசுரமென் றிலங்குமந்தத் தலத்தின்மீதே,
அருணகிரியெனுமலையாயிருக்குமந்தப் பதியணுகி யசலஞ்சூழ்ந்த,வரு.
ணதிசைதொடங்கியெட்டுத திசைகளினுமிருந்துதவ மியற்றுமென்றா

(இ-ள்) கிருபாவருஷத்தைப்பொழிகிறமேகமாகிய பரமசிவனானவர் திருமுகமலர்ந்து அந்தவசுக்களைப்பார்த்து உங்களுடையபாவத்தைநீங்களகடக்கவேண்டினால்பூமியிலதலேசுரமென்று ஒருதிவ்வியஸ்தலமவிளங்குகின்றது அந்தஸ்தலத்தில் அருணாசலமென்று ஒருமலையிருக்கும அந்தஸ்தலத்தையடைந்து அந்தமலையைசூழ்ந்த மேற்குத திக்குத தொடங்கியெட்டுத திக்குகளிலுமிருந்துதவஞ்செய்யுங்களென்றருளிச்செய்தார்-எ-று. (௫)

அன்னவயலருணையிலரிய தவமியற்றிடு மவ்வளவேயுங்கள்.முன்
னாமுதகிரியுமெட்டிடுபுகமாகவிளங்கிய டமூர்த்தியாகு, மன்னுமுங்கள
ருமபவமுங்கவி ருமெனவுரைத்துவெள்ளிமலையிற்சேரதான், தனையு
டைநதவர்கள்ளைலாந்தனைப்போலவிருக்கவரந்தருதுவானே.

(இ-ள) அன்னபட்சிகள்தங்கிய வயல்சூழ்ந்தஅருணாசல ஸ்தலத்திற்குப்போய் நீங்கள அரியதவத்தைசெய்யுங்கள அப்படிச்செய்த அளவிலே அக்கினிசொருபமாய் விளங்கிய ஒப்பற்றஅந்தமலையானதுஉங்களுக்குமுன்பாக எட்டுமுகமாயக்காட்சிகொடுக்கும் அப்போது நிலைபெற்ற உங்களுடையபாவமுமநீங்குமென்றுதிருவாய்மலர்ந்து கைலாயத்திற்குயெழுந்தருளினார் தம்மிடத்திலடைந்தவர்க ளெல்லாரையுந் தம்மைப்போல உருவத்தையடைந்திருக்க வரமருளிச்செய்கிறபரமசிவன்-எ-று.

முந்தவசுரரையுமலர்புரத்தினையுமெரித்தபிரான்மொழிந்தவாறே
அந்தவசுவனைவருஞ்சென் லருணையிலேயரியதவமியற்றினார்க
ளிந்தவசுமதிதழைக்கவழங்கிரியெட்டுருவாகியிருந்ததங்கே
தந்தவசுநிலைபுகழ்ந்துகொடுஞ்சாபகிரிகளெலாந்தள்ளினார்கள்.

(இ-ள்) முன்பு அசுரர்களையும் அவர்கள் வாசஞ்செய்துக்கொண்டிருந்த திரிபுரங்களையும் நகைத்தெரித்த சுவாமியானவர் அருளிச்செய்தபிரகாரமே அந்த எட்டுவசுக்களும்போய் அருணாசலத்தில் அருமையாகிய தவத்தைசெய்தார்கள் இந்தப் பூமியானது தழைக்கும்படி அக்கினிமலை எட்டுமுகமாய் விளங்கி யிருந்தது முன்னேதங்களுடைய தவத்தைப்புகழ்ந்து சொல்லி யதனால் வந்த கொடியசாபமென்று சொல்லப்பட்ட மலையைத்தாண்டிவிட்டார்கள் எ-று. (௭)

பூதலஞ்சூழ்திசைகளெல்லா மிருந்தஷ்டமூர்த்திதனைப்பூசித்தார்க
ளாதலினும்பழயபடிதமதுபதவிகளையடைந்தருள்பெற்றாரக
ளேதமறுமபடிக்கரிய மறைப்பயனெட்டுருவாகி யிருந்தபோதுந்
தீதறும்பதகிரமத் துடனறியான்முடியெனக்குத்தெரிந்ததின்றே.

(இ-ள்) அந்தமலையைச்சூழ்ந்த எட்டுத்திக்கிலு மிருந்தவசுக்கள் அஷ்டமூர்த்தமாகிய சுவாமியைப் பூசித்தபடியினாலே பழயபடியேதமது பதவிகளைப்பெற்றுக்கொண்டு சுவாமியினது கிருபையும் பெற்றார்கள் குற்றங்கீழ்க்கும்படி அருமையான வேதப்பொருளாகிய அந்த சுவாமியானவர் எட்டுமுகமாயிருந்தபோதும் விஷ்ணுவும் திருவடியைக்கிரமத்துடனே அறியாமற்போனும் எனக்கும் முடிதெரியவில்லை-எ-று. (௮)

சண்முகனையளித்துவைத்துமுகத்தவனெண்வசுக்கள்செயுந்தவத்தினாலே எண்முகமா யிருந்ததுகண்டொருமுகமாயிமையவர்வாழ் தெடுத்தாரென்றா, தண்முகநான்குடையபிரான்சனகமுனிக்குரைத்தருளச்சயிலத்தாயே, பண்முகமாழனையமொழித் திலோத்தமைசேர் கதையினையும்பகரலுற்றான்.

(இ-ள்) சிவசுப்பிரமணியரைப்பெற்ற பரமசிவனுனவர் எட்டுவசுக்களுஞ் செய்த தபோபலத்தினாலே எட்டுமுகமாயிருந்ததைப் பார்த்துத்தேவர்களெல்லாம் ஒன்றாய்க் கூடிவணங்கிப் பல்லாண்டு கூறினார்களென்று கருணைபொருந்திய நான்குமுகங்களையுடைய பிரமாவானவர் சனகரிஷிக்குச்சொல்லி அருள்புரிகின்ற அந்தத்திருமலையில் யாழியினது இசைபோன்ற வார்த்தையையுடைய திலோத்தமை யென்பவள் அந்தக்கதையையுஞ் சொல்லத்தொடங்கினள்-எ-று. (௯)

கலிவிருத்தம்.

தேவர்கோன்முன்னமென் னிடத்திற்சேர்ந்துதன்
பாவமதிலாப்பெரும்பதவிவேண்டியே
யாவருமருந்தவ மியற்றினாதற்
காவதுசெய்யென வறைந்துபோயினன்.

(இ-ள்) பிரமர்சொல்லுவார் தேவேந்திரன்முன்னே என்னிடத்தில் வந்து தன்னுடையபரிசுத்தமான பதவியைச்சிந்தித்து எல்லாரும் அருமையான தலத்தைச்செய்கிறார்கள் அந்தவசிறைவேறுதபடிக்கு ஏதாவது ஒருவிகினத்தைச்செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப்போனான்-எ-று. (௪௦)

இந்திரன்போனபின் னியக்கமங்கைய
ரந்தரமங்கைய ராவகோட்டகர்
சுந்தரச்சுடம்புவித் தோனகமார்வரை
மந்தர்பூலைச்சிய ரழகுவாரியே.

(இ-ள்) தேவேந்திரன் போனபிற்பாடு யட்சலோகத்துப்பெண்கள் தேவலோகத்துப்பெண்கள் நாகலோகத்துப்பெண்கள் அழகுபொருந்திய கடல்சூழந்தபூலோகத்திலுள்ளபெண்கள மந்தரகிரிபோன்ற முலையையுடைய வரையரமகளிர் இவர்களுடைய அழகுஎடுத்துக்கொண்டு.

வகுத்தமில்திலோத் தமையென்னுமவஞ்சியை
யுகுத்தனனவலியமன் மதிலையேட்டினன்
மிகுத்ததோர்விஞ்சையிற் புவியின்வேட்டுவ
னைக்ததுவழிதநட லனிப்பதென்னவே.

(இ-ள்) குளவியானது தன்னிடத்திலுள்ள ஒரு சாமார்த்தியவிசேஷத்தினாலே புழுவினது உடலைகெடுத்து அதற்குவேறொருதேகத்தைக்கொடுப்பதுபோலத் திலோத்தமையென்னும் பெண்ணை உண்டாக்கினேன் அப்பெண்மீது அதனைமேற்கொண்ட ஆசையால் என்னுடைய வலமையையிழந்தேன் ஞானத்திற்செல்லுகின்ற என்னுடைய புத்தியையுந்துரத்திவிட்டேன் எ-று. (௪௧)

மன்மதன்கணையினான் மயங்கிவாடுமென்
றன்மையையறிந்துநான் றனக்குத்தாதையென்
றென்மனம்பொருந்திலா தெனதுகையுறாண்
முன்பினிறேளிககநான் முகமுந்தேடினேன்.

(இ-ள்) மன்மதனுடையபாணத்தினாலே மயக்கத்தையடைந்து வாடுகின்றஎன்னுடைய இயல்பையறிந்துதான்தனக்குத்தகப்பனென்றுஎன் கருத்துக்கு ஒவ்வாதவளாகியும் நான்பிடிக்கும்போது என்கைக்கு அகப்படாதவளாகியும் எனக்குமுன்னின்றும் ஓரிடத்தில் தானறியாதபடிஒளிந்துக்கொள்ள நான்குபக்கங்களிலும் அவளைத்தேடினேன்-எ-று. ()

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிமானுகச்சென்றாள் கலையதாய்த்தொடர்ந்தேன்பேட்டு
வன்னியாய்ப்பறந்தாளசேவல் வடிவமாய்த்தொடர்ந்தேனமங்கை

பின்னேயோர் கதியுங்காணுன் பிறங்கலாமருணைநாதன்
றன்னையேதூரக்கண்டாள் சரணமென்றுரைத்துச்சார்ந்தாள்.

(இ-ள்) அப்படிநான்தேடி அவளைக்கண்டுபிடிக்கும்போது பிடிக்கிறத ற்குமுன்னே பெண்மானுகி ஓடினுள் நான் கலைமானுகத்தொடர்ந்தேன் அதன்பின் பெண்கிளியாய்ப்பறந்தாள் நான் ஆண்கிளியாய்ப்பறந்து தொடர்ந்தேன் அந்தத்திலோத்தமையானவள் பிற்பாடு என்கையிலகப் படாமலிருக்கிறதற்கு வேறொருகதியுங்காணமல் வருந்தும்போது மலை யுருவாகிய அருணாசலேசுரரைக் கொஞ்சதூரத்திற்கண்டு நீரேகஞ்ச மென்றுசொல்லி அடைந்தாள்-எ-று. (௰௪)

மாயவல்விடையின்பாகர் விடிவிலாபுடையின்பாகர்
காயழலானமெய்யர் கானகத்தாடுமையர்
ஆயுமாரணத்தின்சோதி யடைக்கலமென்றேனையா
சேயிளமழலைபோலத் திருச்செவிசாற்றினுனே.

(இ-ள்) மாயஞ்செய்கின்ற விஷ்ணுவாகிய ரிஷபத்தின்மேல் வருகி ன்றவரோ தோற்றாத இடையினையுடைய பார்வதியையும் பாகத்தில்வை த்துக்கொண்டிருக்கிறவரோ தகிக்கின்ற அக்கினிசொரூபமானவரோ திரு வாலங்காட்டினிடத்தில் நடனஞ்செய்த சுவாமியே ஆராய்ந்து தேடுகிற வேதத்தையுடைய சோதியே நானடைக்கலமென்று சகலரையும் ஆளு கின்ற பரமசிவனது திருச்செவியிற்சொல்லும்படி குழந்தையினதுஇள மையாகிய குதலைச் சொல்லைப்போலச் சொன்னுள்-எ-று. (௰௫)

முருகலர்குழலினுடன் முறையிடுமுறைக்கேவலையன்
திருவுருவனைத்துந்தூய செவிகளாயிருந்தபோது
விறைவின்மால்வரையைக்கீறி வேட்டுவனுகினனு
சுருதியுஞமலியாகத் தோன்றினன்றோகைபாகன்.

(இ-ள்) வாசனைபொருந்திய புஷ்பமாலையணிந்த கூந்தலை யுடைய திலோத்தமையினது முறையிடுதலுக்கு என்சுவாமியினது அழகிய உ ருவமெல்லாம் செவிகளாலிருந்தன அதனால் சிகரத்தில் மலையைக்கீறி அதில்நின்றும் தாம் வேடரூபமாகவும் நாலுவேதங்களும் நாய்களாகவு ம் தோன்றினார் பார்வதியை யிடதுபாகத்தில் வைத்துக்கொண்ட பரமசி வன்-எ-று. (௰௬)

கூடகச்செங்கைபாகன் சிலையொடுதோன்றும்போதில்
வாடியமருங்குலாண்மேன் மயக்கமும்வருத்தந்தீர்த்தே
ஞடியபெருமானம்மை முனியுமென்றஞ்சித்தாழ்ந்தேன்
வேடனைப்பறவைகண்டால் வெருவுமோவெருவுறுதே.

(இ-ள்) வளைபலைபணிக்கக் கையையுடைய பார்வதியைத் திருப்பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிற பரமசிவன் வேடனுடைய வில்லைக் கையிலேந்திக் கொண்டு தோன்றியபோது முன்னே கூறினதுபோல் சுவாமியானவர் என்னைக் கோபித்துக் கொள்வாரென்று பயந்து அஞ்சுகின்ற இப்பிள்ளையுடைய நிலோத்தமையின் மேலுண்டாகிய மையலையும் அதனாலுண்டாகிய வருத்தத்தையுந்தீர்த்து அந்தச் சுவாமியை வணங்கினோன் வேடனைப்பட்சிகண்டால் பயப்படுமோ பயப்படாதோ-எ-று. (கஉ)

வெறமெனுமுலையாடன்னை விதித்துநீ விரும்புந்தீமை
கற்பகோடியினுந்தீரா தாயினுங்கருணையாமித்
தப்பரமலைகண்டாயே யாதலாற்றவிர்த்தோம்போவென்
றப்புகன்மொழிந்துமீளப் புகுந்தனனருணைவெற்பில்.

(இ-ள்) மலைக்குருகிராகிய ஸ்தலத்தையுடைய நிலோத்தமையைப்புணைக்க நீயே விரும்புதலாலுண்டாகிய பாவமானது கற்பகோடிகாலத்திலுந்தீரமாட்டாது ஆனாலும் அருணுருவமாகியும் ஞானபரமாகியும் உள்ள இந்தமலையைத் தரிசித்தாயாதலால் அப்படிப்பட்ட பாவத்தைத்தீர்த்துவிட்டோம உனனிடத்திற்குப் போவென்று திருவாய்மலர்ந்து அம்மலைக்குள் சுவாமியானவர் மறைந்து விட்டார்-எ-று. (கங)

கலிவிருத்தம்

தன்னையறியாமல்வினை சாருமுடருறனுந்
தென்னருணைசேரிலது தீருமதுதிண்ண
மின்னல்வினையறறதனி லெண்ணியதுபெற்றார்
முன்னமுளரொன்றயன் முனிக்குமொழிகின்றான்.

(இ-ள்) ஒருவனுக்கு அபுத்தி பூருவமாகவந்த பாவமானது அவன் அழகுபொருந்திய அருணாசலத்தை யடைந்தால் தீரும் அது நிச்சயமே முற்காலத்திலும் அநேகர் தங்களுடைய வினையை நீக்கி அந்தஸ்தலத்தில் தாங்கள் நினைத்த வரத்தைப்பெற்றுக்கொண்டார்களென்று பிரமாவானவர்சனகரிஷிக்கு ஒருகதைசொல்லுகிறார்-எ-று (கச)

கற்பமுடிவாயிருள் பெயர்த்துபுலர்காலத்
தற்பவிருணின்றதுமுன் னுனிறையினாலே
சொற்பரவைமாயனுண ராதுதயில்கொள்ளச்
சிற்பரமயோகியர்கள் செம்மலைநினைந்தார்.

(இ-ள்) முற்காலத்திற் பரமசிவனுடைய திருவிளையாட்டினாலே கற்பகாலமானது முடிவுற்று மகத்தாகிய அந்தகாரமானது நீங்கி வெளிச்சமுண்டாகிறகாலத்தில் அந்த அந்தகாரத்திற்கொஞ்சம் நின்று அக்காலத்தில் இதனையறியாமல் விஷ்ணுவானவர் சமுத்திரத்தில் நித்திரைசெய்

துங்கொண்டிருக்க மேன்மைபொருந்திய சின்மயமாகிய யோகியாகள
பரமசிவனை நினைத்தார்கள்-எ-று. (௨௰)

அத்தனடியார்கடம தாணவமறுக்குந்
சுத்தனழலாரொளிகொள் சோதிவடிவானே
னெத்தலமுமெத்திசையு மெங்கும்வெளியானே
னுயத்தபொறிதமிலுலா வாயவுலகெல்லாம

(இ-ள்) எல்லாச்சீவராசிகளுக்கும் பிதாவாகியும தமதடியாாகளுடைய ஆணவமலத்தைக் கெடுக்கின்ற சுத்தராயு மிருக்கின்ற பரமசிவன் நெருப்புமயமாகிய ஒருசோதிரூபத்தையடைந்தார் எந்தஸ்தலங்களிலும் எந்தத்திக்குகளிலும்மற்ற எந்தவிடங்களிலும் ஆகாயமேநமக்குருவமாகியஅந்த சுவாமியானவர் அப்போதுசிந்திய பொறிகளாலே உலகமெல்லாம் உண்டானதுகள-எ-று, (௨௧)

ஊழிமுடிவாயிருள் புலர்ந்துபுணராதே
யாழிமிசையிற்றுயிலுமச்சுதனையெய்தி
வாழியெனயோகிய ரெழுப்பநலுமாயன்
பாழியிலுமின்றநி பயத்துடனெழுந்தான்.

(இ-ள) ஊழிகாலமுடிந்து மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் அறியாமல் சமுத்திரத்தில் நித்திரைசெய்கின்ற விஷ்ணுவினிடத்தில்வந்து வாழியென்றுசொல்லி யோகியர்கள் எழுப்புதலும அந்த விஷ்ணுவானவர் சர்ப்பசயனத்தில் நின்றும் அதிகபயத்துடனெழுந்திருந்தார-எ-று. ()

வையகமளிக்கமல ரோனையுதவாதே
பையரவின்மிக்கதுயில் கொண்டபரிசாலே
வெய்யபுன்வினைதொழல் விளைத்தனனெனத்துன்
றையுணர்வுமஞ்சியென தையனைநினைந்தான

(இ-ள்) உலகத்தையுண்டாக்கும்பொருட்டு பிர்மாவைச் சிருஷ்டிக்காமல் படத்தையுடைய பாம்பின்மேல் நித்திரைசெய்த தன்மையினுலே வெம்மையாகிய தீவினையைச் சம்பாதித்துக கொண்டேனென்று ஐம்பொறிகளுங்கலங்கி யென்னுடைய ஆண்டவனாகிய சுவாமியைநினைத்தார்-எ-று. (௨௩)

அன்பாகருதிற்கணமை யாகியெதிர்வந்தே
துன்பையகல்விக்குமது தூயதொழிலானுன்
வன்படிகவெற்புமிசை மன்னுசுடர்போலே
மின்படருமேனியுடன் வெள்விடையில்வந்தான்

(இ-ள) அடியார்கள நினைத்தால் சீக்கிரத்தில்தானே அவர்களுக்கு எதிராகத்தோற்றித் துன்பத்தைநீக்குவதே தமக்குப்பரிசுத்தமாகியதொழிலாகக் கொண்ட பரமசிவனானவர் வன்மையாகிய ஸ்படிகமலையின்மே

ல் விளங்குகின்ற சோதிபோல வெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மின்போன்ற நிறத்தோடெழுந்தருளிவந்தார்-எ-று. (௨௪)

பொருக்கெனவெழுந்தடி பணிந்தருள்புகழ்ந்தே
யருக்கியமுதற்புரி யருச்சனையினாலே
யுருக்கியென்வினைத்தொட ரொருத்தருணியென்றா
னெருக்கணிகுவாணிவை யெடுத்துமொழிகின்றான்

(இ-ள்) அப்படி பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்தவுடனே விஷ்ணுவானவர் சீக்கிரத்தில் எழுந்து திருவடிக்கமலங்களுக்கு வந்தனஞ்செய்து அவருடைய திவ்வியகிருபையைப்புகழ்ந்து அவருக்கு ஆர்க்கிய முதலிய பூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகசெய்து எனக்கு நித்திரையினால் வந்த வினையைநீக்கியருள் செய்யவேண்டுமென்றார் எருக்கம்பூமாலையைத் தரிக்கின்ற சுவாமியானவர் இவைகளைச் சொல்லத்தொடங்கினார்-எ-று. (௨௫)

வாசிமகமேமுதன் மகம்பலசெய்தாலும்
பாசமகலாதவினை பற்றறுதலெண்ணித்
தேசுமிகுதென்றிசை செறிந்தருணைதன்னிற்
பூசைபுரிவிட்டுவினை போகுமுனையென்றான்.

(இ-ள்) ஒருவன்தனக்குண்டாகிய பாசவினையை நீக்கும்படியாக நினைந்து அஸ்வமேதமுதலிய பலயாகங்களைச்செய்தாலும் அதுபோகாது ஆனபடியினாலே சோதிமயமாகிய தெற்குத்திசையில் விளங்காநின்ற அருணாசலத்திற்குப்போய் பூசைசெய்தால் உனைவிட்டுவினையானது போகுமென்றார் பரமசிவன்-எ-று. (௨௬)

நாறுபொழிலண்ணாருணாமும்வடிவொன்றே
வேறலவதன்பெருமை வேதமுணராதல்
நீறுபுனையோகியாக ணீவிரயலதொண்ணூற்
றாறுபிரமாவழி லருச்சனையுரிநீர்.

(இ-ள்) வாசனையுடைய சோலைகள்சூழ்ந்த அந்த அருணாசலத்திற்கும் எனக்கும வடிவம் ஒன்றுதான் பேதமென்று அதனுடையபெருமையைவேதங்கள்கூட அறியாதுகள் விபூதியை முக்கியமாகத்தரிக்கின்ற யோகியாகளும விஷ்ணுக்களாகிய நீங்களபலரும் தொண்ணூற்றாறுபிரமாக்களும அந்தஸ்தலத்தில் பூசைசெய்நீர்கள-எ-று. (௨௭)

முறைமையுரோகிணி முலைகளிடையின்மூழ்கா
மற்றவிருபத்தறுவர் வாழ்வையுமறந்தான்
கறைமதிதக்கனுடல்கன் றுறசபித்தான்
அம்மதியப்பதியி லத்துயரொழித்தான்.

(இ-ள்) சந்திரனானவன் நன்றாகவேலை திர்ந்த ஆபரணங்களுடைய ரோகிணியினது ஸ்தனங்களினுடைய போகத்தைவிரும்பி மற்றையிருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளையுமறந்துவிட்டான் அதை முன்சொன்ன இருபத்தேழு பெண்களுக்குந்தகப்பனாகிய தக்கன்கே

ள்விப்பட்டு எல்லாநாயகிகளில் மீதும்விருப்பம் வைக்காது ஒருத்தியின்மேல் மாத்திரம் வைத்ததனால் அலனுடல் குன்றிபோகக்கடவதென்று சபித்தான் இந்தச்சாபத்தை யடைந்த சந்திரன் அந்த அருணாசலத்தில் வந்து அந்தத்துன்பத்தை நீக்கிக்கொண்டான்-எ-று. (௨௮)

வினைப்பளவின்முத்திதரு நிணைகரமூற்றே
மகக்குறைதவிர்த்திடுதி யென்றிறைமஹேந்தர
னறகிரியைநாடியரி யுத்திசையினன்னவிச்
சுனைக்கமலவாசமிகு சோணகிரிகண்டான்.

(இ-ள்) நினைத்தமாத்திரத்தில் முத்தியைக்கொடுக்கின்ற அருணாசலமெனகிற அந்தஸ்தலத்திற்குப்போய் மகக்குறையைநீக்கிகொள்ளென்று சுவாமியறையர்தார் விஷ்ணுவானவர் அக்கினிவடிவாகிய மலையைதரியானருசெய்து அதுவிளக்குந் தெற்குத்திசையையடைந்து சுனையிலிருக்கிற தாமரைபுஷ்பத்தினது வாசனைமிகுந்த அந்தஸ்தலத்தைக்கண்டார்-எ-று. (௨௯)

நசர்வடிவானமலை கண்டினிதிறைஞ்சித்
தேசுமிகுநன்னகர் செறிந்துமகிழ்வாகி
வாசவதடத்திடை மடிந்துவலமாகிப்
பூசனைபுரிந்துவினை போயமலனானன

(இ-ள்) மலையுருவாகிய சுவாமியைத்தரிசித்து அன்போடுபணிந்து பிரகாசம்பொருந்திய அந்தஸ்தலத்திற்போய்ச சந்தோஷத்தையடைந்து இந்திரதீர்த்தத்தில் முழுகிக் கிரிப்பிரதக்ஷணமவந்து பூசைசெய்து கொண்டுவரத் தம்முடைய வினைநீங்கிவிஷ்ணுவானவர்பரிசுத்தரானார்,

மேவியருணைப்பதியின் மிக்கபுகழ்மாயன்
பாவமகல்வித்திடு பலத்தினையுரைத்துத
தாவியுமைபாகமுறை சோணகிரிநாத
னாவியின்மகிழ்ச்சியையு நான்முகனுரைப்பான்.

. (இ-ள்) மிகுந்த புகழையுடைய விஷ்ணுவானவர் அருணாசலத்திற்குப்போய்த் தம்முடைய பாவத்தைநீக்கி அவர் அடைந்தபலத்தைப் பிர்மாவானவர் சனகரிஷிகளுக்குச்சொல்லிப் பார்வதியானவளை ஒருபுரத்தில் வாசஞ்செய்கின்ற அருணாசலேசுரர் புழுகுபூனையினாலே அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத்தொடங்கினார்-எ-று. (௩௧)

பன்னிரண்டாவதுபாவந்தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௧.

பதின்மூன்றாவது

# புளகாதிபச்சருக்கம்.

(*)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

உருவுபலவேறாபுனைபுளகனெனு மோரசுரனொருபொழுதுநாவிவடிவா, யருணைகிரிமீதுலவியரிபுழுகேகிதறியதிகபலமாயவனிமேரா, வெ

ருவாவிடையோர்முனிவ ரொருவரொழியதழியவினைபுரிகையாலவெ
லாம், கருணைமலைபோலிமய மலையபலைபாகருறைகயிலையிலேயெமொ
ழிவார.

(இ-ள்) நினைத்தபடி வெவ்வேறே உருவங்களை யெடுத்துக்கொள்ள வல்லமைபொருந்திய புளகனென்னும் ஓரசுரன் இருகால் புழுகுபூனை உருவத்தை அடைந்து வெவ்விய சிறந்தையுடைய அந்தமலையின்மேல் உலாவிக்கொண்டு புழுகைச்சிதறியபடியால் அதனாலேயே அதிகபலத்தைப்பெற்றபடி பூமியிலுள்ளவர்கள் யாவர்க்கும் தேவர்கள் முனிவர்களெல்லாரும துன்பப்படவும் தங்கிருத்தியஞ்செய்வதினாலே அவர்களெல்லாம இமவானபர்வதராசனுடைய புத்திரியாகிய பார்வதியையொருபாகத்திலவைத்தருளிய கருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்தருளியிருக்கின்ற கைலாயகிரிக்குப்போய்ச்சொல்லுவார்கள்-எ-று. (க)

புளகனெனுமோரசுரன் மிருகவடிவாகியகை புரியவுல கேழுமுறை
யேய், வினையறாமாயினாக வெனவுரை செய்தாரவர்கள் விமலனவ
ரோடுபுகல்வா, ளைவிலமணமாலபுழுகருணைகிரிமீதுதலியதிகபலமா
யமருவின, னெளிதிலழியாவவனுமினியகதியேறவுமையிடரலையிலே
றவிடுவோம.

(இ-ள்) புளகனெனும ஒரு அசுரனானவன் புழுகுபூனை வடிவங்கொண்டு எழுலகங்களிலும் முறையேபுகுந்து சிவராசிகளையும்வதைசெய்ய கதனாலே யெல்லாரும துன்பத்தை யடைந்தார்களென்று வந்தவர்கள சொல்லக்கேட்டுக்கொள்ளப் பரமசிவனானவர் அவர்களோடுதிருவாயமலர்ந்தருளுவார மணமவீசுகின்ற அளவில்லாதபுழுகை நமதுருவமாகிய அருணாசலத்திலசிதறியதனாலே அதிகபலத்தை அடைந்திருக்கிறான் அப்படிப்பட்டவன் எளிதில அழியமாட்டான் ஆனபடியினாலே அவனை மோக்ஷத்தில் அடைவித்து உங்களைதுக்கசமுத்திரத்தில் நின்றும் கரையேற்றுவோம-எ-று. (உ)

மேவுமெனவோதியருளொடுபுளகாதியனைவேதமுதல்கூறியவுரை
தாவிடைநமாகியபதுவிவிடுவாயெனவுமாவிவடிவான்மொழிகுவான்
பாவையொருபாககருணாலயபுராதனபராபரவிலோசனகுள [தே
வவலெனியோன்மொழியுமாறுதர வெனவிறைவனீரடியின்மீதுதொழு

(இ-ள்) நீங்கள் உங்களிடத்திற்குப் போய்ச்சேருங்களென்றுவிடைகொடுத்தருளியிருக்குந்திருவையோடுபுளகனென்னும்அந்த அசுரனைவேதமுதலாகிய பரமசிவன் அழைத்து அசுரனேபுழுகு பூனை வடிவத்தைக்கொண்ட உன்பிராணனை விடுவென்றுசொல்லிய அளவில்அந்த அசுரன் சொல்லுவான்பார்வதியையொருபாகத்திற்கொண்டருளியவரே திருவைகண் இடமாயிருக்கின்றவரே பழமையானவரே பராபரமாகியவரே நெற்றிக்கண்ணையுடையவரே உமக்குவேவல்செயதற்குரியஎளியேன்கேட்டுக்கொள்ளுகிறவரந்தைக்கொடுத்தருளுமென்றுசுவாமியினுடையஇரண்டுதிருவடிகளுக்கும வந்தனஞ்செயதுசொல்லுவான்-எ-று. (௩)

எனதுநிலையாயிருகபுனைதுதிருமேனிபுகவினியபுழுகாதியொருபே
ரனைகவெனவேயருளி புவிவிடநுநாயிக்கி புகுதவிரலுறையோ னருளி

ளுள், மனமுருகியேமுனிவ ரிமையவர்கண்மானிடாகள் மகிழ்நடியின் மேலணியவே, அனவரதமான்மத மூமிமசலமுமாலயம தருவிலேயனவே பெருகுமே.

(இ-ள்) ஈசனைநேத்தவுருவமாகிய புழுகுபூனையினது மார்பினாலுண்டாகின்ற புழுகானது உம்முடைய திருமேனி ஏறக்கொள்ளவும் அதனால் புழுகணிபிறைவனென்று ஒருநாமத்தைத் தரிக்கும்படியாகவும் அருள்செய்யவேண்டுமென்று வணங்கி உயிர்விட்டவுடனே அந்த அசுரன்கதிசேரும்படி சுவாமி அனுக்கிரகஞ்செய்தார். அப்படி அதனை பிரத்தியக்ஷமாகக்கண்டு முனிவர்களும் தேவர்களும் மனிதர்களும் மனமுருகி ஆனந்தத்தையடைந்து சந்திரனைத்தரித்த சுவாமியினது சிரசில் புழுகாப்புச்சாத்த எப்போதும் அக்கபுழுகுகளாந்து பனிநீரோடு சுவாமியினுடைய ஆலயமானது அருவியையுடையதாகப்பெருகியோடும்-எ-று. ()

புழுகுபனிநீர்களப மணுவளவதேனுமிறை புனையும்படிகையாலுதவினோர், விழிகுளிரநாடியானிணையடிகளேபரவி வினைவினாகளவீடுபெறுவார், ருழைமருவுபாணியினர் சரிதமிதுவாகுமெனவுவகையுடனேயுரைசெய்தான், மொழியுமலராலயனை முனிவருடனேசனக முனிபுகழுவினோடுதொழுதான்.

(இ-ள்) புழுகும், பனிநீரும், கூட்டுவர்க்கச்சந்தனமுமாகிய இவைகளில அணுவளவாவது சுவாமியானவர் ஒப்புக்கொள்ளும்படி செய்தவர்களும், கண்கள் களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமியினது திருவடிகளை வணங்கி அவர்சரித்திரத்தைக்கேட்டவர்களும் மோட்சத்தையடைவார்கள் மானைக்கரத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய திவ்விய சரித்திர மிதுவாகுமென்று சந்தோஷமாய் அந்தப்பிரமாவானவர் சொன்னார், அப்படிச்சொல்லியபிரமாவைச்சனகரிஷியானவர் முனிவர்களோடு தோத்திரஞ்செய்துவணங்கினார்-எ-று. (௬)

கலிவிருத்தம்.

அஞ்செழுத்தும்வாழிவாழியருணைவாழியருணையான்
கஞ்சமுறைசரணம்வாழி கருணைவாழிகருணைபோன்
மஞ்சுபெற்றவானம்வாழி வையமவாழிவையமேற
றஞ்சமுற்றநீறும்வாழி சைவம்வாழிவாழியே.

(இ-ள்) பாவங்களைப்போக்குகிறதற்குக் காரணமாயிருக்கின்ற பஞ்சாக்ஷரமானது வாழ்கவாழ்க, அருணாஸ்தலம்வாழ்க, அருணாசலேசுரருடைய தாமரைமலர்போன்றதிருவடிகள்வாழ்க, அந்தசுவாமியினுடைய கிருபையானதுவாழ்க, அக்கருணைபோன்ற அழகாகிய மேகவிருக்ஷம்வாழ்க, பூலோகம் வாழ்க, பூமியில் உயிர்களுக்குப் பற்றுக்கோடாகிய திருநீறுவாழ்க, சைவசமயமானதுவாழ்க-எ-று. (௭)

ஞானம்வாழிநன்மைவாழி நாடுராஜநீதிசேர்
தானம்வாழிதர்மம்வாழி சரதவேதமாகமங்
கானம்வாழிகலைவிவாழி கற்றறிந்தகேள்வியம்
பானயோர்களவாழியீச னடியார்வாழிவாழியே.

(இ-ள்) ஞானம்வாழ்க, நன்மையானது வாழ்க, நாடும் இராசனும் அவனுக்குரியநீதியும், கீர்த்தியும், தானமும்வாழ்க, தருமமும்வாழ்க, உண்மையாகியவேதமும், ஆகமங்களும்வாழ்க, சங்கீதம்வாழ்க, மற்றவித்தைகளும்வாழ்க, அவைகளைக்கற்றறிந்தும், கேள்விப்பட்டும், யாவரிடத்தும் அன்புஉண்டானவர்கள்வாழ்க, பரமசிவனது அடியார்கள்வாழ்க வாக-எ-று. (எ)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

இக்கதைபடித்தோர்கேட்டோரெழுதினேரெழுதிவைத்தோர்
மைக்கடல்சூழ்ந்தவிர்ந்த வையகமுழுதுங்காத்துத்
தக்கசந்தானபோக சௌக்கியந்தழையவாழ்ந்து
திக்கருணேசரன்பாற் சிவபதம்பெறுவர்தாமே.

(இ-ள்) அந்தஅருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதிவைத்துக் கொண்டவர்களும் கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும காத்துத் தகுந்த புத்திரசம்பத்தும் போகசௌக்கியமும் தழையும்படியாக வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசுரர்கிருபையினாலேசிவபதம் அடைவார்கள-எ-று.()

பதின்மூன்றாவது

புளகாங்கிதசருக்கம்—முற்றிற்று.

—o—

# அருணாசலபுராணம்

## மூலமும் - உரையும்,

முற்றிற்று.

(*)

பாயிரம்உள்பட அ சருக்கம் பதினான்குக்கும்
கூடிய திருவிருத்தம—௬௪௭.

திருச்சிற்றம்பலம்.